3. பூலாள்க்கு (140) சொல்ப்படிக்கு (547) என உள்ள சந்திப்பிழைகள் நீக்கப்படுள்ளன.

4. செய்யுள் நடையென்று கருதிப் பிழைபட அமைந்த, மொழிக்கு முதலில் வாரா எழுத்துக்கள் திருத்தப்பட்டுள்ளன. இதற்குச்சான்றாக,

''கண்டாளே காட்டாளம்மன் யிது காரணமோ என்றுசொல்லி'' (670)
''யீஸ்பரரே தஞ்சமென்று இறந்தாளே சோணச்சியும்'' (665)

என்ற அடிகளைக் காட்டலாம்.

5. அண்ணாசுவா_ (206) ஆத்தாமரே (71) என்பனவற்றில் மி, ா என்ற எழுத்துவிடுகைகள் போன்றனவும் அண்ணாசுவாமி, ஆத்தாமாரே என நிரப்பப்பட்டுள்ளன. தேவையற்ற எழுத்துச் சேர்க்கைகளும் அகற்றப்பட்டுள்ளன.

6. கதைப்பாடற் பொருண்மைக்கு ஏற்பச், சிறு தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன.

7. வரி எண்கள் நல்கப்பட்டுள்ளன.

8. கடினமான சொற்களுக்கு அடிக்குறிப்பில் பொருள்விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது.

**உச்சினி மாகாளியம்மன் கதை**

இச்சுவடி ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சுவடி நூலகத்திலுள்ளது இதன் எண் 46. அளவு 60.5 x 3 செ. மீட்டர். அகஸ்தீஸ்வரம் கு. ஆறுமுகப்பெருமாள் நாடார் குடும்பத்தாரிடமிருந்து 15/8/86 - இல் இச்சுவடி பெறப்பட்டது. 16 இதழ்கள் கொண்டது; தெளிவான எழுத்துக்களையுடையது. சுவடியின் இதழ்கள் நான்கு அல்லது ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளப்பட்டு, 24 முதல் 28 வரிகள் வரை எழுதப்பட்டுள்ளன. மொத்தம் 981 வரிகள் உள்ளன.

பொதுவாகச் சுவடிகளில் உள்ள எழுத்து முறைக்கு விதிவிலக்காக ஒற்றுக்கள் புள்ளியுடனும், ெ-ே, ா-ர வேறுபாட்டுடனும் இச்சுவடியில் எழுத்துக்கள் அமைந் துள்ளன. மிகப்பிற்காலத்தில், அதாவது கொல்லம் ஆண்டு 1106 (கி. பி. 1931) கார்த்திகை மாதம் 5-ஆம் நாள் எழுதப்பட்டதாதலின் அச்சில் உள்ள தற்கால எழுத்து முறை களையொட்டிச் சுவடியிலும் எழுதப்பட்டுள்ளது எனலாம்.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலுள்ள உச்சினிமாகாளி கதை (சுவடி எண் 10290),[4] உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்திலுள்ள உச்சினிமாகாளி கதை

4. 31 இதழ்கள் கொண்டது. பிற்கால எழுத்துடையது.

என்ற கையெழுத்துப் பிரதி (குறைப்பிரதி) ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திலுள்ள உச்சினிமாகாளி நாட்டை ஆண்ட விக்கிரமபூபன் கதை[5] (சுவடி எண் 48), உச்சினி மாகாளி கதை (சுவடி எண் 2)[5a] போன்றனவற்றுடன் இச்சுவடி ஒப்பிடப் பட்டுள்ளது.

சுவடியில் நீண்ட நெடும் வரிகளாக எழுதப்பட்டிருந்தவை பா அமைதிக்கேற்ப, பாடல் வடிவத்துடனும் கூட்டெழுத்துக்கள் தனித்தெழுதப்பட்டும் பதிப்பிக்கப் படுகின்றன.

**குறுக்குளாஞ்சி கதை:-** இப்பதிப்புக்கு அடிப்படையாக கேரளப் பல்கலைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள சுவடி அமைகின்றது. இச்சுவடி (சுவடி எண் 84256), 36.8 x 3'2 செ. மீ நீள அகலம் உடையது. இதில் 24 இதழ்கள் உள்ளன. முழுமைப்பிரதியாக இது உள்ளது. இச்சுவடியின் படவுருப் படிவம் (Photostat-copy) ஆசியவியல் ஆய்வு நிறுவனத்திலுள்ளது.

**சுவடி நிலை:-** இச்சுவடி ஆங்காங்கு பூச்சியரிப்புக்கு உட்பட்டுள்ளது. இதன் இதழ்கள் இரு பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளப்பட்டு, பகுதிக்கு 6 முதல் 7 வரிகள் என்ற முறையில் ஒரு பக்கத்தில் 12 முதல் 14 வரிகள் வரை எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு அடியின் இறுதியெழுத்தும் தனித்து கீழ்க்கண்டவாறு எழுதப் பட்டுள்ளது.

. . . . . . . . . . . . .    .    . . . . . . .    .

. . . . . . . . . . .    .    . . . . . .    .

. . . . . . . . . . . . . .    .    . . . . .    .

இக்கதைப்பாடலில் மொத்தம் 634 வரிகள் உள்ளன. பொதுவாகச் சுவடிகளில் காணப்படும் எழுத்து முறையான 'ஒற்றுக்குப் புள்ளியின்றி எழுதுதல்' என்பது இச்சுவடியில் சீராகக் கடைப்பிடிக்கப்படவில்லை. சில மெய்யெழுத்துக்களுக்கு ஆங்காங்கு புள்ளி இடப்பட்டுள்ளது. இது போன்று 'ெ-ே- வேறுபாடின்றி எழுதுதல்' என்ற முறையின்படியும் அமையாது சில இடங்களில் ஒற்றைக்கொம்பு, இரட்டைக் கொம்பு வேறுபாட்டுடனும் எழுதப்பட்டுள்ளது. ஆயின் 'ர-ா- என்ற எழுத்துக்களை வேறுபாடின்றி எழுதுதல்' என்ற 'சுவடி எழுத்துமுறை' முறையாகக் கடைப் பிடிக்கப்பட்டுள்ளது.

---

5. சுவடி எண் 48 15/8/85 இல் அகஸ்தீஸ்வரம் கு. ஆறுமுகப்பெருமாள் நாடார் குடும்பத்தாரிட மிருந்து பெறப்பட்டது. 40 இதழ்கள் கொண்டது. அளவு 53 x 3.8 செ.மீ. பக்கத்துக்கு 2 முதல் 3 பகுதியாக 16 முதல் 24 வரிகள் வரையும் எழுதப்பட்டுள்ளன. இடையில் சில இதழ்களைக் (2-8-38, 40, 42, 47) காணவில்லை. விக்கிரமாதித்தன் நாடாண்ட விவரம் விரிவாக உள்ளது.

5a சுவடி எண் 2. மேற்படி பெயருடையவரிடமிருந்து 15/8/83-ல் பெறப்பட்டது. 33இதழ்களுடையது. அளவு 47 x 3 செ. மீ. பக்கத்துக்கு 21 வரிகள் கொண்டது.

பெரும்பாலான சுவடிகளில் காணப்படும் ர-ற, ல-ள-ழ, ன-ண-ந என்ற எழுத்துக்கள் ஒலி காரணமாகத் தவறாக எழுதப்படலால் வரும் பிழைகள் ப-ம, க-ச, த-ந, ண-ன, ற-ர என்ற எழுத்துக்களின் வடிவொப்புமையால் நேரும் பிழைகள் போன்றன நீக்கப்பட்டும் ஒற்று, துணையெழுத்து விடுகைகள், மிகைகள், பிற எழுத்து விடுகை, மிகைகள் சரி செய்யப்பட்டும் பதிப்பிக்கப்படுகின்றது. வரிகள் விடப்பட்டுள்ளனவாகத் தோன்றுமிடங்களில் ……….. என்றமைத்துப் பதிப்பிக்கப் படுகின்றது.

குறுக்குளாஞ்சி கதை பற்றிய பிற சுவடிப் பிரதிகள் வாய்மொழிக் கதைப் பாடல் வடிவுகள் போன்றன கிட்டாமையின், கிடைத்த இந்த ஒரு பிரதி மட்டும் எதனுடனும் ஒப்பிடப்படாமல் அப்படியே பதிப்பிக்கப் பெறுகின்றது.

**நாட்டார் இலக்கியம்:-**

கி. பி. 18-ஆம் நூற்றாண்டளவில் மேலை நாட்டினரின் கவனம் நாட்டுப்புறவியலை நோக்கித் திரும்பியது. இதற்கு மூலவித்தாக அந்நூற்றாண்டில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி, தொழிற்புரட்சி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். தொழில்நுட்ப நாகரிகம் மலரத்தொடங்கிய இக்காலகட்டத்தில் அரசியல், சமுதாயம், சமயம், இலக்கியம், கலை, பண்பாடு என்ற பல துறைகளின் அணுகுமுறைகளில் மாறுதல் ஏற்பட்டது. மக்களாட்சித் தொடர்பான சிந்தனைகள் அரும்பி மலர்ந்த இக்கால கட்டத்தில், சாதாரணக் குடிமக்களின் மகத்துவத்தைச் சரிவர மதித்துப் போற்றும் சமுதாய அரசியல் சூழ்நிலைகள் தோன்றின. எளிய மக்களின் படைப்புக்கள், அவர்தம் அனுபவ உணர்வுகள், வாய்மொழியாக வழங்கி வந்த அவர்தம் இலக்கியங் கள் ஆகியன போற்றிப் பாராட்டப்பட்டன. தொழில் நுட்ப நாகரிகத்தின் ஆதிக்கத்தால் விரைவாக அழிந்து கொண்டிருந்த நாட்டுப்புறக் கலாச்சாரக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு தோன்றியது. அவ்விலக்கியங்கள் குறித்து அறிந்துகொள்ள வேண்டும், அவற்றை ஆராய வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியது. இதன் விளைவாக நாட்டுப்புற இலக்கியங் களெல்லாம் திரட்டித் தொகுக்கப்பட்டன; ஆராய்ந்து வெளியிடப்பட்டன.

இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் 20-ஆம் நூற்றாண்டில்தான் நாட்டுப்புற இலக்கியம் பற்றிய ஆய்வுகள் விரிவாகச் செய்யப்பட்டு வருகின்றன. இவ்விலக்கியங் களைத் திரட்டித் தொகுக்கும் பணியும் வெளியிடும் பணியும் பரவலாகத் தற்போது நடைபெற்று வருவது பாராட்டிற்குரியது.

**தோற்றம்:-** நாட்டுப்புற இலக்கியம் எப்பொழுது தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? எவ்வாறு தோன்றியது? என்ற வினாக்களுக்குத் தகுந்த விடை தருவது அரிது. ஏனெனில் அவை குறிப்பிட்ட ஒரு நூற்றாண்டில் தோன்றியனவும் அல்ல; குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டனவும் அல்ல; குறிப்பிட்ட ஒரு முறையில் பிறப்பெடுத்தனவும் அல்ல.

இவ்விலக்கியங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பவர்கள் கிராமப் பகுதிகளில் வாழும் பாமர மக்களாவர். வழிநடையாகச் செல்பவர்களும் வருந்தி உழைப்பவர்

களும் தம் நடையில் தளர்வும் உழைப்பில் சோர்வும் தோன்றாதிருக்கும் வண்ணம் கூடிப்பாடி ஆடி மகிழ்ந்தனர். அவர்கள் பாடிய பாடல்களும் கூறிய கதைகளும் நாட்டுப்புற இலக்கியங்களாக மலர்ந்தன. அவர்கள் ஆடிய ஆடல்கள் நாட்டுப் புறக் கலைகளாகப் பரிணமித்தன. இதனால் வாழ்வின் ஒரு பகுதியாக - வாழ்வி லிருந்து பிரிக்கமுடியாத இன்றியமையாத பகுதியாக வாழ்வோடு இணைந்து நாட்டார் இலக்கியங்கள் வளர்ந்தன.

எழுத்து வடிவம், வாய்மொழி வடிவம் என்ற இரு வடிவங்களில் நாட்டார் இலக் கியங்கள் கிடைக்கின்றன. எழுத்து வடிவில் தற்போது நமக்குக் கிடைக்கின்ற நாட்டார் இலக்கியங்கள் 400 ஆண்டுக்கால வரலாறுடையன என்று கருதப் படுகின்றது. சுமார் நானூறு ஆண்டுகளே உயிர்வாழும் சுவடிகளில் எழுதப்பட்ட வைகளாக இவை கிடைக்கின்றன. வாய்மொழி வடிவில் கிட்டும் நாட்டுப்புற இலக்கியங்களைக் கால வரையறைக்குட்படுத்துவது கடினம். சான்றாக நாட்டார் கதைகள், பழமொழிகள், விடுகதைகள் ஆகியவற்றைக் கால எல்லைப்படுத்த இயலாது. ஆயின், வரலாற்றுக் கதைப்பாடல்களை ஓரளவுக்குக் கால எல்லைக்குள் அடக்கலாம். எழுத்து வடிவில் எழுதப்பட்டிருக்கும் நாட்டார் இலக்கியங்களில் பல வாய்மொழியாகவே வழங்கப்பட்டுவந்து, குறிப்பிட்ட காலத்தில் ஏட்டில் எழுதப் பட்டுள்ளன. இதற்கு அவ்வவ்வேட்டிலக்கியங்களிலேயே அகச்சான்றுகளைக் காணலாம்.

முத்தாரம்மன் கதையில் (கே. ப. சு. 8427) இருளணைஞ்ச பெருமாள் வில்லுப் பாட்டாகப் பாடி வந்ததை அருணாசலப் புலவர் சுவடியில் எழுதி வைத்ததாகக் குறிப்புள்ளது. பாண்டவர் வனவாசம் (கே.ப. சு. 9067) என்ற தலைப்பிலமைந்த சுவடியில்

தேசத்தை யாளுங் துரியோதனன் பாவி

என 'ம்' 'ங்' என மாறியது இழுத்துப் பாடிய ஒலியைக் கேட்டு அதன்படியே எழுதியதன் விளைவாகலாம். இதுபோல் ரகரம் றகரமாகச் சில நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் எழுதப்பட்டதற்கு அழுத்தமுள்ள உச்சரிப்போடு பாடக்கேட்டது போன்று எழுதியதும் ஒரு காரணம் எனலாம். கண்ணகி என்ற சொல்லின் இடை யில் 'ரகரம்' நுழைந்து 'கர்ணகை' என்று ஆகியதற்கும் இதுவே காரணமாகலாம்.

கோவலன் கதையில் (கே.ப.சு 6718) 'மாதவி' மாதேவி என நீண்டதற்கும் நாட்டுப்புற இசையின் இழுத்தப் போக்கே காரணமாதல் வேண்டும். நாட்டுப்புற இசையின் முக்கியத்தன்மையாகிய நீட்டிய இசையமைப்பு (உச்சஸ்தாயி) 'மாதவியை' மாதேவியாக்கியுள்ளது எனலாம்.

1. பேச்சு வழக்கு மலிந்த நடையில் எழுதியிருத்தல்

2. இறுதியில் 'வாழி' என்ற பகுதி இருந்தால் அதில் பாடலைப் பாடக் கேட்டவர்கள் வாழ்க என முடித்திருத்தல்

3. கதையை நாடகமாய்ப் பாடுதற்கு அல்லது கதையைச் சொல்வதற்கு என்ற தொடர்கள் அமைந்திருத்தல்

4. கும்மி, கணியான் கூத்து போன்ற நாட்டுப்புறக் கலைகளுடன் இயைந்து, மக்கள் மத்தியில் பாடப்படும் இலக்கியமாக இருத்தல்

போன்ற தன்மைகளை ஏட்டில் எழுதப்பட்டுள்ள ஒரு நாட்டார் இலக்கியத்தில் கண்டால், அது வாய்மொழியாக வழங்கப்பட்டுப் பின்னர் ஏட்டில் இடம் பெற்ற ஒன்று என எளிதில் இனங்கண்டுகொள்ள இயலும்.

வாய்மொழியாக வழங்கப்படாது, நேரடியாக ஏட்டிலே எழுதி வைக்கப்பட்டுள்ள நாட்டார் இலக்கியங்களும் உள்ளன. இலக்கண நெறிப்பட்ட அவற்றின் கடின நடையே அவற்றின் இயல்பினை அறிந்து தெளியத் துணைசெய்யும்.

> நிருபருக்குள் ளிலக்கணம் யாவையும் நிரம்பி
> தெருவிடைத் திரிபுதல்வனவ் வனத்திடைத் திரியும்
> கரியரிக்குலம் புலிக்கணம் யாவையும் கரத்தால்
> வெருவரப் பிடித்திடுந்தொழில் கண்டுளம் வியந்தான்
>
> பாண்டவர் வனவாசக் கதை (கே.ப.சு.8085)

என உள்ள நடையமைதியைச் சான்று காட்டலாம். இத்தகையன பெரும்பாலும் இதிகாச, புராணக் கதைகளின் சில பகுதிகளை, அல்லது அவற்றின் சாரத்தைக் கூறுவனவாக அமையும். புகழேந்திப்புலவர் எழுதியதாகக்கருதப்படும் கதைப் பாடல்களை இவற்றிற்குச் சான்றாகக் காட்டலாம். மேலும்

1. மரபு வழிப்பட்ட யாப்புக்குச் சிறப்பிடம் அளித்திருத்தல்

2. பேச்சு வழக்குச் சொற்கள் ஆங்காங்கு இருப்பினும், பெரும்பான்மையும் இலக்கிய வழக்கு நடையில் இயன்றிருத்தல்

3. குறிப்பிட்ட இலக்கியத்தை இயற்றிய ஆசிரியர் பெயர், ஊர்ப்பெயர், இன்னாருக்காக அதனை எழுதினார் என்ற விவரம், எழுதிய காலம் போன்றன குறிப்பிடப்பட்டிருத்தல்[6]

4. குறிப்பிட்ட ஏடு மூலஏடாக இருத்தல்

என்ற இத்தகு தன்மைகளுடன் அமைந்திருந்தால், அது தொடக்கத்தி லேயே ஏட்டில் எழுதப்பட்ட நாட்டார் இலக்கியம் என அறிய இயலும்.

6. ''சென்னப் பட்டணந் தனிலுகந்த
செல்வனான சின்னய்யா முதலியார் சித்தமாக
மன்னனுரை தஞ்சைநகர் ரெங்க சுவாமி
மகீபர் செய்த மார்கண்டன் கதை''-மார்க்கண்ட நாடகம் (கே. ப. சு. 8253)
''பலவேச ஓதுவாருக்கு சங்கர முர்த்தியா பிள்ளை எழுதிக் கொடுத்த மகாபாரதம் கதை''
மகாபாரதக்கதை (கே. ப. சு. 6322)

**தொன்மையும் தொடர்ச்சியும் :-**

வாய்மொழி இலக்கியம் எழுத்திலக்கியத்திற்கும் காலத்தால் முந்தியது; முன்னோடியாக அமைவது. வாய்மொழித் தன்மையை மிகுதியும் கொண்ட நாட்டார் இலக்கியம் எழுத்திலக்கியத்தினும் பழமையானது.

பாமர மக்கள் இலக்கியம் எனப்படும் நாட்டார் இலக்கியம், கற்றவர்களிடையே வழங்கி வந்த எழுத்திலக்கியம் என்ற இவ்விருவகை இலக்கியங்களையும் கருத்திற் கொண்டே, தமிழில் கிடைத்த நூற்களில் பழமையானது எனக் கருதப் படும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் இலக்கணம் வகுத்துச் செல்கிறது.

வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி

என அமையும் அதன்பாயிரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'வழக்கு' உலக வழக்கில் அமைந்த நாட்டார் இலக்கியங்களைக் குறிப்பிடுவதாகும். மேலும்

தெரிந்த மொழியால் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றில்
புலன்' ............

(தொல் : பொருள் : 542)

என அமைவதும் நாட்டார் இலக்கியத்துக்கு வகுத்த இலக்கணமாகும்.

மேலும் தொல்காப்பியம் குறிப்பிடும் உரை பற்றிய நூற்பாக்கள் எளிய உரை நடையில் அமையும் நாட்டார் கதைகளையும் (பொருள்: 475) நாட்டார் விடுகதைகளையும் (பொருள்: 478) நாட்டார் பழமொழிகளையும் (பொருள்: 479) கருத்துட் கொண்டமைத்தனவாகும்.

இவ்வாறு நாட்டார் இலக்கியங்களுக்கு இலக்கணம் இயம்பியுள்ளமையின் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே இவ்வகை இலக்கியங்கள் பல்கிப் பெருகியிருந் திருத்தல் வேண்டும் என உணரலாம். அவ்வவற்றுக்குரிய தனிப்பட்ட வடிவமைதி களுடன் அன்றிருந்தவைகளெல்லாம் தற்போது நமக்குக் கிடைக்காவிடினும் வளர்ந்து வந்துள்ள எழுத்திலக்கியங்களில் அவற்றின் கூறுகளையும் சாயல் களையும் காண முடிகின்றது. சங்க இலக்கியம், நீதிநூல்கள், பக்தி இலக்கியம், காவியங்கள், புராணங்கள், சிற்றிலக்கியம் என்ற பல இலக்கியங்களிலும் நாட்டுப் புற இலக்கியத்தின் கூறுகளைக் காணலாம். சங்க இலக்கியத்தில் குறிப்பாக ஐங்குறுநூற்றிலும் நீதிநூல்களில் சிறப்பாகப் பழமொழி நானூற்றிலும் பக்தி இலக் கியத்தில் குறிப்பிடத்தக்க அளவு ஆழ்வார் பாடல்களிலும் காவியத்தில் சிறப்பாகச் சிலம்பிலும் சிற்றிலக்கியத்தில் பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்களிலும் நாட்டார் இலக்கியச் சாயல்களைக் காண முடியும்.

பிற்காலக் கவிஞர்களுள் நாட்டுப்புற இலக்கிய வடிவுகளுக்கு மீட்டுருவம் தந்து உயிர்ப்பித்த பெருமை பாரதிக்குரியது. அவரைத் தொடர்ந்து பல கவிஞர்களும் நாட்டார் இலக்கிய ஆக்கத்துக்குப் பணி புரிந்திருக்கின்றனர். கொத்தமங்கலம் சுப்பு நாட்டுப்புறப்பாடல் மெட்டில் பல பாடல்களை இயற்றி மேடையேற்றித் தாமே வில்லடித்துப் பாடியும் வந்தமை குறிப்பிடத்தக்கது. இவரது 'காந்திமகான் கதை' இத்தகு வகையில் குறிப்பிடத்தக்க ஒன்று. நாட்டார் இலக்கியமானது நாட்டார் பாடல், நாட்டார் கதைப்பாடல், நாட்டார் நாடகம், நாட்டார் விடுகதை, நாட்டார் பழமொழி, நாட்டார் கதை என அறுவகையாக அமையும். இவற்றுள் முந்தைய இரண்டும் முழுவதும் பாடல் வடிவில் அமைவன. நாட்டார் நாடகம் பாடல், வசனம் கலந்தோ[7] அல்லது பாடலாகவோ[8] அமைவதுண்டு. நாட்டார் விடுகதை உரைநடை, பாடல்[9], பாடல் போன்ற நடை[10] என்ற மூன்று வடிவங்களில் கிடைக்கின்றது. நாட்டுப்புறக்கதை முழுவதும் உரைநடை வடிவுடன் கூடியது. நாட்டார் பழமொழிகள் பெரும்பான்மையும் உரைநடை வடிவில் ஓரிரண்டு வரிகளில் முடியக் 'கூடியனவாகக் கிடைக்கின்றன. ஆயின் இவை எதுகை, மோனை அமைப்புக்களுடன் தமக்கே உரிய ஒருவித இசையுடனும் கூடிப்பாடல்வரி போன்று தோன்றும் தன்மையன.

''அறுக்க மாட்டாதவனுக்கு அம்பத்தெட்டு அரிவாள்''

''ஆடுற மாட்டை ஆடிக் கறக்கணும்; பாடுற மாட்டைப் பாடிக் கறக்கணும்''

''மகன் செத்தாலும் பரவாயில்லை; மருமகள் தாலியறுக்கணும்''

''குருடனுஞ் செவிடனும் கூத்துப் பார்க்கப் போய் குருடன் கூத்தைப் பழித்தன்; செவிடன் பாட்டைப் பழித்தான்'' என்றமையும் பழமொழிகளைச் சான்று காட்டலாம்.

நாட்டார் பாடல்களைப் பொருளடிப்படையில் தாலாட்டு, காதல், திருமணம், இல்வாழ்க்கை, தொழில், தத்துவம், சமயம், ஒப்பாரி, பல்சுவைப் பாடல்கள் என வகைப்படுத்தலாம்.

---

7. சான்றாக அரிச்சந்திரன் நாடகத்தைக் (கே. ப. சு. 6686) கூறலாம். பாடல் வடிவில் அமையும் இதில் 'அகோ வாரும் பிள்ளாய்', 'இப்படியாகத்தானே' என்று தொடங்குகின்ற நான்கு வரி வரை அமையும் வசனங்களை இடையிடையே காணலாம்.

8. மார்க்கண்ட நாடகம் (கே. ப. சு. 10301, 9108, 8254)
குசலவ நாடகம் (கே ப. சு. 9277, 11533)

9. மரபுவழிப்பட்ட யாப்பில் பாடலாகவே அமைந்த விடுகதைகளும் உண்டு.
சான்றாக ஆமையினை விடையாகக்கொண்ட பாடல் :

''ஓடுடுப்பான் பிச்சை ஒருநாளும் கண்டறியான்
காடுறைவான் தீர்த்தக்கரை சேர்வான் - தேட
நடக்குங்கால் காலுண்டு நல்தலை யொன்றுண்டு
படுக்கும்போ தலையில்லை பார்''. — தமிழில் விடுகதைகள்— பக் - 136

10. ''பச்சைப் பச்சென்றிருக்கும் பாவக்காயுமல்ல
பக்கமெல்லாம் முள்ளிருக்கும் பலாக்காயுமல்ல
உள்ளே வெளுத்திருக்கும் தேங்காயுமல்ல
உருக்கினால் நெய்வடியும் வெண்ணெயுமல்ல''
விடை : ஆமணக்கம் விதை.

நாட்டார் கதைப்பாடலை புராண இதிகாசம் தழுவியன, தெய்வம் தழுவியன, சமூகம் தழுவியன, வரலாறு தழுவியன என்ற நால்வகைப் பிரிவில் அடக்க இயலும். நாட்டார் நாடகங்கள் பெரும்பான்மையும் இதிகாச, புராணக் கதைகளை அடியொற்றியன. சான்றுகளாக இராமநாடகம் (கே.ப.சு. 5910, 8718, 8654), அரிச்சந்திர நாடகம் (கே.ப.சு. 10416, 10311), மார்க்கண்ட நாடகம் (கே.ப.சு. 7319, 8253) என்பனவற்றைக் கூறலாம். நாட்டார் விடுகதை, பழமொழி என்பன பல்வேறு பொருளமைதிகளிலும் காணப்படுகின்றன.

நாட்டார் கதைகள் அல்லது எடுத்துரைக்கப்படும் உரை நடைக் கதைகளைப் (Prose Narratives) புராணக் கதைகள், பழமரபுக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், வேடிக்கைக் கதைகள், கேலிக்கதைகள் என வகை பிரித்துப் பார்க்கலாம்.

## நாட்டார் கதைப்பாடல்கள்:- III

நாட்டார் இலக்கியத்தின் ஒரு பிரிவான நாட்டார் கதைப்பாடல் நாட்டார் வழக்காற்றியலில் தனிச் சிறப்பிடம் பெறுகின்றது. பாட்டு வடிவில், பேச்சு வழக்கு நடையில், மனங்கவரும் ஓசை நயத்துடன், கதைத் தலைவன், தலைவி பிறப்பு தொடங்கி இறப்பு வரை உள்ள வாழ்க்கை நிகழ்ச்சிகளை விவரித்துக் கொண்டு செல்வது கதைப்பாடலின் இயல்பு எனலாம்.

## சுவடிகளில் கதைப்பாடல்களின் இடம்:-

வாய்மொழி வடிவிலும் சுவடி வடிவிலும் கதைப்பாடல்கள் தற்போது நமக்குக் கிடைக்கின்றன. வாய்மொழியாகப் பாடப்பட்டு வந்த பல கதைப்பாடல்கள் 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சுவடிகளில் எழுதப்பட்டுள்ளன. கதைப்பாடற் சுவடிகளிலமையும் காலக்குறிப்புக்கள் இக்கருத்தினை உறுதிப்படுத்துகின்றன. இவை ஒருவேளை படி எடுத்த காலத்தினைச் சுட்டுவதாக இருப்பின் மூலக்கதைப்பாடற் சுவடிகள் இதற்கும் முந்தைய நூற்றாண்டினவாக அமைய இடமுள்ளது.

கோவலன் கதை (கே.ப.சு. 6305) கொல்லம் ஆண்டு 1048 (கி.பி. 1873) சித்திரைமாதம் 10-ஆம் நாள் எழுதப்பட்டிருக்கிறது. சின்னத்தம்பி கதை (கே.ப.சு. 8426) கொல்லம் ஆண்டு 1067 (கி.பி. 1892) பங்குனி மாதம் 4-ஆம் நாள் எழுதப்பட்டதாகக் குறிப்புள்ளது. நாலு மந்திரி கும்மிப்பாட்டு (கே.ப.சு. 3223) கொல்லமாண்டு 1019 (கி.பி. 1844) மாசிமாதம் 29-ஆம் நாள் எழுதப்பட்டுள்ளது.

சுவடிகளிலமைந்த பிற இலக்கியங்களோடு ஒப்பு நோக்கும்போது கதைப் பாடற் சுவடிகளில்தான் எழுதப்பட்ட ஆண்டு, மாதம், நாள், நட்சத்திரம், ஆசிரியர் பெயர், அவர் ஊர்ப்பெயர், தந்தையின் பெயர், எப்பொழுது கதைப் பாடலை எழுதத் துவங்கினார்? எப்பொழுது முடித்தார்? யாருக்காக எழுதினார்? அவரது சொந்தக் கையெழுத்தா? பிறரைக் கொண்டு எழுதச் செய்தாரா? என்பன போன்ற பல சிறப்பு விவரங்களை அதிகமாகக் காணமுடிகின்றது.

நளன்கதை (கே.ப.சு. 7985) கொல்லமாண்டு 1027 (கி.பி. 1852) ஆடிமாதம் 25-ஆம் தேதி எழுதத் தொடங்கப்பட்டு, அதேயாண்டு தமிழ் மாதம் வைகாசி 20-இல் எழுதி முடிக்கப்பட்டதாகக் குறிப்புள்ளது. இதனால் 297 ஓலைகளுள்ள 42.2 × 4.5. செ.மீ. அளவுள்ள பக்கத்துக்கு 7 முதல் 10 வரிகள் கொண்ட 1070 பாக்களும் உரை நடையுங் கொண்ட இச்சுவடி 10 மாதங்கள் 25 நாட்களில் எழுதப்பட்டமை தெரிகின்றது.

கதைப்பாடற் சுவடியில் காணப்படும் தொடங்கிய, முடித்த காலங்கள் பற்றிய குறிப்பு, குறிப்பிட்ட ஓலைகளுள்ள சுவடிகளை எழுதி முடிக்க எத்துணைக் காலம் பிடிக்கும் என வரையறை செய்து அறியப் பெருந்துணை புரிகின்றது. மிகப்பிற்காலக் கதைப்பாடற் சுவடிகளில் அவை எத்தனை மணிக்கு எழுதி முடிக்கப் பட்டன என மணிக்கணக்கும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தோட்டுக்காரி கதை. (உ.த.நி.சு. 310) 'கொல்லமாண்டு 1117 (கி.பி. 1942) ஆடிமாதம் செவ்வாய்க்கிழமை மாலை மணி 4-க்கு முடிந்தது'. மார்க்கண்டன் கதை (கே.ப.சு. 5655) 'வெகுதானிய வருடம் ஆவணிமாதம் வெள்ளிக்கிழமை பகல் 1 மணிக்கு முடிந்தது' என்ற குறிப்புக்கள் கவனிக்கத்தக்கன. மேலும், பாண்டவர் அசுவமேதயாகக் கதை (கே.ப.சு. 5452) யில் ராமயன்பட்டி முசுப்புத் தேவர் எழுதியது முகிந்தது முற்றும் என்றும், நளன் கதையில் (கே.ப.சு. 7985) 'துரோபதை பிதாச்சிற்றூர் காரியஸ்தம் முத்துசுவாமி அதிகாரியவர்கள் தவமகிமை அருமைப் புதல்வனாகிய குமார சுவாமி எழுதியது' என்றும் கதைப்பாடற், சுவடிகளில் காணப்படும் குறிப்புக்கள் ஆசிரியர் ஊர்ப்பெயர்களைத் தெளிவுப் படுத்துவதுடன் இவை மூலச்சுவடிகள் எனக் கருதவும் இடம் தருகின்றன.

'இந்தப்படிக்கி சேர்வைக்கார நாடார் மகன் சேர்வைக்காரன் எழுதினான்'-என மதுரைவீரன் அம்மானை (கே.ப.சு. 5420) யில் உள்ள குறிப்பு, ஏற்கனவே இருந்த ஒரு மதுரைவீரன் அம்மானையைப் பார்த்து இது படி செய்யப்பட்டது என்பதனைத் தெளிவாக்குகின்றது.

சுவடிகளில் கதைப்பாடல்கள் எழுதப்படும் போது நீண்ட ஓலைகள் (சுமார் 30 செ.மீ.) மூன்று, நான்கு பத்தியாகப் பிரித்துக் கொள்ளப்பட்டு எழுதப்பட்டுள்ள முறையைக் காணலாம். அடி வேறுபாடு அறியும் விதத்தில் அடியின் இறுதி எழுத்துச், சற்று இடம் விட்டுத் தனித்து எழுதப்பட்டிருக்கும்.

. . . . . . . .   .   . . . . . .   .   . . . .   .   . . . . . .   .

ஒரே தலைப்புடைய கதைப்பாடல் ஐந்து சுவடிகளில் கிடைத்தால் அவ்வைந்தும் வெவ்வேறு முறையில் கதை கூறுவனவாக இருத்தலுமுண்டு. ஒவ்வோர் சுவடியும் கதைவேறுபாடு, பாடவேறுபாடு, கதைப் போக்கு, கதை நிகழ்ச்சி முன் பின் மாறாக இடம்பெறல், நிகழ்ச்சிகள் சிலவற்றை விட்டிருத்தல் அல்லது சேர்த்திருத்தல், தொடக்கம், முடிவுகளில் மாறுபடல் எனப் பல்வேறு நிலைகளில் மாறுபட்டமையக் காணலாம். சான்றாக அரிச்சந்திரன், நளன் கதை, வைகுண்டன் கதை, அசுவ மேதயாகக் கதை, நாலு மந்திரி கதை, சோழன் பசுக்கதை, சித்திரபுத்திரன்

கதை, அமராவதிகதைப் பிரதிகள் ஆகியவற்றைச் சுட்டலாம். இதனால் குறிப் பிட்ட ஒரு கதைப் பாடல் சுவடியைப் பதிப்பிக்க விரும்புபவர் அது தொடர்பான ஒற்றுமையுள்ள, வேறுபாடுள்ள அனைத்துச் சுவடிகளையும் பார்வையிட்டுப் பதிப்பிக்கும்பொழுது மட்டும் பதிப்புப்பணி சிறப்புடையதாக அமையும்.

**கதைப்பாடற் தலைப்பமையும் விதம் :-**

கதைப்பாடலின் தலைப்பு பெரும்பான்மையும் கதைத்தலைவன் அல்லது தலைவி யின் பெயரைப்பெற்று அமைந்திருக்கும். அதனைத்தொடர்ந்து முடிவில் கதைப் பாடல், (ஊமைத்துரை கதைப்பாடல்-எழுமாத்தூர், கட்டப்பொம்மன் கதைப்பாடல்- தொ.பொ.ஆ), கதை (ஐவர் ராசாக்கள் கதை, முத்துப்பட்டன் கதை), கும்மி (நாலுமந்திரிகும்மி, சிவகங்கைக்கும்மி) அம்மானை, (இராமப்பய்யன் அம்மானை, மதுரை வீரன் அம்மானை), சிந்து (பூலுத்தேவன்சிந்து), கூத்து (கட்டபொம்ம கூத்து), விற்கவிதை, வில்லுப்பாட்டு (முத்தாரம்மன் விற்கவிதை, இராமாயணம் வில்லுப்பாட்டு - கே.ப.சு. 8434), படைப்போர் (இபுராஹீம் படைப்போர்-செ.கீ.சு. 8890, இரவிக்குட்டிப்பிள்ளை படைப்போர்) சண்டை, (கான்சாகிபு சண்டை) மாலை (அல்லியரசாணிமாலை, புலந்திரன் களவுமாலை), மசக்கை (பொன்னுருவி மசக்கை), தூது (புரந்தரன் தூது), சரித்திரம் (கேதாரநாதர் சரித்திரம் கே.ப.சு. 9124) கதைச்செய்யுள், (உருக்குமாங்கதன் கதைச் செய்யுள் செ. கீ. சு. 4296) என்றிவ்வாறாக அமைவதுண்டு. சில கதைப்பாடல்கள் ‘காவியம்’ என்று அமை வதைக் காணலாம். சான்றாக வெங்கலராஜன் காவியம், பார்வதியம்மன் காவியம் போன்றவற்றைச் சுட்டலாம்.

முடிவில் இவை எவையுமில்லாது அர்ச்சுனன் தவம் (செ. கீ. சு. 7350) நீலியட்ச கானம் (செ. கீ. சு. 1860), அசுவமேதயாகம் (செ. கீ. சு. 505) என அமைந் திருப்பதுமுண்டு. தலைப்பில் கும்மி, அம்மானை, சிந்து, வில்லுப்பாட்டு என முடிவுபெற்று அமையும் கதைப்பாடல்கள் இசை வடிவுக்கு முக்கியத்துவம் தரப் பட்டு எழுதப் பட்டவையாகும் (Musical Ballads)

இவை போன்று மாலை, கதை, சண்டை, மசக்கை, சரித்திரம், தூது என முடிவுறுவன பாடற்பொருண்மையின் அடிப்படையில் பெயர் பெறுவன எனலாம். கூத்து, நாடகம் என முடிவன நாடகப்பண்பு மிக்குடைய கதைப்பாடல்களாகும்.

**கதைப்பாடலின் வகை:-**

கதைப்பாடல்களைப் புராண, இதிகாசக்கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல் கள், வரலாற்றுக்கதைப்பாடல்கள், கிராம தேவதைகள் அல்லது தெய்வக் கதைப் பாடல்கள் எனப்பாகுபாடு செய்வது பொருத்தமாகத் தோன்றுகிறது. புராண, இதிகாசங்களில் உள்ள கதைப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு தங்கள் கற்பனையைக் கலந்து கிராம மக்கள் உருவாக்குகின்ற கதைப்பாடல்கள் முதல் வகையில் அடங்கும். சாதிக்கட்டுப்பாடுகள், கூட்டுக் குடும்ப அமைப்பு முறை, ஊருக்காக உழைத்து உயிர் விட்டவர்களின் தியாகம், வீரம் ஆகியனவற்றை

அடிப்படையாகக் கொண்டு பெரும்பான்மையான சமூகக் கதைப்பாடல்கள் திகழ்கின்றன. கிராம மக்களின் கண்ணோட்டத்தில் தமிழக வரலாற்றின் சில பகுதிகளை விளக்கும் வரலாற்றுக் கதைப்பாடல்கள் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். அவ்வவ்விடங்களில் ஆற்றலும் அற்புத சக்திகளும் மிக்க தெய்வம் என்று புகழ் பெற்றுள்ள சிறு தெய்வங்கள் மீது பாடப்படும் கதைப்பாடல்கள் இறுதிப் பிரிவில் அடங்கும்.

**பாடுமிடம், பாடப்படும் நிலை:-**

பெரும்பாலான கதைப்பாடல்கள் விழாக் காலங்களில் பாடப்படுகின்றன. நெல்லை மாவட்டத்திலும் குமரி மாவட்டத்திலும் கோவில்களிற்கொடைகளின்போது வில்லுப்பாட்டாகக் கதைப் பாடல்கள் பாடப்படுகின்றன. கணியான் கூத்து போன்ற கலைகளோடு இயைந்தும் அவை வழங்கி வருகின்றன. நெல்லை மாவட்டத்திலும் இராமநாதபுரம் மாவட்டத்திலும் அறுவடைக்காலங்களில் கட்டப் பொம்மன் கதைப் பாடல்களைக் கூத்தாக நடிக்கின்றனர். தென்னாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் தேசிங்குராஜன் கதை பாட்டாகப் பாடப்படுகின்றது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் அண்ணன்மார் சுவாமி கதை அல்லது குன்றுடையான் கதை பாடப்படுகின்றது. நாட்டுப்பாடலாகத் தோன்றிய நல்லதங்காள் கதை பாட்டாகப் பாடப்படுவதுமன்றி நாடகமாகவும் நடிக்கப்படுகிறது. சேலம் பகுதியில் குறவன், குறத்திப்பாட்டாக கதைப்பாடல்கள் வழங்கப்படுகின்றன மதுரையில் லாவணி, ஒயிலாட்டம், அம்மானை முதலிய உருவங்களிலும் இவை வழங்கிவருகின்றன[11]

**அமைப்பு முறை:-**

கதைப்பாடல்களின் அமைப்பு அல்லது உள்ளடக்கத்தைக் கீழ்க்காணுமாறு முறைப்படுத்தலாம்.

1. கடவுள் வாழ்த்து எனப்படும் காப்பு
2. அவையடக்கம்
3. நாட்டு நகர் வளம் கூறல்
4. கதை அமைப்பு
5. வாழி பாடுதல்

காலத்தால் முந்தைய கதைப்பாடல்களில் நாட்டு, நகர் வர்ணனைகள் விரிவாகவும் பிற்காலக் கதைப்பாடல்களில் ஒரே வரியில் சுருக்கமாகவும் அமைதல் உண்டு. நாட்டு, நகர் வர்ணனைகளைப் பொறுத்தமட்டில் பழைய கதைப்பாடல்கள் ஓரளவு காப்பிய மரபுகளைப் பின்பற்றுவதைக் காணலாம்.

---

11. வானமாமலை, நா., (ப.ஆ) வீரபாண்டியக்கட்ட பொம்மு கதைப்பாடல், பக். 17, கான்சாகிபு சண்டை. பக். 17.

## யாப்பு

கதைப்பாடல்களில் காணும் யாப்பு முறையை மரபு வழிப்பட்ட யாப்பு (விருத்தம், வெண்பா, கவித்துறை, அகவல் போன்றன அமைதல்), நாட்டுப்புறப்பாடல்களுக்கே யுரிய சந்தங்களுடன் அமைவன (சிந்து, தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, பள்ளு, நொண்டிச்சிந்து, தொங்கல் போன்றன வருதல்) என்று இருவகைப்படுத்தலாம். கதைப்பாடல்கள் எழுத்திலக்கியப் புலவர்களால் எழுத்துருப் பெறும்பொழுது பெரும்பாலும் மரபுவழி யாப்பு பின்பற்றப்படுவதைக் காணலாம்.

## அடிவரையறை

கதைப்பாடல்களுக்கென்று குறிப்பிட்ட அடிவரையறை எதுவும் கிடையாது. கதையின் தன்மை, தரத்துக்கு ஏற்ப அது நீண்டு, குறுகிச் செல்வதுண்டு. பெரும்பாலான கதைப்பாடல்களைப் பார்க்கும்பொழுது பொதுவாகக் கதைப் பாடல்கள் சுமார் 1000 அடிகள் கொண்டவனாக உள்ளமை தெரிகிறது. வெளிவந்துள்ளவற்றில் 7410 அடிகள் கொண்ட வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல் போன்றனவும் உள்ளன. பதிப்பிக்கப்படாத சுவடிகளில் உள்ள கதைப்பாடல்களில் சுமார் 29000 வரிகள்வரை கொண்ட 1-பாரத அம்மானை (ஆ.ஆ. நி.) போன்றனவும் இடம் பெறுகின்றன.

## தன்மை

ஒரு நாட்டில் வழங்கும் கதைப்பாடல்கள் அந்த நாட்டின் சட்டங்களைவிட முக்கியமானவை என்பார் ஆண்ட்ரூசு பிளச்சர்.[12] கதைப்பாடல்கள் மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை. சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை. இவை கற்பனையால் உருவான நாட்டார் பாடல்கள் எனினும் அக் கற்பனை ஆகாசக் கோட்டைகள் அல்ல. கதைப்பாடல்கள் வரலாறுகள் அல்ல, ஆயின் அவை வீரகாவியங்கள்[13] எனக் கதைப்பாடல்களின் தன்மைப்பற்றி விளக்கிச் செல்வார் நா. வானமாமலை.

கதைப்பாடல்கள் வில்லுப்பாட்டு, கணியான் பாட்டு அல்லது கணியான் கூத்து, லாவணி, ஒயிலாட்டம் போன்ற பல்வேறு வகைப்பட்ட கலைகளின் இருப்பிட மாகத் திகழ்கின்றன. இக்கலைகளுடன் இயைந்து கதைப்பாடல்கள் மக்கள் மத்தியில் வழங்கி வருகின்றமை இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றது. இக் கலைகளை அடித்தளமாகவும் உயிர்மூச்சாகவும் கொண்டு கதைப்பாடல்கள் வளர் கின்றன. அவ்வாறே கதைப்பாடல்களை இயக்குசக்தியாகக் கொண்டு இக்கலை கள் வளர்கின்றன எனக் கூறுமாறு கலையும் கதைப்பாடலும் ஒன்றோடு ஒன்று இணைந்து இயைந்து வளர்வதைக் காணலாம்.

---

12. நாட்டுப்புற இலக்கியம்-நலந்தரு விளக்கம், பக். 188
13. ஐவர் ராசாக்கள் கதை, பக். 21

## தொகுப்பும் பதிப்பும்

கதைப்பாடல்கள் பல்லாண்டுகளாக வாய்மொழியாக வழங்கி வந்திருப்பினும், இன்று நமக்குக் கிடைக்கும் கதைப்பாடல்களில் பெரும்பாலானவை ஏறத்தாழ 400 ஆண்டுக்கால வரலாறு உடையனவே. கி. பி. 16-ஆம் நூற்றாண்டு தொடங்கி 18-ஆம் நூற்றாண்டு வரையிலும் தம்மளவில் உரிய வடிவு பெற்று வளர்ந்து வந்த இவை 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி தொட்டுப் பதிப்பில் வெளிவரத் தொடங்கிக் கற்றவர் மத்தியிலும் பெருவாரியாக நடமாடத் தொடங்கின. 25-க்கும் மேற்பட்ட கதைப்பாடல்கள் புகழேந்திப் புலவரால் பாடப்பட்டன என்ற குறிப்புடன் வெளிவந்தன. கி.பி. 1863-இல் கருணானந்த சுவாமிகளால் பதிப்பிக்கப்பட்ட பவளக்கொடிமாலை முதலில் வெளிவந்த தமிழ்க் கதைப்பாடல் எனத் தெரிகிறது.[14]

19-ஆம் நூற்றாண்டளவில் 'பெரிய எழுத்துக்கதைகள்' என்ற பொதுப் பெயரில் பல கதைப்பாடல்கள் வெளிவந்துள்ளன. 20-ஆம் நூற்றாண்டில் நா. வானமாமலை மதுரைப் பல்கலைக்கழக வழி, பல கதைப்பாடல்களைச் சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் வெளிக்கொணர்ந்தது குறிப்பிடத்தக்கது. தி. நடராசன் சு. சண்முகசுந்தரம் போன்றோரும் கதைப்பாடல் வெளியீட்டில் பணிபுரிந்திருக்கின்றனர். ஆயினும் இன்னமும் வெளியிடப்பெறாத கதைப்பாடல்கள் எண்ணில. அறிவியல் அடிப்படையில் கதைப்பாடல்கள் முறையாகத் திரட்டித் தொகுக்கப்பட்டால் மட்டுமே கதைப்பாடல்களின் பதிப்புப் பணி சிறக்கும் என்பது உறுதி.

### சமுதாயக் கதைப்பாடல்

கதைப்பாடல் வகைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக சமுதாயக்கதைப்பாடல் அமைகின்றது. இது சமுதாயச் செய்திகளை உள்ளடக்கியது. அவ்வக்கால மக்களின் வாழ்க்கையை அடியொற்றி எழுதப்படுவது. மக்களின் பழக்க வழக்க, பண்பாட்டு நிலைகளை வெளிப்படுத்துவது. குறிப்பிட்ட சமூகத்தில் நடந்த, மக்கள் மனங்கவர்ந்த, மனங்களைத் தாக்கிய நிகழ்ச்சியை விளக்குவது. இருவேறுபட்ட சமூகத்தினிடையே நிகழும் மோதலையும் சமூதாயச் சிக்கல்களையும் மையமாகக் கொண்டது. பெரும்பான்மையும் துன்பியல் முடிவை உடையது. இக்கதைப் பாடல்களில் பெரும்பாலும் இறந்தோர் தெய்வமாக ஆனார்கள் என மங்கலமாக முடிக்கப்படும் மரபினைக்காணலாம்.

### கதைக்கரு

கதைப்பாடல்களின் கருவாகக் கீழ்க்காண்பவை அமையும். 1. மூடப்பழக்க வழக்கங்களால் விளையும் சிக்கல். இதற்குச்சான்றாக நரபலியின் கொடுமை குறித்துக் கூறும் பொன்னிறத்தாள் கதையினைச் சுட்டலாம்[15]

14. நாட்டுப்புற இலக்கியம், பக். 206

15. பதிப்பாசிரியர் சூரநாட்டுக் குஞ்சன் பிள்ளை, கேரளப்பல்கலைக்கழகம். தமிழ்மொழியில் அமைந்துள்ள இக்கதை மலையாள எழுத்தில் எழுதப்பட்டுள்ளது. இக்கதைப்பாடலில் நீராட வந்த தோழியரைப் பிரிந்து வழி தெரியாது திகைத்த ஒன்பது மாத கர்ப்பிணியான பொன்னிறத்தாளைக் கோயில் நிதியை எடுப்பதற்காகக் கள்வர்கள் பலி கொடுத்த செய்தி கதைக்கருவாக அமைந்துள்ளது.

2. சாதி விட்டுச் சாதி காதல் கொள்வதால் வரும் சிக்கல். இதற்குச் சான்றாக குறுக்குளாஞ்சி கதை அமைகின்றது. முதலியார் பையன் அந்தணப் பெண்ணை விரும்பியதால் வரும் சிக்கல் இதில் கதைக் கருவாகிறது.

3. மேல்சாதி இளைஞன் கீழ்ச்சாதிப் பெண்ணையோ[16] கீழ்ச்சாதி இளைஞன் மேல்சாதிப் பெண்ணை விரும்புவதாலோ[17] மணப்பதாலோ[18] வரும் பிரச்சனை.

4. ஏற்கெனவே மணம்புரிந்த ஒருவன் வேறு பெண்ணுடன் தொடர்பு கொள்ள லால் வரும் குழப்பம். இதற்குச் சான்று தடிவீரன் அல்லது மந்திரமூர்த்தி கதை. இதில் சாதிப்பிள்ளை என்பாளை மணம்புரிந்த பின் சோணமுத்து என்ற குடும்பகுலப் பெண்ணுடன் உறவு கொண்ட மந்திர மூர்த்தியின் வாழ்வியல் சிக்கல் கதைக் கருவாக உள்ளது.

5. சொத்துரிமையின் பொருட்டு, பூப்படையாத பெண்ணை மணம் செய்து வைக்க, அப்பெண்ணின் கணவன் வேறு பெண்ணுடன் உறவு கொள்வதால் வரும் பிரச்சனை. இதற்கு தக்கதொரு சான்றாகக் குமார சுவாமி அல்லது சின்னணைஞ்சான் எனும் சின்ன நாடான் கதை அமைகின்றது.

6. தாழ்வர்க்கம் - உயர் வர்க்கத்திடையே நடைபெறும் போராட்டம். இதற்குச் சின்னத்தம்பி கதையினைச் சான்று காட்டலாம்.

7. சமுதாயத்தில் குற்றமாகக் கருதப்படும் ஒரு செயல் அல்லது அறக்கோட்பாடு, குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்குரிய வாழ்க்கை நியதியாக அல்லது தொழிலாக இருப்பதால் விளையும் சிக்கல். இதற்குச்சான்று வன்னிராசன் கதை (கே. ப. சு. 8017) இதில் ‘குலத்தொழிலாகிய களவு செய்து வந்தால் பெண் தரப்படும்’ என வன்னிராசனின் மாமன் நிபந்தனை விதிக்க, அதன்படி வன்னிராசன் கோயில் நகைகளைக் களவாடிப் பிடிபட்டு, மரண தண்டனை பெறுதல் சித்தரிக்கப் பட்டுள்ளது.

இவை தவிர சொத்துரிமை இல்லாத பெண்கள் கூட்டுக் குடும்பத்தில் படும் துன்பம் (நல்லதங்காள் கதை), ஊராரின் நன்மைக்காகப் பயிர்களைக் கொள்ளை போகாமல் பாதுகாத்த வீரர்களின் வரலாறு (சின்னத்தம்பி கதை), உயர்ந்த பல நன்னோக்கங்களுக்காக உயிர்விட்டவர்களின் வாழ்க்கை (கௌதல மாடன் கதை) போன்றனவும் கதைப்பாடல்களாகப் பாடப்பட்டுள்ளன. கிராமப்புற உழைப்பாளி மக்களின் பண்பாட்டுக்கூறுகளை அறிந்து கொள்வதற்கு இத்தகு சமுதாயக் கதைப்பாடல்கள் மிகச்சிறந்த சாதனங்களாக அமைகின்றன.

---

16. முத்துப்பட்டன் கதையில் (பதிப்பாசிரியர் வானமாமலை, நா., 1971) அந்தண குல முத்துப்பட்டன் சக்கிலிய குல மகளிரை விரும்பி மணத்தலும் அதன் விளைவாகத் தோன்றிய சமுதாயச் சிக்கலும் கதைக்கருவாக உள்ளது.

17. மதுரைவீரன் கதையில் (கே.ப.சு. 8420) சக்கிலிய குலத்தானாய மதுரைவீரன் அரசனுக்குரிய அரசவை நாட்டிய மகளான வெள்ளையம்மாளை விரும்புதலால் விளையும் சிக்கல் சுட்டப்பட்டுள்ளது.

18. சிதம்பர நாடார் கதையில் (பதிப்பாசிரியர் தங்கதுரை சு.,) நாடார்குல இளைஞரான சிதம்பர நாடார் உயர்குல அந்தணப்பெண் பாப்பாத்தியை மணம் செய்தலால் விளையும் சிக்கல் கதைக் கருவாக அமைந்துள்ளது.

**கதைவகைமாற்றம்**

கதைப்பாடல் வகைகளுள் நாட்டுப்புறத் தெய்வக் கதைப்பாடல்கள் என்ற வகையும் ஒன்று. சமுதாயத்தில் வாழ்ந்து செயற்கரிய செயல்புரிந்து மறைந்தவர்கள் நாட்டுப் புறத் தெய்வங்களாக இவ்வகைக் கதைப்பாடல்களில் இடம்பெறுவதுண்டு. இத்தகு நாட்டுப்புறத் தெய்வக் கதைப்பாடல்கள் சமுதாயச் செய்திகளை மிகுதியும் கொண்டனவாக அமைந்திருக்கும். சமுதாயக் கதைப்பாடல்வகையுள் இவற்றை அடக்குமளவுக்குச் சமுதாயச் செய்திகளை இவை சுமந்து நிற்றல் இயல்பு. இவ் வகைக்கதைப்பாடல்களுக்குரிய சான்றாக மாடன் கதைகளைக் கூறலாம். சமுதாயயத்தில் அரி செயல் புரிந்து மறைந்த வீரர்கள் மாடன் தெய்வங்களாக வணங்கப்பட்டு நாட்டுப்புறத் தெய்வக் கதைப்பாடல்களில் சிறப்பிக்கப் படுகின்றனர்.

மாடன் கதைகள், கொல்லப்பட்ட வீரர்களின் கதைகளே[19] என்ற கூற்று சிந்தனைக்குரியது. தற்போது கிடைக்கும் பெரும்பான்மையான சமுதாயக் கதைப் பாடல்களின் கதைத்தலைவர்கள் கதை இறுதியில் பலரும் வணங்கும் தெய்வமாக ஆனார்கள் என்று அமைவதும் இங்கு இணைத்து நோக்கத்தக்கது. இதனால் நாட்டுப்புறத் தெய்வங்கள் பற்றிய கதைப்பாடல்கள், சமுதாயக் கதைப்பாடல்கள் என்ற எல்லைக்குள் வைத்து ஆராயப்படத்தக்கவை என்பது தெளிவாகின்றது.

பூலங் கொண்டாளம்மன், இசக்கியம்மன் போன்ற அம்மன் தெய்வங்களும் ஒரு காலத்தில் நாட்டுப்புற மக்களிடையே வாழ்ந்து மறைந்த பெண்கள் என்பதும் இக்கதைப்பாடல்களை நோக்கும்பொழுது தெரியவருகின்றது. நாடார் குலத் துதித்த பூலங்கொண்டாளை அதே குலத்துதித்த, ஆயின் தகுதியில் தாழ்ந்த ஒருவன் மணமுடிக்க விழைகிறான். பெண் பேச வரும்போது பெண் தரமுடியாது எனப் பெண் வீட்டார் மறுத்துரைக்க அவமானம் தாளாத அவன் உறவினர்கள் 'குறிப் பிட்ட நாளுக்குள் பெண்ணைக் கடத்திச் செல்கிறோமா இல்லையா பார்த்துக் கொள்ளுங்கள்' என வஞ்சினம் கூறிச் செல்கின்றனர். அவர்கள் குறிப்பிட்டுச் சென்ற அதேநாளில் பெண்ணின் பிணம் கிணற்றில் மிதக்கிறது. கருங்கிடாய்க் காரன் என்ற கொடுந்தெய்வமே அவளை அழைத்துச் சென்று கிணற்றில் தள்ளி விட்டது எனக் கதை கூறுகிறது. இறந்த அவள் தெய்வமாக வணங்கப்படுகிறாள்.[20] பூலங்கொண்டாளம்மன் என்று அம்மன் தெய்வமாக இக்கதைப்பாடலின் கதைத் தலைவி வணங்கப்பட்டு நாட்டுப்புறத் தெய்வக் கதைப்பாடல் என்ற பிரிவினுள் இப்படைப்பு அடக்கப்படுகின்றது. எனினும், சமுதாயச் செய்திகளை வெளிப் படுத்துவதாக உள்ளமையின் சமுதாயக் கதைப்பாடலாக இதனைக் கருதிப் பார்க்கவும் வாய்ப்புள்ளது.

---

19. நா. வானமாலை, தமிழ்நாட்டுக்கதைப்பாடல்கள் சோக முடிவு.
தே. லூர்து, (ப. ஆ.) நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், பக். 104.

20. பூலங்கொண்டாளம்மன் கதை (ஆ.ஆ.நி. 18)

இதுபோன்றே இசக்கியம்மன் கதையும்[21] தெய்வக் கதைப்பாடல் வகையில் அடக்கப்பட்டுள்ளது. இசக்கியாகிய நீலி எனும் தாசி கோயிற் பூசாரியான அந்தணனுடன் மட்டும் ஒருவனுக் கொருத்தியாய் வாழ்ந்து, இறுதியில் அவனால் தவறாகக் கருதப்பட்டு வஞ்சகமாய்க் கொலை செய்யப்படுகிறாள். இறந்த அவள் பேயாகி, அவனை மறுபிறவியில் வந்து பழிவாங்குவதாகக் கதை அமைகிறது. சமுதாய நிகழ்ச்சிகளைச் சுட்டும் இத்தெய்வக் கதைப் பாடலைச் சமுதாயக் கதைப்பாடலில் அடக்கிப்பார்க்கவும் வாய்ப்புக்கள் உள்ளன. இது போன்றே வெள்ளைக்காரன் கதை, அண்ணன்மார் சுவாமி கதை, தோட்டுக்காரி அம்மன் கதை என்ற தெய்வக்கதைப் பாடல்களையும் சமுதாயக் கதைப்பாடல்களுடன் இணைத்துப்பார்க்க இயலும்.

**சின்னத்தம்பி கதை:-**

பெரிய பணக்காரரின் பேராசைக்கும் சாதிவெறிக்கும் தாழ்ந்த குலத்திற்பிறந்த ஏழை உழைப்பாளி பலியாதல் என்ற பாடற்பொருளை மையமாகக் கொண்டு பல சமுதாயக் கதைப்பாடல்கள் அமைந்துள்ளன. அவற்றுள் சின்னத்தம்பி கதை குறிப்பிடத்தகுந்த சிறப்பிடத்தைப் பெறுகின்றது.

**கதைச் சுருக்கம்:** வேப்பிலாங்குளத்து (நெல்லைமாவட்டம், நாங்குனேரி தாலுகா) இராமப்பகடை - பூலுடையாள் தம்பதியர்க்குப் பல ஆண்டுகளாகக் குழந்தை பிறக்கவில்லை. இதனால் மனவருத்தமடைந்த இத்தம்பதியர் சோதிடம் கேட்கின்றனர். சர்ப்ப தோஷம் உள்ளதால் சர்ப்பசாந்தி செய்து, தானதர்மம் செய்ய வேண்டும் என்று சோதிடன் கூற, அதன்படி செய்கின்றனர். இதனைத் தொடர்ந்து பூலுடையாளும் கர்ப்பமுறுகிறாள். பத்தாவது மாதத்தில் பெண் குழந்தை ஒன்று பிறக்கின்றது. அடுத்து ஆண் குழந்தை பிறக்கும் என்ற நம்பிக்கையில் நாட்கள் பல கழிகின்றன. ஆயின் தொடர்ந்து பல ஆண்டுகளாக ஆண்குழவி பிறக்காது போகவே, இத்தம்பதியினர் மனச்சோர்வுடன் வாழ்க்கைப் பயணத்தினைத் தொடர்கின்றனர்.

இந்நிலையில் 'கேதாரம்' என்ற புனிதத்தலத்திலிருந்து கிருஷ்ணதாசர் என்பவர் கன்னியாகுமரி நோக்கிக் கால்நடையாகப் பயணம் வருகிறார். அவர் பூலுடையாளின் குறையுணர்ந்து திருக்குறுங்குடி அழகியநம்பி கோயிலில் சென்று தவம் செய்தால் ஆண் குழந்தை கிட்டும் எனக் கூறுகின்றார். அவர் கூறியவண்ணம் கணவன் மனைவி இருவரும் தவம் மேற்கொள்ள ஆண் குழந்தை பிறக்கிறது.

பசும்பொற் சங்கிலி பூட்டிய பால்மரத் தொட்டிலில் அக்குழந்தையைக் கிடத்திப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கின்றனர். தக்க வயதில் பள்ளியில் படிக்கவைத்து அறிவு புகட்டியதுடன் ஆனையேற்றம், குதிரையேற்றம், சிலம்புவித்தை என்ற வீரப்பயிற்சிகளும் மாயவித்தை, குறளி வித்தை, மந்திர, தந்திர வித்தைகளும் கற்றுக் கொடுத்து சின்னத்தம்பியை வீராதி வீரனாக உருவாக்குகின்றனர்.

---

21. இசக்கியம்மன் கதை அல்லது நீலி கதை (கே. ப. சு. 8016, 8019.)

இந்நிலையில் களக்காடு, பணமுடி மலைப் பகுதிகளிலிருந்து இறங்கி வந்து, பயிர்களுக்கும் மக்களுக்கும் இடுக்கண் விளைவித்த காட்டுப்பன்றி, கடுவாய் போன்ற கொடிய விலங்குகளை ஒழிக்க வகையறியாது அனைவரும் திணறித் திகைத்திருக்க, சின்னத்தம்பி பூச்சிநாயுடன் வேட்டைக்காரர்களைத் திரட்டிச் சென்று, முன்னின்று வேட்டையாடி, விலங்குகளை அழித்து அவை மக்களுக்குத் தந்த துயர் நீக்கி, வல்லமை சான்ற வீரனாக உருப்பெறுகின்றான்.

அப்போது திருக்குறுங்குடியிலிருந்து ஆட்சி செலுத்தும் மாணிக்கவாசகரின் அடங்காக் குதிரையை அடக்க இயலாமல் வடக்கு வாசல் தளகர்த்தரான வைத்தியநாதர் ஆயிரம் பொன் சம்பளத்தையும் இழந்து விட்டு ஊரை விட்டே போய் விடுகிறார். அமைச்சர்களின் கருத்திற்கிணங்க மாணிக்கவாசகர், வடக்கு வாசல் தளகர்த்தர் பதவியை வந்து ஏற்றுக் கொள்ளுமாறும், தன்னிடம் உள்ள அடங்காக் குதிரையை அடக்கிச் சவாரிக்கு வைத்துக் கொள்ளுமாறும் அறிவித்து சின்னத் தம்பிக்கு ஓலையனுப்புகிறார். சின்னத்தம்பியும் வந்து பதவியை ஏற்றுக் கொண்டு, குதிரையையும் அடக்கித் தன் வீரத்தை மீண்டும் மெய்ப்பித்து அமைகிறான்.

சின்னத்தம்பியின் பெற்றோர் முறைப்பெண் சோணச்சியை அவனுக்கு மணம் பேசி முடிக்கின்றனர். திருமணத்துக்காக விடுப்பு எடுத்துக் கொண்டு சொந்த ஊர் வந்து சேர்கிறான் சின்னத்தம்பி. இந்நிலையில் மாணிக்கவாசகரின் மைத்துனரான பாப்பாக்குடியிலிருந்து ஆட்சி செலுத்திவரும் தருமராசா என்பவருக்குச் சொந்தமான கரையாளன் வயலில் புதையல் கிட்டுகிறது. 'புதையலைக் காவல் காக்கும் பூதங்களுக்கு நரபலி தர வீராதி வீரனொருவன் தேவை' என மந்திர வாதி கூற, 'கீழ்ச்சாதிக்காரனான சின்னதம்பியை இனி உயிருடன் வைத்திருக்கக் கூடாது' என மந்திரிமார் சொன்னதை நினைவு கூர்ந்த தருமராசா, 'புதையல் கிடைத்த விபரமெழுதிப் புதையலுக்கு நரபலி கொடுக்கச் சின்னத்தம்பியை உடனே அனுப்பினால் புதையலில் சரிபாதி தந்து விடுவதாக' உள்ளோலையிலும் 'தனது தீராத தலைவலிக்கு பல்வேறு மூலிகைகள் பறித்துக் கொண்டு வரும் பொருட்டு சின்னத்தம்பியை இங்கு அனுப்புக' என்று வெளியோலையிலும் குறிப் பிட்டு அனுப்புகிறார்.

மாணிக்கவாசகரும் சின்னத்தம்பியை அனுப்பி வைக்கிறார். சாராயம், அபினி, கஞ்சா, மதனகாமப்பூ போன்ற மயக்கம் தரும் பொருட்களைக் கலந்தரைத்துத் தயாரித்த உணவு படைத்து, புதையலிருக்குமிடத்துக்கு அழைத்துக்கொண்டு சென்று, தன்னுணர்வில்லாமல் மயங்கிய நிலையிலுள்ள போதே சின்னத்தம்பியை வெட்டிப் பலி கொடுத்து விடுகின்றனர்.

தன்னுயிர் பிரிவதன் முன் தன்னைப் பலியிட்ட அனைவரையும் பழி வாங்குவதாகச் சபதம் செய்து சின்னத்தம்பி உயிர் துறக்கிறான். அவன் வளர்த்த பூச்சிநாய் அவனது இரத்தத்தில் விழுந்து புரண்டு ஊளையிட்டு, அவனது விரலில் கிடந்த கணையாழியையும் கவ்வியெடுத்துக் கொண்டு, வேப்பிலாங்குளம் சென்று தாய் பூலுடையாளிடம் கணையாழி தந்து, வழிகாட்டி அழைத்து வருகிறது.

மகனின் படுகளம் கண்ட தாய் துயர்தாங்காது நாவிழுத்து உயிர் விடுகிறாள். நிச்சியிக்கப்பெற்ற சோணச்சியும் 'மாமன்|மகன் சின்னத்தம்பி என் மணவாளன்' என்று சொல்லி உயிர் துறக்கிறாள். சின்னத்தம்பியின் தந்தை இராமப்பகடையும் இவையெல்லாம் கண்டு மூர்ச்சித்து விழுந்து இறக்கிறார். நாயும் ஊளையிட்டு மடிய, பரியும் உயிர் விடுகிறது. இக்காட்சிகளையெல்லாம் கண்ட காட்டாளம்மன் அனைவரையும் உயிரோடெழுப்புகிறாள்.

அம்மனுக்குச் சேவகனாய் அமையும் சின்னத்தம்பி, அம்மனிடம் விண்ணப்பித்துக் கொண்டு, தன் சாவுக்குக் காரணமான அனைவரையும் பழிவாங்குகிறான். பின்னர் பல தலங்களுக்கும் சென்று தெய்வங்களையெல்லாம் வணங்கி வழிபட்ட சின்னத் தம்பி இறுதியில் காட்டாளம்மன் கோவிலில் வந்து தங்கிக் காவல் தெய்வமாகிறான். பாப்பாக்குடி அந்தணர்கள், தெய்வமாக மாறிய சின்னத்தம்பிக்குப் பீடமிட்டுப் பொங்கலிட்டு, தம்பிள்ளைகளுக்குச் சின்னத்தம்பியென்று பெயரிட்டு அவனைச் சிறப்பாக வணங்கி வருகின்றனர். அனைவரையும் காக்கும் காவல் தெய்வமாய்க் கொலுவிருக்கிறான் சின்னத்தம்பி.

**கதைப்பாடல் அமைப்பும் சிக்கலும்:-**

தெய்வீக, புராணக் கதைப்பாடல்கள் சுவடிகளில் அமைந்துள்ள அளவுக்கு, சமுதாயக் கதைப்பாடல்கள் சுவடிகளில் பெரும்பான்மையாக அமையவில்லை என்றும் வெளியிடப் பெறவில்லை என்றும் கூறலாம். இதற்குச் 'சமயம் சார்ந்தவை' என்ற உறுதியான அடித்தளத்துடன் அவை வீற்றிருக்காமையும் எதிர் சமூகத் தினரின் எதிர்ப்புணர்வை தொடக்கநிலையிலிருந்தே ஏந்தி நிற்பதும் காரணம் எனலாம். இதனால் சமுதாயக் கதைப்பாடல் முழு அமைப்புப் பெற்று மக்கள் மத்தியில் பரவத் தொடங்கும்முன்பே, குறிப்பிட்ட கதைப் பாடலை ஒழித்துக் கட்டவும் மாற்றித் திரித்து கதைப்பாடலின் அமைப்பையும் அதன் கருப்பொருளையும் கலக்கிக் குழப்பிவிடும் அளவுக்கு எதிர்ப்புச் சக்திகள் செயல்பட்டு விடுகின்றன.

இதற்குச் சான்றாக முத்துப்பட்டன் கதையைக் காட்டலாம். இக்கதைப் பாடல் கலப்புமணத்தின் உயர்வினைச் சிறப்பிக்க எழுந்தது. இப்படைப்பில் இடம்பெறும் கதைத் தலைவனான முத்துப்பட்டன் அந்தணர் குலத்தைச் சார்ந்தவன். இவன் பொம்மக்கா, திம்மக்கா என்ற இரு சக்கிலியப் பெண்கள் பாடிய நாட்டுப்புறப் பாடலின் இனிமையில் மனம் பறிகொடுத்து, அவர்கள் மீது காதலுறுகிறான். அவர்களை மணக்க வேண்டித் தானும் முழுக்க முழுக்க ஒரு சக்கிலியனாகவே மாறி, தோல் பதப்படுத்திச் செருப்புத்தைக்கும் தொழிலைச் செய்கிறான். அவர்கள் குல வழக்கங்கள் அனைத்தையும் கைக்கொண்டு, சேரியிலேயே வாழ்ந்து அவர்களை மணம் செய்துகொள்கிறான்.

இவ்வாறு உண்மைக் கதைப் பாடலும் கதை நிகழ்ச்சிகளும் இருக்க, உயர்குலத் தாரும் வந்து இக்கதைப்பாடலைக் கேட்கும் கோயில் விழாக்களில் இக்கதைப் பாடல் பாடப்பெறும்போது பொம்மக்கா, திம்மக்கா என்ற இருவரும் சக்கிலியனால் வளர்க்கப்பட்டவர்களே தவிர, பிறப்பால் அந்தணர் குலத்தவர்களே என மாற்றிப்

பாடப்படுவதை இக்கதைப்பாடல் பதிப்பில் (பக் - 15) பதிப்பாசிரியர் நா. வானமாமலை தெளிவுபடுத்தியுள்ளார்.

இதனால் 'பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை; காதலின் முன் கீழ்க்குலம் மேற்குலம் என்பன இல்லை', 'திருமணங்களால் சாதி முறைகளை ஒழிக்க இயலும்' என்பன போன்ற கருத்துக்களை எடுத்துரைக்க வந்த கதைப்பாடலின் கருவே சிதைக்கப் பட்டு விடுகிறது. கதை நிகழ்ச்சிகளும் முன்பின் இணைக்கப்பட்டு மாற்றமடைந்து விடுகின்றன.

காத்தவராயன் கதைப்பாடல், மதுரைவீரன் கதை போன்றனவற்றிலும் தாழ் குலத்தவர்களான கதைத்தலைவர்கள் உயர்குல மகளிரைத் தம் இளமை, வீரம், திறமை, காதல் என்பனவற்றால் அடைகின்றனர்.

இத்தகைய கதைப்பாடல் மக்கள் மத்தியில் பரவினால் தமது சமுதாய நிலைகள் தாழ்வாக மதிக்கப்பட்டுவிடும் என அஞ்சிய உயர் குலத்தார், காத்தவராயனும், மதுரைவீரனும் இப்பிறவியில் பறையனும், சக்கிலியனுமாயினும் முற்பிறவியல் சிவகணத்தார்களே' என்றும் சிவசாபத்தால் அவர்கள் இழிகுலத்தில் பிறந்தார்கள் அல்லது இழிகுலத்தாரால் வளர்க்கப் பட்டார்கள் என்று இடைச்செருகல்களை இணைத்து விட்டதையும் நா. வானமாமலை தெளிவுபடுத்தியுள்ளார். இவையெல் லாம் ''சமூகச் சீர்திருத்த ஆற்றல் கொண்ட இலக்கியங்களை அழிக்கவும், மாற்றவும், சிதைக்கவும், மேல் சாதியினரும், சீர்திருத்தங்களால் தம் செல்வாக்கை இழக்கக் கூடியவர்களும் செய்த செயல்கள்''[22] எனவும் அவர் விளக்கியுள்ளார்.

இதனால் குறிப்பிட்ட ஒரு கதைப்பாடலை பதிப்பிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் பொழுது அக்கதைப்பாடல் தொடர்பான பல பிரதிகளையும் திரட்டி வைத்துக் கொண்டு, படைப்பாளன் படைத்த உண்மையான பகுதியையும் இடைச்செருகல் களையும், வேண்டுமென்றே விட்டுவிட்ட பகுதிகளையும் மாற்றி அமைத்த இடங் களையும் கணித்தறிந்து, பதிப்பிக்கும் பொழுதே பதிப்பாசிரியர் ஏட்டுக்கும் நாட்டுக்கும் ஏற்றது செய்தவராகிறார் எனலாம்.

சின்னத்தம்பி கதையைப் பொறுத்த அளவிலும் இத்தகு சிக்கல்கள் எழுந்தன. இக்கதைப்பாடல்கள் கொண்ட பிரதிகளை ஒப்பிடும் பொழுது அவற்றுள் பல பகுதிகள் விடுபட்டுள்ளன என்பது தெரியவந்தது. எனவே நிகழ்ச்சிகள் தெளி வாக, கோவையாக, முழுமையாக, விளக்கமாக, முன்பின் முரணற்றவைகளாக உள்ள கதைப்பாடற் பிரதியே தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதிப்பிக்கப் பெறுகின்றது. பிற கதைப்பாடற் பிரதிகளின் குறைபாடுகளும் பதிப்பிக்கப் பெற்றுள்ள இக்கதைப் பாடலின் முழுமையும் சிறப்பும் கதை ஒப்பீட்டுப் பகுதியில் விளக்கப் பெற்றுள்ளன.

22. நா. வானமாமலை, (ப.ஆ). **காத்தவராயன் கதைப்பாடல்.**

## கதைப்பாடல் மரபுகள் :-

கதைப்பாடல்களின் வடிவ அமைப்பினைப் பொதுநிலையில் நோக்கும்போது அவை சில தனிப்பட்ட இலக்கியக் கொள்கைகள் அல்லது மரபுகளைப் பின்பற்றி கட்டியெழுப்பப் பட்டிருப்பது புலனாகிறது. சமூகம், வரலாறு, இதிகாசம், புராணம், தெய்வம் என்பன போன்ற அடிக்கருத்துக்களைக் கொண்ட எல்லாக் கதைப்பாடல் வகைகளிலும் இத்தகு கதைப்பாடல் மரபுகள் சீராகக் கடைப்பிடிக்கப் பட்டுள்ளன. சமுதாயக் கதைபாடல்களின் முன்பகுதியில் இத்தகைய மரபுகள் சிறப்பாகப் பின்பற்றப்பட்டு நிகழ்ச்சி யொருமையைத் தருகின்றன. கதைப்பாடல் மரபுகளின்படி அமையும் இத்தகு கதை நிகழ்ச்சிகளை நீக்கிவிட்டால் கதை முன்பகுதியே இல்லை எனுமளவுக்கு மரபுகளின் தாக்குரவு கதைப்பாடல்களில் சிறப்பிடம் பெறுகின்றது.

கதை முன்பகுதியில் அமையும் கதைப்பாடல் மரபுகளாகக் கீழ்க்காண்பவற்றைக் கூறலாம்.

1. தெய்வ வணக்கம்
2. அவையடக்கம்
3. நாட்டு நகர்வளம் கூறல்
4. குழவியின்றி வருந்துதல்
5. குழந்தைப்பேற்றிற்காகப் பல்வேறு தானங்கள் செய்தல்
6. குழவி பிறக்குமா எனக் குறிகேட்டுக் குறியின்படி குறிப்பிட்ட ஒரு தெய்வத்தலம் அடைதல்
7. தலதெய்வத்தை மனத்திலிருத்திக் கடுந்தவம் செய்தல்
8. தலதெய்வம் மாற்றுருவுடன் தோன்றிக் குழந்தை வரமருளல்
9. தாய் கர்ப்பமடைதல், கர்ப்பகால நிகழ்ச்சி விவரிப்பு - குழந்தை பிறத்தல்
10. பிள்ளைக்குப் பேரிட்டுத் தொட்டில் செய்து, தாலாட்டிச் சீராட்டி வளர்த்தல்
11. கல்வி, மந்திர வித்தைகள், போர்ப் பயிற்சி அளித்தல்

இவை கதைத்தலைவன் அல்லது கதைத்தலைவியின் இளமைப் பருவம் வரையுள்ள பகுதியில் பின்பற்றப்படும் கதைப்பாடல் மரபுகளாகும்.

பெரும்பான்மையான சமுதாயக் கதைப்பாடல்களின் முற்பகுதி நிகழ்ச்சிகள் ஒரே மாதிரியானவையாகக் காணப்படுகின்றமைக்கு அவை இத்தகு மரபுகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்றமை ஒரு முக்கிய காரணம் எனலாம். கதைப்பாடல்களின் இடைப்பகுதி நிகழ்ச்சிகள் ஒவ்வோர் கதைப்பாடலிலும் வெவ்வேறு வகையாக அமைந்து, ஒரு கதைப் பாடலினின்றும் மற்றோர் கதைப்பாடலை வேறுபடுத்தும். எனினும் இப்பகுதியிலும் சில கதைப்பாடல் மரபுகள் பின்பற்றப் பட்டிருப்பதைக் காணலாம்.

1. ஊர்ப்பெயர், ஆட்பெயர், மரப்பெயர் போன்றவற்றைப் பட்டியலிட்டு அடக்கிக் கூறுதல்

2. நற்சகுணம், தீச்சகுணம், நற்கனவு, தீக்கனவு ஆகியன இடம்பெறல்

3. மரணத்துக்கு முன் பயணப்படும்பொழுது உற்றவர் தடுத்தல் என்பன வற்றை அத்தகு கதைப்பாடல் மரபுகளாகக் குறிப்பிடலாம்

கதைப்பாடல் முடிவில் பல மரபுகள் அமைந்து நிகழ்ச்சி ஒருமையைத் தருகின்றன.

1. கதைத்தலைவன் அல்லது தலைவி இறப்பின் பின்னர் தம் இறப்புக்குக் காரணமானவர்களைப் பழிவாங்குதல்

2. கதைத்தலைவர்களின் பட்ட களம் கண்டு தாய், மனைவி அல்லது காதலி, வளர்ப்புப் பிராணிகள் உடனிறத்தல்

3. பரமசிவன் — பார்வதி இறந்தோரனைவரையும் உயிருடன் எழுப்பல்

4. இறந்த கதைத்தலைவன் தலைவிக்கு வேண்டும் வரங்களை அளித்துத் தேவதையாக, காவல் தெய்வமாக உயர்வு பெறச் செய்தல்

5. கதைத்தலைவன் — தலைவி பல்வேறு தலங்களுக்கும் பயணம் மேற்கொண்டு தெய்வங்களையெல்லாம் வணங்கி இறுதியில் குறிப்பிட்ட தெய்வத்திடம் வந்து காவல் தெய்வமாக வீற்றிருத்தல்

6. ஊரில் நடக்கும் கொடிய செயல்களுக்குக் கொல்லப்பட்டவனின் ஆவியே காரணம் என்று நம்பும் அவ்வூர் மக்கள், ஆவியை அமைதிப்படுத்தப் பீடமிட்டு பொங்கலிட்டுப் பூசை நடத்தி இறந்த உயிரைத் தெய்வமாக ஏற்று வணங்கல்

7. கதை கேட்டவர், படிப்பவர் நீடு வாழ்க என 'வாழி' பாடுதல் என்பன கதைப் பாடலின் இறுதிப்பகுதியில் பின்பற்றப்பட்டிருக்கும் மரபுகள் எனலாம். சமுதாயக் கதைப்பாடலின் முடிவுப்பகுதியில் இத்தகு அமைப்புக்கள் சீராகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம்.

ஏனைய சமுதாயக் கதைப்பாடல்களைப் போன்று சின்னத்தம்பி கதைப் பாடலிலும் கதைப்பாடல் மரபுகள் இன்றியமையாத இடத்தினைப் பெற்றுத் திகழ்கின்றன.

நாடுநல்ல நல்லநாடு நாவலர்கள் புகழும் நாடு
தேனிருந்து மழைபொழியும் சிறந்த வேப்பிலாங்குளம் நாடதிலே (1—2).

என்றமையும் அடிகள் 'நாட்டுவளம் கூறல்' என்ற கதைப்பாடல் மரபின்படி அமைந்துள்ளன.

'குழவிப் பேறின்றி வருந்துதல்' என்ற கதைப்பாடல் மரபு.[23]

நான்தான் மலடானேன் நாட்டிலுள்ளோர் தானகைக்க

என்ற பன்னிரண்டாம் அடி தொடங்கி,

கொள்ளிக்கு மைந்தனில்லை குடமுடைக்கப் பாலனில்லை

என்ற 24-ஆம் அடி வரையிலும் பின்பற்றப்பட்டுள்ளது.

குழவி வேண்டித் தானதர்மம் செய்தலும் குறி கேட்டலுமாய கதைப் பாடல் மரபு,

காதத்துக்குக் காதவழி கல்க்கிணறு கெட்டிவைத்தார்
தூரதுலை போறவர்க்குச் சுமைதாங்கி நாட்டிவைத்தார் (44—45)

எனத் தொடங்கும் (44—50) அடிகளிலும்.

மன்னவரும் மங்கையரும் மறையவர்க்கு ஆளனுப்பி (34)

எனத் தொடங்கி,

இப்படிநீ செய்தாயானால் இனிக்குழந்தை கிட்டும் பிள்ளாய்
அப்படிநீ செய்யுமென்று அவர்போனார் சொல்லிவிட்டு (41—42)

என முடியும் அடிகள் வரையும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

'குறிப்பிட்ட தலம் சென்று தவம் செய்து குழந்தை வரம் பெறல்' என்ற கதைப் பாடல் மரபு 127-ஆம் அடி தொடங்கி 145-ஆம் அடி வரையும் ஆளப்பட்டுள்ளது. திருக்குறுங்குடி அழகியநம்பி கோயில் சென்று தவம் செய்து குழவிப் பேறு பெற்றதாகக் கதை நிகழ்ச்சி அமைந்துள்ளது.

'குறிப்பிட்ட தலம் சென்று தவம் செய்து குழந்தை வரம் பெறல்' என்ற கதைப்பாடல் மரபு,

1. தலம் நோக்கிப் பல ஊர்கடந்து செல்லல்

2. தவம் செய்த முறை

---

23. பல கதைப்பாடல்களிலும் இக்கதைப்பாடல் மரபு சீராகப் பின்பற்றப்பட்டுள்ளது.

''பிள்ளையில்லா வாசலிலே பெரியோர்கள் பொசிப்பார்களோ
மைந்தனில்லா வாசலிலே மறையோர்கள் பொசிப்பார்களோ''

வன்னிராசன் கதை (கே. ப. சு. 8017) இ. 3.

''புத்திரனை யில்லாமல் பொசிக்குமன்னம் புழுவல்லோ
புத்திரனில்லா வாழ்வு பொய் வாழ்வு கண்டீரே''

சித்திரபுத்திரன் கதை (கே. ப. சு. 4087) இ. 15.

''நாளும் நாளும் நமக்குப் பின்புலகை
நடத்தி யரசாள நல்ல ஒரு தலையில்லை''

(வானமாமலை நா. (ப.ஆ) -ஐவர் ராசாக்கள் கதை. வரி 110-111)

3. அருந்தவம் கண்டு தலதெய்வம் அரனிடம் சென்று செய்தி கூறல்

4. அரன் சித்திரபுத்திரரை அழைத்து, தவம் செய்வோனின் ஓலை எடுத்துப் பார்த்து பிள்ளை வரம் உண்டா என அறிந்துகூறக் கேட்டல்

5. சித்திரபுத்திரர் அவனுக்குப் பிள்ளைப் பேறே இல்லை எனல்

6. அரன் தானே அக்குழந்தையாகச் சென்று பிறந்தால் எத்தனை வயதுவரை உயிரோடிருக்கலாம் என வினவல்

7. குறிப்பிட்ட வயது வரையே உயிரோடிருத்தல் என வரையறுத்தல்

8. தல தெய்வம் மாற்றுருவில் வந்து குழந்தை வரம் தரல் என விரிவாக அமைதலுண்டு.

**சான்று:-**

தடிவீரன் கதை (கே.ப.சு.8480)
நம்பிராயன் கதை (கே.ப.சு. 8425)
வன்னிராசன் கதை (கே.ப.சு. 8017)

கர்ப்ப கால நிகழ்ச்சிகளை விவரித்தல் என்ற கதைப்பாடல் மரபின்படி[24] 53 முதல் 80 வரை உள்ள சின்னத்தம்பி கதைப்பாடலின் அடிகள் அமைந்துள்ளன. ஓரோர் மாதமும் கருவுற்ற பெண்ணின் உடல்மீது ஏற்படும் மாறுபாடுகள் பல கதைப்பாடல்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

மூன்றான மாத்தையிலே முகவெளுப்பு கண்டிடுமாம்
மாங்காய் விளங்காய் மாயமான புளியங்காய்
நாலான மாத்தையிலே நாவும்பல்லும் உணந்திடுமாம்

வன்னிராசன் கதை (கே.ப.சு. 8017) இ-10

மூணான மாசத்திலே அவள்
முத்து நிறம் மேனியானாள்
நாலான மாசத்திலே
நாகப்பழம் மேனியானாள்
அஞ்சான மாசத்திலே
அர வயறு பாலனானாள்

பொன்னிறத்தாள் கதை, 44-49

24. லெச்சுமியம்மன் தவநிலை. (உ.த நி.சு. 296)
வன்னிராசன் கதை (கே. ப. சு. 8017)
பொன்னிறத்தாள் கதை - சூரநாட்டுக் குஞ்சன்பிள்ளை (ப.ஆ.)
(தமிழ்மொழி, மலையாள எழுத்து)
ஐவர் ராசாக்கள் கதை - வானமாமலை, நா. (ப ஆ.)
போன்ற கதைப்பாடல்களைக் இக்கதைப்பாடல் மரபு பின்பற்றப்பட்டுள்ளமைக்குச் சான்றுகளாகக் காட்டலாம்.

குருத்தை இரு ரூபமாக்கிக்
கொண்டுவரும் அந்த நாளையிலே
பெருத்த முலைக்கண்கள் பசலை பூத்து
பெண்மை நலம்குலைந்து அன்னம் மறந்தாள்
விரித்த தலைமுந்தி தரைக்கிடையும்
மேனி சருகாகக்கூந்தல் சடையாம்

ஐவர் ராசாக்கள் கதை, 92-97

என அமைகின்றமையைச் சான்றுகளாகக் காட்டலாம்.

இவற்றை ஒட்டி சின்னத்தம்பி கதைப்பாடலிலும்

மறுமாதம் பூலுடையாள் மயக்கங் கொண்டாளிரக்கமின்றி
மூன்றுநல்லோ மாத்தையிலே முகமதிலே களைகொடுத்து
நாலாம் நல்லோ மாத்தையிலே நடைகடக்கு நாளையிலே (53-55)

என அமையும் நிலையைக் காண்கிறோம்,

'பிள்ளைக்குப் பேரிட்டு, தொட்டில் அமைத்து, தாலாட்டிச் சீராட்டி, கல்வி, மந்திர, தந்திர வித்தைகள், வீரப்பயிற்சிகள் அளித்து வளர்த்தல்' என்ற கதைப்பாடல் மரபு பரக்கப் பல கதைப்பாடல்களிலும்[25] சிறப்புற ஆளப்பட்டுள்ளது. இக்கதைப் பாடலில் 154 முதல் 174 வரையுமுள்ள வரிகளில் இம்மரபு ஆளப்பட்டுள்ளது.

மின்னலைப்போல் மேனியனே மேகவர்ணா கண்ணுறங்கு
பொன்னே நவமணியே பூலோக சுந்தரமே
தவத்தினால் வந்துதித்த தற்பரனே கண்ணுறங்கு (160-162)

என தாலாட்டிய செய்தியும்

நேர்ச்சை செய்த கோயிலுக்கு நேர்த்திக்கடன் தீர்த்துவைத்துச்
சின்னத்தம்பி என்றுபெயர் செப்பினார்கள் மூன்றுதரம் (168-169)

எனப் பெயர் சூட்டிய விவரமும்

---

25. ''பன்னிரண்டு வயததிலே படித்தானே வித்தைகளை
மல்வேட்டை சிலம்பத்தொழில் மடிப்பிடிகள் அடிபிடிகள்
ஆனையேற்றம் குதிரையேற்றம் அளவிறந்த தொழில் படித்தான்''

வன்னிராசன் கதை (கே. ப. சு. 8017) இ. ம. 12

ஆறுநல்ல வயததிலே அரிவரி கொன்றைவேந்தன்
பத்துநல்ல வயததிலே பலகணக்குகள் கற்றறிந்தான்
பன்னிரண்டு வயததிலே யானையேற்றம் குதிரையேற்றம்
மல்வித்தை சிலம்பத்தொழில் மன்னனுந் தான்படித்தான்

முத்துப்பட்டன் கதை (கே. ப. சு. 8018) இ. ம. 1

மூன்றுநல்ல வயததிலே அறிவுபள்ளி ஓதவைத்து
பத்துநல்ல வயததிலே பலசிலம்பம் படிக்கவைத்து
பன்னிரண்டாம் வயததிலே பரியேறப் படிக்கவைத்து
ஆனையேத்தங் குதிரையேத்தம் அதுபடித்து முடிந்தவுடன்
மாயவித்தை குறளிவித்தை மந்திரத்தால் ஜெயிக்கும் வித்தை
கண்கட்டு வித்தைகளும் கற்றறிந்தான் சின்னத்தம்பி (172-177)

எனக் கல்வி, பிற பயிற்சிகள் அளித்து வளர்த்த விதங்களும் கதைப் பாடல் மரபினைப் பின்பற்றி விளக்கப்பட்டுள்ளன.

கதைப்பாடல் மரபில் ஒன்றான 'ஊர்ப்பெயர் அடுக்கிவரல்' 202-203, 211-213, 687-706 என்ற அடிகளில் அமைந்துள்ளது.

சின்னத்தம்பிக்காக அவன் தந்தை பூச்சிநாய் வாங்கச் சென்று, மீண்டு வரும் வழியில் அவன் கடந்து சென்ற ஊர்களைக் கூறுமிடத்திலும் காட்டாளம்மனால் உயிருடன் எழுப்பப்பட்ட சின்னத்தம்பி பல தலங்களுக்கும் சென்று வணங்கி மீண்டான் எனக் கூறும் இடத்திலும் ஊர்ப் பெயர்களை அடுக்கிக் கூறல் என்ற கதைப்பாடல் மரபு பின்பற்றப்பட்டுள்ளது. 'சகுனங்கள் இடம் பெறல்' என்ற கதைப்பாடல் மரபும் இக்கதைப்பாடலில் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளது.[26] சின்னத்தம்பி மூலிகை பறித்துக்கொண்டு கிளம்பும்பொழுது, அவன் உயிருக்கு ஆபத்து விளையப் போகிறது என்பதனை உணர்த்துமுகமாகத் தீய சகுனங்கள் உண்டாகியதாகக் குறிப்புக்கள் உள்ளன.

நடைதலையில் தட்டிடவே நகண்டு வெளியில்வந்து
ஏறினான் குதிரைமேலே எடுத்தடி வைக்கயிலே
காகங்கள் கத்துறதும் கருங்கூவை கூவுறதும்
சன்யாசி ஒருபாப்பான் தலைமொட்டை வாணியனும்
இவ்விதமாய்ச் சகுனம் வர எடுத்தெறிந்து சின்னத்தம்பி
(489-493)

பயணமாகி வந்து இடையில் உணவுண்ணும் பொருட்டு ஓரிடத்தில் தங்கியிருக்கும் பொழுதும் தீயசகுனம் உண்டாகின்றது (511-512).

'ஒரு செயலுக்காகப் புறப்படும் பொழுது உற்றவர் தடுத்தல்' என்ற நிகழ்ச்சி அமைவதும் கதைப்பாடல் மரபாகப் பல கதைப்பாடல்களில் பின்பற்றப்பட்டுள்ளது. வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடலில் வெள்ளையம்மாள், பாதர்வெள்ளையைத் (வெள்ளையத்தேவன்) தடுத்தலையும் முத்துப்பட்டன் கதையில் முத்துப்பட்டனை பொம்மக்கா, திம்மக்கா என்ற அவன் மனைவியர் தடுத்தலையும் சான்றுகளாகக் கூறலாம். இக்கதைப் பாடலிலும் சின்னத்தம்பியை அவன் தாய்,

26. வரிகள் :- 481-485, 489-493, 503-517, 525-538.

நாளிட்ட மைந்தனையா-நீ- நகரைவிட்டுப் போகலாமோ
பெண்ணழைத்து இங்கேதான் பிறர்வீட்டில் வைத்திருக்கு
வருவாரும் போவாரும் வந்து கொண்டிருக்கிறார்கள்
இப்போது போப்படாது என்மகனே சின்னத்தம்பி (475-478)

எனத்தடுக்கிறாள். 'எஜமான் எழுத்தின்படியாகப் போய்வருவேன்' என்று சின்னத்தம்பி மறுத்துரைத்துப் புறப்படுகிறான்; மரணமடைகிறான்.

இறப்பின் பின்னர் தம் 'இறப்புக்குக் காரணமானவர்களைப் பழிவாங்கல்' என்ற கதைப்பாடல் மரபு[27]

பாப்பாக்குடி ஊரையெல்லாம் பதறடித்துச் சின்னத்தம்பி
தர்மராசா சோமப்பிள்ளை ஆண்டாபிள்ளை அழகப்ப பிள்ளை
மந்திரவாதி குமாருப்பிள்ளை மாடன்சாம்பான் வம்மிசமும்
குத்திரெத்தம் தான்குடித்துக் குடல்பிடுங்கி மாலைபோட்டு
(686-689)

என்ற வரிகளில் ஆளப்பட்டுள்ளது.

கதைத்தலைவனின் 'பட்டகளம் கண்டு தாய், தந்தை, மனைவி, வளர்ப்புப் பிராணிகள் உடன் மடிதல்' என்ற அமைப்பும் பல கதைப்பாடல்களில் மரபாகப் பின்பற்றப் பட்டுள்ளது. இதிலும் குறிப்பாக, இவர்கள் நாவில் சீலை சுத்தி மரணமடைந்தனர் எனப் பல கதைப்பாடல்களிலும் ஒரே மாதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முத்துப்பட்டன் கதை (கே. ப. சு. 8018) என்ற சுவடியில் முத்துப்பட்டன் கள்ளனொருவனால் கபடமாகக் கொல்லப்பட்டான் என்ற செய்தி கேட்டு, அவன் பிணம் தேடிச் சென்று அதன் மேல் விழுந்து அழுத அவன் மனைவியர் இருவரும் நாவில் சீலை சுத்தி இறந்ததாகவும் வந்து கண்ட அவர்தம் தந்தையும் இவ்விதமாகவே மரணத்தைத் தழுவியதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. தடிவீரன் கதை (கே. ப. சு. 8440) என்ற சுவடியில் கதைத்தலைவனான மந்திரமூர்த்தி வெட்டுண்டதும் சாதிப்பிள்ளை என்ற அவனது மனைவியும் சோணைமுத்து என்ற அவன் காதலியும் நாவில் சீலை சுத்தி மரணமுற்றதாகவும், வன்னிராசன்

---

27. வெள்ளைக்காரன் கதை (உ. த. நி. சு.)

| | | | |
|---|---|---|---|
| குறுக்குளாஞ்சி கதை | 8425 | கே ப. சு | போன்ற கதைப்பாடல்களில் மாணத்தின் பின்னர் வந்து பழி வாங்கிய நிகழ்ச்சிகள் இடப் பெற்றுள்ளன. |
| தடிவீரன் கதை | 8440 | | |
| சின்னத்தம்பி கதை | 11613 | | |
| வன்னிராசன் கதை | 8017 | | |
| முத்துப்பட்டன் கதை | 8018 | | |

தோட்டுக்காரி கதை (உ. த நி. சு. 316)

''ஆதாளி போடலுற்றான் அடாதுடி பண்ணலுற்றான்
கருசக்குளம் ஊரையெல்லாம் கட்டழகன் வன்னிராயன்
மாட்டெலும்பு தேங்காமட்டை வாரி கல்லாலே யெறியுதய்யா
தீயைவந்து கொளுத்துதய்யா திருதூளி பண்ணுதய்யா''

என வன்னிராசன் கதையில் வன்னிராயன் தன் மரணத்தின் பின் வந்து பழிவாங்கிய செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளன.

L

கதை (கே. ப. சு. 8017) என்ற சுவடியில் வன்னிராசன் மடிய, செய்தியறிந்த அவன் தாய் நாவிலே சீலை சுத்திய நல்லுயிரை மாய்த்துக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இவற்றால் 'நாவில் சீலை சுத்தி இறந்தனர்' எனக் கூறுவதை ஒரு கதைப் பாடல் மரபாக ஆண்டனரோ என எண்ணத் தோன்றுகிறது.

இச்சின்னத்தம்பி கதைப்பாடலிலும், சின்னத்தம்பியின் படுகளம் கண்ட தாய்,

சேலைபோட்டு நாவிழுத்துச் செத்திறந்து (654)

மாண்டதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

நிச்சயிக்கப்பெற்ற சோணச்சியும் சின்னத்தம்பியின் தந்தையும் பூச்சிநாய், குதிரை முதலிய வளர்ப்பு விலங்குகளும் பல கதைப்பாடல்களில் இடம் பெறுவது போன்று உடன் உயிர்துறப்பதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது (655-668).

இறந்தவர்களைத் தெய்வம் உயிருடன் எழுப்பி, வரமளித்து, கொலைப்பட்டவனைத் தன் காவல் தேவதையாக்கலும், அத்தேவதை பிற தலதெய்வங்களைத் தரிசித்து மீண்டும் குறிப்பிட்ட இடத்தில் தெய்வமாக அமர்தலும், அத்தெய்வத்தை மக்கள் வணங்கிப் பூசை செய்தலும் பல கதைப்பாடல்களில் மரபாகப் பின்பற்றப்பட்டுள்ளது.

சின்னத்தம்பி கதையிலும் இக்கதைப்பாடல் மரபு 669 முதல் 713 அடிகள் வரையும் ஆளப்பட்டு நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. வாழி என அமையும் கதைப் பாடல் மரபு இறுதி நான்கு வரிகளில் பின்பற்றப்பட்டுள்ளது.

முழுநிலையில் நோக்கும்போது இக்கதைப்பாடல் முழுமையும் கதைப்பாடல் மரபு களால் கட்டப்பட்டுள்ளது என கூறுமாறு அமைந்துள்ளது. பிற கதைப்பாடல் களில் மரபுகள் பின்பற்றப்பட்டுள்ள முறை போன்றே இப்படைப்பிலும் கதைப் பாடல் மரபுகள் மிகுதியாக இடம் பெறுவதோடு அவை கதைக்கட்டமைப்பு, கதைநிகழ்ச்சி, கதைப்போக்கு போன்றனவற்றுடன் ஒன்றிக் கலந்துள்ளன.

**கதை நிகழ்ச்சிகள்:-**

கதை நிகழ்ச்சிகளை இடத்துக்கு ஏற்றவாறு பொருத்தமாகவும் எவ்விதத் தடங்கலோ, நெருடலோ, முரணோ இல்லாமலும் அமைத்துக் கொண்டு சென்றுள்ள முறை போற்றத்தக்கதாக உள்ளது.

நெல்லை மாவட்டத்திலுள்ள நாங்குனேரி தாலுகா (வேப்பிலாங்குளம், திருக்குறுங் குடி, களக்காடு, பணகுடி), அம்பாசமுத்திரம் தாலுகா (பாப்பாகுடி, திருப்புடை மருதூர், வீரவநல்லூர், சேரமாதேவி, அத்தாளநல்லூர்), கோவில்பட்டி தாலுகா (கயத்தாறு, வானரமுட்டி), திருநெல்வேலி தாலுகா (தச்சநல்லூர், தாழையூத்து)[28] என்ற பகுதிகளைச் சேர்ந்த ஊர்களில் கதை நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகக் கதை அமைந்துள்ளது.

---

28. காண்க : கிராமங்களின் அகரவரிசைப்பட்டி, தமிழ்நாடு அரசு வெளியீடு.

கதைத்தலைவன் சின்னத்தம்பி திருநெல்வேலி மாவட்ட நாங்குனேரி தாலுகாவைச் சேர்ந்த வேப்பிலாங்குளத்தில் தோன்றியவன். இந்த ஊரையும் அதனை உள்ளிட்ட பகுதிகளையும் திருக்குறுங்குடியிலிருந்து ஆட்சி செய்யும் மாணிக்கவாசகரிடம் வாயிற்பிரதானியாகப் பணி செய்யும் வாய்ப்பைத் தாழ் குடியில் பிறந்திருந்தும் தன் வீரம், திறமையால் பெறுகிறான் சின்னத்தம்பி. கீழ்க்குலத்தை சார்ந்த ஒருவன் தளவாய் பொறுப்பேற்று உயர்த்திருப்பதைக் கண்டு, அழுக்காறு கொண்ட உயர் குலத்தவரின் பொறாமை கலந்த நச்செண்ணத்தால் வீரமும் திறமையும் காவல் பொறுப்பும் கடமையுள்ளமும் வாய்ந்த சின்னத்தம்பி வஞ்சகமாகக் கொலை செய்யப்படுகிறான்.

கதையின் முதற்பகுதியில் அமையும் கதைத்தலைவனின் பிறப்பு, வளர்ப்பினை அடுத்துள்ள பகுதியில், பிறரிடமிருந்து வேறுபடுத்தத்தக்க விதத்தில் தன் திறமை யாலும் வீரத்தாலும் செயற்கரும் செயல்கள் செய்பவனாகச் சின்னத்தம்பி உருப் பெறுவதை இரு சிறப்பான நிகழ்ச்சிகள் வாயிலாகக் கதைப்பாடல் விளக்குகின்றது.

தம்மால் இயலாது என்று அனைவரும் அஞ்சிக் கைவிட்ட களக்காடு, பணகுடி மலைப்பகுதிகளிலுள்ள விலங்குகளை வேட்டையாடிக் கொன்றது இவற்றுள் முதல் நிகழ்ச்சியாக அமைகின்றது. ஆட்சியிலிருப்பவரான மாணிக்கவாசகருக்கும் அடங்காது, அவர் தேசத்திலுள்ள வேறு எவருக்கும் கட்டுப்படாத குதிரையை அடக்கிச் சவாரி செய்தது இரண்டாவது நிகழ்ச்சி. இவ்விரு நிகழ்ச்சிகள் மூலம் பிறரைக் காட்டிலும் சிறப்பான தகுதியும் வீரமும் திறமையும் கொண்டவன் சின்னத்தம்பி என்பது சித்திரித்துக் காட்டப்படுகின்றது. இவற்றையடுத்துள்ள பகுதியில் தன் சிறப்புத்தகுதியால் உயர்பதவி வகிக்கும் கீழ்க்குலத்தானாய சின்னத்தம்பியை ஒழித்துக் கட்டுவதற்கு, உயர் குலத்தோர் தக்கதொரு வாய்ப்பை எதிர் நோக்கி இருப்பதும் வாய்ப்பு கிடைத்ததும் தக்கவர் (தருமராசா, மாணிக்க வாசகர்) மூலம் அதனைச் சூழ்ச்சியாகப் பயன்படுத்தும் பகுதியும் அமைந்துள்ளன.

'புதையலுக்கு நரபலி தர வீராதிவீரனொருவன் தேவை' என்ற காரணத்தைக் காட்டிச் சின்னத்தம்பியை அதற்குத் தேர்ந்தெடுக்கின்றனர். அப்போது அவனுக்கு மணம் செய்ய நிச்சயிக்கப் பெற்றிருந்தது என்ற நிகழ்ச்சி சுட்டப்படுவது அவலச் சுவையை மிகுத்துக் காட்டத் துணை செய்கின்றது. சுய நினைவுடன் உள்ள பொழுது அவன் வீரத்தின் முன் நிற்க ஆற்றாது என்றெண்ணிய கோழைமனங் கள், அவனுக்குப் படைக்கும் உணவில் போதைப் பொருட்களைக் கலந்து கொடுத்து மயக்க நிலையில் உள்ள போது மாய்த்து விடுகின்றன.

அடுத்து வரும் இறுதிப்பகுதியில் பலி கொடுக்கப்பட்ட சின்னத்தம்பி தன் சாவுக்குக் காரணமான அனைவரையும் பழி வாங்குதலும்; பின் காவல் தெய்வமாகப் பூசிக்கப் பெற்று நிலைபெறும் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன. கதைப்பாடலில் வரும் ஒரே ஒரு இயற்கைஇறந்த நிகழ்ச்சியாக, இறந்தவன் தன் இறப்புக்குக் காரணமான வர்களை வந்து கொல்லுதல் என்பது அமைந்துள்ளது. இது சமுதாயக் கதைப் பாடல்களின் கதையமைப்பு மரபுகளையொட்டியே இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சி கதை கேட்கும் மக்களின் மனக் கொந்தளிப்பைத் தணிக்கவும் கதையை மங்கலமாக முடிக்கவும் தெய்வ நிலைக்குக் கதைத்தலைவனை உயர்த்தவும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

**பாத்திரப்படைப்புக்கள்:-**

இக்கதைப்பாடலின் பாத்திரப்படைப்பு பாராட்டத்தகுந்த நிலையில் கலைநுட்பத்துடனும் திறனாய்வுக் கண்ணோட்டத்துடனும் அமைவது குறிப்பிடத்தக்கது. குணநிலைகள் வெளிப்பட்டுப் பாத்திர வளர்ச்சியைக் காட்டும் விதத்தில் அவை சீராகச் சிறப்புறப் படைக்கப்பட்டுள்ளன. தலைமைப்பாத்திரங்களும் துணைப் பாத்திரங்களும் உயிர்த்துடிப்புடைய வாழும் மனிதர்களைப்போன்று இயல்பாக அமைந்துள்ளன.

**சின்னத்தம்பி:-**

15 வயதில் வேட்டையாட ஆவல்கொண்டு, ஓராயிரம் பொன்விலை கொடுத்தாயினும் பூச்சிநாய் ஒன்று வாங்கித் தருமாறு தந்தையிடம் வேண்டிக்கேட்கும் உள்ளத்துடிப்பு (184-200), சக்கிலிய குலத்தவரின் பரம்பரைத் தொழிலாய வேட்டையாடலில் தனித்திறமை பெற்று விலங்குகளை வேட்டையாடும் திறன் (215-247); பரியடக்கப் புகுமுன் பாலர், சூலிகள், பச்சைப்பிள்ளைத்தாச்சிகள், குருடர், நொண்டிகள், வயதானவர், சந்நியாசிகள் போன்றோர் பாதையில் வர வேண்டாம் என எச்சரித்து அறிவிக்கும் கருணைமறம் (329-336): 'மணநாள் குறித்தபின் வீடுவிட்டுச் செல்லலாகாது' என்ற நடைமுறை வழக்கத்தையும் மீறித் தன் தலைவன் இட்ட ஆணையை நிறைவேற்றத் தன் தலையையே வாங்கும் நோக்கத்துடன் வரச் சொல்கிறார்கள் என அறியாது பகைவன் தலை வலிக்கு மூலிகை பறித்துக் கொண்டு விரையும் கடமையுணர்வு (473-540); விலங்கு வேட்டைக்குப்புறப்படும் போதும், காடுகளில் மூலிகை பறிக்கப் புறப்படும் போதும் தடுக்கும் தாயிடம் நயமான, ஆதரவான வார்த்தைகள் சொல்லி அவளை இணங்க வைக்கும் அன்பும் பாசமும் கலந்த உயர்பண்பு (230-239), (475-480); போதைப் பொருட்களைச் சுயநினைவுடன் உள்ளபொழுது பயன் படுத்தி அறியா நற்குணம் (543-552) என்ற இத்தகு இலட்சியக் குணநலன்கள் கொண்ட சின்னத்தம்பி மேற்குலத்தான் செய்யும் சதிச் செயலுக்காட்பட்டு வஞ்சகமாய்க் கொல்லப்பட்டு சிறந்த அவலத் தலைவனாக (Tragic Hero) உருப் பெறுகிறான்.

தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தனக்குப்பதவி அளித்த தலைவனுக்கும் தலைவனைச் சார்ந்தவர்களுக்கும் தன் இன்ப துன்பங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, வாழ்வின் வசந்தமாய வதுவையையும் பொருட்படுத்தாது, தாய் தீய சகுனங்கள் கண்டு பதறித் துடித்துப் 'போக வேண்டாம்' எனத் தடுத்த போதும் கடமையாற்றவே முந்துகிறான் இக்கதைப்பாடலின் கதைத்தலைவனான சின்னத்தம்பி.

பிற சமுதாயக் கதைப்பாடல் தலைவர்கள் சமுதாய நெறி முறையில் குற்றம் எனக் கருதப்பட்ட ஏதாவது ஒன்றைச் செய்ததால் கொல்லப்பட்டனர். சின்னத் தம்பி போலவே வேட்டையாடி விலங்குகளை அடக்கி மக்கள் துயர்துடைத்த அரவமுத்து அரசனுக்குரிய தாசியை அடைந்து இன்புற்றதால் அரசனால் வெட்டப்பட்டு இறக்கிறான்.[29] சாதிவிட்டுச் சாதி காதல் கொண்டதால் காத்தவ ராயன் கொலையுண்டான்[30] கலப்புமணம் செய்ததால் சிதம்பரநாடார்,[31] மதுரை வீரன்[32] போன்றோர் கொல்லப்பட்டனர். தங்கள் சாதி வழக்கம் என்றாலும் சமுதாய நெறிக்கொவ்வாக் களவு செய்ததால் வன்னிராசன் வெட்டுப்பட்டான்[33] வேறு பெண்ணுடன் உறவு கொண்டதால் (குழவிப்பருவப் பெண்ணை மணம் செய்து வைத்ததால்) குமாரசுவாமி கொலை செய்யப்பட்டான்.[34] மனைவி ஒருத்தி உள்ளபோதே வேறு தாழ்ந்தகுலப் பெண்ணுடன் உறவு கொண்டதால் மந்திர மூர்த்தி வெட்டப்பட்டான்[35]. ஆயின் தாழ்ந்தசாதியில் பிறந்து தகுதியால் உயர்—நிலைக்கு ஏற்றம் பெற்ற காரணத்திற்காகச் சின்னத்தம்பி கொல்லப்படுகிறான். இந்நிலையில் சின்னத்தம்பியின் கொலை, முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சமுதாயப் பிரச்சனையாகத் திகழ்கின்றது.

**மாணிக்கவாசகர்:-**

தன் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் தன்னாட்டைச் சேர்ந்த ஒருவன் பதவிக்குரிய தகுதி பெற்றவனாக உள்ளான் என்பதை அமைச்சர்கள் மூலம் அறிய வந்ததும், 'காவல் தளவாய்ப் பொறுப்பை வந்து ஏற்றுக் கொள்க' என ஓலையனுப்புவதில் பாத்திரமறிந்து பிச்சையிடும் நிர்வாகத்திறன் கொண்டவராக (282-302), பதவி ஏற்கும் சின்னத்தம்பி அமைச்சர் கூற்றுப்படி தக்கவன்தானா என்பதை அறிய அடங்காக் குதிரையை அவன் அடக்கும் விதத்தைத் தானே நேருக்கு நேராக நின்று கண்டு அவன் திறமையை அளவிடும் திறன்சான்றவராக (325-362), அவன் அடக்கிய குதிரையை அவனுக்கே விட்டுக் கொடுக்கும் தாராள மனப் பான்மை உடையவராக (325-328), சின்னத்தம்பியின் வீரத்தைப் பாராட்டும் விதத்தில் திறமை எங்கிருப்பினும் ஊக்குவித்துக் கைதூக்கி விடும் நற்பண்பின் இருப்பிடமாக (363), தான் பார்த்துப் பதவியில் வைத்தவனுக்குத் திருமணம் என்றதும் பதினாயிரம் பொன் இனாம் ஈந்தனுப்பும் வள்ளன்மை கொண்டவராக, (373) ஓலையில் நரபலியின் பொருட்டுச் சின்னத்தம்பியை அனுப்பக் கேட்டிருப் பது கண்டதும் கலங்கும் இளகிய உள்ளம் உடையவராக (455-458) மாணிக்க வாசகரின் பாத்திரப் படைப்பு அமைந்துள்ளது.

---

29. அரவமுத்து கதை (ஆ.ஆ.நி. 10)
30. வானமாமலை நா. (ப.ஆ.) - காத்தவராயன் கதைப்பாடல்
31. தங்கத்துரை சு. (ப.ஆ.) - சிதம்பரநாடார் கதை.
32. மதுரைவீரன் அம்மானை (கே. ப. சு. 8420)
33. வன்னிராசன் கதை (கே. ப. சு. 8017)
34. லூர்து தே. (ப.ஆ) - நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள்.
    வானமாமலை நா. தமிழ்நாட்டுக் கதைப்பாடல்களில் சோக முடிவு
35. தடிவீரன் கதை (கே. ப. சு. 8440)

இத்தகு நற்பண்புகள் கொண்டவர் புதையல் பணத்தில் சரிபாதி கிட்டும் என்ற மந்திரவாசகத்தில் மதிமயங்கி, பணம் கிடைத்தால் ''ஊழி ஊழி தலை முறைக்கும் உண்டு களித்திருக்கலாமே'' (465) என்ற மனைவி சொல்லுக்குடன்பட்டுக் கபடமாகச் சின்னத்தம்பியை நரபலியின் பொருட்டு அனுப்பி வைத்து விடுகிறார். எத்தகு மாந்தரையும் பொன்னாசை மயக்கிவிடும் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்து விடுகிறார் மாணிக்கவாசர்.

**தருமராசா :-**

கதையில் வரும் எதிர்நிலைப் பாத்திரம். எதிர்நிலைப் பாத்திரத்துக்குரிய அனைத் துத்தீய குணங்களும் கொண்டதாகத் தருமராசா பாத்திரம் சித்திரிக்கப்பட்டுள்ளது. கதையின் திருப்பு முனைக்கு உதவுவதாக, கதை சோக முடிவை நோக்கி நகர்ந்து செல்லப்பயன்படுவதாக, நல்வழியினின்றும் தீயவழிக்கு நிகழ்ச்சிகள் மாறும் வாயிலாக இப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

பாத்திரப் பெயரான 'தர்மராசா' என்பதன் பொருளுக்கு மாறாக அதரும குணங் களையே முழுமையாக இப்பாத்திரம் கொண்டு திகழ்கிறது. கொடியவன் ஒருவன் நாடாண்டால் எளிய சாதி மக்கள் எத்தகு இழிநிலைக்கு ஆளாவர் என்பதற் கொரு சான்றே தருமராசா. இவன் மந்திரிகளின் தந்திர வார்த்தைகளுக்கு உடன் பட்டு, சின்னத்தம்பியை ஒழித்துக்கட்டுவதில் முன்னின்று செயலாற்றுகிறான் (421-423).

கீழ்ச்சாதி இளைஞனொருவன் வளர்ச்சியில் பெருமை கொண்டு, அவனைத் தக்த பதவியில் வைத்துப் போற்றிய நன்மனம் கொண்டோனையும் பொருளாசை காட்டித் தன் சதிக்கு உட்படுத்துகிறான் (448-450). கீழ்மட்டத்திலுள்ள ஒருவன் தன் வீரம் திறமையால் முன்னுக்குவந்தால், தான் வகிக்கும் உயர்பதவிக்கே இடையூறு வந்துவிடும் என்ற எண்ணம் உறைத்ததால் அச்சமும் பொறாமையம் கொண்டு அவனைத் தீர்த்துக் கட்டத் திட்டம் தீட்டுகிறான். 'நரபலிக்கு ஆளனுப்புக' என உள்ளோலையிலும் 'தலைவலிக்கு மருந்து சேகரித்து வந்து அறைத்துத்தர ஆள் தேவை' என வெளியோலையிலும் எழுதியனுப்பும் தந்திரக் காரனாக இவன் உருப்பெறுகின்றான் (428-450). மருந்துச் சரக்குடன் சின்னத் தம்பி வர, ஓடிச் சென்று தலைவலிப்பது போல் குப்புறப்படுத்துக் கொள்ளும் கபட நாடகக்காரனாக (541-542) இவனைச் சந்திக்கின்றோம். ஐம்பத்தாறு தேசத்திற்கும் அதிபதி (425) எனத் தன்னைத் தானே புகழ்ந்து போற்றிக் கொள்ளும் தற்பெருமைக்காரனான தருமராசாவின் பாத்திரப்படைப்பு, ஒருகதை யில் எதிர்நிலைப்பாத்திரத்துக்குரிய தீயபண்புகளை :வெளிப்படுத்தும் விதத்தில் சிறப்புறப் படைக்கப்பட்டுள்ளது.

**மாடன்சாம்பான்:-**

கீழ்ச்சாதி எளிய மக்களிடம் காணப்படும் நேர்மை, நன்றி, எஜமான விசுவாசம், இரக்கம், நட்பு போன்ற நற்பண்புகளின் உறைவிடமாக இப்பாத்திரம் காட்சிதரு

கின்றது. வயலுக்கு நீர் பாய்ச்சும் போது ஏழு கிடாரம் நிறையத் திரவியம் கண்டதும் தான் கவர்ந்து கொள்ள நினையாது தன் எஜமானிடம் ஓடிச் சென்று கூறும் நேர்மை, வெகுளித் தன்மை (393-399), பண்ணைக்காரச் சோமப்பிள்ளை கேட்டதும் 'நயினார் வந்தால் கூறுவேன்' எனத் தன் உயர் தலைவனிடமே கூற விழையும் மனப்போக்கு (401-403), எஜமான் உத்தரவுப் படி சின்னத்தம்பிக்கு மயக்க மருந்துகள் சேர்த்துத் தானே சமையல் செய்து சாப்பாடு பரிமாறி விட்டு, அவனைப் புதையலுக்குப் பலி கொடுக்க வயலுக்குக் கைத்தாங்கலாக அழைத்துக் கொண்டு வந்து கிடத்தி விட்டுக் கண்ணீர் விடும் இரக்க குணம் (574-579) என்ற இத்தகு நற்பண்பு நிலைகளை வெளிக்காட்டும் விதத்தில் மாடன் சாம்பானின் பாத்திரப்படைப்புத் திகழ்கிறது.

**சோணச்சி:-**

சின்னத்தம்பியின் படுகளம் கண்டதும் முதலில் உயிர் விடுபவள் அவன் தாய் பூலுடையாள். அடுத்ததாக 'அவன் மனைவி' என நிச்சயிக்கப்பெற்ற சோணச்சி உயிர் துறக்கிறாள். மணமாகு முன் ஒருவனுக்கு நெருங்கிய உறவுடையவள் தாய். அடுத்த இடத்தை அவன் மனைவி பெறுகிறாள். இந்த உறவு முறை நெருக்கத்தை நன்குணர்ந்து வெளிப்படுத்தும் விதத்தில் சோணச்சி உயிர் துறந்த நிலை கதைப்பாடலில் பொருத்தமாக விவரிக்கப்பட்டுள்ளது.

சின்னத்தம்பி மாண்டுகிடக்கும் அவலம் கண்ணுற்ற சோணச்சி அக்கோரக் காட்சியைக் காணப் பொறாமல் பலவாறாகப் புலம்பித் தவிக்கிறாள்[36], திருமணம் நடைபெறாவிடினும் உள்ளூரிலும் பக்கத்து ஊர்களிலும் பாக்கு வெற்றிலையுடன் மணச்செய்தி பரிமாறப்பட்டு நிச்சயிக்கப்பட்டு விட்டதால் 'மாமன் மகன் சின்னத் தம்பி என் மணவாளன்' எனக் கூறி இறுதியில் அவள் உயிர் விடுகிறாள். இந் நிலையில், நிச்சயிக்கப்பட்டவன் உயிர்நீத்தான் எனக் கேட்டதும் துறவுபூண்ட, பக்தி இலக்கியக் காலத் திலகவதியம்மையாரையும் விஞ்சி விடுகிறாள், நிச்சயிக்கப் பட்டவனின் மறைவுக்காகத் தன் உயிரைவிட்ட சோணச்சி.

இக்கதைப்பாடலிலுள்ள பிற பாத்திரப் படைப்புக்களும் அவ்வவற்றுக்குரிய பண்பு களுடன் அமைந்து சிறக்கின்றன. சின்னத்தம்பியின் தாய், தந்தையரின் பாத்திரப் படைப்புக்கள் தாய் தந்தைக்குள்ள பாச உணர்வை வெளிக்காட்டும் விதத்தில் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளன.

**அரசியல், சமூக, சமய, பழக்க வழக்க நிலைகள்:-**

சில சிறு கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பெருங்கிராமத்தைத் தலைமையிட மாகக் கொண்டு ஒரு தலைவன் ஆண்டுவரல் என்ற நிலை நிலவியிருந்திருக்கிறது.

---

36. ''மணவறைப் பந்தலிட்டு அதில் மங்கிலியம் பூட்டலையே
நான்கூட இருந்துகொண்டு என்சாமி நான் கூட்டுப்பால் உங்கலையே
உங்கலையே திங்கலையே உடன்படுத் துறங்கலையே'' (656—658)

நிலவுடைமைச் சமுதாயம் வழக்கிலிருந்த கால கட்டத்தை இக்கதைப்பாடல் பிரதிபலித்து நிற்கின்றது. பெருவாரியான நிலங்களுக்குச் சொந்தக்காரன் பிறரை ஆளும் தலைவனாகத் திகழ்கிறான். நிலமற்ற ஏழைக் கீழ்ச்சாதியினர் உழைக்கும் வர்க்கமாக அமைகின்றனர்.

இவர்கள் பிறவியிலேயே தமக்குரிய சிறப்புத் திறமைகள் மூலம் ஆட்சியிலிருப்பவனை விடத் திறமைசாலிகளாக மலரும் போது அழிக்கப்பட்டிருக்கின்றனர். பிள்ளைமார் சாதியைச் சேர்ந்த உயர்வர்க்கத்தினர் ஒன்றுகூடி, கீழ்க்குலம் எனக் கருதப்பட்ட சக்கிலியகுல வீரனின் ஆளுமையை வளரவிடாமல் வெட்டி வீழ்த்திய அவலநிலை இக்கதைப்பாடல் சித்திரிக்கும் சமுதாய நிகழ்வாக அமைகின்றது.

சின்னத்தம்பிக்குக் காவல் தளபதி பொறுப்பளித்த மாணிக்கவாசகம்பிள்ளையும் 'நரபலிக்குச் சின்னத்தம்பியை அனுப்புக' என ஓலையனுப்பிய தருமராசாவும் பிள்ளைமார் குலத்தைச் சார்ந்தவர்கள். கீழ்க்குலத்தான் முன்னேற்றத்தில் பொறாமை கொண்ட அமைச்சர் அழகப்பப்பிள்ளை, தருமராசாவின் பண்ணைக் காரர் சோமப்பிள்ளை, 'வீராதி வீரனொருவனை நரபலி தந்தாலே புதையலைப் பூதங்கள் எடுப்பதற்கு விடும்' எனக்கூறிய மந்திரவாதி குமாருப்பிள்ளை என்ற இவர்கள் அனைவரும் பிள்ளைமார் குலத்தவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். சின்னத்தம்பி நரபலியை இவர்கள் அனைவரும் கூடியே செய்து முடிக்கின்றனர். தம் ஆட்சிக்கும் ஆளுகைக்கும் இடையூறாகக் கீழ்க்குலக்கொழுந்து ஒன்று தளிர்ப்பதை முளையிலேயே கிள்ளி எறிகின்ற உயர்குலத்தாரின் அரசியல் சூழலுக்கு இரையாக அமையும் ஓர் அவலத்தலைவனின் கதையே சின்னத்தம்பி கதை எனலாம்.

**சமூகம்:-**

சமுதாயத்தில் பல்வேறு வகைப்பட்ட சாதிவேறுபாடுகள் பரவிக்கிடந்திருப்பினும் உயர்வர்க்கம், தாழ்வர்க்கம் என்ற இரண்டிற்கும் இடையேயுள்ள சிக்கலும் முரண் பாடும் மட்டுமே இங்கு கூர்மைப்படுத்திக் காட்டப்படுகின்றன.

உயர்வர்க்கத்தினர் ஆளும் வர்க்கமாகவும் உழைப்பித்து உண்பவர்களாகவும் தாழ்வர்க்கத்தினர் ஆளப்படுபவர்களாக, உழைக்கும் வர்க்கமாகவும் இருந்தனர். இந்த நிலையில் எக்காரணத்தைக் கொண்டும் சமுதாய மாறுதல் வருவதை உயர் வர்க்கம், தாழ்வர்க்கத்தின் உயிரைப் போக்கியேனும் தடுத்து நிறுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தது. அவரவர் குலத்துக்குரிய தொழிலை அவரவரே செய்தல் வேண்டும் என்பதே இக்கதை பிறந்த சமுதாயத்தின் சமூக நியதியாக இருந்தது. சக்கிலியன் தன் குலத்தொழிலை விட்டு நாடுகாவல் தொழிலுக்கு வர, அதனால் விளையும் சிக்கலே இக்கதையின் அடிக்கருத்து எனலாம்.

**சமயம்:-**

சைவம், வைணவம் என்ற இரு சமயத் தெய்வங்களுடன் பல்வேறு சிறு தெய்வங் களும் மக்களால் வேறுபாடின்றி வணங்கப்பட்டிருக்கின்றன. கீழ்க்குலத்தவனான

சின்னத்தம்பியின் ஆவியைச் சாந்தப்படுத்த மீவுயர் வர்க்கத்தாரான அந்தணர் பீடமிட்டுப் பூசை செய்த விபரம் கதைப் பாடலில் சுட்டப்படுகிறது. இது பெரு நெறியினரான அந்தணர், வழிபாட்டு நிலையில் சிறு நெறியினரான நாட்டுப்புற மக்களின் வழிபாட்டுமரபுகளைத் தழுவவேண்டும் என்று பாமரமக்கள் விரும்பிய விருப்பத்தின் இலக்கிய வெளிப்பாடாக அமைகின்றது (710-713).

உயர்வர்க்கத்தாரான பிள்ளைமார் சின்னத்தம்பியை, வணங்கியதாகக் கதைப் பாடலில் குறிப்பேதும் இல்லை. நரபலிக்குக் காரணமான தம் குலத்தலைவர்களை அழித்து நாசமாக்கியவன் என்பதால் வணங்காதிருந்திருக்கலாம். ஆயின் தற்போது பாளையங்கோட்டையில் பிள்ளைமார்களால் வணங்கப்படும் சின்னத்தம்பி கோயிலொன்று உள்ளதாகத் தெரிகிறது.

உயர்குலத்தவரான அந்தணர், தாழ்குலத்தவரான சின்னத்தம்பியை வணங்கினர் என்பதன் மூலம் சாதி ஏற்றத்தாழ்வு அகலவேண்டும் என்ற கதைப்பாடலாசிரியரின் ஆர்வத்தை அறிகிறோம். தற்போது கோனார் சாதியினரால் வணங்கப்படும் சின்னத்தம்பி கோயிலொன்று குமரிமாவட்டத்திலுள்ள தாமரைக்குளம் என்ற ஊரிலுள்ளதாகத் தெரிகிறது.

எளிதில் அனைவரும் படித்துப் புரிந்து கொள்ளத்தக்க நடையில், எளிய சந்தத்தில் இக்கதைப்பாடல் அமைந்துள்ளது.

> ஒட்டகைத்தடம் போல இட்டலிகள் (57)
> ஆனைத்தடம் போல அப்பளங்கள் (58)
> வருகுதையோ இவர்களுக்கு முடிவுகாலம் வயிரப்பனை சாய்ந்தது போல் (378)

என்பன போன்ற எளிய உவமைகளே ஆளப்பட்டுள்ளன.

சிற்சில இடங்களில் நாஞ்சில் நாட்டு வழக்குச் சொற்களான கொட்டாரம் (அரண்மனை) 296, கோரி (அள்ளி) 569 போன்றனவும், வேற்றுச் சொல்லான ரசா (விடுமுறை) 374 போன்றனவும் இடம் பெற்றுள்ளன. அவலக் கதைப் பாடலாதலின் அவலச்சுவையே விஞ்சிக் காணப்படுகிறது. கதையில் சின்னத் தம்பியைக் கொல்லத் திட்டம் தீட்டும் 418 ஆம் வரிமுதல் கதையின் இறுதிப்பகுதி வரைபடிப்பவர் மனதில் சோகம் சூழும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடம் பெறுகின்றன.

**கதைப்பிரதிகள் ஒப்பீடு :-**

சின்னத்தம்பி கதைச் சுவடிகள் இரண்டு கேரளப்பல்கலைக்கழகச் சுவடி நூலகத்தில் காணப்பட்டன. 8426, 11613 - என்ற எண்களுள்ள இவ்விரு சுவடிகளில் முன்னது சிதைவுகளுடன் உள்ளதால், நல்ல நிலையில் இருந்த இரண்டாம் சுவடி மட்டும் ஒப்பீட்டுக்குக் கொள்ளப்பட்டது. இதனுடன் நா. வானமாமலை குறிப்பிடும் சின்னத்தம்பி கதைப்பாடற் குறிப்புக்களும்[37] ஒப்பிடப்பட்டுள்ளன.

---

37. ஆராய்ச்சி (காலாண்டு இதழ்) மார்ச் 1971-பக். 142.

**சின்னத்தம்பி கதை (கே.ப.சு.11613) ஒப்பீடு**

30 ஓலைகள் கொண்ட, 19.5 x 2.5 செ. மீ. அளவுள்ள இச்சுவடி நன்னிலையில் உள்ளது. முழுமை பெற்ற இப்பிரதியின் எழுத்துக்கள் பொதுவாக ஓலைச்சுவடி களில் காணப்படும் எழுது முறைப்படி அமைந்துள்ளன.

**பெயர் மாற்றம் :-**

பாப்பாக்குடி தருமராசா, தன்மராய பிள்ளை என்றும் பண்ணைக்காரன் சோமப் பிள்ளை, சோணையாபிள்ளை என்றும் பறைமாடன் எனும் மாடன் சாம்பான், கறுப்பன் குடும்பன் என்றும் பெயர் மாற்றங்களுடன் இக்கதைப் பாடலில் குறிப்பிடப் படுகின்றனர். பணகுடி, திருக்குறுங்குடித் தேசராசர் மாணிக்கவாசகர், பணகுடி மணியம் மாணிக்கம்பிள்ளை என்று கூறப்பட்டுள்ளார்.

**நிகழ்ச்சி மாற்றம்:-**

1. 'நரபலிக்காகச் சின்னத்தம்பியை அனுப்புக' என்று தருமராசாவே கூறுவது, இதில் மாணிக்கவாசகரே சின்னத்தம்பியைத் தெரிவு செய்து அனுப்பியதாக மாறுத லாக வந்துள்ளது.

2. 'தருமராசாவுக்கு மூலிகை பறித்துக் கொண்டு போய்க் கொடுத்து வா' என மாணிக்கவாசகர் கூறுவதாக அமைவது, 'தருமராசாருக்கு அந்தரங்க ஓலை உண்டு, சென்று கொடுத்து விட்டுவா' என்று அமைகின்றது.

3. 'மணம்பேசி முடித்துள்ளதால் போகாதே' எனத் தாய் தடுத்தும், 'எஜமான் ஆணைப்படியே போய்விட்டு வருவேன், போராட்டஞ் செய்யாது விடை கொடு' எனச் சின்னத்தம்பி கூறுவதாக பதிப்பிக்கப்பெறும் சுவடியில் உள்ளது. கேரளப் பல்கலைக்கழகச் சுவடியில் 'தாய், தந்தை மணம் பேசிடச் சென்றுள்ளனர்; நாளை முகூர்த்தம்; நானெப்படிப் போவேன்' எனச் சின்னத்தம்பி கூறுவதாக வும் 'முன் முகூர்த்தம் தப்பினால் பின் முகூர்த்தம்' எனக்கூறி மாணிக்க வாசகம் பிள்ளை வலுக்கட்டாயமாக அனுப்புவதாகவும் உள்ளது.

4. மாடன் சாம்பானே மயக்கும் மருந்துச் சரக்குகள் சேர்த்து உணவு தயாரித்துச் சின்னத்தம்பிக்குத் தருவதாய் அமைவது, இதில் வேசி வீட்டில் அவனைத் தங்க வைப்பதாயும் அவ்வேசி ராக்கம்மாவே நல்லுணவு முதலியன படைத்திடலாகவும் மாறி வந்துள்ளது.

5. மயக்க மருந்துகள் கலந்த உணவுண்டதால் தன்னுணர்வற்ற நிலையில் சின்னத் தம்பி மாடன்சாம்பானால் வெட்டுப்பட்டதாக பதிப்பிக்கப்பெறும் சுவடியில் உள்ளது. கேரளப்பல்கலைக்கழக சுவடியில், மண்ணை வெட்டு எனப்பணிக்க சின்னத்தம்பி வெட்டுவதற்குக் குனிய பண்ணைக்காரச் சோணையாபிள்ளை வெட்டுவதாக அமைந்திருக்கின்றது.

**பாத்திரப்படைப்பு மாற்றம்:-**

கேரளப்பல்கலைக்கழக சுவடியில் சின்னத்தம்பி வீரமற்ற ஒரு கோழையாக, உலகறிவற்ற வெகுளியாகக் காட்டப்பட்டுள்ளான். 'அந்தரங்க ஓலையைக் கொண்டு கொடுத்து வா, என மாணிக்கவாசகர் பணிக்க, சின்னத்தம்பி

அரமனையு மறியேனே ஆத்தான மறியேனே
வீடுவிட்டு நானுமிப்போ வெளியேறி யறியேனே
(இ. ம. 13)

எனக்கூறலாக வரும் சொற்கள் கருதத்தக்கன. தன் குலத் தொழிலான செருப்புத் தைத்தல் தவிர, பிற ஏதும் அறியாதவனாகச் சின்னத்தம்பி காட்டப்படுகிறான். மாணிக்கவாசகர் அழைக்கிறார் எனக் கூறும் ஊழியக்காரனிடம் சின்னத்தம்பி

கல்லணையள் தைக்கணுமோ கடுவாளம் தைக்கணுமோ
தாப்பிணிவார் தைக்கணுமோ தங்குப்பட்டை தைக்கணுமோ
சில்லுண்டி வேலைகள் தான் சீரிட்டுத் தைக்கணுமோ
(இ. 12)

எனக் கூறுவது கவனிக்கத்தக்கது:-

**விடப்பட்டுள்ள முக்கியச் செய்திகள் :-**

1. சின்னத்தம்பியின் வளர்ச்சிமீது பொறாமை கொண்ட உயர் வர்க்கத்தாரின் சதியாலேயே அவன் நரபலியிடப்பட்டான் என்ற நரபலிக்கான காரணம் இதில் சுட்டப்படவில்லை.

2. சின்னத்தம்பி தன் வீரத்தை வெளிக்காட்டும் விதத்தில் பணகுடி, களக்காடு மலைகளில் வேட்டையாடி விலங்குகளை அழித்து வெற்றி வீரனாகத் திகழ்ந்தமையும் இவ்வாறு வேட்டையாடிய வீரம் மக்கள் மத்தியில் பரவித் தெரிந்ததால், அடங்காக் குதிரையை அடக்கி வைத்துக் கொள்ளுமாறும் காவல் தளபதி பொறுப்பேற்குமாறும் தேசராசர் மாணிக்கவாசகர் கூறியதுமான நிகழ்ச்சிகளும் விடப்பட்டுள்ளன.

இம்முக்கிய நிகழ்ச்சிகள் விடப்பட்டுள்ளமையின் சின்னத்தம்பி ஒன்றுமறியா ஒரு அப்பாவி இளைஞனாகவும், அவனது உலகறிவின்மையைக் கருத்திற்கொண்டே அவனை நரபலிக்குப் பயன்படுத்திக் சொண்டனர் என்ற எண்ணமும் கதைப் படிப்பவர் மனத்தில் பதிந்து விடுகின்றது. எனவே, அடிப்படை நிகழ்ச்சிகள் விடப்பட்டுள்ளமையின் இக்கதைப் பிரதியை முழுமையானதாகக் கருதத் தோன்றவில்லை.

**நா. வானமாமலை கூறும் கதைக்குறிப்புக்களுடன் ஒப்பீடு:-**

பதிப்பிக்கப் பெறும் கதையை விடவும் சின்னத்தம்பி பலிக்கான அடிப்படைக் காரணங்களை மிகத் தெளிவாக, முழுமையாக, விரிவாகக் கூறும் கதைக்குறிப்புக் களை நா. வானமாமலை கூறும் சின்னத்தம்பி கதையில் காண முடிகின்றது.

1. சின்னத்தம்பி இருமுறை பன்றி வேட்டையாடி மக்கள் உயிர்,பயிர், உடமைக்குப் பாதுகாப்பளித்தவன் என்ற செய்தியை நா. வானமாமலை தருகிறார்.

2. ஊர்க்காவல் பணி பரம்பரையாய்த் தேவர்மார்களுக்கு உரியது. திருக்குறுங்குடிக் கோட்டை வாசல் காவல் பதவியைப் பரம்பரைப் பாத்தியதையாக 'நம்பித்தலைவன் பட்டயம்' என்ற ஊரில் உள்ள தேவர்களின் தலைவர்களே வகித்து வருதல் வழக்கம். நிலைமை இவ்வாறிருக்க, திருக்குறுங்குடியாளும் மாணிக்கவாசகம் பிள்ளை சின்னத்தம்பிக்கு வடக்கு வாசல் காவல் தளபதி பதவி அளித்தமை அவன் மீது தேவர்மார்களுக்கு வன்மமும், சினமும் வளரவேண்டும்; அதனால் அவன் அழிய வேண்டும் என்ற நோக்கத்தை மனத்துட் கொண்டதாகும் என நா. வான மாமலை ஒரு புதிய குறிப்பைத் தருகிறார்.

இறுதியில் மாணிக்கவாசகர் கருத்துப்படியே நடந்தது. தேவர்மார்கள் தங்கள் பரம்பரைப் பதவிக்குக் கீழ்க்குலத்திலிருந்து ஒருவன் போட்டியாக வருவதா எனக் கொதித்துச் சினந்தனர். அவனை ஒழிக்க வகை தேடினர்; ஒழிக்கக் கோரினர். மக்கள் எதிர்ப்புக்கு மகேசனும் உடன்பட, சின்னத்தம்பியை 'நரபலி' என்ற பெயரில் ஒழித்துக் கட்டுகின்றனர். இக்கதை விளக்கத்தில் சின்னத்தம்பி பலிக்கான வரலாற்றுப் பின்னணி மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**அடிப்படை நிகழ்ச்சி விடுகைக்குக் காரணங்கள்.-**

இத்தகு கதைப்பாடலை இயற்றி அதனை மக்கள் மத்தியில் பாட அளவுகடந்த துணிச்சல் வேண்டும். ஒரு குலத்தார் செய்த சதிச்செயலுக்குப் பலியான மற்றோர் குலத்தானைக் குறித்த இதுபோன்ற படைப்புக்களில் குறிப்பிட்ட குலத் தின் வஞ்சகச் செயல் சுட்டிக் காட்டப்படுகின்றது. பாதிக்கப்பட்ட குலத்தின் மீது அனுதாபம் தோன்றும் வகையில் சமுதாய அநீதி விளக்கப்படுகிறது.

இரு குலத்தாரும் 'இக்கதை பாடப்பெறும்போது கேட்கும்நிலை ஏற்படும். இத்தகு சமயங்களில் கதைபாடுபவன் கொலைக்கான

1. அடிப்படைக் காரணத்தைக் குறிப்பிடாதிருத்தல்

2. கூறிய காரணத்தையும் குறிப்பாகக் கூறல்

3. காரணத்தை முழுமையாகக் கூறாது அரைகுறையாகக் கூறல்

என்ற நிலைகளை ஏற்க வேண்டிய அவசியமேற்படுகிறது. வெளிப்படையாகப் பாடும் போது குற்றம் சாட்டப்பட்ட குலத்தின் வெஞ்சினத்திற்கு அவன் ஆளாக நேரிடும்.

சில பிரதிகளில் பலிக்கான அடிப்படைப் பின்னணி சுட்டப்படாமைக்கு இவையே காரணமாயிருத்தல் வேண்டும்.

அடிப்படைக் காரணங்களைக் கூறும் கதைப்பாடற் பிரதி பலிதரப்பட்டவனின் இனத்தான் அல்லது அவ்வினத்தின்மீது மிகு அனுதாபம் கொண்ட புலவனால் பாடப்பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன், எவ்வாறாயினும் நடந்த ஒரு நிகழ்ச்சியின் உண்மை உருவத்தை உள்ளபடியே சமுதாயத்துக்குத் தந்து விட வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட, எக்குல எதிர்ப்புக்கும் அஞ்சாநெஞ்சம் கொண்ட ஒரு தீரனால் பாடப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உச்சினி மாகாளியம்மன் கதை:- V**

**கதைச் சுருக்கம் :-**

இரணியன் இழைத்த இன்னல்களுக்கு வருந்திய தேவர்கள் சிவபெருமானிடம் தமது துயர் துடைக்க வேண்டுகின்றனர். தேவர்கள் இடர்களையச் சிவபெருமானும் முன் வருகின்றார். இதன் விளைவாகத் திருமால், பிரகலாதனாக இரணியன் மனைவி லீலாவதியின் வயிற்றில் உதித்து, தூணில் நரசிங்கமாகத் தோன்றி இரணியனை வதைக்கிறார். இரணியனை நரசிங்கமூர்த்தி நகத்தால் கிழிக்கும் போது பீறிட்ட இரத்தத்திலிருந்து உச்சினி மாகாளி தோன்றுகிறாள்.

காளிக்குச் சிவபெருமான் வரங்களும் பரிவாரங்களும் தர, தேவர்கள் வனசமா மலையின் பக்கத்தில் கோயில் கட்டி அவளை அங்கு வீற்றிருக்கச் செய்கின்றனர்.

இந்நிலையில் நந்திபுர நகரத்தில்வாழும் சந்திரவாணன் என்ற அந்தணன் பிரம ராக்ஷசனிடம் கல்வியும் பிற வித்தைகளும் கற்றுத்தேர்ந்து, சூழ்நிலை வசத்தால் ஒரு தேவதாசியை மணமுடிக்கவேண்டிய இக்கட்டுக்காட்படுகிறான். ‘அந்தணன் தாசியை மணக்க நேரிடின் நாற்குலப் பெண்டிரையும் மணம்செய்ய வேண்டும்’ என்ற சாத்திர விதிப்படி, கன்னியாபுரி அரசன் மகள், செட்டி மகள், அந்தண மகள் ஆகியோருடன் தாசிகுலப் பெண்ணையும் மணம் செய்கிறான் சந்திரவாணன். மன்னர்குலப் பெண்ணுக்குப் பிறந்த விக்கிரமாதித்தனும், செட்டிகுலப் பெண்ணுக்குப் பிறந்த பட்டியும், கன்னியாபுரி மன்னனின் மறைவுக்குப்பின் முறையே மன்னனாகவும் அமைச்சனாகவும் பொறுப்பேற்கின்றனர். ஏனைய இரு பெண்கள் பெற்ற புதல்வர்கள் அதற்குமுன்பே துறவியர்களாகி விடுகின்றனர்.

நாட்டை விரிவுபடுத்த விரும்பிய விக்கிரமாதித்தன் தகுந்த இடங்கள் பார்த்துவரப் பட்டியை அனுப்புகிறான். வனசமாமலைப் பகுதியில் காளி குடிகொண்டுள்ள கோயில் தலத்தையும் சுற்றியுள்ள பகுதிகளையும் பார்த்த பட்டி, காளியின் அருளைப் பெற்றால் அப்பகுதியைப் ஆளமுடியும் என்ற விவரங்களை அங்கு எழுதி நாட்டப்பட்டிருந்த குத்துக்கல் மூலம் அறிந்து, அரசனிடம் கூற, இருவரும் மாகாளி கோயில் உள்ளிட்ட பகுதிகளைக் காளியின் அருள் பெற்று ஆண்டு வருகின்றனர்.

காளி கோயிலையும் அவள் ஆணைப்படி இவ்விருவரும் பெரிதாகக் கட்டி முடிக்கின்றனர். அத்துடன் தங்களின் அரிய செல்வங்களைக் கோயிலில் வைத்துப் பாதுகாத்து வருகின்றனர்.

இவர்கள் காலத்திற்குப்பின், காளிகோயில் பூசை செய்வார் இன்றிக் காடுகள் வளர்ந்து, கதவுகள் அடைத்துக் கிடக்கின்றன. அப்போது அந்தணன் ஒருவன் அக்கோயிலைக் கண்டு பூசை செய்து வழிபடப் பணம் இன்மையால் ஏக்குற்று வருந்துகிறான். இதைக்கண்டகாளி மூன்று பணம் நாடோறும் தந்து மூன்று வேளை பூசை தவறாது செய்யப் பணிக்கிறாள். ஒருநாள் அந்தணன் 'தன் பெண் மக்களுக்கு மணம் முடிக்கச் சிறிது பொன் தருக' என அம்மனை உருகி வேண்டிப் பெறுகிறான். அப்பொன்னை விற்கக் கொண்டு சென்ற அந்தணனைக் கண்டு ஐயுற்ற வெள்ளைத் துரைகளின் காவலர்கள், துரைமார்களிடம் அவனைக் கொண்டு சேர்க்கின்றனர்.

துரைகளிடம் தனக்குப் பொன் கிடைத்த விவரத்தை அந்தணன் கூறியபோது அவர்கள் நம்ப மறுத்து, 'அக் கோயிலைக் காட்டு' என அவனை விலங்கிட்டு அழைத்துச் செல்கின்றனர். செல்லும் வழியில் அவன் வீட்டையும் கொள்ளையிடுகின்றனர். காளிகோயில் சென்றடைந்து, கதவேழு கண்டு திறக்க வகையறியாது திகைத்து, இறுதியில் மதயானைகளிடம் இரும்புலக்கை கொடுத்து, கோட்டை மதில்களையெல்லாம் இடித்து நொறுக்கிக் கோயிலைக் கொள்ளையிடுகின்றனர். இவர்களின் செயலால் வெகுண்ட காளி பூதப்படையைத் திரட்டி, வெள்ளைப் படையைக் கொன்றழிக்கிறாள். பின்னும் சினமடங்காது சிவனை நோக்கித் தவமிருந்து வரங்கள் பல பெற்று, வெள்ளைத் துரையின் சீமையை அழிக்க, பலவித நோய்களையும் பெற்று அவற்றைப் பரப்புகிறாள். நோய் கண்டு அஞ்சிய மக்கள், அம்மன் அருள்வந்து ஆடுவோர்களிடம் இரங்கி வேண்ட, வெள்ளைத்துரைகளும் தாங்கள் செய்த அழிவுச் செயல்களுக்கு மன்னிப்புக் கோரிப் பூசைகளும் செய்து வணங்குகின்றனர். அம்மன் மனமிரங்கிப் பூசை, பலிகளை ஏற்றுக்கொண்டு தென் பகுதி நோக்கிச் செல்கிறாள். உச்சினிமாகாளி தெற்குப் பகுதிக்கு வந்து கோயில் கொண்ட வரலாறு இது என விளக்கப்பட்டுள்ளது.

**தெய்வக் கதைப் பாடல்**

இக்கதைப்பாடலின் தலைப்பு உச்சினிமாகாளியம்மன் கதை என்று அமைவதாலும் கதையோட்டம் காளி தொடர்புடையதாக இருப்பதாலும் இதனைத் தெய்வக் கதைப் பாடல் எனக் கொள்ளலாம். எனினும்

1. இந்துக் கோயில்களை இடித்துத் தகர்த்தல்

2. இந்தியரின் பண்பாட்டுக் கருவூலங்களாகத் திகழ்ந்த கோயில்களைக் கொள்ளையடித்தல்

3. இந்துமத உணர்வு கொண்டோரை அடித்துத் துன்புறுத்தி வதைத்தல்

என்ற கொடுஞ்செயல்களை மேற்கொண்ட ஆங்கிலேயர்களின் அதிகார அட்டூழியங்களைத் தமிழ் மனங்களுக்குத் தெளிவுற எடுத்துக்காட்டவே காளியின் பிறப்பு,

காளிகோயில் அமைப்பு, காளி தொடர்புடைய பிற புராண நிகழ்ச்சிகள் பயன் படுத்தப்பட்டுள்ளமையால் இதனை ஒரு சமுதாய, வரலாற்றுக் கதைப்பாடல் என்ற நிலையிலும் நோக்கலாம்.

இக்கதைப்பாடல் மக்கள் மத்தியில் வில்லுப்பாட்டு வடிவில் பாடப்பட்டு வந்திருக்கிற தென்பதற்குக் கதைப்பாடலில் அகச் சான்றுகள் பல உள்ளன.

> வேதாளி **கதைபாட** விசாகன் காப்பாம் (8)
>
> இயலுறு **புவியோர்பாட** ஈசனின் மைந்தன் காப்பாம் (16)
>
> எண்டோளி தன்னையுங் கண்டுதொழுததோ **ரிசைசொல்லக்** கேளுமய்யா (201)
>
> திட்டமுடனே பட்ட கஷ்டந்தன்னில் சிறிதுயான் புன்சொல்லால் **புலவோர் வில்லில்**
> **தட்டியேபாடி** வரகவியைக் காக்க தந்திமுகன் கந்தனுமே அருள்செய்வாரே (204-205)

என்ற பாடல் வரிகள் இதற்குத் தக்க சான்றாக அமைகின்றன. நெல்லை மாவட்டம் கருங்குளத்தில் கணியான் கூத்தாகவும் இக்கதை பாடப்பட்டு வருவ தாகத் தெரிகின்றது.

**கதையமைப்பு முறை :-**

இக்கதைப்பாடல் மூன்று கதைகளின் இணைப்பாகத் தெரிகின்றது.

1. இரணியன் கதை அல்லது பிரகாலதன் கதை, 2. விக்கிரமாதித்தன் கதை, 3. உச்சினி மாகாளிக்குப் பூசை செய்த அந்தணன் கதை என்ற மூன்று கதைகளின் இணைப்பே உச்சினி மாகாளி கதை எனலாம். இம்மூன்று கதைகளையும் தனித் தனியாகப் பிரித்துத் தனிக்கதைப் பாடல்களாக்கிவிட முடியும். பிரகலாதன் கதை, விக்கிரமாதித்தன் கதை என்பன தனிக் கதைப்பாடல்களாகச் சுவடிகளில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.[38]

உச்சினி மாகாளி கோயிலில் பூசை செய்த அந்தணன்பட்ட துயர், இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருந்த வெள்ளைத் துரைமார்கள் மாகாளி கோயிலை

---

38. பிரகலாதன் கதை (உ. த. நி. 10)
ஹிரண்ய நாடகம் (கே. ப. சு. 8832)
விக்கிரமாதித்தன் கதை (உ. வே. சா. 2040)
விக்கிரமாதித்தன் கதை (செ. கீ. சு. R. 2244)

இடித்துத் தூளாக்கியதுடன் அங்கிருந்த செல்வங்களையும் கவர்ந்து கொண்ட செயல் ஆகியவற்றை விவரிக்க எழுந்த கதை நிகழ்வுகளுக்குப் பின்னணியாக இரணியன் கதை, விக்கிரமாதித்தன் கதை என்பன இணைக்கப்பட்டு வலுவூட்டப் பெற்றுள்ளன.

வெள்ளையர்கள் இடித்த மாகாளி கோயில் விக்கிரமாதித்த மன்னனால் விரிவு பெறக் கட்டப்பெற்றது; அவனது செல்வங்கள் வைக்கப் பெற்ற கருவூலமாக அமைந்தது; அம்மன்னனால் சிறப்புறப் பாதுகாக்கப்பெற்று, நாளும் வழிபாடு நடத்தப்பெற்று வந்த தலமாக இருந்தது என அக்கோயிலின் பழமையினையும் பெருமையினையும் உணர்த்த விக்கிரமாதித்தன் கதை இணைக்கப் பெற்றுள்ளது. விக்கிரமாதித்தன் அரும்பெரும் செயல்கள் செய்த வீரனாகப் பல்வேறு கதைகள் மூலமாக மக்கள் மனத்தில் நீங்கா இடம் பெற்றிருந்தவன் என்பது குறிப்பிடத் தக்கது. அனைவருக்கும் தெரிந்த விக்கிரமாதித்தனைப் பொருத்தமுற இக்கதையில் இணைப்பதன் மூலம் அயன்மையுணர்வு தோன்றாமல் கேட்பவர்கள் எளிதில் இக்கதைப்பாடலோடு ஒன்றிவிட முடிகின்றது.

அக்கோயிலில் குடிகொண்டுள்ள மாகாளியின் சிறப்புணர்த்துமுகமாக, இரணியனின் வலிமையும் இறைவனுக்குச் சமமாக இருந்து அவன் ஆண்ட உயர் நிலைகளும் இறுதியில் திருமாலின் நரசிம்மாவதாரத்தால் வதைக்கப்பட்டு மடியும் போது, அவன் உதிரத்தினின்றும் அவனது கொடிய குணங்கள், ஆற்றல்கள் அத்தனையும் திரண்டு ஓர் வடிவு பெற்றது போல் உச்சினிமாகாளி உதித்த நிலையும் இணைக்கப் பெற்றுள்ளது. காளியின் ஆற்றலைக் கலைப்படுத்திக் காட்ட இரணியன் கதை துணை செய்துள்ளது எனலாம்.

இத்தகு ஆற்றல் வாய்ந்த உச்சினி மாகாளியும், விக்கிரமாதித்த மன்னனால் பூசிக்கப் பெற்ற அக்காளி கோயிலும் வெள்ளையரால் அழிக்கப்பட்டது; அவமதிக்கப்பட்டது என உணர்த்தி, நாட்டுப்பற்றுணர்வைப் படிப்பவர் மத்தியில் இக்கதைப்பாடல் கனன்று எரியச் செய்துள்ளது எனலாம்.

உச்சினி மாகாளி கதையில் 'இரணியன் கதை' இணைக்கப் பெற்றதற்கு மற்றுமொரு இன்றியமையாத காரணமும் உள்ளது. 'கதைத்தலைவன்-தலைவி பெயருக்கு ஒரு காரணம் கற்பித்தல்'[39] என்ற கதைப்பாடல் மரபின்படியும் இரணியன் கதை உச்சினிமாகாளி கதையில் இடம்பெற்றுள்ளது எனலாம். இரணியனின் உச்சியினின்று பிறந்தவள் உச்சினி மாகாளி என்று இக்கதைப் பாடலில் பெயர்க் காரணம் கூறப்படுகிறது. உச்சினி என்பதற்கு உச்சி என்றே பொருள் கொள்ளப்பட்டு அதற்குத்தக இரணிய வதை நிகழ்ச்சி இணைக்கப்பெற்றுள்ளது.

பதிப்பிக்கப் பெற்றுள்ள உச்சினி மாகாளி கதைப்பாடலில் 'இரணியனின் தலை உச்சியினின்று வந்த குருதியினின்றும் வந்தவள்' உச்சினி மாகாளி எனத் தெளிவாகக் கூறப்படாமல், 'குருதியினின்று வந்தவள்' என மேலோட்டமாகப் பாடப்

39. வெட்டும்போது குறுக்குவழியாக வெடித்துவந்ததால் குறுக்குளாஞ்சி - குறுக்குளாஞ்சீ கதை (கே.ப.சு. 8425)

கன்னத்தோடு கன்னம் வைத்தபோது நகைத்ததால் கன்னகை - கோவலன் கதை (கே ப.சு. 6305)

என்றமையும் பெயர்க்காரணங்களையும் இங்கு இணைத்து நோக்கலாம்.

பட்டுள்ளது. இதற்குச் சான்றாக 5, 170-171, 473-474 என்ற அடிகளைச் சுட்டலாம்.

நின்றுமாலைப் பொழுதான வேளை நரசிங்கம்
நிறையுடன் வந்து இரணியன் தன்னையுந் தூக்கி
வாயில்நடை தனிலேறித் துடைமீது வைத்து
வானவர் தன்பகை தீர்த்திடத்தன் நகத்தாலே
பீற இரணியன் தன்னுயிர் மாள உதிரம்
**பெருகிடப்** பெண்கொடி உச்சினி மாகாளி வந்தாள் (166-171)

ஆனால் பிற உச்சினி மாகாளி கதைப் பிரதிகளில் இரணியனின் தலை உச்சியி னின்று பெருகிய உதிரத்தினின்றும் உச்சினி மாகாளி பிறந்ததாக மிகத் தெளிவா கவே, பொருத்தமுறப் பெயர்க்காரணம் இயம்பப்பட்டுள்ளது.

உ.த.நி. பிரதியில் (சுவடியைப் பார்த்துப் படிசெய்து வைக்கப்பட்டுள்ள பிரதி)

இரணியன்றன் உச்சியிலே எம்பெருமான் கொத்துவாராம்
**உச்சியிலே கொத்திடவே உதிரவெள்ளம்** பாய்ந்திடுமாம்
உதிரவெள்ளம் பாய்ந்திடவே உயிர்மடிந்தான் இரணியனும்
**உதிரத்திலே கருவுருவாய் உச்சினி மாகாளி** அம்மன் பிறந்தாளே
(91-94)

என இரணியனின் தலை உச்சியில் பெருகிய உதிரத்தினின்று உச்சினி மாகாளி உதித்த செய்தி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உச்சினி மாகாளி உச்சியில் பிறந்த செய்தி வேறுசில உச்சினி மாகாளி கதைப்பாடல்களிலும் கூறப்படுகின்றது, சிற்சில மாறுதல்களுடன் இவை அமையினும் இரணியனின் தலைஉச்சியில் உதித்தவள் என்ற கருத்து மட்டும் மாறாமல் அமைகின்றது.

நெல்லை மாவட்டத்திலுள்ள கருங்குளத்தில் கணியான் கூத்தாகப் பாடப்பெறும் உச்சினி மாகாளி கதையில், சிவன் ஆலகால விடத்தை விழுங்க, அவர் இறந்து விடுவாரே என அஞ்சிய உமையம்மை சிவபிரானின் தொண்டையைப் பிடிக்க, நஞ்சு அவரின் உச்சிவழி வெளிப்பட, அதனின்று உச்சினிமாகாளி பிறந்து வந்த தாகப் பாடப்படுகின்றது. நெல்லை மாவட்ட ஊர்களில் பாடப்படும் பெருவாரி யான கதைப்பாடல்களிலும் இத்தகு பிறப்பு முறையே கூறப்படுகிறது.

உச்சைனி, உஞ்சேனை, உஞ்ஞை என அழைக்கப்படும் அவந்தி நாட்டிலுள்ள மகாளவனம் அல்லது காளவனம் என்ற தவவனத்தில் உள்ள காளி கோயிலில் குடிகொண்டுள்ள தெய்வமே உஜ்ஜையினி மாகாளி என அழைக்கப்பெற்றது. இது பேச்சுவழக்கில் உச்சைனி > உச்சினி என மாறி இறுதியில் 'உச்சி மாகாளி' என்ற பொருள்பட கதைப்பாடல்களில் அமைந்துவிட்டது. இன்று நெல்லைப் பகுதிகளில் காணப்படும் இவள் கோயில்களிலெல்லாம் உச்சியில் உதித்தவள்

என்ற காரணத்தை மனதிற்கொண்டு உச்சிவேளையில் பூசையும் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. மேலும் இப்பகுதி மக்களிடையே 'உச்சி மாகாளி' என்றே இவள் வழங்கப்பட்டும் வருகிறாள்.

உஜ்ஜைனி என்ற வடநாட்டுத் தலத்தைப் பற்றியும் அங்கு உள்ள காளியைப் பற்றியும் அறியாத பாமரமக்கள் அவளை இரணியன் அல்லது சிவனின் உச்சியினின்று உதித்த உச்சி மாகாளியாகவே ஏற்றுக் கொண்டுவிட்டனர். எனவே பெயர்க் காரணம் கூறல் என்ற கதைப்பாடல் மரபின்படியும் 'இரணியன் கதை' உச்சினி மாகாளி கதையில் இணைக்கப் பெற்றுள்ளமை தெளிவாகின்றது. நரசிம்ம வதாரம் பற்றிய எந்த நூல்களிலும், இரணியன் தலை உச்சியினின்று வந்த குருதியில் உச்சினி மாகாளி உதித்தாள் என்ற செய்தியைக் காணமுடியவில்லை. 'பெயர்க் காரணம் கூறல்' என்ற கதைப்பாடல் மரபினைப்போன்று ஏனைய பல கதைப்பாடல் மரபுகளும் இக்கதைப்பாடலில் சீராகப் பின்பற்றப்பட்டுள்ளன.

'நாடான நாடதிலே' என நாட்டு, நகரப் பெயர் குறிப்பிட்டுத் தொடங்குதல் கதைப்பாடல் மரபு. இக்கதைப் பாடலும், "நாடான நாடதிலே நந்தியாபுர நகரத்திலே" (200) எனத் துவங்குகிறது. இந்த 200-ஆவது வரியினின்றே கதை நிகழ்ச்சி முழுமை பெறத் துவங்குகிறது எனலாம். இதற்குமுன் உள்ள பகுதிகள் கதைத் தலைவியான உச்சினி மாகாளியின் பெயருக்குக் காரணம் கற்பித்தல் என்ற கதைப்பாடல் மரபுக்காக அமைந்துள்ளன எனலாம்.

குழந்தை பிறப்பு, வளர்ப்பு, கல்வி பற்றி விளக்கிக் கூறும் கதைப்பாடல் மரபினைப் பிரகலாதன் பிறப்பு, வளர்ப்பு, கல்வி போன்றன விளக்கப்படும் பகுதிகளில் காணலாம் (80-113).

பயணம் செய்தல் தொடர்பான கதைப்பாடல் மரபு, உச்சினி மாகாளி சிவனைக் காணச்செல்லல் (174-195), பட்டி நாடு தேடல் (334-363), விக்கிரமாதித்தன் இந்திரலோகஞ் செல்லல் (412-420), கும்பினிப் படை கோயில் வரல் (689-737), வைகுண்டத்தில் இராமரிடம் விடைபெற மாகாளி தன் படையுடன் செல்லல் (830-858), அம்மன் தன் பரிவாரத்துடன் தெக்கணம் நோக்கிப் புறப்படல் (974) என்பன போன்ற பயண நிகழ்ச்சிகளில் அமைந்துள்ளது.

**கதைப்பாடலின் காலமும் சூழலும்:-**

பதிப்பிக்கப்பெறும் உச்சினி மாகாளி கதைச் சுவடி 1931 கார்த்திகை மாதம் ஐந்தாந்தேதி எழுதப்பட்டதாகக் கதைத் துவக்கத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. நாடு விடுதலை அடைவதற்குமுன் அதாவது அடிமைநாடாக இந்தியா வெள்ளையர்களால் ஆட்சி செய்யப்பட்ட காலகட்டத்தில் இக்கதைப்பாடல் ஏட்டில் எழுதப்பட்டிருக்கிறது.

மேற் குறிப்பிட்ட காலகட்டத்தில் இக்கதைப்பாடல் சுவடியில் எழுதப்பட்டிருப் பினும் இதற்குமுன்பே இது வில்லுப்பாட்டு வடிவில் மக்கள் மத்தியில் பாடப்பட்டு

வந்திருக்கிறது என்பது முன்னர் கூறப்பட்டது. வில்லில் பாடப்பட்டு வந்த கதைப்பாடலே பின்னர் சுவடியில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

வெள்ளையர் தொடர்புடைய நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பதால், இக்கதைப்பாடல் வெள்ளையர் ஆட்சிக்காலத்தில் உருப்பெற்றது என்பது தெளிவாகிறது.

அத்துடன் வெள்ளையர் செய்த அட்டூழியங்களான இந்துக்கோயிலிடிப்பு, இந்துக் கோயில் செல்வங்களைக் கவரல், கோயிற் பூசாரிகளைத் துன்புறுத்தல் போன்ற நிகழ்ச்சிகளை விளக்கிக் காட்டி, இத்தகு செயல்களை அவர்கள் செய்த தால் கோயிலில் குடிகொண்டிருந்த அம்மன் தெய்வம் சினந்து, வெள்ளைப்படையை அழித்தது என்றும் அவர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளில் கொடிய நோய்களைப் பரப்பியது எனவும் கதைப்பாடல் நிகழ்ச்சிகளை விவரிப்பதன் மூலம் அந்நியர் ஆட்சியின் மீதுள்ள வெறுப்பு வெளிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் வெள்ளையர் ஆட்சிமீது வெறுப்புற்று, விடுதலை வேட்கையுணர்வு பொங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் இக்கதைப்பாடல் தோற்றம் பெற்றிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

கதையில் இடம்பெறும் கோயிலிடிப்பு, கோயிற் செல்வங்களைக் கவர நடந்த செயல்கள் போன்றன உண்மைக்குப் பொருந்தும் நிகழ்ச்சிகளாகவே அமைகின்றன. வேற்றார் படையெடுப்புக்களால் இத்தகு கோயிலிடிப்பு, கோயிற் செல்வங்களைக் கொள்ளையடித்தல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதனை வரலாறும் எடுத்துக் காட்டுகிறது. முகம்மதியர் படையெடுப்பால் இத்தகு கேடுகள் பெரு மளவில் நடந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இதுபோன்ற கடந்த கால வரலாற்று நிகழ்வுகளின் நினைவுகள் மேற்கூறியன போன்ற பகுதிகளை அமைப்பதற்குத் துணை செய்திருக்கலாம்

வேற்றவர் படையெடுப்பால் கோயில்களில் இத்தகு அநீதிகள் நடந்தமையை வரலாறு மட்டுமின்றி இலக்கியமும் எடுத்துக்காட்டுகிறது.

> தேவி கோயிலிற் சென்று தீமைகள் பிறர்செய்ய
> ஆவி பெரிதென் றெண்ணிக்-கிளியே
> அஞ்சிக் கிடந்தா ரடீ!

என்பது பாரதியார் பாட்டு.[40]

எனினும் குறிப்பிட்ட உச்சினி மாகாளி கோயில் செல்வத்தைக் கொள்ளையிட வேற்றவர் அக்கோயிலை இடித்தது பற்றிய செய்தி வேறு எந்த வரலாற்று நூல் களிலும் இலக்கியங்களிலும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**உஜ்ஜயினியும், உஜ்ஜயினி மாகாளியும்:-**

கதைப்பாடல் குறிப்பிடும் உஜ்ஜயினியும், இந்நகரிலிருந்த உஜ்ஜயினி மாகாளியும் உண்மையாக இருந்தவையேயாகும். உஜ்ஜயினி நகரம் அவந்தி நாட்டிலுள்ளது.

---

40. சுப்பிரமணிய பாரதியார், நடிப்புச்சுதேசிகள். கிளிக்கண்ணி 9.

இது பெருங்கதை குறிப்பிடும் வாசவதத்தையின் தந்தையாகிய பிரச்சோதனனின் தலைநகர். முத்திநகரம் ஏழனுள் ஒன்று. உச்சைனி மாகாகாளம் என்ற சிவ க்ஷேத்திரம் இங்கு உண்டு. இந்நகர் அயலில் மகாளவனம் அல்லது காளவனம் என்ற ஒரு தவவனமும் அதில் ஒரு **காளிகோயில்** முதலியனவும் ஒரு **நதியும்,** அந்நதி பாயப்பெற்று ஒரு யோசனை அளவுள்ளதான ஒரு பொய்கையுமுண்டு' என அபிதான சிந்தாமணி (பக்-228) இந்நகர், இந்நகரிலுள்ள காளிகோயில் ஆகியன பற்றிக் குறிப்பிடுகின்றது. இக்குறிப்பில் காணப்படும் நதி கதைப்பாடல் குறிப்பிடும் குணபதி ஆறாதல் வேண்டும்; இக்குறிப்பிலுள்ள பொய்கையும் கதைப்பாடலில் ''வாகுடைய பொய்கையுங் கண்டு'' (344) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உஜ்ஜயினி நகரத்தில் வீற்றிருந்த உஜ்ஜயினி மாகாளியை உஜ்ஜயினி என விளித்துப் பாரதி துதிப்பதையும் காண்கிறோம்.

> **உஜ்ஜயினீ** நித்ய கல்யாணி
> ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி
> **உஜ்ஜய காரண** சங்கர தேவீ
> உமாசரஸ்வதீ ஸ்ரீ மாதாஸா[41]

இந்த உஜ்ஜயினி மாகாளியின் உபாசகனாக விக்கிரமாதித்த மன்னன் திகழ்ந்ததை விக்கிரமாதித்தன் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களும் அம்மன்னன் தொடர்பாக வழங்கிவரும் செவிவழிக் கதைகளும் உறுதிப்படுத்துகின்றன. எனவே உஜ்ஜயினி மாகாளி, விக்கிரமாதித்த மன்னர் தொடர்பான வரலாற்று உண்மைகளுடன் 'இரணியன் கதை' என்ற புராணக் கதையையும் இணைத்து இக்கதைப் பாடல் கட்டப்பட்டுள்ளமை தெரிகின்றது.

**உருவகக் கதைப்பாடல்:-**

இந்தியா அடிமை நாடாக இருந்தபொழுது விடுதலை வேட்கையை எழுப்பும் விதத்தில் கவிதைகள் எழுதிய தமிழ்க் கவிஞர் பாரதியார் ஆவார். விடுதலை உணர்வை நேரடியாக உணர்த்தாமல் உருவகப்போக்கில் வெளிப்படுத்தும் பாஞ்சாலி சபதத்தினையும் பாடியுள்ளார். பாஞ்சாலி சபதத்தில் வரும் பாஞ்சாலி பாரதத் தாயையும், பஞ்சபாண்டவர் அடிமைப்பட்டிருந்த இந்திய மக்களையும், துரியோதனாதியர்கள் வெள்ளையர்களையும், பஞ்சபாண்டவருள் பீமனும், அர்ச்சுனனும் தீவிரவாதிகளையும், தருமர் மிதவாதிகளையும், விகர்ணன் பாத்திரம் வெள்ளையராயினும் இந்தியர் மீதும் அவர்களின் விடுதலை மீதும் அக்கறை கொண்டிருந்த, அன்னிபெசண்ட் போன்றோரையும் நினைவுபடுத்துவதாகத் திறனாய்வாளர்கள் விளக்குவர். பாஞ்சாலியைப் பாண்டவர் பணயமாகக் கௌரவர்களிடம் வைத்து இழப்பது இந்தியர் பாரத தேசத்தை வெள்ளையர்களிடம் இழந்து நிற்பதைக் குறிப்பிடும். பாஞ்சாலி இட்ட சபதம் பாரதத்தாய் இட்ட வீரசபதமாகும்.

41. சுப்பிரமணிய பாரதி, நவராத்திரிப்பாட்டு 29.

மகாபாரதத்திலுள்ள பாஞ்சாலி சபதப் பகுதியைப் பாரத மாதாவின் சபதமாக உட்பொருள் அமையும்படி பொருத்தமுறப் பாரதி பாடியது போன்றே இந்த உச்சினி மாகாளி கதைப்பாடலும் தெய்வக் கதைப்பாடல் போன்று வெளிப் படைக்குத் தோற்றமளிப்பினும் நாட்டுப்பற்றை அடித்தளமாகக் கொண்ட உட் கருத்துக்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கிய உருவகக் கதைப்பாடலாக அமைந் துள்ளது எனலாம்.

**கதைப்பாடலில் காணப்படும் உள்நோக்கங்கள்:-**

1. இந்தியவிடுதலைப் போராட்ட வீரர்கள் காளி அல்லது சக்தி வழிபாட்டிற்குப் புத்துயிரளித்தனர். வங்காளத்தில் புத்துயிர் பெற்ற இச்சக்தி வழிபாட்டினை இராமகிருஷ்ணர், விவேகானந்தர், அரவிந்தர் போன்றோர் ஒருவித புதிய சமய எழுச்சியுடன் பரப்பி நின்றனர். விடுதலைப்போராட்ட வீரர்களின் எழுத்துக்களும் இக்காலகட்டத்தில் தோன்றிய கவிதைகளும் காளியை உலகமாதாவுடனும் இந்தியத்தாயுடனும் கற்புடைய பெண்ணுடனும் ஐக்கியப்படுத்தி நோக்கின. இந்தியத்தாயோடு காளியை ஐக்கியப்படுத்தியதோடு மட்டும் நில்லாமல் கொடுங் கோலர்களை விழுங்கி ஆனந்தக் கூத்திடும் அவளது ருத்திர தாண்டவத்தையும் அழகாகக்காட்சிப்படுத்தியுள்ளனர். கரியநிற காளிபற்றிய இத்தகு சொற்சித்திரங் கள் பாரதியின் புதிய ருசியா, ஊழிக்கூத்து போன்ற கவிதைகளில் சிறப்பிடம் பெறுவதைக் காணலாம்.

இவ்வாறே சுதந்திர எழுச்சிபெற்ற மக்களின் ஒருமித்த கருத்துருவாக உச்சினி மாகாளி இக்கதையில் அமைக்கப்பட்டுள்ளாள் எனலாம். பாரத மக்களிடையே வீர வடிவமாக மாகாளி வணங்கப்படுகின்ற இயல்பினைத் தொன்றுதொட்டே காணலாம். சிவனாலும் அழிக்க இயலாத அசுரர்களை, வெற்றித்தெய்வமான காளி அழித்ததாகப் புராணங்கள் பேசும். உலகில் அநீதி பெருகியவிடத்து தீய வர்களை அழித்து நீதியை நிலைநாட்ட காளி போர்த் தேவதையாக வருவாள் என்பது புராண நம்பிக்கை.

இந்நம்பிக்கையினடிப்படையில், வேற்றவர்களான வெள்ளையர்கள் கோயிலிடிப்பு, கோயிற் சொத்தைக் கொள்ளையிடல் என்ற அநீதிகளை நடத்தியபொழுது அவர் களை அழித்து நீதியை நிலைநிறுத்த மாகாளி அம்மன் தன் பூதப்படையுடன் வந்தாள் என இக்கதைப்பாடலில் அமைக்கப்பட்டுள்ளது. வெளிப்படையாக வெள்ளைக்காரன் ஆட்சியை ஒழிக்க இயலாத மக்கள் தம் வீரத் தெய்வமான-வெற்றித் தெய்வமான மாகாளியின் மீது தம் நீண்ட நெடுநாளைய வேட்கை யினை ஏற்றிக் கூறியுள்ளனர்.

2. காளி தன் பூதப்படையை ஏவி வெள்ளைப்படையை அழித்ததாகவே கதைப் பாடல் அமைக்கப்பட்டுள்ளது.[42] வெள்ளையரை அழித்தொழிக்க வேண்டும் என்ற

42. ''கரும் பிடாரம்போல் வாயிலது தன்னில்
காளி ஏவினாள் தூதன் வேதாளத்தை
வேதாளங் கரந்தன்னில் தடிகொண்டு
வெகுண்டு வந்ததோர் கும்பினிச் சேனையை
நீறதாகவே போம்படியே கொண்டு
நிமிடந் தன்னில் ஜயமாலை சூடினார்'' (784-789)

கவிஞனின் ஆவேச எண்ணம் இக்கதைப்பாடலில் கலை வடிவினைத் தழுவி யுள்ளது எனலாம்.

3. கும்பினிப்படை கோயிலை இடித்த பின்னர் காளி சிவபிரானிடம் சென்று,

சிளகரக் கதவேழை உடைத்திட்டுச்
செம்பொன்னைப் படிறுசெய்து போயினான்
கோயிலில் கதவேழும் உடைபட்டும்
கூண்டிருப் பேனோ போதமில் லாமலே
அறைக்கு ளித்தனை நாளிருந்த என்னை
அம்பலத்தில் துரத்தி விரட்டினான் (812-817)

என முறையிட்டு, இவ்வாறு காசினியில் கலியன் பெருத்துவிட்டதால் தீயோர்களை வதைசெய்ய அம்மை நோய், வாந்தி பேதி, சுரம், குளிர்சன்னி போன்ற நோய் களைப் பரப்பும் வரம் தருக என வரம்பெற்று வந்து[43] உலகில் பலவித நோய் களைப் பரப்பினாள் எனக் கதைப்பாடல் கூறுகிறது.

கும்பினியார் இந்நாட்டில் ஆட்சிசெய்யும்வரை, கோயிலிடித்தல் போன்ற அட்டூழி யங்களை அவர்கள் தொடர்ந்து செய்யும்வரை, மரணத்தைத் தரும் கொடிய அம்மை போன்ற நோய்கள் பரவவே செய்யும்; அவர்கள் செய்யும் கோயிலிடிப்பு போன்ற அநீதிச் செயல்களினால்தான் காளி சினந்து இத்தகு நோய்களைப் பரப்புகிறாள் என்ற எண்ணத்தை மக்களிடையே விதைத்துள்ளது இக் கதைப்பாடல்.

4. அடிமைப்பட்டுச் சித்திரவதைப்படும் பாரத மக்களின் பிரதிநிதியாக அந்தணன் பாத்திரம் இக்கதைப்பாடலில் படைக்கப்பட்டுள்ளது எனலாம். அவன் வெள்ளை யரிடம் பட்ட அடியும் சிந்திய இரத்தமும்,[44] பாரத மக்கள் பட்ட அடியையும் சிந்திய இரத்தத்தையும் நினைவூட்டுவதாகலாம். அந்தணன் கையில் வெள்ளை யர் பூட்டிய விலங்கு[45] பாரத மக்கள் பட்டிருந்த அடிமைத்தளையின் குறியீடு

---

43. ''ஒங்கரிப்புடனே சத்திப் பானதும்
உத்தநல்ல சுரங்குளிர் சன்னியால்
சீக்கிரந் தனிலே உயிர்வாங்கவும்
தேசஞ்சுற்றி அம்மன் விளையாடவும்
நீ நினைத்தபடி வரந்தந் தேன்யான்
நீயே சென்றுபார் உச்சினிமாகாளி'' (824-829)

44. ''வாருமடா பாப்பானே வழியேநட வென்றுசொல்லி
வந்தபாராக் காரன் அடித்தானே
அடித்தஅடி பட்டுக்கொண்டு அன்புடனே வேதியனும்'' (609-611)
''கள்ளவாளிக் குள்ளமுறை கட்டியடி பட்டல்லாமல்
காரியமாய் உள்ளமொழி சொல்லான்
என்று சொல்லி அந்தணனைக் கும்பினியார் சேவகர்கள்
இயல்வுடனே கட்டியடித்தாரே'' (645-648)
''மாய்க்க வென்றந்தச் சேவகர் மொத்தினர்'' (766)

45. ''என்று பதாகினியுடன் நடந்து இருபிறப்பாளர்க்கு நிகளமிட்டு (728) (நிகளம்-கைவிலங்கு)

என்றும் கூறலாம். கும்பினியார் அடித்த அடி பொறுக்க முடியாமல் அலறி ஓலமிட்ட[46] அம்மன் கோயில் பூசாரியான அந்தணன் ஒரு தனி மனிதனல்ல; வேற்றார் ஆட்சியில் அல்லலுற்று அழுத மக்களின் பிரதிநிதியாக அவன் அமைகின்றான் எனலாம்.

நால்வகை வருணத்தில் அந்தணர் குலம் உயர்வானதாகவும் அந்தணருக்குச் செய்யும் தானம் சிறந்ததாகவும் அவர்களுக்குச் செய்யும் பாவம் மிகப் பொல்லாததாகவும் இந்திய மண்ணில் தலைமுறை தலைமுறையாக நம்பப்பட்டு வந்துள்ளது. கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் அமையும் 'ஓம்படைக் கிளவி'களில் குறிப்பிட்ட கல்வெட்டு, செப்பேடுகளுக்கு ஊறு செய்பவர் 'கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திலும், அந்தணரைக் கொன்ற பாவத்திலும் போவார்கள்' என அமையும் அமைப்புக்களைப் பார்க்க இயலும். 'பிராமணனைக் கொன்றவனைப் பிரம்மஹத்திதோஷம் பிடித்து வாட்டும்' எனப் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். ''பார்ப்பாருக்கு ஊறுவிளைத்தலாகாது'' என்பதைத் தமிழிலக்கியங்கள் பல இடங்களில் வற்புறுத்திச் செல்லக் காணலாம். இவ்வாறு காலங் காலமாக 'அந்தணர் பாவம் பொல்லாதது' என்ற எண்ணத்தில் ஊறி வளர்ந்த மக்களிடையே ஓர் அந்தணனை அடித்து வதைத்து அந்நியர் கொடுமைப்படுத்தினர் எனக் கூறல் மூலம் மிகத் திறமையான முறையில் அந்நியர் வெறுப்பு தீவிரமாகக் கிளறி விடப்பட்டுள்ளது எனலாம்.

5. மூன்றுவேளைப் பூசைக்கு மூன்று பணம் பெற்றுக்கொண்டு எளிமையாக வாழ்ந்து வந்த அந்தணன் வாழ்க்கை இந்திய மக்களின் எளிய வாழ்க்கை முறையைப் பிரதிபலிப்பதாகும். கோயிற் பொன்னைக் கண்டதும் கோயிற் கருவூலத்தையே கொள்ளையடிக்க முனைந்த வெள்ளையர் செயல் அவர்கள் இந்திய நாட்டுச் செல்வங்களை எவ்விதமெல்லாம் சுரண்டிச் சூறையாடினர் என்பதற்கொரு அடையாளமாக அமைகின்றது எனலாம். நூற்றுக்கணக்கான இந்துக் கோயிலிடிப்புகளின் ஒருமித்த எதிர்ப்பொலியாக-எதிரொலியாகப் பிறந்தது உச்சினி மாகாளி கதை என்பது பொருந்தும்.

6. வெள்ளையர் இந்து தெய்வத்தை இழிவாகப் பேசி அவமதித்தனர் எனச் சுட்டிக்காட்டுவதன் மூலம் (717-721) இந்தியாவில் பெரும்பான்மையினராக இருந்த இந்துக்களிடையே மதவுணர்வைத் தூண்டிவிட்டு இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் ஒருமைப்பாட்டுணர்வுடன் பிற மதத்தினரான வெள்ளையரை எதிர்த்துப் போராட வழிவகுத்துள்ளது கதைப்பாடல். 'மதத்தால் மக்களை ஒருமைப்படுத்துதல்' என்ற இந்த உத்தி ஒரு வகையில் பார்த்தால் கண்ணனையும் சக்தியையும் துதித்துப் பாடுவதன் மூலம் மத ஒருமைப்பாட்டை ஏற்படுத்தி, மதத்தால் இணையும் இந்தியரை அந்நியருக்கெதிராக ஏவிவிட, பாரதி கையாண்ட உத்தி போன்றது ஆகும் எனலாம்.

---

46. ''அடியாத்த மாட்டாமல் அந்தணனும் மனங்கசிந்து
ஆதரவாய் ஏதுமொழி சொல்வான்
தடியா லடித்துத்தள்ளித் தானேகள்ள னென்றுசொல்லத்
தலையில் விதியிதுவோ சிவனே'' (649-652)

7. என்கோயில் வெளியாக்கி இடித்துமதில் பொடியாக்கித்
தன் காரியங் காணவந்த சண்டாளப் பாவிகளை
நினைத்தபடி பொடியாக நீறாக எரிப்பேன் (904-906)

எனக் கோயில் இடிபட்டது கண்டதும் அம்மன் சீறி மொழியும் சொற்கள் பாரத மக்களின் உள்ளக் குமுறல்களாகும். தேசபக்திப்பாடல்களில் வெளிப்பட்டுள்ளதைப் போன்று இவை வெளிப்பட்டுள்ளன எனலாம். கோயிலிடிப்பு கண்ட தங்கள் உள்ளக் குமுறலைத் தம் வீரத்தெய்வத்தின் வாயிலாக வெளிப்படுத்தி யுள்ளனர் என்பது பொருந்தும். பாரத மக்களின் கூட்டு வெளிப்பாட்டுக் குரலாக அம்மனின் சீற்ற மொழிகள் அமைந்துள்ளன.

8. 'கோயிலை நாசப்படுத்தினர்' என்பது குறிப்பிட்ட மதத்தை அவமதித்தனர் என்ற பொருளில் மட்டும் அமைவது அன்று. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை, கலை உணர்வை, கலாசாரத்தை, கல்வியை, வேலைவாய்ப்பை, தொழில் வளத் தைச் சீர்குலைய வைத்தனர் என்பதன் அடையாளமாக அது அமையும். பண்டு தொட்டே கோயில்கள் இறைவன் குடியிருக்கும் இல்லமாக மட்டும் அமையாமல் பல்துறை வளர்ச்சி மையங்களாகச் செயல்பட்டு வந்தன. சோழர் காலத்தில் இப்போக்கு உச்சநிலையை எய்தியுள்ளது. கோயில் நாட்டின் கருவூலமாக, சரஸ்வதி பண்டாரமாக(நூலகம்), கலை வளர்ச்சிக்கூடமாக, வேலைவாய்ப்பு நிறுவனமாக, தொழில் வளர்ச்சி மையமாக, உடற்பயிற்சிக் கழகமாக, பங்கீட்டு நிலையமாக, பாதுகாப்பில்லமாக, நீதிமன்றமாகத் திகழ்ந்து வந்தமையைக் கல் வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. கோயிலை மையமாகக் கொண்டே நாட்டின் அனைத்துப் பணிகளும் இயங்கி வந்தன. சுருங்கக்கூறின் நாட்டின் முதுகெலும்பாகக் கோயில்கள் திகழ்ந்தன எனலாம்.

விக்கிரமாதித்தன் காலத்திலும் அதற்கு முன்பும்[47] இந்நிலை இருந்ததெனத் தெரிகிறது. தான் திரட்டிய திரவியத்தை மாகாளி கோயிலிலேயே பாதுகாப்பாக விக்கிரமாதித்தன் வைத்ததாகக் குறிப்பு உள்ளது.[48] இப்பொருளுக்கு ஆசைப் பட்டே கும்பினிப்படை கோயிலை இடிக்கிறது. அந்நியர்களால் நடத்தப்பட்ட பல கோயிலிடிப்புக்கள், பல கோயில்களிலிருந்து பொருட்களைக் கொள்ளை யடித்தமை போன்றவற்றின் ஒட்டு மொத்த எதிரொலியாக உச்சினி மாகாளி யம்மன் கதையில் இடம் பெறும் கோயிலிடிப்பு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முன்னர்க் குறிப்பிட்டது போல் நாட்டின் பொருளாதாரத்தை, பண்பாட்டை, கலையை, கலாசாரத்தை அந்நியர் அழித்தனர் என்ற பரந்த பொருளிலேயே அவற்றுக்கொரு தக்க சான்றாகவே இக்கோயிலிடிப்பு குறிக்கப்பட்டுள்ளது.

---

47. விக்கிரமாதித்தன் ஆட்சிக்கு வருமுன்பே மாகாளி கோயிலில் பொன் சேர்த்து வைக்கப்பட்டிருந்தது. 'அப்பொன்னைக் காண்பித்து, உன் உச்சினி மாகாளிபுரியையும் ஆள வரந் தருவாயாக' எனப் பட்டி காளியிடம் வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது (393-396).

48. ''தேடினே நவகோடி திரவியம்
தேவி கோயிலகத்திலே வைத்திட்டு
மன்னவன் முத்திசேர்ந்த பொழுதிலே'' (495-497)

9. உச்சினி மாகாளி கோயில் தொடக்கத்தில் கல், மரம் முதலியவை கொண்டு 21 வாயிலுடையதாகத் தேவர்களால் கட்டப்பட்டிருந்தது.[49] எப்பக்கத்திலிருந்தும் எளிதில் நுழையுமாறு 21 பொற்கதவுகளுடன் திறந்தவெளி அரங்கம் போன்று கட்டப்பட்டிருந்த இக்கோயில், விக்கிரமாதித்தன் காலத்தில் புதுப்பிக்கப்பட்ட பொழுது, ஏழு வாசற்கதவுகளை மட்டும் உடையதாக (21 பொற்கதவுகளைச் சுற்றிச் செல்வப் பாதுகாப்பு கருதி இவை உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது உ.த.ஆ.நி. கதைப்பிரதியால் [வரி : 254, 380] தெரிகிறது) அமைக்கப் பட்டிருந்தது. இவ்வேழு கதவுகளையும் ''சினகரக் கதவேழு'' (813) என்று கதைப்பாடல் தொடர் குறிப்பிடுகின்றது. வாயில் முகப்புகளிலும் பக்கங்களிலும் தங்கத்தாலான கோட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன[50]. இந்தத் தங்கக் கோட்டைகளையும் வாசற் கதவுகளையும் கும்பினிப்படை உடைத்துத் தூளாக்கி யதெனக் கதைப்பாடல் குறிப்பிடுகின்றது.[51] ஒரு நாட்டின் தங்கத்தை நாசப் படுத்தினர் என்பது அந்நாட்டின் பொருளாதாரத்தை அழித்தனர் என்பதைக் குறிக்கும்.

## கதைப்பிரதிகள் ஒப்பீடு:-

உச்சினிமாகாளி கதை தமிழகத்தின் தென்பகுதியில் வில்லுப்பாட்டாக மிகுதியும் பாடபட்டு வந்திருக்கிறது; ஏடுகளிலும் எழுதப்பட்டிருக்கிறது. உச்சினி மாகாளி கதைபற்றி நமக்குத் தற்போது கிடைக்கக்கூடிய சுவடிகள் தென்மாவட்டப் பகுதியைச் சேர்ந்தவையாகவே உள்ளன.

பதிப்பிக்கப் பெற்றுள்ள உச்சினி மாகாளி கதைப் பிரதி (ஆ.ஆ.நி. 46) அகஸ் தீஸ்வரம் ஆறுமுகப்பெருமாள் நாடார் எழுதியதாகச் சுவடியில் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தில் உள்ள உச்சினி மாகாளி கதை (சுவடி எண் 2) என்ற மற்றொரு சுவடியும் அகஸ்தீஸ்வரம் நாகமணி நாடார் என்பவரால் எழுதப்பட்டதாகச் சுவடியில் குறிப்பு உள்ளது. இந்நிறுவனத்தி லுள்ள உச்சினி மாகாளி நாட்டை ஆண்ட விக்கிரமபூபன் கதை (48) என்ற மற்றொரு சுவடியும் அகஸ்தீஸ்வரத்தைச் சேர்ந்ததே. ஆறுமுகப்பெருமாள் நாடார் இதனை எழுதியிருக்கிறார்.

---

49. ''கல்லடித்துச் சுவர்கட்டித் தேவிக்குக்
காட்டிலுள்ள மரங்களைத் தேடியே
சந்தனந் தேக்கு வெட்டி முறித்துமே
தானே தேவிக் கிருபத்தொரு வாயில்
இட்டுக் கோயில் திருப்பணி செய்தபின்'' (481-485)

50. முடித்து எண்டோளி கோயில் முகப்பதிலும் பக்கத்திலும்
முகனையுள்ள தங்கக் கோட்டை வைத்தார்
தங்கத்தினால் கோட்டையிட்டுத் தானேவிக்கிர மாதித்தனும்'' (405-407)

51. ''கோயிலதை வெட்டி இடித்தெடுக்கக் கூடப்போங்கடா ஆயிரம்பேர் (7211)
''கோட்டை தன்னை இடித்த பொழுதிலே'' (784)
''சினகரக் கதவேழை உடைத்திட்டுச்
செம்பொன்னைப் படிறுசெய்து போயினான்'' (813-814)

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உச்சினி மாகாளி கதை (R. 10290) என்ற ஒரு சுவடி உள்ளது. இதுவும் ஆலங்கோட்டை (நெல்லை மாவட்டம்) சுப்பய்யா நாடான் எழுதியது எனச் சுவடியிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில், சுவடியைப் பார்த்துப் பிரதி செய்த உச்சினி மாகாளி கதை கையெழுத்துப் பிரதி ஒன்று உள்ளது. இதுவும் தென்மாவட்டப் பிரதியே. இந்த ஐந்து கதைப் பிரதிகளும் ஒப்பிடப்பட்டு, இவற்றுள் உச்சினி மாகாளி கதை (ஆ.ஆ.நி. 46) பதிப்பிக்கப்பெறுகின்றது.

ஆசியவியல் ஆய்வு நிறுவன உச்சினி மாகாளி கதை (ஆ.ஆ.நி.2), சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலக உச்சினி மாகாளி கதை (செ. கீ. சு. R. 10290), உ.த.நி. யிலுள்ள கையெழுத்துப் பிரதி என்று மூன்றும் பதிப்பிக்கப் பெற்றுள்ள கதைப்பிரதியுடன் கதை ஒப்புமை உடையன. ஆனால் பாடுமுறையில் வேறுபாடுடையன.

உச்சினி மாகாளி நாட்டை ஆண்ட விக்கிரம பூபன் கதை (ஆ. ஆ. நி 48) என்பது விக்கிரமாதித்தன் கதையை மிக விரிவாகக் கூறுகிறது. பதிப்புப் பிரதியின் முற் பகுதியில் உள்ள இரணியன் கதை இதில் இடம்பெறவில்லை. பதிப்புப் பிரதி ஆசிரியரே இக்கதைப் பாடலை எழுதியுள்ளார். ஆதலின் 39 இதழ்களுடைய (காணாமல் போன இதழ்கள் தவிர) இச்சுவடியில் 30-ஆம் இதழ்வரை விக்கிர மாதித்தன் கதை விரிவுபட அமைந்திருப்பினும், 31 முதல் 39-ஆம் இதழ் வரை பதிப்புப் பிரதியில் 467-ஆம் வரியாக உள்ள "கச்சியிலே திருநடன மாடுமீசன்" என்று தொடங்கும் விருத்தம் முதலாகக் கதை முடிவுவரை வரி பிறழாமல் பதிப்புப் பிரதியில் உள்ள கதை அப்படியே எழுதப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதி பதிப்புப் பிரதியின் கதை ஒப்பீட்டுக்கு உதவவில்லை.

**உச்சினி மாகாளி கதை (ஆ. ஆ. நி.2) யுடன் ஒப்பீடு:-**

பதிப்புப் பிரதியுடன் கதையில் ஒப்புமை உடையதாயினும் ஆசிரியர் வேறாதலின் பாடுமுறையில் மாறுபாடுள்ளது.

1. பாடல் நடையால், யாப்பால், சொற்கட்டால் பதிப்புப் பிரதியினின்று இது வேறுபட்டுள்ளது.

2. சிற்சில நிகழ்ச்சி மாறுபாடுகளும் காணப்படுகின்றன. இப்பிரதியில் உச்சினி மாகாளி சிவசோதியினின்று பிறந்ததாக உள்ளது (இ. ம. 2). அதோடு குணபதி ஆற்றோரம் இருக்கும் மாகாளி விக்கிரமாதித்தனால் அறியப்படுமுன், இடையில் மகிடாசுரனை வதைத்து மீண்டதாக உள்ளது (இ. ம. 6).

3. இறுதியில் வெள்ளையரை அம்மன் மன்னித்துத் தெற்கு நோக்கிப் புறப்பட்டாள் என்பதோடு பதிப்புப்பிரதி கதையை முடித்திருக்க, இப்பிரதி தெற்குப் பகுதியி லுள்ள ஊர்களிலெல்லாம் அம்மன் எவ்வாறு அம்மை, கக்கல், கழிச்சல் போன்ற நோய்களைப் பரப்பி மக்களை அச்சுறுத்தினாள் என்றும், அதனால் மக்கள்

அம்மனுக்குக் கோயிலெடுத்துப் பூசைசெய்து வழிபட, அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டு காளி தெற்குப் பகுதி நோக்கி ஒவ்வொர் ஊராகச் சென்றுகொண்டே இருந்தாள்[53] என்றும் நீண்டு கொண்டே செல்கிறது. கதை முடிவு பெறாமலும் உள்ளது.

4. பாடுமுறையால் பதிப்புப் பிரதியினின்று இது வேறுபட்டிருப்பினும், அரிதாகச் சில வரிகள் சொல் மாறாமல் அப்படியே இப்பிரதியில் காணப்படுவதையும் அறிய இயலுகின்றது. சான்றாக பதிப்புப் பிரதியில் 593, 645, 646, 930, 931-ஆம் வரிகள் முறையே இப்பிரதியில் இ. 22, 23; இ. ம. 31-இல் அமைந்து வரி ஒப்புமை காட்டுவதைக் குறிப்பிடலாம்.

**உச்சினி மாகாளி கதை (செ. கீ. சு. R. 10290) யுடன் ஒப்பீடு :-**

கதையில் பதிப்புப் பிரதியுடன் மாறுபடாத பிரதிதான் என்றாலும் பாடல் அமைப்பு முறை, நிகழ்ச்சி விடுகை, நிகழ்ச்சி விவரிப்பு, நிகழ்ச்சி மாற்றம், சில புதிய குறிப்புக் கள் இடம் பெறல் என்பனவற்றால் இப்பிரதி வேறுபட்டுள்ளது. வேறுபாடுகள் மட்டும் கீழே தரப்படுகின்றன.

1. உச்சினி மாகாளியின் பிறப்பு பற்றிக் கூறும் இரணியன் கதை இதில் இடம் பெறவில்லை. காளி காட்டில் கோவில் கட்டி, தங்கப் பாளங்கள் வைத்துக்கொண்டு வீற்றிருந்தாள் என்ற முறையிலேயே கதைத்துவக்கம் அமைந்து நிகழ்ச்சி விடுகை யால் மாறுபட்டுள்ளது.

2. விக்கிரமாதித்தன்-பட்டி வேட்டையாடச் சென்றதாகவும், வேட்டையாடிக் களைத்த விக்கிரமாதித்தன் பட்டி மடியில் தலை வைத்துத் தூங்கியதாகவும், அவன் கனவில் காளி வந்து குத்துக்கல் விபரம் கூறினாள் என நிகழ்ச்சி மாற்றம் ஏற் பட்டுள்ளது.

3. காடுகளை அழித்து, மரங்களைத் தேர்ந்து, ஓரோர் திசை வாசற்கதவுக்கும் ஓரோர் மலை பிளந்து காளிக்குக் கோயில் அமைத்த செய்திகள் விரிவாக இடம் பெற்று நிகழ்ச்சி விவரிப்பு நேர்ந்துள்ளது..

4. காளி கோயிலில் பூசை செய்த அந்தணன் பெயர் சந்தணவாள் நம்பி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

5. காளி கொடுத்த பொற்பாளத்தை அந்தணன் வடமதுரை கொண்டு சென்று விற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

---

52. இதன் தொடர்ச்சியே -முத்தாரம்மன் கதை (கே.ப.சு. 8427) எனத் தோன்றுகிறது. காரணம் இச் சுவடியில் நோய் தந்து, ஒவ்வோர் ஊராரையும் அம்மன் ஆட்கொள்ளும் நிகழ்ச்சிகளே கதையாக அமைந்துள்ளது.

6. கோட்டைக் கதவுகளைக் கும்பினியார் பீரங்கி கொண்டு தகர்த்த விதம் விவரிக்கப்பட்டுள்ளது (இ. 28.).

7. பதிப்புப் பிரதியில் பப்புத்துரை (623) என உள்ள துரையின் பெயர் சம்புத் துரை என இதில் குறிக்கப்பட்டுள்ளது.

8. உச்சினி மாகாளி விருச்சிக மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் (ஆண்டு தெளிவாக இல்லை) உச்சினி மலை விட்டுத் தெக்கணம் நோக்கிப் புறப்பட்டதாகக் காலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

**உச்சினி மாகாளி கதை**

**(உ. த. நி. கையெழுத்துப் பிரதி)யுடன் ஒப்பீடு :-**

தேவையற்ற விவரிப்புக்களின்றி, கதைக் கருவான ''பொன்னைக் கொள்ளையிடக் கோயிலிடித்ததால் வெள்ளைப் படையை அம்மன் அழித்தாள்'' என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பதிப்புப் பிரதி போன்று கடின சொற்கள் இடையில் கலவாத எளிய சொற்களாலாகிய நடையில், தெளிந்த ஓசையுடன் இப்பிரதி அமைந்துள்ளது.

1. திருமாலை அழைத்து வரக் கருடாழ்வாரைச் சிவபெருமான் அனுப்புதலினின்று கதை தொடங்குகின்றது.

2. 'நரசிம்மம் இரணியன் உச்சியிலே கொத்த, உச்சியில் புறப்பட்ட உதிரப் பெருக்கினின்று உச்சினி மாகாளி வந்தாள்' என்று பொருத்தமுறப் பெயர்க் காரணம் கூறுகிறது.

3. அம்மன் பிறந்து கொண்ட கோலமும், சிவனிடம் என்னென்ன வரங்களைப் பெற்று வந்தாள் என்பதும் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

4. விக்கிரமாதித்தனும் பட்டியும் வேட்டையாடச் செல்ல, விக்கிரமாதித்தனுக்குத் தாகம் எடுக்க, நீர் கொணரச் சென்ற பட்டி பொய்கையருகே குத்துக் கல்லையும் அதில் எழுதப்பட்ட விவரத்தையும் அறிந்துவந்து மன்னனுக்குக் கூறியதாக அமைந்து பதிப்புப் பிரதியினின்று மாறுபடுகிறது.

5. காளிக்கு விக்கிரமாதித்தன் கோயில் வைத்த விவரம் பதிப்புப் பிரதியில் மிகச் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்க, இதில் மரம் தேர்ந்தெடுத்து வெட்டல் தொடங்கி மிக விரிவாக அமைந்துள்ளது (172-202).

6. காளி கோயிலின் 21 வாயிற் கதவுகளும் பொன்னாலானது எனப் புதிய குறிப்பு தருகிறது (214).

7. பூசை செய்ய வந்த அந்தணன் சந்தணவாள் நம்பி, அயோத்திப் பட்டணத்தான் என அவன் ஊர்ப் பெயர் கூறுகிறது (218-220).

8. அந்தணனுக்கு ஏழு பெண்மக்கள் எனப் பெண்மக்களின் எண்ணிகைக் குறிக்கிறது (224).

9. பதிப்புப் பிரதியில் கட்டப்பன்(559), பப்புத்துரை(623) என்ற இரு வெள்ளைத் துரைகளின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. பப்புத்துரை என்ற பெயர் செ. கீ. சு. பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று இதிலும் சம்புத் துரை என்றே குறிக்கப்பட்டுள்ளது (384, 401-402).

10. கோயிலையும் கோட்டையையும் மதிற்சுவர்களையும் வெள்ளையர் பீரங்கி கொண்டு தகர்த்துத் தூளாக்கிய விதத்தை விரிவாகப் பேசுகிறது (385-391).

11. பதிப்புப் பிரதியில் அந்நியர் மீதுள்ள அச்சம் காரணமாகவோ, பிறவற்றாலோ பீரங்கி வைத்துக் கோயிலைத் தகர்த்ததும் படைத்தலைவன் சம்புத் துரையைக் கொன்றதும் குறிக்கப்படவில்லை. அத்துடன் இறுதியில் "இந்தத் துரைமார் ஏழையாச்சுது" என்று அம்மன் அவர்களை மனமார மன்னித்து, அவர்கள் தந்த பலி பூசைகளை ஏற்றுக் கொண்டு தெற்குத் திசை நோக்கிப் புறப்பட்டு விட்ட தாக அமைந்துள்ளது. ஆயின் உ. த. நி. பிரதி கோயிலைப் பீரங்கிக் குண்டுகள் தகர்த்தது பற்றியும் சம்புத் துரையை அம்மன் கொன்றதையும் கொன்றுவிட்டுத் தென்திசை நோக்கிப் புறப்பட்டதையும் தெளிவாக விவரிக்கிறது. கொன்றழித்து விட்டு, 'அவனது சீமையையும் அழிக்க வரம் தருக' எனச் சிவனிடம் வரம் கேட்க அம்மன் புறப்பட்டாள் என்பது வரை கதை முடிவு பெறாமல் குறைப்பிரதியாக உ. த. நி. பிரதி உள்ளது.[53]

12. பாடுமுறையால் பதிப்புப் பிரதியினின்று மாறுபட்ட பிரதி என்றாலும் சிற்சில இடங்களில் பதிப்புப் பிரதியுடன் வரி ஒப்புமை உடையதாக இப்பிரதி உள்ளது.

**பதிப்புப்பிரதி** வரி, 619 — 620. **உ. த. நி. பிரதி**, 321 — 322.

மேலும் பதிப்புப் பிரதியில் 640 - 641, 665 - 668 என்ற வரிகளும் சொல் மாறாமல் உ. த. நி. பிரதியில் இடம் பெற்றுள்ளன.

**காலத்தால் முந்தைய பிரதி:-**

1. உச்சினி மாகாளி கதை (ஆ. ஆ. நி. 46 - பதிப்புப் பிரதி)
2. உச்சினி மாகாளி கதை (ஆ. ஆ. நி. 2)

---

53. "கோட்டை யானதையு மிடித்தானே சம்புத்துரை
கோயில்கொடி மரங்களெல்லாம் கூண்டோடே அழித்துவிட்டான்
மூலையிலே இருந்தளன்னை முற்றத்திலே நிறுத்திவிட்டான்
மேடையிலே இருந்தளன்னை வெளிதனிலே தள்ளிவிட்டான்
அம்பலத்தில் இருந்தளன்னை அடவியிலே தள்ளிவிட்டான்
அரும்பாவி சம்புத்துரை அவனுடைய பட்டாளமும்
ஆனைப்படை குதிரைப்படை அத்தனையும் கொன்றுவிட்டேன்
அவனுடைய சீமையெல்லாம் அழிக்கவரம் தாருமைய்யா" (415-422)

3. உச்சினி மாகாளி நாட்டை ஆண்ட விக்கிரம பூபன் கதை (ஆ ஆ. நி. 48)
4. உச்சினி மாகாளி கதை (செ. கீ. சு. R. 10290)
5. உ. த. நி. கையெழுத்துப் பிரதி

என்ற இந்தப் பிரதிகளை ஒப்பிட்டுப் பார்த்ததில் காலத்தால் முந்தைய பிரதி எதுவாக இருக்கலாம் என்ற எண்ணம் எழுகிறது.

இவற்றுள் பதிப்புப் பிரதியில் மட்டும் 1931-இல் சுவடியில் எழுதப்பட்டது எனக் காலம் குறிக்கப்பட்டுள்ளது. இது சுவடியைப் படி செய்த காலமாகவும் இருக்கலாம். மூலச் சுவடியின் காலம் அதற்கும் முந்தைய தாகலாம். எவ்வாறாயினும் கதைப் பொருண்மையைக் காணும்பொழுது கும்பினி ஆட்சியின் பின், வெள்ளையர் வெறுப்பு மக்களிடையே பரவி விடுதலை வேட்கை வீறுகொண்டெழுந்த கால கட்டத்தில் இக்கதைப்பாடல் கட்டப்பட்டுள்ளமை தெளிவு.

இவ்வைந்து பிரதிகளுள் கதையமைப்பு, கதைப்போக்கு, இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகள் என்பனவற்றை வைத்துப்பார்க்கும்போது கால வரிசைப்படுத்திப் பிரதிகளை அடுக்க இயலும்.

உச்சினி மாகாளி பிறப்பு பற்றிய கதை நிகழ்வுக்கு இரணியன் கதை இணைப்பு இல்லாத, நிகழ்ச்சிகளை எளிமையாக விளக்கிச் செல்கின்ற, உச்சினி மலைவிட்டு உச்சினி மாகாளி தெக்கணம் நோக்கிப் புறப்படும் காலத்தைக் குறிப்பிடுகின்ற உச்சினி மாகாளி கதை (செ. கீ. சு. R. 10290) பழமையான சுவடியாக இருக்கலாம் எனத் தெரிகிறது.

உச்சினி மாகாளி 'சிவ சோதியினின்று பிறந்தாள்' என அவள் பிறப்பு பற்றிய செய்தி இணைப்புடன் கதை தொடங்கும் உச்சினி மாகாளி கதை (ஆ.ஆ.நி. 2) காலத்தால் அடுத்த நிலையுடையதாக இருத்தல் கூடும்.

'உச்சினி மாகாளி இரணியனின் தலை உச்சியிலிருந்து பிறந்தாள்' எனப் பெயர்க் காரணம் கூறி, அதற்காக இரணியன் வதை பற்றிய கதையையும் இணைத்து, எளிய முறையில் எளிய சொற்களில் நிகழ்ச்சிகளைப் பின்னிச்செல்லும் உ.த.நி. பிரதி அதற்கும் அடுத்த காலகட்டத்தில் உருவான கதைப்பாடலாக இருத்தல் வேண்டும்.

இரணியன் வதையை விரிவாகவும் விக்கிரமாதித்தன் கதையை விரிவுபடவும் அம்மன் வெள்ளையரை ஆட்கொண்ட விதம் பற்றி விளக்கமாகவும் கூறும் பதிப்புப் பிரதி நான்காம் இடம் வகிக்கும்.

மிகப் பிற்காலச் சுவடியாக உச்சினி மாகாளி நாட்டை ஆண்ட விக்கிரமபூபன் கதை (ஆ.ஆ.நி.48) என்ற சுவடியிலுள்ள கதையைக் கூறலாம். இதில் உச்சினி மாகாளி கதையில் இடம்பெறும் இரணியன் கதை, விக்கிரமாதித்தன் கதை, அந்தணன்-கும்பினியார் தொடர்புடைய கதை என்ற முக்கூட்டுக் கதையில் விக்கிரமாதித்தன்

கதை தனியொரு கதையாக மிக விரிவுபட அமைந்து ஒரு கதைப்பாடல் பல கதைப்பாடல்களாக விரியும் நிலைக்கு வளர்ச்சி பெற்றுள்ளமையின் இறுதிநிலையில் அமைக்கலாம்.

குறிப்பிட்ட ஒரு கதைப்பாடலைப் பதிப்புக்கு எடுத்துக் கொள்ளும்போது காலத்தால் பிந்தைய, கதை முழுமையும் வளர்ச்சி பெற்று, நிகழ்ச்சிகள் அனைத்தையும் கூறுகின்ற சுவடிப்பிரதியை எடுத்துக்கொண்டு நன்கு பகுத்துப் பார்க்கும்போது அப்பிரதியின் காலத்திற்கு முற்பட்ட பிரதிகளை எளிதில் அடையாளம் காண இயலும். அண்மைக்காலத்திலிருந்து படிப்படியாகச் சென்று சேய்மைக் காலத்தை யும், அக்காலத்தில் தோன்றிய மூலச் சுவடியையும் அறிதல் மூலபாட ஆய்வியலில் உள்ள ஓர் எளிய அணுகு முறையாகும். காலத்தால் பிற்பட்ட உச்சினி மாகாளி கதைச் சுவடியைப் பதிப்புக்கு எடுத்துக் கொண்டதால் இவ்வணுகுமுறையின் எளிமையை அனுபவபூர்வமாக உணர வாய்ப்பேற்பட்டது.

**சில கருத்துக்கள் :-**

1. மக்கள் மத்தியில் வில்லுப்பாட்டாகப் பாடப்பட்டு வந்த பாடலாக இருப்பினும் எளிய மக்களுக்கு விளங்காத கடின சொற்கள் பலவற்றை இப்பாடலில் பார்க்க இயலுகிறது.

அல், எல் (2); குறங்கு, உகிர் (4); உவணன் (54), இலேகர் (60) சினகரம் (97) சுவலை (213), சிலோச்சயம் (327), ஓணம் (338), பைதிரம்(375), இவுளி(691), இடவை (701), சந்திரம் (707), தமனியம் (724), நிகளம் (728), சேதிமம் (740), சிறுங்கலை (756), எறும்பி (782) போன்ற சொற்கள் இடம்பெறுவதைச் சான்றாகக் கூறலாம்.

இத்தகு கடின சொற்களை வில்லுப்பாட்டு வடிவில் இருந்த கதைப் பாடலைச் சுவடியில் எழுதும்பொழுது தன் புலமையை வெளிகாட்டும் விதத்தில் ஆசிரியர் புகுத்தி எழுதியிருத்தல் வேண்டும் எனத் தெரிகின்றது. இக்கடின சொற்களில் பல வடசொற்கள் என்பதனால் ஆசிரியர் வடமொழிப் புலமை பெற்றவராக இருந்திருத் தல் வேண்டும் என்றும் அறிய முடிகின்றது.

எளிய நாட்டுப்புற யாப்பில் இயற்றியிருப்பினும், மரபு வழிப்பட்ட யாப்புக்கும் முக்கியத்துவம் அளித்து 8 விருத்தப்பாக்களையும் இடையிடையே அமைத்து இலக்கியச் சிறப்பு ஊட்டியுள்ளார். அத்துடன் நாட்டுப்புற மெட்டில் எளிய பல சந்தங்களை ஆண்டு இனிமை சேர்த்துள்ளார்.

2. நாஞ்சில் நாட்டுச் சுவடியாதலின் அரசிமூடு (210) எழுத்தோதணம் (109) விட்டிளகியே (193) சத்திப்பு (Vomitting - 825) என்ற நாஞ்சில் நாட்டு வழக்குச் சொற்களும் கிஸ்தி (கிஸ்த் என்ற உருதுச் சொல் - 384) கஷேரி போன்ற பிற்காலச் சொற்களும் இடம் பெற்றுள்ளன.

3. உஜ்ஜையினியில் உள்ள உஜ்ஜையினி மாகாளி எவ்வாறு தென்திசைக்கு வந்தாள் என 'வரத்து' பற்றிக் கூற எழுந்த இக்கதைப்பாடல் சமுதாய உணர்வுடன் வெள்ளையர் உஜ்ஜையினியில் இருந்த அவள் கோயிலையெல்லாம் இடித்து விட்டதால்தான் அம்மன் தென்திசை நோக்கி வந்தாள் என அமைந்து, வெள்ளையர் வெறுப்பைத் தூண்டிவிடும் நோக்குடையதாக மலர்ந்திருக்கிறது.

4. கும்பினியார் ஆட்சி பற்றியும் அட்டூழியங்கள் பற்றியும் அவர்கள் காலத்தில் நடைபெற்ற போர்கள் பற்றியும் கூறுகின்ற பல வரலாற்றுக் கதைப் பாடல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆயின் இதுவரை கிடைத்துள்ள தெய்வீகக் கதைப்பாடல்களுள் 'வெள்ளையர் வெறுப்பைத் தூண்டிவிடல்' என்ற நோக்கத்தை உள்ளடக்கியதாகக் கிடைத்த முதல் தெய்வக் கதைப்பாடலாக இவ்வுச்சினி மாகாளி கதைப்பாடல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

5. நாட்டுப்புறக் கதைப்பாடல்களும் இந்திய விடுதலைக்குத் தம் பங்கை எவ்வளவு சிறப்புற ஆற்றியுள்ளன என்பதற்கொரு தக்க எடுத்துக் காட்டாக இக்கதைப் பாடல் திகழ்கின்றது.

6. கிராமங்களை அதிகம் பெற்றுள்ள இந்தியாவில் கிராம மக்களை விழிப்படையச் செய்து விடுதலை வேட்கையைத் தூண்ட, நாட்டுபுறக் கலைஞர்கள் நாட்டுப்புறக் கலைகளின் உதவியை நாடியிருக்கின்றனர். இந்நிலையில் நாட்டார் இலக்கியம் சமுதாய மாற்றத்தைக் கொண்டுவர உதவும் ஆற்றல்மிக்க போர்க்கருவியாகப் பயன் பட்டுள்ளது.

**குறுக்குளாஞ்சி கதை:- VI**

இக்கதைப்பாடலை இயற்றிய ஆசிரியர் பெயர், அவரது ஊர்ப் பெயர், இயற்றப் பட்ட காலம் போன்ற எக்குறிப்புக்களையும் அறிய இயலவில்லை. ஆயின் குஞ்சிக் குழந்தை (609) இரிங்களிங்கே (380) போன்ற வழக்குகள் இக்கதைப் பாடலில் ஆளப்பட்டுள்ளதால் இது நாஞ்சில் நாட்டுச்சுவடி எனத் தெரிகிறது. இச்சுவடி காலத்தால் பழமையானதாகத் தோன்றுகிறது. நாட்டுப்புறக் கதைப் பாடல் களுக்கே உரிய இசையில் பேச்சு வழக்குச் சொற்கள் இயைந்து இக்கதைப்பாடல் ஆக்கப்பட்டுள்ளது. சில கதைப்பாடல்களில் இடையிடையே காணப்படும் விருத்தம், வெண்பா போன்ற மரபு வழியாப்பிலமைந்த எந்தப்பாடல்களையும் இக்கதைப்பாடலில் காண இயலவில்லை. நாட்டுப்புற இசையமைப்பில், எளிய சொற்களில், வாய்மொழித்தன்மை மிக்குடையதாக இது இயற்றப் பட்டுள்ளது. வாய்மொழித்தன்மை மிகுதியும் கொண்டது என்பதற்குச் சான்றாக 'நல்ல' என்பது பொருளற்ற சொல்லாகப் பல இடங்களில் (459, 478, 499, 500) "சொன்னானே பெரும்புலையன் துஷ்ட நல்ல தெய்வ மென்று" (478) என்பது போன்று ஓசை ஒன்று மட்டுமே கருதிப் பயன்படுத்தப் பட்டுள்ளமையினைக் குறிப்பிடலாம். கதை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களான காஞ்சிபுரம், கொட்டாரக்கரை, கோபால சமுத்திரம் போன்ற இடங்களிலும் இக் கதைப்பாடல் வழக்கிலுள்ளதாகத் தெரியவில்லை.

இக்கதைப்பாடலில் திருச்சியின் பழைய பெயரான திருச்சிராப்பள்ளி என்ற சொல் 'திருச்சினாப்பள்ளி' (319) என இயம்பப் பெற்றுள்ளது. இத்தகு பெயர் மாற்றம் கம்பெனி ஆட்சியின் பின்னர் ஏற்பட்டதாகும். பிற்காலத்தில் தமிழில் வழக்கில் வந்த ராணுவம் (454) என்ற சொல்லும் ஆசர் (ஆஜர் - 282) என்ற உருதுச் சொல்லும் கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளது. இவற்றால் இக்கதைப்பாடலில், மூலம் (original) காலத்தால் முற்பட்டதாக இருந்திருப்பினும், குறிப்பிட்ட இக் கதைப்பாடற்பிரதி ஐரோப்பியர் வருகையின் பின்னரே, அதாவது கி.பி. 16-ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே எழுதப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

**கதைச்சுருக்கம்:-**

காஞ்சிபுரத்தில் வாழும் இராமசாஸ்திரி என்பாருக்கு ஏழு ஆண்மக்களும் தவம் செய்து பிறந்த பூரணவல்லி என்ற ஒரு மகளும் இருக்கின்றனர். அருமையாகப் பிறந்த பூரணவல்லியை ஆபரணங்கள் பூட்டி, ஆடைகள் அணிவித்து, ஏழறைக்குள் வைத்துத் தாயும் தந்தையும் ஏழு அண்ணன்மாரும் சீரும் சிறப்புமாக வளர்க்கின்றனர்.

அவளுக்கு வயது ஐந்து ஆகின்றது. அச்சமயத்தில் அதே ஊரின் தென்மேற்குப் பகுதியில் வாழ்ந்துவரும் முதலிமார் இனத்தில் தோன்றிய தூண்டிமுத்து என்பான் ஏழுவயதில் பெற்றோர் உற்றாரை இழந்து, ஆதரிப்பார் யாருமின்றி அநாதையாக சாஸ்திரியார் வீட்டின் முன் வந்து நிற்கின்றான். அவனது நிலையறிந்து இரக்கப் பட்டும் அவன் முகப்பொலிவால் கவரப்பட்டும் தன்பிள்ளை போல் அவனை வளர்த்துப் படிக்கவைத்து வருகிறார் இராமசாஸ்திரி. படித்து முடித்த அவனிடம் தன் பண்ணையை மேற்பார்க்கும் பணியை அவர் ஒப்படைக்கிறார். மந்திரத்தில் நாட்டம் கொண்ட தூண்டிமுத்து மாயசித்து, காயசித்து, பெண்வசியம் போன்ற பல வித்தைகளையும் கற்றுத் தேர்கிறான். வயது பதினாறு ஆக, மன்மதன் போன்ற உருவப்பொலிவுடன் அவன் திகழ்கிறான்.

அப்பொழுது பன்னிரண்டு வயது நிரம்பிய பூரணவல்லி பூப்பெய்துகிறாள். தாய், தந்தையர் பட்டும் பதக்கமும் அவளுக்கு அணிவித்து அழகு பார்த்து ஆனந்தப் படுகின்றனர். அவளழகில் மயங்குகிறான் தூண்டிமுத்து.

'தாய், தந்தை, தங்கையைப் பார்த்துக்கொள்' என்று குடும்பப் பொறுப்பைத் தூண்டிமுத்துவிடம் ஒப்படைத்துப் பூரணவல்லியின் அண்ணன்மார் அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளை தேடிக் காசிக்குப் புறப்பட்டுப் போனவுடன், பெற்றோருக்குத் தெரியாமல் தூண்டிமுத்து மாயப்பொடி கொண்டு பூரணவல்லியை மயக்க, கணவன் மனைவி போன்று இருவரும் வாழ்ந்து வருகின்றனர்.

இதன் விளைவாகப் பூரணவல்லி கருவுருகிறாள். கருவுற்றமை அறிந்ததும் இச் செய்தியைத் தாய், தந்தை, அண்ணன்மார் ஆகியோர் அறிந்தால் என்ன செய்வார் களோ என அஞ்சுகிறாள், சாகத் துணிகிறாள், முதலியைச் சாடுகிறாள். இறுதியில் தூண்டிமுத்து முதலியின் எண்ணப்படி இருவரும் யாரும் அறியாமல் மலையாள தேசத்துக்குப் புறப்பட்டுச் சென்று விடுகின்றனர்.

காசிக்குச் சென்ற அண்ணன்மார் தகுந்த வரனைப் பேசி முடித்துவிட்டு ஊர் வருகின்றனர். மகளின் செயலாலும் பிரிவாலும் ஏக்கமுற்றுத் தாய், தந்தை இருவரும் உணவு அருந்தாது சாகக் கிடக்கின்றனர். மகளைக் கடத்திக் கொண்டு சென்ற தூண்டிமுத்து முதலியைத் தூண்டியில் போட வேண்டும் என்று தம் ஆண் மக்களுக்கு ஆணையிட்டுப் பெற்றோர் உயிர் துறக்கின்றனர். அண்ணன்மார் எழுவரும் பெற்றோர் ஆணையை நிறைவேற்றத் தூண்டிமுத்து முதலியையும் தங்கையையும் தேடிப் புறப்படுகின்றனர்.

மலையாள தேசம் சென்ற தூண்டிமுத்துவும் பூரணவல்லியும் கொட்டாரக் கரையில், செட்டிமார் தெருவில் தங்கி, செட்டிகள் போல் நடை, உடை, பாவனைகளை மாற்றி மாறுவேடத்தில் வாழ்கின்றனர். கொட்டாரக்கரை அரசனிடம் சென்று தூண்டிமுத்து வேலை கேட்கிறான். அவன் தகுதிக்குரிய வேலை இல்லையாதலால் மன்னரும் 'சிறிது காலம் காத்திரு, தருகிறேன்' என்கிறார். தூண்டிமுத்துவும் காத்திருக்கிறான்.

அதே கொட்டாரக்கரைக்குப் பூரணவல்லியின் அண்ணன்மார் வருகின்றனர். தண்ணீர் எடுக்க வந்த தங்கையின் சேலையை அடையாளம் கண்டு, அவள் பின்னே சென்று அவர்கள் குடியிருப்பை அறிந்து, தூண்டிமுத்துவையும் அவளையும் கைப்பிடியாகப் பிடிக்கின்றனர். அண்ணன்மார் அரசனிடம் தூண்டிமுத்துவைத் தூண்டியிலிட ஆணையிடக் கேட்கின்றனர். தூண்டிமுத்து, பூரணவல்லி இவர்கள் மீது இரக்கமுற்ற அரசர் அண்ணன்மார்களிடம் 'தக்க பதவியும், ஊர்களும் அளிக்கிறேன், கணவன் மனைவியாக வாழ்ந்துவிட்ட அவர்களை அவ்வாறே வாழவிட்டு விடுங்கள்' என வேண்டுகிறார். ஆனால் தூண்டிமுத்துவைக் கொல்ல ஆணையிடாவிடின் வாளூன்றி மாளுவோம் என அண்ணன்மார் கூற, அவர்களின் உறுதி கண்ட மன்னர், 'உங்கள் விருப்பப்படி செய்க' என்று கூறி அமைகின்றார். அண்ணன்மார் தூண்டிமுத்துவைத் தூண்டியிலிடுகின்றனர். தங்கையையும் அவள் புலம்பப் புலம்ப வெட்டிக் கொல்கின்றனர். இளைய அண்ணன் அவளை வெட்டும்போது உச்சியில் விழுந்த வெட்டினால், அவள் குறுக்கிலிருந்து 'குறுக்குளாஞ்சி' என்ற தேவதை வெடித்து வெளி வருகிறது.

அது அண்ணன்மாரைக் குத்திக் கொன்றுவிட்டு, கொல்ல ஆணை தந்த அரசனின் அரண்மனையையும் தூளாக்கி ஊரில் பல அட்டூழியங்கள் செய்கிறது. இதைக் கண்ட அரசனும் ஊராரும், மந்திரவாதிகளுள் சிறந்த காளிப்புலையனை அத் தேவதையை அடக்கக் கோருகின்றனர். அவன் தன் மந்திரத்தால் அடக்க முயலும் போது அவனையும் கொன்று குரவையிடுகிறது குறுக்குளாஞ்சி.

செய்வதறியாது அரசன் கையற்று இருக்கும் போது பகவதியம்மன் தோன்றி குறுக்குளாஞ்சிக்குக் கோயில் கட்டிச் செம்பால் சிலை செய்து வணங்க வேண்டும் என்று கூறுகிறாள். அதோடு குறுக்குளாஞ்சியை ஏழு கடாரத்திரவியத்தைக் காக்கும் காவல் தேவதையாக வைத்துக் கொள்கிறாள்.

குறுக்குளாஞ்சி அகத்தியரைக் கண்டு வணங்கிவரப் புறப்படுகிறது. அகத்தியர் பல வரங்கள் தர அவற்றையும் பெற்றுக்கொண்டு அவரை வழிபட்டு மீண்டு, சொரிமுத்தைய்யன் கோயிலில் ஆளடிமை தேடிக் கொண்டு காத்திருக்கிறது. அப்போது சொரிமுத்தைய்யனை வழிபட, கோபால சமுத்திரத்திலிருந்து மெய்யப்ப பிள்ளை என்பவர் வருகிறார். வழிபாடுகளை முடித்துவிட்டு அவர் தன் ஊருக்குத் திரும்பிச்செல்லும் பொழுது, அவருடனேயே சென்ற குறுக்குளாஞ்சி அவ்வூரில் தன் வருகையை உணர்த்தும் விதத்தில் பல தீச்செயல்களை நடத்து கின்றது.

ஊரார் கூடிக் குறிகேட்டு, நடக்கும் தீய காரியங்களுக்குக் காரணம் குறுக் குளாஞ்சியே என அறிந்து, தலைமுறை தலைமுறையாகத் தங்களைக் காத்து வரவேண்டும் என்று குறுக்குளாஞ்சியை வேண்டிக் கொண்டு அத்தெய்வத்துக்குப் பீடம் அமைத்து, கொடை நடத்தி, வழிபாடு செய்து வருகின்றனர்.

**கதையமைப்பும் கதைப்பாடல் மரபும்:-**

கதை நிகழ்ச்சிகள் எவ்விடத்திலும் முன்பின் முரண்பாடின்றிச் சீரான போக்கில் அமைக்கப்பட்டுள்ளன. கதையோட்டம் படிப்பவர் மனத்தில் தெளிவாகப் பதியும் வண்ணம், எளிய முறையில் நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன.

கதைப்பாடல் மரபொட்டிப் பல நிகழ்ச்சிகள் இப்படைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. ஆயின் இவை எவ்விதத்திலும் கதையமைப்பிற்குத் தடையாயிராமல் கதைக்கு மேலும் சிறப்புத்தந்து வலுவூட்டுவனவாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டுவளம் கூறல் கதைப்பாடல் மரபுகளுள் ஒன்று. நாட்டுவளம் கூறலோடு அமையும் கதைப்பாடல்கள் காலத்தால் பழமையன எனலாம். இராமசாஸ்திரி வாழ்ந்த நாடான காஞ்சீபுரத்தின் வளம் கூறலோடு இக்கதைப்பாடல் தொடங்கு கிறது. 1 முதல் 7 வரிகளில் 'கதிரொழக்கு நெல் விளையும்' காஞ்சீபுர நாட்டின் வளம் பேசப்படுகிறது. குறுக்குளாஞ்சி தெய்வம் மெய்யப்பபிள்ளையுடன் கோபால சமுத்திரம் சென்றது எனக்கூறும் பொழுது, கோபால சமுத்திர நாட்டின் வளமும் சிறப்பிக்கப்படுகிறது (603-606).

தாய், தந்தையர் குழவி வேண்டித் தவம் செய்தலும் குழவி பிறக்கின்றமையும் அதனைப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கின்றமையும் கதைப்பாடல்களில் மரபாகப் பின்பற்றப்பட்டுள்ளமையைக் காண இயலும். இக்கதைப்பாடலிலும் கதைத் தலைவியான பூரணவல்லியைத் தவமிருந்து பெற்றமையும் ஏழு ஆண்மக்களை அடுத்து அருமையாகப் பிறந்த அவளை வளர்த்த சிறப்பும் 25 முதல் 48 வரிகள் வரை விவரிக்கப்பட்டுள்ளன.

கதைப்பாடலில் 'ஏழு பிள்ளைகள் இருந்தனர்' எனக் கூறுவதையும் கதைப் பாடல் தலைவனாக, தலைவியாக அமைபவர் ஏழு பேரில் ஏழாவதாக உள்ள இளையவராகவோ அல்லது ஏழு அண்ணன்மாரை உடையவராகவோ இருந் தனர் எனக் கூறுவதையும் ஒரு மரபாகவே ஆண்டனரோ என எண்ணத்

தோன்றுமளவுக்குப் பல கதைப்பாடல்களிலும் இவ்வமைப்பைப் பார்க்க முடிகின்றது.

நல்லதங்காள் கதையில் நல்லதங்காளுக்கு ஏழு பிள்ளைகள் எனக் கூறப்பட்டுள்ளது. முத்துப்பட்டன் கதையில் (கே.ப.சு. 8018) முத்துப்பட்டன் எழுவருள் இளையவனாகக் கூறப்படுகின்றான்.

தடிவீரன் அல்லது மந்திரமூர்த்தி கதையில் (கே.ப.சு. 8440) கதைத்தலைவி சோணைமுத்து ஏழு அண்ணன்மாருக்கு இளையவள் எனக்கூறப்படுகிறாள். இவை போன்றே இக்கதைப்பாடலிலும் கதைத்தலைவி பூரணவல்லி ஏழு அண்ணன்மாருக்கும் இளையாளாக, அருமந்த மகளாகப் பிறந்தாள் என இயம்பப் பெற்றுள்ளது.

அருமையாய்ப் பிறந்த குழந்தைக்கு எவ்விதம் கல்வி, மந்திரம் மற்றும் வீரப்பயிற்சிகள் அளித்தார்கள் எனக் கூறலும் கதைப்பாடல் மரபு. இங்கு பிறந்த மகவு பெண்மகவாதலின் இம்மரபினை ஆள வேண்டிய தேவையில்லாமல் போகிறது. ஆயின் இம்மரபினை ஆள இயலாக்குறை இராமசாஸ்திரி தன் பிள்ளையாகக் கருதி வளர்த்த தூண்டிமுத்து முதலியைக் கல்வி கற்க வைத்தார் எனக் கூறல் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது (84-89).

கணக்கு போன்ற படிப்பினை எல்லாம் கற்றுத் தேர்ந்த தூண்டிமுத்து மந்திர வித்தைகளிலும் நாட்டம் கொண்டு அனைத்து மந்திரப்பயிற்சிகளிலும் தேர்ச்சி பெறுகிறான் (97-99). மந்திரங்கொண்டு அவன் செய்த சித்து வேலைகள் விவரிக்கப்பட்டுள்ளன (100-106).

> ஓரலைப் பறக்க வைப்பார் ஒன்பது காதவழி
> சுளகைப் பறக்க வைப்பார் தொண்ணுற்றுக் காதவழி
> மூலையிலே இருந்த பெண்ணை முத்தத்திலே வரவழைப்பார்
> அறையிலே இருந்த பெண்ணை அம்பலத்தில் வரவழைப்பார்
> வாழுகிற பெண்களையும் வாழவொட்டாமல் செய்வார் (101-105)

என அமைகின்றமையை இதற்குச் சான்று காட்டலாம்.

கதைப்பாடலில் வரும் கதைத்தலைவன் மந்திரத்தில் வல்லவன் எனக் காட்டும் போது மந்திர எழுத்துக்கள் கொண்ட ஆடையையோ, மந்திர எழுத்துக்கள் பொறித்த சக்கரங்கள் கொண்ட ஆடையையோ அவன் அணிந்ததாகக் காட்டலைப் பல கதைப்பாடல்களிலும் காண முடிகின்றது.

> முன்னேநின்ற தொங்கலிலே மோககன்னி அச்சரமும்
> பின்னிருந்த தொங்கலிலே பிரமதேவர் அச்சரமும்
> பூச்சிநாயுங் கைப்பிடித்துப் புறப்பட்டானே பட்டருமே (இ. 18)

என முத்துப்பட்டன் கதையிலும் (கே.ப.சு. 8018)

முன்புறத்துச் சுங்கிலிலே மூர்த்தியுட அட்சரமாம்
பின்புறத்துச் சுங்கிலிலே பெருமாளுட அட்சரமாம்
இடதுபுறச் சுங்கிலிலே ஏமனுட அட்சரமாம் (இ. 21)

எனச் சின்னத்தம்பி கதையிலும் (கே.ப.சு. 11613) அமைவதனைச் சான்று காட்டலாம். இவை போன்றே இக்கதைப்பாடலிலும் தூண்டிமுத்து முதலி தன் ஆடையில் மந்திரச் சக்கரங்களை முடிந்து வைத்திருந்தான் என விவரிக்கப் பட்டுள்ளது (107-110).

அடுத்து வர இருக்கின்ற நன்மை தீமையைச் சகுனங்கள் உணர்த்தும் என்பது மக்கள் நம்பிக்கையாக இருந்திருக்கிறது. கதைப்பாடல்களில் இத்தகு சகுனங்களை ஆளுவதை ஒரு மரபாகவே கொண்டிருக்கின்றனர். தீச்சகுனங்கள் அடுத்து அவர்களுக்குத் தீமை நிகழப்போகின்றது என்பதனை உணர்த்துமுகமாக அமையும்.

முத்துப்பட்டன் புறப்படும் பொழுது பல தீச்சகுணங்கள் நிகழ்கின்றன.

பூனை குறுக்காச்சு புதுப்பானை முன்னாச்சு
ஓரி குறுக்காச்சு ஒற்றைப் பாப்பான் எதிரானான்[54]

இவற்றையெல்லாம் கருத்திற்கொள்ளாது புறப்பட்டுச் சென்ற முத்துப்பட்டன் உயிர் துறக்கிறான்.

இசக்கி கதையில் (கே.ப.சு. 8019) ஆனந்தன் செட்டி புறப்படும் பொழுதும் பல தீச்சகுனங்கள் நிகழ்ந்தன எனச் சொல்லப்பட்டுள்ளது (இ.11). இவற்றை மீறிச் சென்ற ஆனந்தன் இசக்கியால் கொல்லப்படுகிறான்.

இவ்வாறு சகுனங்களை அமைக்கும் அமைப்பு மக்களின் சகுன நம்பிக்கையை வெளிப்படுத்துவதுடனன்றிக் கதையில் அடுத்து ஏதோ ஒரு நிகழ்ச்சி தொடர் புடையாருக்கு நிகழப்போகிறது என்பதைக் கதையைக் கேட்பவர், படிப்பவருக்கு உணர்த்தி, கதை கேட்கும் ஆவலைத்தூண்டும் ஒரு கருவியாகச் செயல்படுகிறது எனலாம்.

குறுக்குளாஞ்சி கதையிலும் அண்ணன்மார் ஏழுபேரும் தங்கைக்கு மாப்பிள்ளை தேடிக் காசிக்குப் புறப்படும் போது தீச்சகுனங்கள் உண்டாகியதாகக் காணப்படு கின்றமை கதைப்பாடல் மரபொட்டி அமைந்த அமைப்பாகும்.

பிறப்படும்போ பிறப்படும்போ பூனைவந்து குறுக்கிடுமாம்
கரும்பூச்சை குறுக்கிடுதே காகம்வந்து கட்டுதேடா

அந்தச் சகுனமும் பாராமல் ஏழுபேரும் போய் விட்டார்கள் (170-172) என உள்ளது. இவர்கள் சகுனத்தடையை மீறிக் காசிப் பயணத்தை மேற்கொள்ளு

54. முத்துப்பட்டன் கதை (கே.ப.சு. 8018) இ.3.

கின்றனர். ஆனால் யாருக்கு மாப்பிள்ளை தேடிப் போனார்களோ அந்த அருமைத் தங்கை மணமாகாமலே கருவுறும் அவலமும் இதனால் வீட்டை விட்டே வேறு தேசத்துக்குக் கருவுறக் காரணமானவனுடன் ஓடிவிடும் தீய நிகழ்ச்சியும் இதன் பொருட்டு உடன்பிறந்த அண்ணன்மாராலேயே வெட்டப்பட்டு இறக்கும் கோரக் கொடுமையும் நடைபெறுகின்றன.

பயணம்பற்றிக் கூறலும் பயணத்தின் பொழுது கடந்த ஊர்ப்பெயர்களை அடுக்கிக் கூறுதலும் கதைப்பாடல் மரபுள் ஒன்றாகும். சகுனங்கள், கனவுகள், பயணங்கள் இடம்பெறல் காவிய மரபுமாகும்.

சமுதாயக்கதைப் பாடல்களில் பயணங்களையும் பயணத்தின் பொழுது கடந்த ஊர்ப் பெயர்களையும் விவரித்தல் பல நிலைகளில் வெளிப்பட்டுள்ளது. ஒரு செய்தி சொல்ல ஓட்டன் ஓர் ஊரிலிருந்து வேறோர் ஊருக்குச் செல்லும் பொழுது இடைப்பட்ட பல ஊர்களைக் கடந்து சென்றான் என்ற முறையில் அமைவது ஒருவகை. இதற்குச் சான்றாக, சின்னத்தம்பி கதை (கே.ப.சு. 11613) லக்ஷ்மியம்மன் தவநிலை (உ.த.நி.சு) போன்றவற்றைக் காட்டலாம். ஊர்விட்டு ஊர் காதலாயின், காதலனை அல்லது காதலியைத் தேடிச் செல்பவர் இடைப்பட்ட பல ஊர்களைக் கடந்து வரலாக அமைவது மற்றோர் நிலை. இதற்குச் சான்றாக தடிவீரன் கதை (கே.ப.சு. 8440) அமைகின்றது. ஓர் ஊருக்குப் பயணம் சென்று திரும்பிய பின், அவ்வூரில் எதனையாவது மறந்து விட்டு வந்திருந்தால் திரும்பவும் அவ்வூர் சென்று அதனைக் கொண்டு வருதலாக அமையும் அமைப்பில் இடையில் பல இடங்களைக் கடந்து சென்றதாக ஊர்ப் பெயர்களை அடுக்குதல் இன்னொரு முறை. வேறோரிடத்தில் இறந்த கதைத் தலைவன் அல்லது கதைத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு அவர்தம் பெற்றோர், மற்றும் நெருங்கியோர் இறந்தவர் இடம் தேடி வருவதாகக் கூறும் பகுதியில் ஊர்ப்பெயர்கள், இடப்பெயர்கள் பட்டியலிட்டுக் கூறப்படுதலும் உண்டு. இதற்குச் சான்றாக சின்னத்தம்பி கதை (11613), பொன்னிறத்தாள் கதை[55] ஆகியன அமைகின்றன. கையற்றநிலையில் உற்றார் உதவியைத் தேடிப் பல இடங்களையும் கடந்து வந்தார்கள் எனச் சோகத்தை மிகுவிக்கும் நோக்குடன் இடப்பெயர்கள் இணைக்கப்படலுமுண்டு. நல்லதங்காள் கதை இதற்குத்தக்கச் சான்றாக அமைகிறது.

உற்றவரைக் கண்டுபிடிக்கும் நோக்கில் தேடி வரும்போது பல ஊர்களையும் கடந்து வந்தனர் எனக் கூறும் நிலையில் பயணம் பற்றிய கதைப்பாடல் மரபினை அமைத்தல் இக்குறுக்குளாஞ்சி கதைப்பாடலில் உள்ளது. அண்ணன்மார் தங்கை பூரணவல்லியையும் தூண்டிமுத்து முதலியையும் தேடிப்பல ஊர்களையும் கடந்து மலையாளம் வந்ததாக விவரிக்கப்பட்டுள்ளது(317-326).

மலையாளம் சென்று பிழைப்பதற்காகப் பூரணவல்லியும் தூண்டிமுத்து முதலியும் காஞ்சிபுரத்தினின்று இடைப்பட்ட ஊர்களையெல்லாம் கடந்து வந்தனர் என்று

55. சூரநாட்டுக் குஞ்சன்பிள்ளை (ப.ஆ.) op. cit.

கூறும்பகுதிகளில் பயணம் செய்தல், ஊர்ப்பெயர் அடுக்கல் என்ற கதைப்பாடல் மரபு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. (238-261) இடையிடையே அவர்கள் தீர்த் தங்களில் நீராடியும் திருத்தலங்களைத் தரிசித்தும் சென்றமை விவரிக்கப்படுகிறது (241-250).

குழவி வரம் வேண்டிக் குறிப்பிட்ட தலம் [செல்லுமுன் இடையில் உள்ள பல தலங்களையும் தரிசித்துக் கொண்டும் தீர்த்தங்களில் நீராடிக்கொண்டும் சென்றனர் எனக் கூறும்வகையில் இத்தகு கதைப்பாடல் மரபு அமைக்கப்படுவதைப் பல கதைப்பாடல்களிலும் பார்க்க இயலும். இதற்குச் சான்று சிதம்பர நாடார் கதை.[56]

பாதித்தூக்கத்தில் கதைத்தலைவனைக் கைப்பற்றுதல் என்ற அமைப்பைப் பல கதைப்பாடல்களிலும் காணமுடிகின்றது. இவ்வமைப்பையும் ஒரு மரபாக ஆண்ட னரோ என எண்ணத் தோன்கிறது. கதைத்தலைவனின் வீரம், மந்திரப் பயிற்சி என்பனவற்றுக்கு அஞ்சிய கோழைகளான எதிரிகள் அவனைத் தூங்கும்பொழுது தந்திரமாகப் பிடித்தனர் என்று கூறுவதால் கதைத் தலைவனின் சிறப்பினையும் பெருமையினையும் மேலும் உயர்வடையச் செய்யும் ஓர் உத்தியாகவும் இது பயன் படுத்தப்படுகிறது எனலாம்.

கட்டபொம்மன் கதையில் வீரபாண்டியக் கட்டபொம்மனை எதிரிகள் தூங்கும் வேளையிலேயே கைப்பற்றியதாக அமைந்துள்ளது. மந்திரமூர்த்தி அல்லது தடி வீரன் கதையில் (கே. ப. சு. 8440) மந்திரமூர்த்தி தன் மனைவி சாதிப்பிள்ளையை இடப்புறமும் காதலி சோணைமுத்துவை வலது புறமாகவும் வைத்துத் துயில்கின்ற பொழுதே, செந்நெல் கசக்கித் திருடிச் சுமந்து கொண்டு வந்த கொண்டையங் கோட்டை மறவர்கள், மந்திரமூர்த்தி விளக்கொளி கண்டு பகைவருக்குக் காட்டிக் கொடுக்க, அவர்கள் மந்திர மூர்த்தியைத் தூக்கத்தில் வந்து கைப்பற்றி வெட்டிக் கொல்வதாக அமைந்துள்ளது.

இவை போன்றே இக் குறுக்குளாஞ்சி கதையிலும் தூண்டிமுத்துவைத் தூக்கத்தில் அண்ணன்மார் கைப்பற்றினர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

> சாப்பிட்டு இளைப்பாறித் தானுமங்கே இருக்கையிலே
> கண்தூங்கும் வேளையிலே இந்தக் கட்டழகர் ஏழுபேரும்
> தூக்கத்தோடே தூக்கமாக இந்தத் தூண்டிமுத்து முதலியாரைக்
> கைப்பிடியாய்ப் பிடித்தல்லவோ இந்தத் தூண்டிமுத்து முதலியாரைப்
> பின்கட்டாக் கட்டியல்லோ பேறுபெற்ற முதலியாரை
> வன்கட்டாய்க் கட்டியங்கே அவரை வாசலிலே கொண்டுவந்தார்
> (348-353)

என உள்ளது.

மரணத்தின் பின் மரணமுற்றவருக்கு உற்றவர் ஒப்பாரி வைத்துப் புலம்புவதாக அமைத்தலை மற்றுமொரு கதைப்பாடல் மரபு எனலாம். இக்கதைப்பாடலில் உற்றவர்களே வெட்டிக் கொல்வதால், மரணமுறுதற்கு முன்னர் பூரணவல்லி அவள் நிலைக்கு அவளே இரங்கிப் புலம்பி ஒப்பாரி வைக்கும் அமைப்பு அமைந்

56. தங்கதுரை, சு. (ப.ஆ.) op.cit.

துள்ளது (416-424). அவளது இறப்பிற்கு முன்னர் அவளைக் கொல்லப் போகின்ற அவள் அண்ணன்மார்களும் புலம்பி அழும் புதுமையும் இடம் பெற்றுள்ளது (425 - 430).

கதையில் வரும் முக்கிய பாத்திரப்பெயருக்குத் தகுந்த காரணம் ஒன்று கூறலைக் கதைப்பாடல்கள் மரபாக ஆண்டு வந்திருக்கின்றன. வேர்வை முத்தினை ஆதாரமாகக் கொண்டு பிறந்த முத்து + ஆதார + அம்மன் = முத்தாரம்மன் என்றும்[57] கையிலேந்திய விந்திற் பிறந்ததால் கையனர் > ஐயனார் என்றும் (சாஸ்தா கதை - இ.ம.41 - 42; கே. ப. சு. 8022) வேர்வையிற் பிறந்த புத்திரனாதலின் வேர்வை புத்திரன் > வீரபத்திரன் என்றும் (சித்திரபுத்திர நயினார் கதை, இ. ம. 13; கே. ப. சு. 4087) இரணியன் தலை உச்சியினின்றும் வெடித்து வந்ததால் உச்சினி மாகாளி என்றும்[58] (உச்சினி மாகாளி கதை - கையெழுத்துப் பிரதி உ. த. நி. வரி, 91-94) பெயர்க் காரணங்கள் கூறப்பட்டுள்ளன.

இவை எந்த அளவுக்குப் பொருத்தமானவை என்பதனைப் பற்றிச் சிறிதும் கவலையுறாமல், பெயருக்கு ஒரு காரணம் கூறவேண்டும்; அதற்கு ஏற்ப ஒன்றைக் கற்பிக்க வேண்டும் என்ற முறையிலேயே கடைப்பிடிக்கப்பட்டு வந்திருப்பதைப் பெரும்பாலான கதைப்பாடல்களில் காணலாம்.

இத்தகு பெயர்க்காரணங்கள் போன்றே இக்கதைப்பாடலிலும், குறுக்குளாஞ்சி தெய்வத்துக்குப் பெயர்க்காரணம் கூறப்பட்டுள்ளது. பூரணவல்லியை வெட்டிய போது உச்சியில் வெட்டு விழுந்ததால், அவள் குறுக்கிலிருந்து ஒரு தெய்வம் வெடித்ததாகவும் குறுக்கிலிருந்து வெடித்த அந்த தெய்வம் குறுக்குளாஞ்சி எனப் பெயர் கொண்டது என்றும் விவரிக்கப்பட்டுள்ளது (435 - 444). கருவுற்ற அந்தணப் பெண்ணை வெட்டிக் கொல்லும்போது அவள் உடலின் குறுக்குப் பகுதியான வயிற்றிலிருந்த கருவே வெடித்து தெய்வவடிவில் வெளிவந்தது என்று விளக்குவதற்கு இடமுள்ளது. அவ்வாறாயின் குறுக்குள் + அம் + சேய் என்பதே குறுக்குளாஞ்சேய் ஆகி பின்னர் குறுக்குளாஞ்சி என்று மாறி இருக்கலாம். எனினும் இதற்குரிய அகச்சான்று நூலில் இல்லை என்பது நினைவுகூரத்தக்கது.

இறந்தவர் தெய்வத்திடம் வேண்டி வரம் பெறலும் இறப்புக்குக் காரணமானவரைப் பழி வாங்கலும் பின் பல தலங்களுக்கும் சென்று தல தெய்வங்களைத் தரிசித்தலும் சிறப்பாகப் பொதிகை மலை சென்று அகத்தியரை வணங்கி மீளலும் பின்

57. ''முத்துப் போலொத்த வேர்வையை வாரியே
மீள வேள்வியில் விட்டெறிந்தா ளம்மன்
அம்மன் வேர்வையில் ஆதார மாகியே
ஆதி யாம்முத்தா ரம்மன் பிறந்தனள்.''

-முத்தாரம்மன் விற்கவிதை, ஆறுமுகப்பெருமாள் நாடார் (ப ஆ.) வரி: 350-354.

58. ''இரணியன் உச்சியிலே எம்பெருமான் கொத்துவாராம்
உச்சியிலே கொத்திடவே உதிரவெள்ளம் பாய்ந்திடுமாம்
உதிரவெள்ளம் பாய்ந்திடவே உயிர்மடிந்தா னிரணியனும்
உதிரத்திலே கருவுருவாய் உச்சினிமாகாளி அம்மன் பிறந்தாளே''.

குறிப்பிட்ட இடத்தில் தெய்வமாக வீற்றிருந்து மக்களால் வணங்கப்படலும் கதைப் பாடல் மரபுகளாக அமைதலுண்டு.

இக்கதைப்பாடலிலும் மரணத்தின் பின் தூண்டிமுத்து பார்வதி, பரமசிவனிடம் வரம் பெறலும் (409 - 410) பூரணவல்லியினின்று வெடித்த குறுக்குளாஞ்சி[59] இறப்புக்குக் காரணமானவர்களைப் பழி வாங்குதலும்(445 - 554) பின் தலயாத்திரை செய்து அகத்தியரை வணங்கி மீளலும் (571 - 600) அதன் பின்னர் கோபால சமுத்திரத்தில் கோயில் கொள்ளலும் (601 - 634) ஆகிய நிகழ்ச்சிகள் கதைப் பாடல் மரபுகளின் படி அமைந்துள்ளன.

**கதைக் கருவும் சார்புடைய நிகழ்ச்சிகளும்:-**

சாதிவிட்டுச் சாதி காதல் கொள்வது, சாதி விட்டுச் சாதி மணம் செய்து கொள்வது என்பனவற்றால் வரும் சிக்கலை மையமாகக் கொண்டனவாகப் பல சமுதாயக் கதைப்பாடல்களின் கதைக்கரு அமையக் காணலாம்.

சாதியில் உயர்சாதி, கீழ்ச்சாதி என்ற பிரிவினைக்கயிறு வலுவானதாகவும் இடைப்பட்ட எல்லைக்கோடு அழுத்தமானதாகவும் உள்ளபொழுது அக் கயிறு அறுக்கப்படும் போதும் கோடு அழிக்கப்படும் போதும் கீழ்ச்சாதியினரான எளியாரை ஆண், பெண் என்ற வேறுபாடின்றி மேல்சாதியினரான வலியார் கடுமையாகத் தண்டித்திருக்கின்றனர். குறைந்த அளவு தண்டனை, அதிக அளவு தண்டனை என்ற வரன்முறைகளெல்லாம் மறுக்கப்பட்டு, ஒரே தண்டனையாக மரண தண்டனையே அளிக்கப்பட்டிருக்கிறது.

சிதம்பரநாடார் - பாப்பாத்தி[60] (நாடார் - அந்தணகுலம்), மந்திரமூர்த்தி - சோணை முத்து[61] (நாடார் - குடும்பர்குலம்), முத்துப்பட்டன் - பொம்மக்கா, திம்மக்கா[62] (அந்தணர் - சக்கிலியர்குலம்), குமாரசுவாமி - ஐயங்குட்டி[63](நாடார் - நாவித குலம்), காத்தவராயன் - ஆரியமாலை (வேடர்குலம் - பிறப்பால் அந்தணகுலம் வளர்ப்பால் அரசகுலம்), மதுரைவீரன் - பொம்மி, வெள்ளையம்மாள்[64] (சக்கிலிய குலம் - அரசகுலம்) போன்ற அனைவரும் சாதிவிட்டுச் சாதி காதல் கொண்டதால், சாதிவிட்டுச் சாதி மணம் செய்ததால் உயிர் துறந்தவர்களே.

மேலும் சாதி வேறுபாடு, குலகௌரவம் பாராட்டித் தடை செய்த காரணத்தால்

59. குறுக்கு + உள் + அம்சி = குறுக்கினுள்ளே அம்சமாயிருந்தவள் என்றும் இப்பெயரின் விரிவு அமையும் எனலாம்.
60. சிதம்பர நாடார் கதை op cit.
61. தடிவீரன் கதை (கே.ப.சு. 8440)
62. முத்துப்பட்டன் கதை (கே.ப.சு. 8018)
63. சின்ன நாடான் அல்லது சின்னணைஞ்சான் கதை
64. மதுரைவீரன் அம்மானை (கே.ப.சு. 8420)

மாண்டவர்கள் பட்டியலில் கன்னடியன் மகள் - குலசேகரபாண்டியன்[65] பூலங் கொண்டாள்[66], தோட்டுக்காரி - குமரப்பராசா[67] போன்றவர்களும் அடங்குவர்.

குறுக்குளாஞ்சி கதையில் சாதிவிட்டுச் சாதி காதல் கொண்டு கணவன் மனைவி போன்றே இல்வாழ்க்கை நடத்தியதால் விளையும் சிக்கல் கதைக்கருவாக அமைந் துள்ளது. கதைத்தலைவன்-தலைவி ஊரை விட்டே ஓடி மலையாள தேசம் சென்று வாழத்துவங்கிய பின்னரும் தேடிப்பிடித்துப் பழிவாங்கப்படுகின்றனர். கதைத்தலைவி உடன் பிறந்தவர்களாலேயே வெட்டிக் கொல்லப்படுகிறாள். கொலை செய்யப்படுவதற்கு முக்கிய காரணம் இருவரும் சாதிக்கட்டுப்பாட்டை மீறிக் காதல் கொண்டு கணவன்-மனைவியாக வாழ்க்கைநடத்தினர் என்பதாகும்.

மற்றுமொரு காரணமும் கதைப்பாடலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அது காதல் கொண்ட இருவரும் அண்ணன் தங்கை உறவுடையவர் என்பதே. பிறப் பால் அல்லாமல் வளர்ப்பால் இருவரும் அண்ணன் தங்கையாகவே வளர்க்கப்படு கின்றனர். எனவே இவர்கள் கொண்ட காதல் உறவு முறைப்படியும் தகாதது என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. இவற்றைத்தவிர மற்றொரு காரணமும் குறிப் பிடப்படுகிறது. அது தூண்டிமுத்து செய்த நம்பிக்கைத் துரோகம். தூண்டிமுத்து முதலியைத் தன் எட்டாவது பிள்ளையாகக் கருதியே இராமசாஸ்திரி வளர்த்து வருகிறார். தன் ஏழு பிள்ளைகளையும் விடக் கருத்துள்ள பிள்ளை இவன் என்று அவனைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்கவும் வைக்கிறார். தன் பண்ணையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பையும் நம்பிக்கையோடு ஒப்படைக்கிறார். அண்ணன்மார் பூரணவல்லிக்கு மாப்பிள்ளை தேடிக் காசிக்குப் போகும் பொழுது தூண்டிமுத்துவையே அழைத்து தாய், தந்தை, தங்கை ஆகியோரை நன்கு கவனித்துக் கொள்ளச் சொல்லிவிட்டும் செல்கின்றனர். அனைவரது நம்பிக்கை யையும் தகர்த்துப் பூரணவல்லியை மயக்கி, மனைவி போன்று நடத்தி, நம்பிக்கைத் துரோகம் செய்து விடுகிறான் தூண்டிமுத்து. இந்த நிலைகள் அனைத்தும் தெளிவாகக் கதைப்பாடலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

சாதிவிட்டுச் சாதி காதல் கொண்டமை, உடன் பிறக்காவிடினும், வளர்ப்பால் அண்ணன் தங்கை உறவு என்பதனைத் தகர்த்துத் தகாத உறவு பூண்டமை, சிறு வயது முதல் செல்வ மகனாக வளர்த்தவர்களின் குடும்பத்துக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தமை எனக் கதைக் கருவுக்கு வலுவூட்டும் நிகழ்ச்சிகள் இணைக் கப்பட்டுக் கதை பின்னப்பட்டுள்ளது.

**பாத்திரப்படைப்பு:-**

சமுதாயக்கதைப் பாடல்களுக்கே உரிய முக்கிய இலக்கணப்படி சாதாரணக் குடி மக்களே இப்படைப்பில் தலைவன், தலைவியாக அமைந்துள்ளனர் இருவேறு பட்ட குலத்தைச் சேர்ந்த இவ்விருவரின் மனநிலைகளும் இப்படைப்பில் தெளி

---

65. ஐவர் ராசாக்கள் கதை. வானமாமலை நா. (ப.ஆ.)
66. பூலங்கொண்டாள் கதை (ஆ.ஆ நி. 18)
67. தோட்டுக்காரியம்மன் கதை (உ.த நி. 319)

வாகப் படம் பிடித்துக்காட்டப்பட்டுள்ளன. தலைமைப்பாத்திரங்கள் தவிர்த்த ஏனைய பாத்திரப் படைப்புக்களும் சிறப்பாக அமைந்துள்ளன.

**தூண்டிமுத்து:-**

ஏழு வயதுள்ள குழந்தைப்பருவத்திலேயே காண்பவர் கருத்தைக் கவரும் உருவப் பொலிவுடையவனாகவும் புத்திக்கூர்மையுடையனாகவும் தூண்டிமுத்து திகழ்ந் தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழு வயதில் தூண்டிமுத்து இராமசாஸ்திரி யின் வீட்டு முன்னால் வந்துநின்ற போது,

> இவனுடைய அழகைக் கண்டு ஏற்றதொரு சாஸ்திரியும்
> ஏழுபிள்ளை நமக்கிருக்க இவனைப்போலப் பிள்ளையில்லை (62-63)

என்று ஏங்கி உரைப்பதாக உள்ளது.

தூண்டிமுத்து கொட்டாரக்கரை மன்னரைச் சென்று சந்திக்கும் பொழுது, அந்த மன்னனும் இவனது முகப்பொலிவில் ஈடுபட்டு இத்தகைய ஒரு சேவகன் நம்மிடம் இல்லையே என்று வருந்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பண்ணைக் காரர் முதல் பாராளும் வேந்தர் வரையுள்ள அனைத்து மாந்தர்களையும் கவரும் தோற்றப்பொலிவு கொண்டவனாகத் தூண்டிமுத்து திகழ்ந்தான் என்பது தெளிவுறுத்தப்பட்டுள்ளது. ஏழு வயது முதல் பன்னிரண்டு வயது வரை இடைப் பட்ட ஐந்து ஆண்டுகளில் கணித முறைகள் அனைத்தையும் கற்றுத் தேர்கிறான். பன்னிரண்டு வயதிலேயே சாஸ்திரியின் பண்ணைக் கணக்குகளை எல்லாம் கவனித்துக் கொள்ளும் பெரும் பொறுப்பையும் ஏற்று நடத்திவருகிறான் தூண்டிமுத்து (88-95).

பன்னிரண்டு வயது முதல் பதினாறு வயது வரை பண்ணையை மேற்பார்வை செய்யும் பணியினை மேற்கொண்டதோடு மந்திர வித்தைகளில் நாட்டம் கொண்டு நான்கு ஆண்டுகளில் அனைத்து மந்திர முறைகளையும் கற்றுத் தேர்கிறான் (97-111). பயணத்தின் பொழுதும் மந்திர ஏட்டை விடாமல் மடியில் கட்டிக் கொண்டு சென்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது (236). மாயசித்திகள் கைவரப் பெற்ற தன்னால் எதையும் சாதிக்க இயலும் என்று இறுமாப்புடன் பேசுகிறான் (214-215). இவனது மந்திர வேலைகளுக்கு அஞ்சியே ஏழுபேர் இருந்தும், அண்ணன்மார் இவனைத் தூங்கும் வேளையில் வந்து கபடமாய்ப் பிடித்து, எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாமல் கையைப் பின் கட்டாகக் கட்டிவிடு கின்றனர் (348-353).

16 வயது வரை சாஸ்திரியின் குடும்பத்தினருடன் பிள்ளைகளோடு பிள்ளை யாக ஒன்றி வளர்ந்து அனைவரது நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் பெறும் தூண்டிமுத்து வாலிப வயதாகிய 16 வயதில் தங்கை போன்று உடன் வளர்ந்த பூரணவல்லி மீது காமங் கொள்வதால் அவனது எண்ணங்களிலும் செயல்களிலும் உயரிய குணநலன்களிலும் எவ்விதம் மாற்றம் நிகழ்கிறது, நற்

குணங்களினின்றும் எவ்விதம் நழுவிப்போகிறான் என்பனவெல்லாம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. கீழ்க்காணும் நிகழ்ச்சிகளை இதற்குச் சான்று காட்டலாம்.

வயதுக்கு வந்த பூரணவல்லி, குல வழக்கப்படி தனியறையில் வைக்கப்படுகிறாள். அப்போது யாருமறியாமல் அவளுடன் உறவாடி மகிழ்கிறான் (150). பூரணவல்லியைத் தன் மனக்கருத்துக்கேற்றவளாக மாற்ற, அவள் மீது சொக்குப்பொடியைத் (மயக்கம் தரும் பொடி) தூவி மயக்கித் தன்வசப்படுத்துகிறான் (174-176). திருமணம் செய்து கொள்ளாமலேயே கணவன் மனைவியாக வாழும் நிலைக்கு ஆளாக்குகிறான் (177). கருவுற்றுள்ளதைக் கூறிக் கதறிய பூரணவல்லியிடம் மலையாளம் சென்றுவிடுவோம் என ஓடிவிட யோசனை கூறுகிறான் (221-223). 'நீ வராவிட்டாலும் நான் சென்று விடுவேன்' என்று அச்சுறுத்துகிறான்; பொறுப்பற்றுப் பேசுகிறான் (224).

தன்னால் பாதிப்புக்கு ஆளானவள் எவ்வாறேனும் போகட்டும்; தான் எவ்விதமாயினும் அண்ணன்மார் வரும்முன் ஓடி விட வேண்டும்; தண்டனையிலிருந்து தப்பிவிட வேண்டும் என்ற இவனது சுயநல எண்ணம் இப்பகுதிகளில் தெளிவாகத் தெரிகின்றது. கொட்டாரக்கரை மன்னரிடம் உண்மையைக் கூறாது மறைத்துத் தான் பஞ்சம் பிழைக்க வந்ததாகப் பொய் கூறுகிறான்.

**பூரணவல்லி:-**

கதைத்தலைவியான பூரணவல்லி அந்தண குலத்தில் பிறந்தவள். அழகும் உருவப் பொலிவும் உடையவள் (130 - 146). தாய், தகப்பன்,அண்ணன்மாரால் ஏழறைக்குள் வைத்து அருமையாக வளர்க்கப் பெற்றவள் (31 - 48). தான் உயர்குடியில் பிறந்தவள் என்ற எண்ணத்தை எப்போதும் மறவாதவள் (205).

தூண்டிமுத்து இவள் மீது காதல் கொள்ளுகிறான். அவனைப்போன்று இவளும் அவன் மீது அன்பும் காதலும் கொண்டாள் என்பதனைக் கதைப்பாடலின் ஒருவரியிலும் பார்க்க இயலவில்லை. தூண்டிமுத்துவும் இவள் மீது கொண்டது உடல் கவர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்ட பருவ வயதுக் காதலே எனலாம். எனவே இவர்களுக்கிடையில் ஏற்பட்டது மனம் ஒன்றிக் கலந்த ஐந்திணைக் காதலன்று. தூண்டிமுத்து மட்டுமே இவள்மீது காதல் கொண்டதால் ஒருவகையில் இதனைக் கைக்கிளையாகிய ஒருதலைக் காதலில் அடக்கலாம். அத்துடன் பூரணவல்லியே மனம் விரும்பி அவன்பால் ஈடுபடாமல், அவளை மாயப்பொடி கொண்டு தூண்டிமுத்து மயக்கி தன்வசப்படுத்திக் கூடியதால் மற்றொரு முறையில் இதனைப் பெருந்திணையாகிய பொருந்தாக் காமத்திலும் அடக்கலாம்.

கருவுற்றுள்ளமை அறிந்ததும் தன் உயர்குலச்சிறப்பும் கோத்திரப் பெயரும் கெட்டுப் போய் விட்டதே என்று வருந்துகிறாள் (205). 'அண்ணன்மார் மாப்பிள்ளை தேடி மங்கிலியம் பூட்டிக் கல்யாணம் முடித்து வைக்க வருவார்களே அனைத்தும்

நாசமாகி விட்டதே' என்று வருங்காலத் திருமண வாழ்க்கை தடைப்பட்டுப் போனதற்காக ஏங்கிப் புலம்புகிறாள்.[68]

அவமானம் தாளாமல் ஆற்றில், குளத்தில் விழுந்தோ, நஞ்சு தின்றோ, தூக்குப் போட்டுக்கொண்டோ இறந்து விடவேண்டும் எனத் துடிக்கிறாள். இறந்தால் அந்தப் பாவமெல்லாம் உனக்குத்தான் என்று தூண்டிமுத்துவைக் குற்றம் சாட்டிப் பேசுகிறாள்.[69]

பெண்பாவம் கொண்டாயே பொல்லாத **முதலியாரே** (206)

என்று தூண்டிமுத்துவின் சாதியைச் சுட்டிக்காட்டிச் சாடுகிறாள்.

அண்ணன்மார், தாய், தந்தைக்கு அஞ்சி அவர்களுக்கு என்ன பதில் கூறுவது என்று அஞ்சி முதலியுடன் மலையாளம் செல்ல ஒப்புக் கொள்கிறாளே தவிர அவன்மீது காதல் கொண்டோ, அவனுடன் உயிருள்ளவரை இனிய வாழ்க்கை வாழ்ந்து இறக்கவேண்டும் என்று ஆவல் மீதூரவோ அவனுடன் பூரணவல்லி வேற்றுதேசம் நோக்கிச் செல்லவில்லை (199-204).

கருவுற்ற நிலையில் வேறு வழியில்லாமல் அவள் தூண்டிமுத்துவுடன் செல்கிறாள். அப்போதும் அவனை நம்பாமல் உயிருள்ளவரை ஒருவரையொருவர் கைவிடுவ தில்லை என்று ஆணையிட்டுக் கொண்டபின் உடன் செல்லத் துணிகிறாள் (206-208). தூண்டிமுத்துவின் மந்திரத்தின் மீதும், அவன் உடனடியாக ஏதேனும் தொழில் பார்த்துத் தன்னைக் காப்பாற்றுவான் என்றும் அவளுக்கு நம்பிக்கை இல்லை. வாழ்க்கைத் தேவையை உணர்ந்து முன்யோசனையுடன் பணம், நகை, பட்டுத்துணிமணிகளையெல்லாம் எடுத்து மூட்டை கட்டிக்கொண்டு அவனுடன் புறப்படுகிறாள் (230-231).

கொட்டாரக்கரையில் முன்னுணர்வுடன் செட்டிச்சி போன்று தன் நடைஉடை பாவனைகளை மாற்றிக்கொண்டு வாழ்கிறாள் (265-267). குற்ற உணர்வுடனும் தன்னை யாரும் அடையாளம் கண்டு விடுவாரோ என்று அஞ்சிக்கொண்டும் முக்காடிட்டுத் தலையைக் கவிழ்த்துக் கொண்டு தண்ணீர் எடுக்க வருகிறாள் (335-336).

---

68. ''எண்ணாது எண்ணினார்கள் ஏழுபேர்கள் அண்ணமாரும்
எனக்குக் கலியாணம் செய்யவேணும் கைப்பிடித்துப் பார்க்கவேணும்
மாலையிட்டுப் பார்க்கவேணும் மங்கிலியம் தரிக்கவேணும்
எண்ணின எண்ணமெல்லாம் போச்சுதடா நாங்களிருந்ததுவும் போச்சுதடா'' (194-197)

69 ''நான் நாண்டு கொண்டு நின்றுடுவேன் நஞ்சைத்தின்னு செத்திடுவேன்
ஆத்துலே விழுந்திடுவேன்-நான் அக்குளத்தில் விழுந்திடுவேன்
உன்னாலே நானுமிப்போ உயிரைவிடப் போறேன்காணும்
என்னுடைய பாவத்தைநீ ஏத்துக்கொள்ளு முதலியாரே'' (208-211)

தூண்டிமுத்து தூண்டியிலிடப்பட்டதும் தனது வாழ்க்கைத்துணையாகத் திகழ்ந்தவன் மடிந்தானே என்று அழுது புலம்பாமல் தன்னை வெட்டுவதற்காக அண்ணன்மார், வடக்கே முகம் நோக்கி நிறுத்திய பின் தன் நிலைக்குத் தானே இரங்கிப் புலம்புகிறாள்.

> தூண்டிமுத்து முதலியாரை அவர்கள் தூண்டியிலே போட்டுவிட்டுத்
> தன்னுடைய தங்கையரைத் தானுமே வெட்டுதற்கு
> வடக்கே முகமாக அவளை வைத்தார்க ளண்ணமார்கள்
> அப்போது பூரணவல்லி அவளழுதாளே மனங்கலங்கி (413-416)

பூரணவல்லி தன் குலத்தைச்சாராத ஒருவனால் வஞ்சிக்கப்படுகிறாள். வேறு வழியில்லாமல் அவனுடனேயே வாழ்க்கை நடத்தத்துவங்கிய காலத்தில் குல கௌரவம், சாதிவேறுபாடு, சமூகக்கட்டுப்பாடு போன்ற காரணங்களால் வெட்டப் பட்டு மாளும் சோகப்பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

**இராமசாஸ்திரி:-**

உருவப் பொலிவுடையவராகவும் (11-17) பணம், படிப்பு, பண்பில் உயர்ந்தவராகவும் படைக்கப்பட்டுள்ளார். வேற்றுக் குலத்தானாயினும் தன் வீட்டு வாசலில் வந்து நின்றவனின் தோற்றப்பொலிவால் கவரப்பட்டு, தன் சொந்த மகனாகத் தூண்டிமுத்துவை ஏற்று வளர்க்கும் பெருந்தன்மையும் தாராளகுணமும் கொண்டவர் (60-78).

அறிவுக் கூர்மை உடைய குழந்தை தூண்டிமுத்து என்பதறிந்து, தான் பெற்ற பிள்ளை இல்லையென்றாலும், அவனுக்குக் கல்விச்செல்வம் அளிக்கும் வள்ளன்மை (84-86), தூண்டிமுத்துவைப் பண்ணைக் கணக்கையெல்லாம் பார்த்துக் கொள்ளச் சொல்லி ஒப்படைக்கும் நம்பிக்கை (93-94), தான் கொண்ட பெருநம்பிக்கையைச் சிதறச் செய்து, தங்கை முறை கொண்டவளைச் சிறை கடத்திச் சென்று விட்டான் என்பதறிந்ததும் சீறி ஆணையிடும் போக்கு ஆகிய அனைத்துப் பண்புகளையும் இவரிடம் காண்முடிகின்றது.

> அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான் —குறள்

என்பதையும் மறந்து, அம்மறைமொழியையும் துறந்து தூண்டிமுத்துவைத் தூண்டியிலிட்டுச் சித்ரவதை செய்து கொல்ல வேண்டும் என்று உரைக்கும் இடத்தில் குணமென்னும் குன்றேறி நின்ற இச்சான்றோரின் மறச்சினத்தின் ஆற்றலை நாம் சந்திக்க முடிகின்றது. குலப்பெருமையெல்லாம் தகர்ந்துவிட்டது என்றாலும் மகள் மீதுள்ள பேரன்பால் அவளை வெட்டுமாறு இவர் பணிக்கவில்லை என்பது எண்ணத்தக்கது.

**அண்ணன்மார்:-**

ஏழு பேருக்கு இளையவளாக ஒற்றைக்கொருத்தியாகப் பிறந்த தம் தங்கை

பூரணவல்லியைப் பாராட்டிச் சீராட்டி வளர்க்கின்ற உடன் பிறப்புப் பாசம் கொண்டவர்களாக (43-48), அவள் தக்க வயது அடைந்ததும் அவளுக்குத் திருமணம் செய்யத் தகுந்த மாப்பிள்ளை வேண்டும் என்று சொல்லித் தொலைவையும் பாராட்டாது காசிக்குப் புறப்பட்டுப் போகும் [துறவறவாழ்க்கையில் நாட்டங்கொள்வோர் வாழும் காசிக்கு இல்லறவாழ்க்கைக்கு ஏற்ற கணவனைத் தேடிச்செல்வதாக அமைவதை நாடகத்திரிபு (Dramatic Irony) என்னும் இலக்கிய உத்தியாகக் கொள்ளலாம்.] ஆர்வம் உடையவர்களாக (152-159), தந்தை, தாய், விருப்பின்படி தூண்டிமுத்துவைத் தூண்டியிலிட ஆணை கேட்டபோது அரசன் மறுக்கவே, 'ஆணைதர மறுப்பின், வாளூன்றி அதில் பாய்ந்து நாங்கள் ஏழுபேரும் ஒருமிக்க மடிவோம்' என்று உயிரை விட்டேனும் தந்தை, தாய் ஆணையை நிறைவேற்றத் துடிக்கும் நிலைகுலையா உள்ளங் கொண்டவர்களாக இவர்கள் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

> ஏழுபேர்க்கு ஏழுஊரு - நாம் - இப்போது விட்டுத் தாரோம்
> வாசல் பிரதானியாக இப்பம் ஏழுபேரும் இரிங்களிங்கே (379-380)

என அரசன் இயம்பிய பின்னும், சொத்து, பதவி ஆசை ஆகியவற்றில் மனம் மயங்காமல் கடமையாற்ற முந்தும் செயல்வீரர்களாக, தக்க சமயத்தில் தகுந்த உத்தியைக் கையாளும் புத்திக் கூர்மை உடையவர்களாக (382-385), தங்கையை வெட்டுவதற்கு முன், வளர்த்த பாசம் தாளாமல் புலம்பிக் கதறும்மென்மை உள்ளம் கொண்டவர்களாக (425-430), அதேசமயம் தந்தை ஆணையிடாவிடினும், குலகௌரவம், சாதிக்கட்டுப்பாட்டைச் சிதைத்த அவளை வெட்டியே தீருவது என்ற உறுதி பூண்டு செயல் படுத்தியவர்களாக (431-434) அண்ணன்மார் படைக்கப்பட்டுள்ளனர்.

**கொட்டாரக்கரை அரசர்:-**

பார்வையிலேயே ஒருவனை எடைபோடும் திறம் கொண்டவராக (274-275), கேட்டவனுக்கு ஏதாவது ஒரு பணியைக் கொடுப்போம் என்று எண்ணாது தக்க பதவியைத் தருகிறேன் காத்திரு எனப் பாத்திரமறிந்து பிச்சையிடும் நற்குணம் உடையவராக இவர் படைக்கப்பட்டுள்ளார் (282-284).

தன்னிடம் கூறியபடி தூண்டிமுத்து பஞ்சம் பிழைப்பதற்காகத் தன் தேசம் வந்தவனல்ல (281); வேற்று சாதிப் பெண்ணை மயக்கி அவளைப் பெற்ற தந்தை, தாய் இறக்கவும் அண்ணன்மார் நாடோடியாய்த் தேடி அலையவும் காரணமான வஞ்சகன் என்று அண்ணன்மார் மூலம் தூண்டிமுத்துவைக் குறித்து அறிந்த பின்னும் அவன் மீது சினம் கொள்ளாமல் அவன் செய்த தவறுக்கெல்லாம், தான் ஓர் அரசன் என்பதையும் மறந்து தூண்டிமுத்துவுக்காக அண்ணன்மாரிடம் மன்னிப்புக் கேட்கும் மாண்புள்ளம் கொண்டவராகக் (361-381) கொட்டாரக்கரை மன்னரை இக்கதைப்பாடல் அறிமுகம் செய்து வைக்கிறது.

அண்ணன்மாருக்குத் தகுந்த பதவிகள் அளித்து, ஊர்களும் விட்டுத் தந்து திருமணமும் செய்து வைக்கிறேன் எனக் கூறும் கருணையுள்ளத்தினையும்

வன்னன்மையினையும் இவரிடம் காணமுடிகின்றது. 'தூண்டிமுத்து கொண்டுவந்த பெண்ணை அவனுக்கே விட்டுக் கொடுத்து விடுங்கள்' என்றும் அவர்களைக் கொல்லுவதால் குலத்துக்கேற்பட்ட கறை நீங்காது என்றும் உண்மையை எடுத்துரைத்து, அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்துவிடலாம் என நடக்க வேண்டிய நல்லதையும் எடுத்துரைக்கும் பண்புடையவராக (376-377) இம்மன்னரின் பாத்திரப்படைப்பு அமைந்துள்ளது. 'மேன்மக்கள் மேன்மக்களே' என்பதற்கொரு சிறந்த எடுத்துக் காட்டாகக் கொட்டாரக்கரை அரசரின் குண நலப்படைப்பு திகழ்கிறது.

**அறிய வரும் சில செய்திகள்:-**

சாதி ஏற்றத் தாழ்வு மிக வன்மையாகக் கடைப்பிடிக்கப்பட்ட சமுதாயத்தை இக் கதைப்பாடல் சித்திரிக்கின்றது. வேற்றுசாதி இளைஞனுடன் தன் வாழ்வை இணைத்துக் கொண்ட கதைத்தலைவியே குலம், கோத்திரம் என்று பேசும் நிலையை இக்கதைப்பாடலில் மட்டுமே காண இயலுகின்றது.

தூண்டிமுத்துவைத் தூண்டியிலிட ஆணையிடுமாறு அரசரை அண்ணன்மார் கேட்டு, அரசர் மறுக்க, ஆணையிடாவிடின் வாளூன்றி மடிவோம் என அண்ணன் மார் அச்சுறுத்த, அஞ்சிய அரசன்

சூத்திரன் ஒருத்தனுக்கா நாமள் சுமக்கலாமோ ஏழுபழி (387)

என்று முதலிமார் இனத்தைச் சேர்ந்த தூண்டிமுத்து ஒரு சூத்திரன் என்றும் சூத்திரன் ஒருவனின் உயிருக்காக ஏழு உயர்குல உயிர்கள் அழியலாமோ என்றும் சிந்தித்து, தூண்டிமுத்துவைக் கொல்ல அனுமதி அளித்து விடுகிறார். சாதி அடிப்படையில் உயர்குலத்தவராய (அந்தணர்) அண்ணன்மார் உயிர்மேலானதாகவும், அக்குலத்துடன் ஒப்பிடத் தாழ்ந்ததாய முதலிமார் இனத்தவரான தூண்டிமுத்துவின் உயிர் தாழ்வானதாகவும் நாடாளும் மன்னராலேயே கருதப்படும் அளவுக்குச் சாதிவேறுபாடு தலை விரித்தாடும் சமுதாயமாக இருந்தமை தெரிகின்றது.

ஒருவரை முதன் முதலில் சந்தித்தால் அவர் என்ன சாதியைச் சேர்ந்தவர் என்று வினவும் பழக்கம் சாதாரணக் குடிமகன் முதல் நாடாளும் வேந்தன் வரையும் பரவியிருந்தது. ஏழு வயதுப் பையனாகத் தூண்டிமுத்து சாஸ்திரியார் வீட்டு வாசலில் வந்து நின்ற போது சாஸ்திரி, 'இந்தப் பையன் என்ன சாதியைச் சேர்ந்தவனாக இருப்பானோ' என்று சிந்தித்து, அடுத்து அவனிடமே அதனைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் கேட்டும் விடுகிறதைப் பார்க்கிறோம் (64-67). கொட்டாரக்கரையை ஆளும் அரசரும் தூண்டிமுத்துவை முதலில் கண்டதும் அவர் என்ன சாதியைச் சார்ந்தவர் என்றே வினவுகிறதையும் பார்க்கிறோம் (278).

**நாள்பார்த்தல்:-**

எந்த ஒரு செயலைச் செய்வதற்கு முன்பும் நாள் பார்த்துத் தொடங்குதல் வழக்கிலிருந்தமை தெரிகிறது. தூண்டிமுத்து-பூரணவல்லி நாடு விட்டு நாடு செல்வதற்

காக யாரும் அறியாமல் கிளம்பும் பொழுது நாள் பார்த்து நல்ல நாளாகிய வெள்ளிக் கிழமையில் கிளம்புவதைப் பார்க்கிறோம்.

குறுக்குளாஞ்சி தெய்வத்துக்கு நிலைக்குரிசிப் பீடம் அமைக்கும் கோபாலபுரத் தினரும், நாள் பார்த்து முகூர்த்தமிட்டுக் காரியத்தைத் தொடங்குகின்றனர்.

நாள்பார்த்து முகிர்த்தமிட்டு நல்லதொரு லக்கினத்தில்
வெள்ளிநல்ல கிழமையிலே மேலான நாளையிலே
காப்புக்கட்டி விரதமாகிக் கற்பூரத் தீபமிட்டு
நிலைக்குரிசிப் பூடம்போட்டு நிச்செயங்கள் செய்தார்கள் (622-625)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறிபார்த்தல்:-**

இதுவா? அதுவா? என்று இரு மனதாகக் குழப்பமுறும் பொழுது ஒன்றைத் தெளிவாய்த் தெரிந்தெடுக்க பரல், மலர், சீட்டு போன்றனவற்றைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வழக்கமிருந்தது.

பரலெண்ணிப் பார்த்தார்கள் மலர்கள் சோதினைகள் பார்த்தார்கள்
சீட்டுப்போட்டுப் பார்த்தார்களங்கே தெக்கைமுகம் போகச்சொல்லித்
தெக்குமுகம் போகச்சொல்லி அங்கே சீட்டு விழுந்ததைப் பார்த்தார்கள்
தெக்கே முகமாக ஏழுபேரும் பிறப்பட்டார்கள் (313 - 316)

என அமைந்துள்ளது.

**கல்வி முறை:-**

குறிப்பிட்ட ஒரு பாடத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அதில் சிறப்புப் பயிற்சி பெறும் (Master of the Subject) கல்விமுறை இருந்தது. தூண்டி முத்து கணிதப்பாடத்தை மட்டும் எடுத்துக் கொண்டு தனது 7 வயது முதல் 12 வயது வரையும் உள்ள 5 ஆண்டுகளில் அனைத்துக் கணித முறைகளிலும் தேர்ச்சி பெற்ற செய்தி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏழுநல்ல வயதுமுதல் பன்னிரண்டு வயது மட்டும்
கணக்கெல்லாம் வந்துபோச்சு பார்த்தாரே முதலியாரும்
சாஸ்திரியார் கிட்டவந்து சகல கணக்கும் வந்துதென்றார்
(88 - 90)

எனஅமைந்துள்ளது.

**தண்டனை முறைகள்:-**

குற்றம் புரிந்தவனைத் தண்டிக்கும் அதிகாரம் அரசனுக்கு மட்டுமே இருந்தது. அரசனது அனுமதியின்றி யாரும் யாருக்கும் தண்டனை தந்துவிடல் மாபெரும்

குற்றமாகக் கருதப்பட்டது. தூண்டிமுத்துவைக் கொல்ல அனுமதி அளிக்குமாறு கொட்டாரக்கரை அரசரிடம் அண்ணன்மார் வேண்டி நின்றனர் என்ற செய்தி இதனைத் தெளிவுப்படுத்துகின்றது (371 -372).

குற்றவாளியின் கைகளைப் பின்கட்டாகக் கட்டி, முகத்தில் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, எருக்கிலை மாலையை அணிவித்து, 'இவனை வெட்டி விடப் போகிறோம்' என்பதனைக் கொட்டுக்கொட்டி (முரசறைந்து) அறிவிப்பர். தெருக்களில் ஊர்வலமாக அனைவரும் காணும்படி குற்றவாளியைக் கொண்டு வருதலுண்டு. கடைகளில் கண்ணிற் கண்ட பண்டங்களையெல்லாம் வேடிக்கை பார்த்துக் களித்ததற்குக் கூலியாகக் கடைக்காரர்கள் அளிக்க, அதனை வலமாக அழைத்து வரப்படும் யானை, மாடு போன்றனவற்றுக்குக் கொடுப்பது போன்று குற்றவாளிக்குத் தின்னக்கொடுத்து அவமானப்படுத்துவர்.[70]

சமூகக் குற்றம் புரிந்தோரைச் சித்திரவதை செய்து கொல்லும் வழக்கமிருந்தது. சித்திரவதை மரணத்தில் 'தூண்டியிலிட்டுக் கொல்லுதல்' ஒரு முறையாக இருந்தது. 'தூண்டி' என்பது மீன் பிடிக்கப் பயன்படுத்தும் தூண்டிமுள் போன்ற கொக்கிகளையுடைய (Hooks) அமைப்பாகலாம். இத்தகு இரும்புக் கொக்கிகளை உடலின் பல பாகங்களிலும் உட்செலுத்திச் சித்திரவதைக்கு ஆட்படுத்தி மரணமடைய வைப்பது தூண்டியிலிடல் ஆகலாம்.[71]

வட்டப்பிலா மரத்திலவரை வாய்த்ததொரு தூண்டிலிலே
தூண்டிலிலே போட்டார்கள் அந்தத் தூண்டிமுத்து முதலியாரை
மண்டையிலே பட்டதூண்டி லவர்க்கு மறுபிறத்தில் பாயுதப்பா
தொண்டையிலே பட்டதூண்டி லவரைத் துளைக்குதே மறுபிறத்தில்
(405-408)

என்றிவ்வாறாகக் கதைப்பாடல் தூண்டியிலிட்ட முறையை விவரிக்கிறது.

உடனடி மரணம் தண்டனையாக அளிக்கப்பட்டது. பூரணவல்லியை ஒரே வெட்டாக வெட்டுவித்து மரணமடையச் செய்ததன் மூலம் இது தெரிய வருகின்றது (432-434).

---

70. ''பின்கட்டா மாறியாக அவரை வன்கட்டாய்க் கட்டினார்கள்
மொளியோடே மொளியெடுத்து அவரை மூட்டிறுகக் கட்டினார்கள்
கரும்புள்ளியும் செம்புள்ளியும் - அவருக்குக் - கன்னமெல்லாம் குத்தினார்கள்
எருக்கலை மாலையைத்தான் அவர்கழுத்தில் போட்டார்கள்
உச்சிக்கொண்டை தான்முடித்து அய்யோ ஊர்வளையம் வாரார்கள்
வெட்டவிடக் கொட்டுக் கொட்டி அங்கே வீதிவலம் வாரார்கள்
கடையி லெடுப்பெடுத்து அவருக்குக் கண்டபண்டந் தான்குடுத்தார்'' (393-399)

71. கி. ராஜநாராயணன் அவர்களின் ''கோபல்கிராமம்'' என்ற நாவலில் வேறு ஒரு சித்திரவதை மரண முறை விவரிக்கப்பட்டுள்ளது (பக் 180). நடப்பட்டிருக்கும் கம்பி குற்றவாளியின் குதத்தி நுழைந்து பிடறி வழியாக வெளிவருமாறு அவன் அமர்த்தி வைக்கப்படுவான். இரத்தமும், ஊனும் குறிப்பிட்ட பாகம் வழி வெளியேற அன்ன ஆகாரமின்றி வேதனையுடன் சின்னாளில் அவன் மரண முறுவான்.

**சில சிந்தனைகள் :-**

இக்கதைப்பாடலுக்கு வேறு பிரதிகள் ஏதும் கிட்டாததால் கிடைத்திருக்கின்ற இந்த ஒரு பிரதி கூறும் கதையமைப்பை வைத்தே செய்திகளை மதிப்பீடு செய்ய வேண்டிய நிலை உள்ளது.

1. அன்றாட வாழ்க்கையில் இன்றும் நாம் சந்திக்கும் மனிதர்களையும் நிகழ்ச்சிகளையுமே பாடல் வடிவில் சித்திரித்துள்ளது இக்கதைப்பாடல். இதனால் பிற சமுதாயக் கதைப்பாடல்களிலும் மிக நெருக்கமான உணர்வைப் படிக்கும் மக்கள் மனத்தில் இப்படைப்பு தோற்றுவிக்கின்றது.

2. சமுதாயக் கதைப்பாடல்களின் பொருண்மையாக அமைவனவற்றுள் குறிப்பிடத்தக்கதான, இருவேறுபட்ட சாதியினைச் சேர்ந்தவர்களின் காதலால் எழும் பிரச்னை என்பதே இக்கதைப்பாடலின் பொருண்மையாக அமைந்துள்ளது. எனினும், முழுமையாக இந்தப்பாடல் இப்பொருண்மை கொண்டது என்று உறுதியாக உரைக்க இயலவில்லை. காரணம் பிற சமுதாயக்கதைப் பாடல்களில் போன்று இருவேறுபட்ட சாதியினராய இருவர் மனமொத்து காதல் கொண்டதாக இக்கதைப் பாடல் கூறவில்லை.

கதைத்தலைவன் கதைத்தலைவியின் விருப்பத்திற்கு மாறாக, அவளைத் தன் மந்திரசக்தியால் மாயப்பொடி கொண்டு மயக்கியே தன்வசப்படுத்தியதாக இக் கதைப்பாடல் சித்திரிக்கின்றது.

இவ்வாறு தலைவன், தலைவியை மந்திரவசியம் செய்து மயக்கிக் காதலியாக்குதல் மந்திரமூர்த்தி கதை[72] போன்ற சமுதாயக் கதைப்பாடல்களில் உள்ளதுதான் என்றாலும் வசப்பட்டபின் மனமொத்து தாம் வெவ்வேறு குலத்தவர்கள் என்பதனையும் மறந்து ஒருவருக்காகவே இன்னொருவர் என்று பின்னிப் பிணைந்து வாழ்வதாகப் பிற கதைப்பாடல்களில் அமைகின்றது. ஆனால் இக் கதைப்பாடலிலோ கதைத்தலைவனின் செயலால் தன் குல, கோத்திரப் பெருமையெல்லாம் கெட்டு விட்டதே என்று கதைத்தலைவியே அவனைக் குற்றம் சாட்டிப் பேசுவதையும்[73] தலைவனின் மரணத்தின் பின், அவன் கொலை செய்யப்பட்டமைக்கு வருந்தியும் அழுது புலம்பியும் தானும் உடனே உயிர்விடத் துடிப்பதும் இல்லாமல் 'தான் கொல்லப்படப் போகிறோமே' என்று தன் மரணத்துக்காகச் சுயநலநோக்கில் தன்னைப்பற்றி மட்டுமே சிந்தித்து தன் நிலைக்கு மட்டுமே இரங்கிப் புலம்புதலைக்

72. மந்திரமூர்த்தி அல்லது தடிவீரன் கதை (கே.ப.சு. 8440) இதில் கதை நாயகன் நாயகியின் சேலையில் அவளறியாமல் மந்திர உருவங்களை வரைந்து அனுப்ப, அணிந்த அவள்மீது மையலுற்றதாக உள்ளது.

இவளைப்போல ஆண்உருவும் அவளைப்போலப் பெண்உருவும்
ஆண்உருவும் பெண்உருவும் அடுக்கடுக்காய்த் தான்வரிந்தான்
அடிமுந்தியும் மேல்முந்தியும் அணிஅணியாய்த் தான்வரிந்து'' என உள்ளது (இ.ம 10)

73. ''ஏழேழு தலைமுறைக்கும் இழுக்குவந்து நேர்ந்துபோச்சே'' (192)
''குடியைக் கெடுத்தேனே கோத்திரத்தைச் சீரழித்தேன்
பெண்பாவம் கொண்டாயே பொல்லாத முதலியாரே'' (205-206)

C

காண்கிறோம்[74]. இத்தகு நிலைகளினாலெல்லாம் பிற சமுதாயக் கதைப்பாடல்களின் பொருண்மையினின்றும் இக்கதைப்பாடல் பெரிதும் மாறுபட்டுக் காணப்படுகின்றது.

3. இக்கதைப்பாடலின் கரு, கதையமைப்பு, கதை நிகழ்ச்சிகள், அவை அடுக்கப் பட்டிருக்கும் விதம், உச்சகட்டம், முடிவு என்பனவற்றைப் பகுத்துப்பார்க்கும் பொழுது இக்கதைப்பாடல் உயர்குலச்சார்புடையதாக மாற்றப்பட்டிருக்கிறதோ என்ற எண்ணம் எழுகிறது. சான்றுகளாகக் கதைப்பாடலிலிருந்தே பல குறிப்புக்களைத் தர இயலும்.

1. சாதி ஏற்றத்தாழ்வை அகற்றுதல் என்ற நோக்கத்தை உயர்குல, தாழ்குல பெண்-ஆணிடையே எழும் காதலைக் காட்டி வலியுறுத்த வந்த கதைப்பாடல் தன் எண்ணத்தில் தவறியிருக்கிறது. கதைத்தலைவியே தான் உயர் குலத்தவள், தன் குல, கோத்திரப் பெருமை பெரியது என்ற எண்ணமுடையவளாகத் திகழ்ந்தாள் எனச்சுட்டப்பட்டுள்ளது.

2. கதைத்தலைவன் - கதைத்தலைவிக்கிடையே மனமொத்த காதல் இல்லை என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. கதைத்தலைவன் கொண்ட காதலும் உடல் தொடர்பானதே என்பதை வலியுறுத்தும் நிலையில் கதைத்தலைவியின் உடல் வர்ணனையை அடுத்து, கதைத்தலைவன் காதல் கொண்ட செய்தி அமைக்கப் பட்டுள்ளது (130 - 149).

3. கதைத்தலைவன் தன் வீரம், நற்செயல், நற்குணம் என்பனவற்றால் கதைத் தலைவியின் மனம் கவராமல், மாயப்பொடி கொண்டு மயக்கித் தன்வசப்படுத்திய தாக உரைக்கப்பட்டுள்ளது.

4. மணம் செய்து கொள்ளாமலேயே அவளைக் கருவுறச்செய்து, இறுதியில் 'ஓடிவிடலாம் வா... நீ வராவிட்டாலும் நான் சென்று விடுவேன்'[75] என்று சுயநல நோக்குடன் பேசும்-காதலியைக் கைவிட்டோடும் சராசரிக் காதலனாகத் தூண்டி முத்துவின் பாத்திரம் மிகவும் கீழ்நிலைக்கு இறக்கப்பட்டுள்ளது.

5. மேலும் கதைத்தலைவியின் தந்தை, தாயால் ஏழு வயது முதல் சொந்த மகனாகக் கருதி வளர்க்கப்பட்டமை, அவர்களின் பெரு நம்பிக்கையைப் பெற்றமை ஆகிய நிகழ்ச்சிகளை விவரித்து நாயகிக்கு அண்ணன் முறையாக அமைய வேண்டிய கதைத்தலைவன் அக்குடும்பத்தார் அனைவரையும் வஞ்சித்து, நாயகியை நாடுவிட்டு நாடு கடத்தி அழைத்துச் சென்றான் என்று கூறலால் கதையைப் படிப்பவர்கள் தூண்டிமுத்து உண்மையில் கதைத்தலைவனா? அல்லது எதிர்த்தலைவனா? என்று ஐயுறும் அளவுக்கு இப்பாத்திரப்படைப்பு அமைந் துள்ளது.

---

74. வெட்டுப்பட என்தலையில் பிரமன் விதித்தானோ முன்னாளில்
என்னைப்போல் நடந்த பெண்கள் இருக்கலையோ வையகத்தில்
வையகத்திலில்லாத நானும் வன்கொடுமை செய்தேனோ (418-420)

75. ''வாடி பெண்ணே நாமளுந்தான் மலையாளத்துக்குப் போவோம் பெண்ணே
நீயுமே வாராவிட்டால் நானுமே போறேனடி'' (221-222)

6. அதேசமயம் உயர் குலத்தவளான பூரணவல்லிக்கு ஏற்றம் தரும் நிகழ்ச்சிகள் பல, கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளன. ஒரு இடத்திலேனும் பூரணவல்லியும் தூண்டிமுத்துவை விரும்பிக் காதலித்தாள் என்ற செய்தி இல்லை.

கதை இறுதியில் இவளே மக்களால் கோயில் கட்டி வணங்கப்படும், கொடை கொடுத்து விழா எடுத்துப் பூசிக்கப்படும் குறுக்குளாஞ்சி தெய்வமாக ஆனமை விவரிக்கப்பட்டுள்ளது (435 - 634).

பூரணவல்லி குறுக்குளாஞ்சி எனும் ஆண் தெய்வமாக ஆனாள் என்று கதையில் கூறப்பட்டிருப்பதும் அவள் பாத்திரத்துக்குச் சிறப்பு தரும் விதத்தில் வலிந்து புகுத்தப்பட்டுள்ளதோ என்ற சிந்தனையைத் தருகின்றது. காரணம் இறந்த பெண்ணொருத்தி பெண் தெய்வமாக மாறுதலே கதைப்பாடல்களில் கண்டு வரும் மரபாகும். ஒரு பெண் ஆண் தெய்வமாக ஆன மரபுப் பிறழ்ச்சி உயர்குலப் பெண்ணைக் குறுக்குளாஞ்சி என்ற ஆண் தெய்வத்துடன் இணைக்க முயன்ற முயற்சியால் விளைந்ததாகலாம்.

ஒருவேளை தூண்டிமுத்துவே குறுக்குளாஞ்சி என்ற ஆண் தெய்வமாக இருக்க லாம். இது உயர்குலச் சார்புடையோரால் பூரணவல்லியே குறுக்குளாஞ்சி என்ற ஆண் தெய்வமானாள் என மாற்றப்பட்டிருக்கலாம்.

குறுக்குளாஞ்சி தெய்வ வடிவு முழுக்க ஆண் தேவதை உருவையே நினைவுபடுத்து கின்றது. ஆண் தேவதையாகக் கொண்டு அன், அர் விகுதிகளே கதைப்பாடலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தலையிலே குல்லாவுந் தாமரைக்காய் மணியழகும்
பொற்சரிகைத் தலைப்பாவு மங்கே பொன்னாலே பூணுலும் (439-440)

வண்டநல்ல துலுக்கனைப் போல் வந்துவட்டம் போடுதய்யா (459)

என்றுசொல்லிச் சொன்னாரே யங்கே ஏத்ததொரு குறுக்குளாஞ்சி
(531)

காளியுட பக்கத்திலே இருந்தானே குறுக்குளாஞ்சி (569)

என்று அமையும் வரிகள் காணத்தக்கன.

இக்கதை தொடர்பான பிற பிரதிகள் கிடைத்தால் மேலும் பல தெளிவுகள் பிறக்கும் என்பது உறுதி.

இங்குப் பதிப்பிக்கப்பெறுகின்ற மூன்று சுவடிகளும் கதைநிலையிலும் கருத்து வெளியீட்டு நிலையிலும் கலைச்சிறப்பு என்னும் நிலையிலும் பல்வேறு தனித் தன்மைகளைப் பெற்றுத் திகழ்கின்றன. ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரின் அனுபவ

உணர்வு வெளியீடுகளாக அமையும் இம்மூன்று படைப்புக்களும் அவை எழுந்த மண்ணில் வாழ்ந்த எளிய மக்களின் சமுதாய உணர்வினையும் அவர்கள் எழுப்பிய உரிமைக் குரலினையும் மிகச்சிறப்பாகக் கலைப்படுத்தித் தந்துள்ளன. இந்நிலையில் இப்படைப்புக்களைத் தனிமனிதர்களின் கற்பனையிலிருந்து உதித் தவை என்று கொள்ளாமல், ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் ஒட்டுமொத்தமான அனுபவ உணர்வுகளின் வெளிப்பாடுகள் என்று கொள்வதே பொருந்தும். அவ் வர்க்கத்தினரின் உரிமைக்குரலும் அனுபவ உணர்வுகளும் இலட்சிய நோக்கங் களும் காற்றில் கலந்து கரைந்து அழிந்து போகாமல் அவை இப்படைப்புக்களில் கலைப்படுத்தப்பட்டுள்ளன எனலாம்.

சின்னத்தம்பி கதையில் உயர்சாதியினரின் பொறாமைக்குத் தாழ் குலத்தைச் சார்ந்த எளியவன் ஒருவன் இரையாவதைக் காண்கிறோம். மேற்கூறிய சமுதாயக் கொடுமைக்குச் செயலளவில், நடைமுறையில் தீர்வுகாண முடியாத அத்தாழ்குலத் தினர் மாண்டுபோன தங்கள் குலத்தலைவனின் ஆவி, இறையருளின் துணையோடு அபூர்வ ஆற்றல்களைப் பெற்றுக் கொடியவர்களைப் பழிவாங்கி அழித்து அநீதிக்கு முடிவு கட்டுவதாக இக்கதையினைப் படைத்துள்ளனர். இந்நிலையில் இக்கதைப் பாடல் தாழ்குலமாந்தரின் சமுதாய உணர்வு, இலட்சிய வேட்கை ஆகியவற்றின் கலை வெளிப்பாடாக அமைகின்றது.

உச்சினிமாகாளியம்மன் கதைப்பாடலில் மேற்கூறிய உணர்வு சற்று பரந்து விரிந்த நிலையில் வெளிப்படுவதைக் காணலாம். வர்க்கப்போராட்ட உணர்வு இங்கு விடுதலைப்போராட்ட உணர்வாகப் பரிணமித்துள்ளது. இந்தியவிடுதலைப் போராட்ட இலக்கியங்களில் இடம் பெறுவதைப் போன்று கரிய நிறக்காளி நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தும் நயமிகு தெய்வமாகவும் அவர் அல்லவராயின் அவரை விழுங்கி ஆனந்தக் கூத்தாடும் மறச்சினங்கொண்ட தெய்வமாகவும் இப்படைப்பில் சித்திரிக்கப் பெறுகின்றாள். இந்தியக் கலாச்சாரத்தை அழித்த வெள்ளை ஏகாதி பத்தியத்தை ஒழித்துக்கட்ட விரும்பிய இம்மக்கள் அதனைக் காளி தன் அரிய ஆற்றலால் வெற்றிபெறச் செய்து முடிப்பதாக இப்படைப்பில் காட்டியுள்ளனர்.

இறுதிக்கதைப்பாடல் சாதிவேறுபட்டால் எழும் சமுதாயப்பிரச்சினைகளில் ஒரு சிலவற்றை நாட்டுப்புற இலக்கியங்களுக்கேயுரிய தனித்தன்மையில் அணுகியுள்ளது. இங்கு சாதிவேறுபாட்டைப் புறக்கணித்து கணவன்மனைவியாக வாழ்ந்த காதலர் களைச் சாதிவேறுபாட்டைப் பேணிவளர்த்த சமுதாயம் அழித்ததால் ஏற்பட்ட விளைவுகள் கலைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் மேற்கூறிய மூன்று படைப் புக்களும் சமுதாய மாற்றத்தை எதிர்நோக்கிச் செயல்பட முனைந்த எளிய மக்களின் முற்போக்குப் படைப்புக்களாக அமைகின்றன. இவை கலைச்சிறப்பு மட்டும் கொண்ட இலக்கியப் படைப்புக்களாக அமையாது, சமுதாய முன்னேற் றத்தை விரும்பிய மக்களின் இலட்சிய எண்ணங்களையும் சமுதாய உணர்வு களையும் சமுதாய அநீதியை எதிர்த்து அவர்கள் எழுப்பிய உரிமைக் குரலினை யும் ஏந்திவரும் ஆற்றல் இலக்கியமாகவும் அமைகின்றன எனலாம்.

## A System of Transliteration of Tamil

### VOWELS

| Short | | Long | |
|---|---|---|---|
| அ | a | ஆ | ā |
| இ | i | ஈ | ī |
| உ | u | ஊ | ū |
| எ | e | ஏ | ē |
| ஒ | o | ஓ | ō |

| | |
|---|---|
| ஐ | ai |
| ஔ | au |

### CONSONANTS

| Hard | | Soft | | Medial | |
|---|---|---|---|---|---|
| க் | k | ங் | ṅ | ய் | y |
| ச் | c | ஞ் | ñ | ர் | r |
| ட் | ṭ | ண் | ṇ | ல் | l |
| த் | t | ந் | n | வ் | v |
| ப் | p | ம் | m | ழ் | ḻ |
| ற் | ṟ | ன் | ṉ | ள் | ḷ |

# சின்னத்தம்பி கதை

# THE STORY OF CIṈṈATTAMPI

# சின்னத்தம்பி கதை

நாடுநல்ல நல்லநாடு நாவலர்கள் புகழும்நாடு
தேனிருந்து மழைபொழியும் சிறந்த வேப்பிலாங்குளம் நாடதிலே
சாதியிலே ஈனசாதி சக்கிலியப் பகடைச்சாதி
ராமனல்லோ பகடையுடன் அவன்மனைவி பூலுடையாள்
பாலாலே குறைவுமில்லை அவர்க்குப் பாக்கியத்தில் குற்றமில்லை
இந்த நல்லோ படியாக இருந்துவரும் நாளையிலே

## குழவிப் பேறின்றி வருந்தல்

மன்னவர்க்கும் மங்கையர்க்கும் மனவருத்த முண்டுமையா
மைந்தனில்லா வன்கொடுமை-பகடைக்கு-மனவருத்த முண்டாச்சு
அந்தநல்ல வாட்டமதை அறிந்துமே பூலுடையாள்
சொல்லலுற்றாள் மன்னரிடம் சோதிமுத்து வாய்திறந்து
மன்னவரே என்கணவா-நீர்-வருத்தப்பட வேண்டாமையா
நான்தான் மலடானேன் நாட்டிலுள்ளோர் தானகைக்க
கையாலே வளத்தெடுத்த கரும்பூச்சையுமே[1] தான்மலடு
ஈனாக் கிடாரியான எருமையுமே தான்மலடு
காராம் பசுவின்கன்று கிடாரியுமே தான்மலடு
என்தரத்துப் பெண்டுகளும் ஏழுபிள்ளைத் தாயானார்
பிள்ளையில்லா வாசலென்றால் பிச்சைகூட வாங்கமாட்டார்
மைந்தனில்லா வாசலென்றால் வரக்கூட மாட்டார்கள்
ஆரை யடித்தோமோ அநியாயஞ் செய்தோமோ
பிச்சைக்கு வந்தவரைப் பின்னேவரச் சொன்னோமோ
பட்டறையில் நெல்தனிலே பதரைக் கலந்ததுண்டோ
அரைவட்டி வாங்கினோமோ அநியாயஞ் செய்தோமோ
மழைபெய்த முத்தத்திலே மண்ணளைய மைந்தனில்லை
கொள்ளிக்கு மைந்தனில்லை குடமுடைக்கப் பாலனில்லை
மலடன் மலடியென்று வையகத்தோர் நகையாமல்
குலவிருத்தி யாகும்படி-யென்-குணமுள்ள பர்த்தாவே[2]

---

1. பூச்சை - பூனை
2. பர்த்தா - கணவர்

# THE STORY OF CIṈṈATTAMPI

Famed is Vēppilāṅkuḷam,
A land of plenty bless'd and prospering,
Where lived Rāmappakaṭai with Pūluṭaiyāḷ his wife;
Cobblers they were, the lowly and the despised
Contented and happy yet, far not from fortune's smile.
Blessed not with children they were in sorrow profound.
Came from Pūluṭaiyāḷ the goodly wife
Words sweet and consoling:
"Grieve not my lord, grieve you not my husband,
My womb's gone barren, a shame to me,
Barren is the black cat that's my pet,
So is our buffalo sterile that it is,
Our cow too hasn't calved a choice breed though.
Women of my age, lo, fertile are their wombs,
No beggars at the gate curs'd is the woman sterile!
No boy in the house, turn not their eyes ever!
Have we beaten anybody, have we done things unjust?
Have we delayed alms to the beggars?
Have we added empty corns in a barn of paddy?
Have we lent money on interest unfair?
Denied we're of a boy to play at the frontyard muddy.
No son to light our funeral pile,
None to break the pot at our grave.[1]
Let none call us sterile, unliving,
Let our kindred sprout unwithered,

---

1. A typical Hindu funeral rite The son would go round the corpse of his deceased parent kept at the grave-yard/crematorium with a pitcher of water on head. When he completes one round a hole would be struck in the pitcher. At the end of the second round a second hole would be made. With water dropping from the pitcher, he would go round the corpse a third time by the end of which it would be broken to pieces

இரண்டாவது கலியாணம் நடத்திக்கொள்ளும் என்துரையே
வாடிவாடி பெண்கொடியே மடமயிலே பூலுடையாள்
கோடிபெண் கட்டினாலும்-உன்-குணம்போலே கிட்டுமோடி
மாண்டுநான் மடிந்தாலும் மற்றொருபெண் கட்டறியேன்
மங்கையரே உன்னைத்தவிர மறுபெண்கள் தாயல்லவோ

## காரணமும், செய்த பரிகாரமும்

மைந்தனில்லாத் தோஷத்திற்கு மறையவரைத் தான்வருத்தி
செய்யும்நல்ல பரிகாரம் செய்துபார்ப்போம் பெண்கொடியே
மன்னவரும் மங்கையரும் மறையவர்க்கு ஆளனுப்பி
பஞ்சாங்க சாஸ்திரங்கள் பரல்[3] எடுத்து வந்திடவே
கைகூப்பித் தெண்டனிட்டுக் காணிக்கை தானும்வைத்து
ஆராய்ந்து பார்த்துமே அறிக்கைசெய்ய வேணுமையா
நல்லதென்று அய்யருமே நட்டசாதகம் தான்வருத்தி
பஞ்சாங்க சாஸ்திரங்கள் பரல்பரத்திப் பார்க்கையிலே
சர்ப்ப சாந்தி செய்யவேணும் தானதர்மஞ் செய்யவேணும்
இப்படிநீ செய்தாயானால் இனிக்குழந்தை கிட்டும்பிள்ளாய்
அப்படிநீ செய்யுமென்று அவர்போனார் சொல்லிவிட்டு
மன்னவரும் மங்கையரும் மனம்ஒன்றாய்த் தான்கூடி
காதத்துக் காதவழி கல்க்கிணறு கெட்டிவைத்தார்
தூரதுலை போறவர்க்குச் சுமைதாங்கி நாட்டிவைத்தார்
சத்திரங்கள் தண்ணீர்மடம் தகையடங்கச் செய்துவைத்தார்
சாலைக்குச் சாலையெங்கும் சாலைமரம் தழைக்கவைத்தார்
பங்குனி மாத்தையிலே பகல்வழி நடப்போர்க்கு
பாதரட்சை[4] குடையுடனே பதிவாய்க் கொடுத்துவைத்தார்
அகுதிபர[5] தேசியர்க்கு அன்னதானம் செய்தபின்பு
சர்ப்பசாந்தி தானுஞ்செய்து சந்தோசமா யிருக்கும்நாளில்

3. பரல் - அஷ்டவர்க்கத்தில் நற்பலனைக் கணக்கிடுதற்கு உபயோகிக்கும் கல் முதலியன.
4. பாதரட்சை - பாதரக்ஷையாய செருப்பு
5. அகுதி - அகதி

Get you remarried, O my lord virtuous".
"O my Pūluṭaiyāḷ, O my goodly dear!
Would there be one your virtue equalling?
Think I wouldn't of another woman, never will I do,
Wouldn't other women be to me mother-like, O my wife?
Let's consult a brahmin instead
And do acts right in expiation, O my woman".
Sent was the word soliciting
And came the holy man almanac and beads in hand.
They received him with regards meet and oblation too,
And said, "O the holy! tell us of our fortune to progeny".
The brahmin in good faith read their horoscope,
Consulted their stars and counted the beads
And said, "*carppa cānti*[2] should you do and acts of charity too
And bless'd you be with progeny sure".
Rāmappakaṭai and Pūlāḷ, one in heart
Acted on the brahmin's word in faith unfaltered;
Sunk wells protected on highways at distances right,
Built sheltered platforms for travellers weary,
Choultries and sheds for water quenching the thirsty,
Saw the highway cool with shades of trees along
Gifted in humility footwear and umbrellas
To travellers exposed to sun scorching in *Paṅkuṉi*[3],
Fed the holy, the poor and the orphaned
And performed *carppa cānti* in faith devout.

2. Taking their barrenness as due to the curse of the serpent, the couple would go in for serpent-worship. Propitiated, the serpent would withdraw its curse and the couple would be blessed with children. A typical Hindu belief.

3, The twelfth month of the Tamil Calender (March into April)

### பெண் குழந்தை பிறத்தலும், வருத்தமும்

அரனுடைய கிருபையினால் அந்தமாஸ்தைக்[6] குளிப்புநின்று
மறுமாதம் பூலுடையாள் மயக்கங்கொண்டா ளிறக்கமின்றி
மூன்றுநல்லோ மாத்தையிலே முகமதிலே களைகொடுத்து
நாலாம் நல்லோ மாத்தையிலே நடைகடக்கு நாளையிலே
ஆபரணந் தான்பூட்டிப்-பூலாளை-அலங்கரித்து உறமுறையார்
ஒட்டகைத் தடம்போலே-செனை-யிட்டலிகள்[7] மோதகங்கள்
ஆனை நல்ல தடம்போலே அப்பளங்கள் அரியோதரம்
அதிரச முறுக்குடனே அடைவடை தேன்குழலும்
கொண்டுவந்து இறக்கினார்கள் குணமுள்ள பூலாளுக்கு
அஞ்சுநல்லோ மாத்தையிலே-பூலாள்-அங்கமெல்லாந் தங்கநிறம்
சூல்க்காப்பு சூல்வளையல் சுற்றத்தார்கள் தானடுக்கி
ஆறாம்நல்லோ மாத்தையிலே அன்னங்கொண்டு கொடுப்பாரும்
ஏழாம்நல்லோ மாத்தையிலே எல்லோரு மறிந்திடவே
ஸ்ரீமந்தக் கலியாணம் சிறப்பாகச் செய்தனரே
எட்டுநல்லோ மாத்தையிலே-பூலாளுக்கு-ஏப்பிளைப்பு உண்டாகி
ஒன்பதாம் மாத்தையிலே-பூலாள்-தின்பதுவைத் தான்மறந்து
பத்துநல்ல மாத்தையிலே பிரசவ வேதனையால்
மருத்துவத்தி வந்திருக்க மற்றுமுள்ளோர் தாமிருக்கப்
புலப்பமே பெரிதாகிப் புலம்புறாளே பூலாளும்
ஐயோநா னென்னசெய்வேன் ஆத்தாமாரே ஏதுசெய்வேன்
வாணாள்தான் போகுதையோ நான்வன்குலையாய் மாளுறனே
இனிப்பிழைக்கப் போறதில்லை என்கிறாள் பூலாளும்
காட்டேரி யம்மாளே-உனக்குக்-கடாவெட்டிப் பொங்கல்வைப்பேன் வைப்பேன்
மண்டைக்காட்டு அம்மனுக்கு-நான்-கொண்டைக்கெட்டு செய்து வைப்பேன்
பகவதி யம்மனுக்குப் பதிவுவிளக்குப்[8] போடச்செய்வேன்
வேலா யுதனாரே-உமக்கு-வெள்ளிப்பரி செய்துவைப்பேன்

---

6. மாஸ்தை - மாத்தை அதாவது மாதம்

7. செனையிட்டலிகள் - பருத்த இட்டிலிகள்

8. பதிவுவிளக்கு - நாடோறும் ஏற்றிவைக்கும் விளக்கு

Araṉ[4] blessing, stopped was Pūḷāḷ's menstruation;
She did suffer the month following sleepless nights and swooning
In months three a lustrous glow on her face,
In months four was she seen in steps wearied
When relations saw her adorned with ornaments fine,
And delicacies plenty they brought to virtuous Pūḷāḷ:
*Idlies* bulging like a camel's foot-prints and *mōtakam*[5]
*Appalam*[6] resembling elephant's foot-prints and *ariyōtaram*[7]
*Atiracam*[8], *murukku*[9], *aṭaivaṭai*[10] and *tēṅkuḻal*[11];
In months five was she in golden hues full
When the kin brought her anklets and bangles meet,
In month sixth did they bring food to her taste,
In month seventh was held the pregnancy ceremony
In splendour great and to the knowledge of all,
Month eight found Pūḷāḷ in exhaustion,
Ninth it was and appetite she'd lost,
In month tenth did Pūḷāḷ suffer labour pain;
Came the midwife, came also the neighbours.
Pain intense, intenser it became.
"Alas! what can I do, O my people what can I do?
Kills me the pain, O dying I am!
Dying in pain unbearable" cried Pūḷāḷ,
Cried she in agony, 'O Mother Kāṭṭēri![12]
A feast of boiled rice with the meat of a goat
Offer you I would.
O my Maṇṭaikkāṭṭu Ammaṉ![13]
Adorn your hair-knot I would with ornaments;
O mother Pakavati Ammaṉ![14]
Illuminate your shrine I would with ever-burning lamps;
O Lord Vēlāyutaṉ![15]
Offer you a horse silver I would".

4. Śiva. 5, 6, 7 8, 9, 10, 11. Typical South Indian delicacies.
12. A minor Hindu deity
13. A minor deity at Maṇṭaikkāṭu,
14. A Hindu deity.
15. Murukaṉ (with a lance in hand).

பூலுடையாள் புலம்புவதைப் புத்தியுள்ள மருத்துவத்தி
தேறுதலைச் சொல்லியங்கே திடப்படுத்தி இருக்கையிலே
பிறந்தது சிரசுநோக்கிப் பெண்ணாகப் பிறந்ததுவே
பார்த்தாளே பூலுடையாள் பரமனே கர்த்தாவே
இதற்கோ தவமிருந்தேன் இத்தனைக்கோ பேரெடுத்தேன்
ஊருக்குப் பெற்றெடுத்தேன் உத்தபிள்ளை எனக்கிலையே
பூலாள் புலம்புறதைப் புத்தியுள்ள மருத்துவத்தி
பெண்பிறந்த வயிறுதனிலே பிள்ளையுண்டு கண்டாயே
மயங்காதே பூலுடையாள் தியங்காதே மங்கையரே
வாய்பொத்திக் குரலமர்த்தி மருத்துவத்தி நடந்தாளே
பதினாறு நாள்கழித்து பூலாள் பதிவா யிருக்கையிலே

**ஆண் குழந்தை வேட்கையினால் செய்தவை**

எடுத்தாள் விரதமது ஏகாதேசி துவாதேசி
பவரணைப்[9] பொங்கல்வைத்துப் பரதேசிக் கீந்திடுவாள்
சாதம் தரையில்வைத்துத் தலைசாய்ந்து கவிழ்ந்துதின்பாள்
சனிவாரந் தோறும் தப்பாமல் விரதம்வைப்பாள்
நாலுஅஞ்சு ஆறுஏழு வருஷமதாய்ப் பலனில்லாமல்
கண்டகண்ட கோவிலெல்லாம்-பூலாள்-கையெடுத்துக் கும்பிடுவாள்
நேராத கோவிலுக்கு நெய்விளக்கு ஏத்திவைப்பாள்
இப்படித் தவமிருந்து ஏற்றபிள்ளை கிடையாமல்
மன்னவரும் மங்கையரும் வாழ்ந்துவரும் நாளையிலே

**கிருஷ்ணதாசர் வருகையும், வாக்கும்**

கேதாரந் தன்னில்வாழும் கிருஷ்ணதாசர் பிராமணர்தான்
பங்குனி மாஸ்தையிலே அவர்பகல்வழி நடந்ததினால்

9. பவரணை - பௌர்ணமி

Went thus the wailings of Pūtāḷ.
The midwife knowledgeable that she was
Comforted Pūlāḷ to spirits animate,
And born to Pūlāḷ was a child female.
A female born, Pūlāḷ would complain:
"O my Lord, O my Father!
Are all my sufferings, pain and penance
For this, a female child,
One that would leave me?
One for me won't I have?
Words reasonable did the midwife speak:
"The womb that bore a female
Another that it would bring too,
Grieve not my lady cease your wail."
In silence deliberate did the midwife leave.
Gone were days ten and six
To see Pūlāḷ in state composed.
Begin she did austerities long
On days eleventh[16] and twelfth[17];
Offerings of rice she made on the full moon day
And wayfarers and ascetics fed.
Rice on floor she would spread and eat it kneeling,
Fasting she would do on Saturdays unfailing,
Years four, five, six and seven
Passed as they did fruits unattending.
Pūlāḷ raised her hands in worship
At shrines here, there and everywhere,
Lamps ghee-fed she lit for temples unvisited
Unanswered still her entreaties remained.
Passing were their days uncheering;
There came Kiruṣṇatācar a brahmin from Kētāram.
Journeying on foot to Kaṇṇiyakumari,
Braving the hot sun of *Paṅkuṉi*,

16. The eleventh day after the new moon as also after the full moon.
17. The twelfth day. Both these days are considered auspicious.

பாதத்திலே கொப்பளமாய்ப் பழுத்தங்கே சலமோடி
காலிலுள்ள கொப்பளத்தில் கந்தைத்துணி தானுஞ்சுத்தி
கன்னிமா குமரிதேடிக் கால்நடையாய்த் தானடந்து
வேத்து விறுவிறுத்து வேப்பிலாங் குளத்தில்வந்து
ஆலமரம் நிழலதிலே அதிலிருக்கும் வேளையிலே
பூலாள்நல்லோ குடமெடுத்துப் புறப்பட்டாளே சலமெடுக்க
விளையாட்டுப் பாலர்நின்று சலத்தில் விளையாடக்கண்டுமே
என்தரத்துப் பெண்டுகள்தான் ஏழுபிள்ளைத் தாயானார்
பூலுடையாள் புலம்புறதைப் புனலருந்திப் பிராமணரும்
வாரும்பெண்ணே பெண்கொடியே மனவருத்தப் படுவானேன்
பொன்னில்லையோ பொருளில்லையோ புத்திரர்கள் தானில்லையோ
உன்னுடைய கவலையதை உண்மையாக உரைத்தாயானால்
எக்கவலை யானாலும் இணங்கவைப்பேன் பொற்கொடியே
பங்குனி மாத்தையிலே பகல்வழி நடந்ததினால்
பொக்களமாய்ப் பொக்கிளித்துப் பாதம்புண்ணாக நோவதினால்
பார்த்ததற்குப் பாதரட்சை பைங்கொடியே நீகொடுத்தால்
ஆலுபோல் தழைத்திடுவாய் அறுகதுபோல் வேரூணி
மூங்கில் அன்னசுத்தம்[10] முசியாமல்[11] வாழ்ந்திடுவாய்
இவ்வார்த்தை தான்கேட்டு ஏக்கம்விட்டுப் பூலாளும்
பாதரட்சை தானெடுத்துப் பர்த்தாவைக் கூட்டிக்கொண்டு
வந்திருக்கும் பிராமணரை வந்துகண்டா ரிருபேரும்
மைந்தனில்லாத் துயரமதை மறையவர்க்குச் சொல்லிநின்றாள்
சொல்லிநிற்கும் வேளையிலே சொல்லச்சொன்னார் லக்கமதை
பன்னிரெண்டில் தான்கழித்துப் பார்க்கையிலே குணமேகண்டு
அழகியநம்பி கோவில்சென்று அருந்தவமாய் ஒருமண்டலம்[12]
இருப்பாளே யாமாகில் இனிக்குழந்தை கிடைக்குமடா
என்றுசொல்லிப் பிராமணரும் எழுந்திருந்து நடக்கலுற்றார்

### தவமிருத்தலும், ஆண்குழந்தை பிறத்தலும்

மன்னவரும் மங்கையரும் மகிழ்ந்திருந்து ஓடிவந்து
தவத்துக்கு வேண்டுவகை தானெடுத்துக் கையில்கொண்டு

---

10. சுத்தம் - சுற்றம்

11. முசியாமல் - முடிவுறாமல்

12. ஒருமண்டலம் - 40 முதல் 45 நாட்கள் கொண்ட கால அளவு

Boils in his feet bursting oozing pus,
Cover them he did with rags;
Sweating, exhausted he arrived at Vēppilāṅkuḷam
And sat resting under a banyan shade.
Pitcher on head Pūlāḷ came
Boys playing in the water there made Pūtāḷ rave:
"O the women of my age have children seven!"
Came the words comforting
From the brahmin by the pond!
"Come here O lady graceful!
What's it that grieves you?
Penniless, unpropertied or barren?
Speak out your care frank and true
Get you relieved I could be it whatever;.
Walking as I did in *Paṅkuṉi*'s heat,
I've my feet blistered paining.
Get me footwear O lady fair
And prosper you will!
Branching as banyan, rooted as grass
With relations unending bamboo-like".
Woe begone, Pūlāḷ got him footwear
She went to the brahmin her husband accompanying.
They spoke of their life bereft of a son.
The holy man asked them to spell a number;
Subtracting it from number twelve
He fixed their fortune real:
"Blessed you will be with a son
If penance strict for a *manṭalam*[18] you perform
At Lord Aḷakiya Nampi's[19] shrine."
These words uttered the brahmin on his pilgrimage left.
Exultant the man and his wife came running for their house
Things for Lord's worship ready in hand

---

18. A course of about 40-45 days

19. Tirumāl seated at Tirukkuṟuṅkuṭi

வண்டியிலே தான்போட்டு வந்துசேர்ந்தார் நம்பிகோவில்
நம்பியாற்றில் தீர்த்தமாடிப்-பூலாள்-திருநீற்றுப் பூச்சும்பூசி
மாயவரைத் தானினைந்து மன்னவரைத் தெண்டனிட்டு
என்னிரக்கம் தான்பார்த்து ஈடேற்ற வேண்டுமையா
அன்னந்தண்ணீர் இறக்கமற்று அழகியநம்பி சிந்தையாக
ஸ்ரீராமா ராமாவென்று சிந்தித் திருக்கையிலே
ஒருவாரத்திற் குள்ளாக உண்மையுள்ள மாயவரும்
அருந்தவசு செய்கிறதை அறிந்தாரே அழகியநம்பி
தொண்ணூறும் பத்துஞ்சென்ற துவண்டநல்ல கிழவனைப்போல்
அருந்தவசாய் நிற்குமந்த அண்ணிபூலாள் முன்புவந்து
பூலாளே பூலாளே உனக்குப் புத்திரன்தான் வேணுமோடி
தீர்த்தமும் திருநீறும் பூலாளுக்குக் கொண்டுவந்து
அழகியநம்பி அர்ச்சகர்நான் அதனாலே கொண்டுவந்தேன்
தீர்த்தந் திருநீறு தேவப்பிரசாதம் வாங்கிஉண்டாள்
அர்ச்சகரை அனுப்பிக்கொண்டு அவள்பர்த்தாவுடன் பூலாளும்
மன்னவரும் மங்கையரும் வழிகூடி ஊர்தேடி
வேப்பிலாங் குளமதிலே வீற்றிருக்குங் காலத்திலே
அதுவே குளியாக அருமையுள்ள பூலாளும்
அம்மாதஞ் சென்றபின்பு அடுத்தமாசம் பிறந்ததுவே
செம்மானம்[13] போலேயங்கே திரேகமெல்லாம்[14] பொன்னிறமாய்
மூணுநாலு அஞ்சுஆறு ஏழுஎட்டு ஒன்பதுபத்து
பத்துநல்லோ மாஸ்தையிலே பாலகனைப் பெற்றெடுத்தாள்
ஆண்குழந்தை பிறந்ததென்று அறிந்துராமப் பகடையுமே
விரைவுடனே சொர்ணங்களும் வெல்லங்கள் பழத்துடனே
மருவுசர்க்கரை கலந்து மகிழ்ந்தங்கே தானமிட்டான்

**சீராட்டும், தாராட்டும்**

பிள்ளைத்தொட்டில் செய்யச்சொல்லிப் பிரியமுள்ள கம்மாளர்
பால்மரத்தால் தொட்டிலும் பசும்பொன்னால் சங்கிலியும்
தடங்கலொன்றும் இல்லாமலே தக்ஷணமே[15] செய்துவைத்தார்

13. செம்மானம் - சிவந்தவானம்

14. திரேகம் - உடல்

15. தஷணமே - உடனடியாக

Depart they did by a cart
After a dip in Nampi's river holy
With the ash sanctified Pūlāḷ smeared her forehead
Meditate she did on Lord Māyavaṉ[20]
Knelt at her man's feet
And offered her prayer soliciting,
"Pity my state O God realize my yearning."
Food and water Pūlāḷ forgot
Found her heart full with the Lord
And muttered His name 'Sri Rama, Sri Rama'.
Hardly did a week pass
When manifested His grace unfailing
(Her prayer reaching Lord Aḻakiya Nampi).
A ripe old man of years ten and ninety
He did present before *Pūlāḷ* in penance rigorous
Bringing with him water and ashes sacred:
"Pūlāḷ, O Pūlāḷ a child do you yearn for?
These I've brought for you
The priest of Aḻakiya Nampi I am" he said.
Water and ashes holy and food divine Pūlāḷ had.
Bidding farewell to the priest
Pūlāḷ with her husband set out on their way home.
At home they had been there,
Found in conception was Pūlāḷ unspotted
A month passing golden sky like her complexion turned.
Months passed in succession quick
Three, four, five, six, seven, eight, nine, ten
In month ten was born to her a boy;
Father of a male Rāmappakaṭai rejoicing
Gave away in charity things precious
With jaggery, fruits and sugar fine.
Placed were orders for cradle
And carpenters swift made cradles of tender wood
With chains of fine gold.

20. Tirumāl (of dark complexion)

பிள்ளைதன்னைத் தொட்டிலிட்டுப் பெற்றெடுத்த பூலாளும்
சந்தோச மகிழ்ச்சிகொண்டு தாராட்டுப் பாடலுற்றாள்
கண்ணே உறங்குறங்கு கண்மணியே என்மகனே
மின்னலைப்போல் மேனியனே மேகவர்ணா கண்ணுறங்கு
பொன்னே நவமணியே பூலோக சுந்தரமே
தவத்தினால் வந்துதித்த தற்பரனே கண்ணுறங்கு
எங்கள் குடிக்கு இளவரசாய் வந்துதித்த
சிங்கப் பெருமானே செல்வனே கண்ணுறங்கு
மலடன் மலடியென்று வையகத்தோர் ஏசாமல்
பிள்ளைக்கலி தீர்க்கவந்த பெருமானே கண்ணுறங்கு
பதினாறாம் நாளையிலே பரதேசிக்கு அன்னமிட்டு
நேர்ச்சைசெய்த கோவிலுக்கு நேர்த்திக்கடன் தீர்த்துவைத்து
**சின்னத்தம்பி** என்றுபெயர் செப்பினார்கள் மூன்றுதரம்

**சின்னத்தம்பி கல்வியும், பிறபயிற்சிகளும்**

ஒருவயசு-ஆனவுடன் அதற்குஉத்தபிள்ளை யுடன்கூடி
சிறுதேரும் தானுருட்டித் தெருவில்விளை யாடலுற்றான்
மூன்றுநல்ல வயததிலே அறிவுபள்ளி ஓதவைத்து
பத்துநல்ல வயததிலே பலசிலம்பம் படிக்கவைத்து
பன்னிரண்டாம் வயததிலே பரியேறப் படிக்கவைத்து
ஆனையேத்தங் குதிரையேத்தம் அதுபடித்து முடிந்தவுடன்
மாயவித்தை குறளிவித்தை மந்திரத்தால் ஜெயிக்கும்வித்தை
கண்கட்டு வித்தைகளும் கற்றறிந்தான் சின்னத்தம்பி

**விலங்குகளின் கொடுமையும், வேட்டைக்காரர் அச்சமும்**

களக்காட்டு மலையதிலே கடுவாய்புலி சல்லியமும்[16]
பணகுடி மலையதிலே பன்னியுட துன்பங்களும்
ராஜாதி ராஜாக்கள் நகரிலுள்ள தலைவர்களை
மிருகங்களை ஒடுக்கச்சொல்லி விளம்பரஞ் செய்ததிலும்
மலையேறி வேட்டையாட மாட்டாமல் வேட்டைக்காரர்
பயந்தங் கிருப்பதுவைப் பார்த்தறிந்து சின்னத்தம்பி
பதினைந்தாம் வயததிலே பருவமுள்ள காலத்திலே

---

16. சல்லியம் - தொந்தரவு

The mother ecstactic laid the child in cradle
And lullabies sang.
"Sleep my son, sleep O the apple of my eye!
Sleep my son of body lightning like and of cloud's hue!
Sleep my son golden gems nine like, the beauty of the earth
The fruit of our penance, our lord divine!
Sleep my son the prince of our line
Of stuff lion's like my heart's dear!
Sleep my son lordly
Come you've to see our barrenness cursed out!"
The day sixteenth,
Fed were the pilgrims and wayfarers
Vow to the gods met in full,
Named the boy Ciṉṉattampi, utter they did thrice.
One year old with his equals the boy was
Drawing little carriages in the street,
Three found Ciṉṉattampi in school,
Ten he was and trained in martial arts,
Taught to him was horse riding in years twelve
Elephant riding and charioteering too.
Followed then lessons
In occult, alchemy and hypnotism
And magic, witchcraft and sorcery.
At Kaḷakkāṭu hill were the hyenas
And wild hogs at the Paṇakuṭi hill
Terror they did strike in people and damage too.
The rulers issued orders public to local chiefs,
And sent were the hunters to keep them contained.
Terror-struck the hunters dared not to the hills.
Ciṉṉattampi seeing, years fifteen he was though

## பூச்சிநாய் வாங்கல்

பூச்சிநாய்[17] வேணுமென்று ராமப்பகடையிடம் சொல்லலுற்றான்
பகடையுந் தான்கேட்டுப் பத்தினியாள் பூலாளிடம்
பெண்ணேபெண்ணே பூலாளே பேடைநல்ல இளமயிலே
பூச்சிநாய் மைந்தனுக்குப் போய்வாங்கி வரவேணும்
சிப்பிப்பாறை போயிநானும் சென்றுவாரேன் பூலாளே
பூண்கட்டிக் கம்பெடுத்துப் பூலாளை அனுப்பிவிட்டு
தெருவிலே வாரபோது சின்னத்தம்பி ஏதுரைப்பான்
பூச்சிநாயின் வரலாற்றைப் புகலுகிறேன் கேளுஅப்பா
நாலுகாலு வாலும்வெள்ளை நாக்குநீளங் கறுப்புமுண்டு
மூஞ்சிநீளம் முன்கறுப்பு முன்புறத்தில் வெள்ளையுண்டு
சிங்கத்தின் வயிறதைப்போல் திரேகமெல்லாஞ் சிகப்புமுண்டு
காதுரெண்டு மடங்கியிருக்கும் கடுவாய்போல் பல்லுமுண்டு
மைக்கண்ணும் வீரப்பல்லும் மான்போலே ஓட்டமுண்டு
இவ்விதக் குறிப்பறிந்து எனக்குவாங்கி வரவேணும்
சொன்ன அடையாளப்படி-பூச்சிநாய் - சுவாமிநாயக்கர் வீட்டிலுண்டு
ஆயிரம்பொன் ஆனாலும் அப்பாநீ வாங்கவேணும்
என்றுசொன்ன வேளையிலே பிறப்பட்டானே ராமப்பகடை
நெல்வேலி யூர்தாண்டி நேர்வடக்காய் கயத்தாறுபோய்
வானரம்பட்டி வழிகூட்டி வந்துசேர்ந்தான் சிப்பிப்பாறை
சுவாமிநாயக்கர் வீட்டில்வந்து-சின்னத்தம்பி-சொன்ன குறிப்பறிந்து
நாயின்விலை கேட்கையிலே நாயாயிரம் பொன்னுயென்றான்
அண்ணாசுவாமி நாயக்கா அடுத்தவிலை சொல்லுமென்றான்
ஒரேவிலை சொல்லுகிறேன் ஓராயிரம் பொன்கொடுத்தால்
பூச்சிநாய் நான்தருவேன் இல்லாதேல் போய்விடணும்
ஆயிரம் பொன்னதை அவிழ்த்துக் கொடுத்துஅப்போ
பூச்சிநாயைக் கையில்வாங்கிப் புறப்பட்டான் ஊர்தேடி
சிப்பிப்பாறை தன்னைவிட்டுச் சீக்கிரம் கயத்தாறு வழி
தச்சநல்லூர் தான்தாண்டி தாழவூத்துத் தான்கடந்து
வீற்றிருந்தான் பாதைகூடி வேப்பிலாங் குளத்தில்வந்தான்
ஊருவந்து மைந்தனிடம் ஒப்பிவித்தான் பூச்சிநாயை

17. பூச்சிநாய் - கறுப்பும், வெள்ளையுமான பயம் தரும் நாய்.

Asked of his father a hound for himself,
Pakaṭai called his wife virtuous and to her spoke:
"O my good lady, fair and blooming!
Going I'm to Cippippāṟai
A hunting dog to buy for our son."
As he walked into the street with a stick a ferrule fastened on,
There came Ciṉṉattampi to tell his father:
"Father of this hound's kind I'll tell you,
Four-legg'd it is, white-tailed, long-tongued blackish too,
Forehead long, black at the front a little white too,
Reddish all over the complexion of a lion's belly like,
Folded are its ears, teeth like hyena's
Such are its marks,
Found it is at Cuvāmi Nāyakkar's house
Get me sure, O father
Be it a thousand coins".
Hearing his son Rāmappakaṭai set out.
The way long and winding
Went past Neyvēli, crossed Kayattāṟu straight north
And arrived at Cippippāṟai off Vāṉarampaṭṭi.
The dog right of Ciṉṉattampi's words
He found there at Cuvāmi Nāyakkar's house
And asked of its worth in cash.
"Coins four thousand" came the reply.
"Tell me a price lower, O Cuvāmi Nāyakkar kind"
"A thousand coins, no more of bargain,
Else back you take your way".
Final were the words of Nāyakkar.
Pakaṭai opened his bag and paid coins one thousand
And homeward he set out with the hound.
Walked past Taccanallūr and Tāḷaiyūttu thro' Kayattāṟu,
Arrived at Vēppilāṅkuḷam off Viṟṟiruntāṉ road.
Pakaṭai handed the hound to his son worthy.

## வேட்டையாடி விலங்குகளைக் கருவறுத்தல்

சந்தோஷம் பொங்கியேதான் தமுக்கடித்தான் சின்னத்தம்பி
களக்காட்டு மலையதிலே கரடிவேட்டை யாடவேணும்
பணகுடி மலையதிலே பன்னிவேட்டை யாடவேணும்
புலிகரடி கடுவாயும் பிடித்தடைத்து வரவேணும்
நாளைத்தினம் வேட்டையென்று நகரிலுள்ளோர் தாமறிய
பக்கத்தில்உள்ளோர் அறியப் பறையடித்தான் சின்னத்தம்பி
அப்போது வேடுவர்கள் அநேகர்வந்து கூடினார்கள்
படைத்தலைவன் சின்னத்தம்பி பார்த்துமே அந்நேரம்
கச்சைநல்ல வரிந்துகட்டிக் கருங்கச்சைச் சுங்கல்விட்டு
சுண்டுவில்லும்[18] வலுதடியும் சுருக்குள்ள வல்லயமும்[19]
கட்டாரியும் சமுதாடும்[20] கைக்கத்தி கேடயமும்
ஆயுதங்கள் கையிலெடுத்து அன்னையிடம் ஏதுசொல்வான்
அம்மாஅம்மா என்தாயே ஆதரவாய்ச் சொல்லக்கேளு
வேட்டைக்கிப் போய்வாரேன் விடைகொடம்மா மாதாவே
என்றுகேட்ட வேளையிலே ஏதுசொல்வாள் பூலாளும்
மலைவேட்டை யாடிநீயும் மலைத்தண்ணீர் புசித்தாக்கால்
உன்னுடம்புக் காகாது உத்தமனே சின்னத்தம்பி
கரடிபுலி காட்டானை கடுவாய்கள் மெத்தவுண்டு
எதிராடிச் சண்டையிட்டால் எவ்விதமாய் வந்திடுவாய்
கடுவாய்புலி[21] உபத்திரத்தால் காட்டுப்பாதை செல்லார்கள்
என்மகனே கண்மணியே ஏற்றமுள்ள சின்னத்தம்பி
உனக்குமே இந்தத்தொழில் உகந்ததில்லை என்மகனே
எந்தாயே பூலாளேநீ எத்தனைதான் சொன்னாலும்
வேட்டையாடிப் பேர்வாங்க விடைகொடுக்க வேண்டுமம்மா
போய்வா மகனேயென்று பூலாளும் விடைகொடுத்தாள்
பூச்சிநாய் முன்னடக்கப் போர்க்குதிரை தனிலேறிப்
பணகுடி மலைதேடிப் பரிந்துவந்து சேர்ந்தார்கள்
காடுசுத்தி வலைகட்டிக் கடிநாயை ஏவிவிட்டார்
பணகுடி மலைதனிலே பன்னிவேட்டை யாடிக்கொண்டு

18. சுண்டுவில் - ஒரு வகை வில்
19. வல்லயம் - ஈட்டி வகை
20. சமுதாடு - ஈட்டி வகை
21. கடுவாய் - கழுதைப்புலி

In joy unbounded was Ciṉṉattampi found
Prided in public the possession great
And make it known he did to the people of the town:
"To hunt bear we'll go to Kaḷakkāṭu hill
To hunt hogs we'll go to Paṉakuṭi hill
And return we would with tiger, bear and hyena caged
Go hunting we'll tomorrow".
Assembled there the hunters in numbers;
Seeing the hunters Ciṉṉattampi the chief came
Girded warrior-like a knot at the end
Armed he was with a mini bow a heavy stick a lined spear
An axe a spear knife and shield
And spoke pleading to his mother:
"O my mother, for hunting I go
Give your consent".
And came the mother's words in reply;
"O my son prospering, the apple of my eye!
Admit your body wouldn't of the hill's water
Hunting there deep as you would do,
Bear and tiger, elephant wild and hyena
Aplenty they are in hill O my son virtuous!
What could you do if they came pouncing?
People take not the path mountainous
Hyenas menacing to find thereon,
Unsuited to you is hunting O my son!"
Deterred not Ciṉṉattampi spoke:
"Objections of yours whatever they be
Go does my mind on the name in hunting
Give your consent O my mother".
Came at length the mother's consent and farewell too.
The hound leading the way
The hunters on battle horses galloping
Came to Paṉakuṭi hill,
The nets spread wide and the hound directed at prey,
Hunt hogs they did at the hill,

களக்காட்டு மலையதிலே-கரடி-கடுவாய்பிடித்துக்கொண்டு
கொன்று கருவறுத்துக் குரவையிட்டான் சின்னத்தம்பி
சின்னத்தம்பி என்றுசொன்னால் சீறிடுமாம் வேங்கைகளும்
வேட்டையாடிச் சின்னத்தம்பி வேப்பிலாங்குளம் வீட்டில்வந்தான்
ஆலாத்திக் காரர்வந்து ஆலாத்தி எடுத்திடவே
தந்தைதாய் சின்னத்தம்பி சந்தோசமாய் இருக்கும்நாளில்

**மாணிக்கவாசகர் ஆட்சியும், அடங்காக் குதிரையும்**

பணகுடி நகரமதில் மாணிக்கவா சகம்பிள்ளை
அவருடைய மனைவியவள் அந்தஸ்தாய் யிருக்கையிலே
திருக்குறுங்குடிப் பட்டணத்தில் தேசராசர் மாணிக்கவாசகர்
நகரைச்சுத்திக் கோட்டையிட்டு நாலுபக்கம் வாசல்வைத்து
தெக்குவாசல் தளகர்த்தன் சேதுராயத் தலைவரென்றும்
மேலவாசல் தளகர்த்தன் வேலுச்சாமித் தலைவரென்றும்
வடக்குவாசல் தளகர்த்தன் வைத்தியநாதத் தலைவரென்றும்
கீழ்வாசல் தளகர்த்தன் கிருஷ்ணதாசர் தலைவரென்றும்
ஒவ்வொரு வாசலுக்கும் ஓராயிரங் காவலாம்
மாணிக்கவாச ராசருக்கு மணஞ்செய்த பெண்கொடியாள்
பாப்பாக்குடி திருப்புடைமருதூர்ப் பட்டணத்து ராசனாம்
தந்திரத்தால் வல்லபத்தில்[22] சமர்த்து செய்யும் தர்மராசர்
பக்கத்து அரசரெல்லாம்-தர்மராசாவுக்குப்-பகுதிகட்டி வரவேணும்
பகுதிப்பணம் வராவிட்டால் பறையடித்துப் போர் செய்து
ஆறிலொரு கடமைவாங்கி அசையாத மணியுங்கட்டித்
திக்குவிஜயஞ் செய்து செலுத்திவரும் தர்மராசர்
தர்மராசர் சகோதரியாள் தங்கநாச்சி யம்மாளை
மங்கிலியந் தான்பூட்டி மாணிக்கவாச ராசருக்கு
மன்னவரும் மங்கையரும் வாழ்ந்துவரும் நாளையிலே
ஆயிரங் குதிரையிலே அடங்காதொரு பேய்க்குதிரை
முன்னேவரும் ஆளுகளை முகத்திலே கடித்திடுமாம்
பின்னேவரும் ஆளுகளைப் பின்காலாலே எத்திடுமாம்
ஆளேறிச் சவாரிசெய்தால் அவனைத் துரத்திக்கொண்டு
மரத்தோடே மண்ணோடே மோதிவைத்துக் கொன்றிடுமாம்
அப்பெரிய குதிரைதன்னை அடக்க ஆளுமில்லாமல்

22. வல்லபம் - கொடுஞ் செயல்

Hunted also were bear and hyena at Kaḷakkāṭu
Devasted was the hill and ruined were their kind.
Ciṉṉattampi's name terror did it strike in leopards too.
Ciṉṉattampi returned to Vēppilāṅkuḷam
To see received with the salver of lighted camphor
And to find his parents ecstatic.
Ruled then Māṇikkavācakar from Tirukkīraṉkuṭi
Married to him was Taṅkanācci
Sister of Tarmarācar just, Tirupputaimarutūr's king
Who excelled in valour, shrewdness and tact,
Who brought rulers neighbouring humble
With tributes unfailing,
The defiant tamed in war duly declared
And forced to pay revenue one sixth;
Tarmarācar went far and near unvanquished
Proclaiming his superiority sovereign.
Living in conjugal harmony were Māṇikkavācakar and Taṅkanācci,
Māṇikkavācakar fortified his city with walls round
Providing gates on the four sides,
Soldiers a thousand guarded each gate:
Cēturāyar was made chief of south gate,
Vaittiyanātar was made chief of north gate,
Captaining at the east was Kiruṣṇatācar
And it was Cēturayār at the west.
Among the horses unnumbered that Māṇikkavācakar had
There was one wild and fierce.
Bite those at the front that it would,
Kick it would those at the back,
Kill it would the rider that ventured,
Dashing against trees and mounds,
No one dared to tame it right.

சங்கிலியால் பூட்டிவைத்துத் தண்ணீர்காட்ட ஒருவனின்றித்
துஷ்டத்தனம் செய்கிறதைத் துரையறிந்தார் மாணிக்கவாசர்
வடக்குவாசல் தளகர்த்தர் வைத்தியநாதத் தலைவரை
அடக்கிக்கொடுக்கச் சொல்ல அதற்கவர் மனமில்லாமல்
ஆயிரம்பொன் சம்பளத்தை அவரிழந்து ஊரைவிட்டு
போனயிடந் தெரியாமல் போயொழிந்தார் தலைவருமே

## மந்திரிமார் ஆலோசனையும் மாணிக்கவாசகர் ஓலையும்

தளகர்த்த ரில்லாமல் தட்டழிந்து காலாட்கள்
மாணிக்க வாசரிடம் மந்திரிகள் ஏதுசொல்வார்
வேப்பிலாங் குளமதிலே ராமப்பகடை வீற்றிருக்கான்
ராமப் பகடைமகன் சின்னதம்பி பகடையுந்தான்
ஆனையேற்றங் குதிரையேற்றம் அறிந்து படித்தவன்தான்
பணகுடி மலையதிலே பன்னிகளைக் கருவறுத்தான்
களக்காட்டு மலையதிலே கரடிகளைப் பிடித்தடைத்தான்
அவன்வந்தானே யாமாகில் அடக்கிடுவான்பேய்க் குதிரை
வடக்குவாசல் தான்படைக்கு வைத்திடலாம் தலைவானாக
ஓலையெழுதி இப்போ உடனனுப்ப வேணுமையா
மந்திரிகள் சொல்லிடவே மாணிக்க வாசகர் தாங்கேட்டு
ஓலைநல்லோ தான்வாரி உத்தரவு எழுதினாரே
வேப்பிலாங் குளமதிலே வீற்றிருக்கும் சின்னத்தம்பி
வடக்குக் கோட்டை வாசலுக்கு வாசல்பிரதானியாகி
மாசமொன்றுக் காயிரம்பொன் மற்றுமுள்ள சிலவுயெல்லாம்
கொட்டாரந் தனிலிருந்து கோப்புவகை கொடுத்திடுவோம்
உத்தரவு கிடைத்தவுடன் ஓட்டமும் நடையுமாக
ஓடிவந்து சமுகங்கண்டு-அதற்கு-உள்ளவிருது வாங்கிக்கொண்டு
ஆயிரங் குதிரையிலே அடங்கவொண்ணாப் பேய்க்குதிரை
அக்குதிரை தனையவிழ்த்து அடக்கிநீ வைத்துக்கொண்டு
சேவுகத்தின் அழைப்பெழுதித் திறமுடனே இருப்பாயென்று
மாணிக்க வாசகரும் மகிழ்ந்தெழுதி ஓலையிட்டார்

## சின்னத்தம்பி புறப்பாடும், பேய்க்குதிரையை அடக்குதலும்

ஓட்டக்காரன் ஓலைதன்னைச் சின்னத்தம்பி கைக்கொடுத்தான்
வாங்கிய உத்தரவைச்-சின்னத்தம்பி-வாசித்துப் பார்த்துக்கொண்டு
தந்தைதாயார் காலில்வைத்துச் சாஷ்டாங்கத் தெண்டனிட்டான்

Chained it remained with no one to feed.
Māṇikkavācakar knew of his horse wicked
And ordered Vaittiyanātar to bring it tame.
The north gate chief afraid that he was
Left off to pastures unknown
Giving up his pay a thousand coins.
Went astray the soldiers uncaptained.
Counsel to Māṇikkavācakar his ministers tendered:
"There's one Rāmappakaṭai living in Vēppilāṅkuḷam,
Trained well is his son Ciṉṉattampipakaṭai
In horse and elephant riding;
The hogs at Paṇakuṭi hill he did undo,
The bears at Kaḷakkāṭu hill he in cages put
Contain he could our horse crazy too.
See him we'll head the north gate army;
Send him the message swift O our king!"
To the king pleased came home the counsel,
Write he did the royal edict:
"Written it is to Ciṉṉattampi of Vēppilāṅkuḷam,
Captain you'll our north gate army
A thousand coins, perks and comfort
Are your wages a month;
Orders receiving come you should in haste
To take word royal from our court,
Thereon go you'll to untie that horse
Uncontained amongst its kind a thousand,
Tame it submissive and own it yourself
And serve the crown in position decreed".
The message royal in hand,
At his parent's feet Ciṉṉattampi knelt in devotion filial.

தெண்டனிட்ட மகன்தனக்குத் திருநீறு தான்பூசி
சம்பங்கி எண்ணைகொண்டு தலைமுழுகி மயிராத்தி
சாதவகை தான்படைத்துச் சாப்பிட்டு இளைப்பாறி
தந்தைதாய் பூலாரைச் சாஷ்டாங்கத் தெண்டனிட்டான்
புத்திமதி சொல்லியங்கே போகவிடை தான் கொடுத்தாள்
விடைவாங்கிச் சின்னத்தம்பி விநாயகரைத் தான்துதித்து
ஏறினான்குதிரையிலே எடுத்துக்கொண்டான் பெரியகத்தி
பூச்சிநாயை யவிழ்த்துவிட்டுப் புறப்பட்டான் சின்னத்தம்பி
ஓட்டக்காரன் பின்னடக்க குதிரையுமே முன்னடக்க
திருக்குறுங் குடியதிலே வடக்குவாசல் வழியாக
கோட்டைக்குள்ளே வந்திறங்கிக் குதிரைவிட்டுச் சின்னத்தம்பி
ஆசார வாசல்சென்று அபயம் அபயமென்றான்
உள்ளிருந்து ராசமன்னர் உடனே வெளியில்வந்து
பார்க்கிற காலமதில்-சின்னத்தம்பி-பாதம் பணிந்து நின்றான்
மாணிக்க வாசருக்கு மகாசந்தோஷம் உண்டாகி
வடக்குவாசல் படைகளையும் வைத்துமே காத்திருந்து
மறுமன்ன ரானவரை வந்துமே நுழையாமல்
அல்லும் பகலுமாக அறுபதுநாழிகையும்
படைகளைக் காத்திருந்து பார்த்துஅங்கே எச்சரித்து
அரண்மனைக் குதிரையிலே ஆயிரங் குதிரையுண்டு
அதிலொரு பேய்க்குதிரை அடங்காமல் நிற்கிறது
அக்குதிரை தனையடக்கி ஆணழகா சின்னத்துரை
ஏறிச் சவாரிசெய்து இருந்திடுவாய் வடக்குவாசல்
உத்தரவு வாங்கிக்கொண்டு-சின்னதம்பி- ஊரெங்கும் பறையடித்தான்
அடங்காத குதிரையைநான்-நாளை-யவிழ்க்கிற படியாலே
பாலிகளும் சூலிகளும்[23] பச்சைப்பிள்ளைத் தாச்சிகளும்
பாலர்களும் குருடர்களும் பாதைதன்னில் நொண்டிகளும்
சவ்வாரி வண்டிகளும் சந்நியாசி யானவரும்
மாடுஆடுகூட்டத்துடன் வழியில்வரக் கூடாது
வயது சென்ற மன்னவரும் வரப்படாது வீதியிலே
என்று சொல்லிப் பறையடிக்க எல்லோருந் தானறிந்து
அக்கம்பக்க முள்ளோர்கள் அதிசயந் தான்பார்க்க
கும்மல் கும்மலாகக் கூட்டமிட்டு வருவாரும்
அங்கங்கே கூட்டமிட்டு அவரவர்கள் நின்றிடவே

23. சூலி - சூல் கொண்ட மகளிர்

The mother in tenderness melting
Smeared his forehead with sacred ash,
Bathed him with *campaṅki*[21] oil and dried his hair
And gave him food and dishes to eat.
Ciṉṉattampi had his food and went relaxing
And knelt again before his mother and father
Pūtāḷ fed him well with words of counsel.
Ciṉṉattampi *Vināyakā*'s[22] name uttering
Set out on his horse with sword in hand
Accompanying was the hound.
The messenger following Ciṉṉattampi arrived at Tirukkuṟuṅkuṭi,
Thro' the north gate Ciṉṉattampi entered the palace
To raise the alarm at the hall exterior.
Came out the king to see Ciṉṉattampi kneeling,
Pleased Māṇikkavācakar the edict issued:
"Take you charge of the army at north gate
Vigilant you'll be day and night
Allowing not enemies enter our fort;
And we do have horses a thousand
Among them is one wild and mischievous
Bring it tamed, O young man fair!
And keep it for you at the north gate".
The order on hand Ciṉṉattampi announced it to the public:
"Released tomorrow will be the horse wild,
Maids, women pregnant, those with infants
Young boys, the blind and the lame
Carts carrying passengers
Hermits and flocks of cattle and the aged
Keep they must off its way".
Hearing, wonder-struck did the people go
Clearing off its route
They assembled in groups aside,

21. Oil extracted from *campaṅki* flower

22. Lord Ganesa, the elder of Lord Murukaṉ

மாணிக்க வாசகரும் மந்திரியுந் தான்கேட்டுப்
பந்தரடி மேடை[24]யேறிப் பார்த்திருக்கும் சமையத்திலே
குறடாவைக்[25] கையிலெடுத்துச்-சின்னத்தம்பி-குதிரையை யவிழ்த்தானே
குதிரைப் பொருத்தறிந்து குத்தினானே கையதினால்
குத்தின வேளையிலே குதிரையுமே தான்கனைத்துச்
சங்கிலியை யவிழ்த்துவிட்டுத் தலைமயிரைத் தான்பிடித்து
குதித்துவங்கே ஏறிக்கெண்டு குறடாவாலே யடித்தானே
'குதிரை இருப்பறியுங் கொண்டவளுங் குணமறிவாள்'
அக்கதைபோ லிக்குதிரை அறிந்து கொண்ட தப்போது
மூடிநல்லோ முழிக்குமுன்னே முக்காத வழிதூரம்
கண்ணிமை முழிக்குமுன்னே கனதூரம் போகுதுபார்
செந்தூளுங் கருந்தூளும் சேர்ந்துமே ஒன்றாகி
பக்கத்தி லுள்ளவர்கள் பார்க்கத் தெரியுதில்லை
குதிரைபோற தறியாமல் கூடினபே ரெல்லோரும்
அய்யய்யோ அரசழிவான் அநியாயஞ் செய்தானே
ஆணி லழகனல்லோ அழகுபிள்ளைச் சின்னத்தம்பி
பணத்தாசை பிடித்தல்லோ பரியேற ஒப்புக்கொண்டான்.
பெற்றவள் கண்டாக்கால் பிச்செறிவாள் வயிறதனை
என்று சொல்லும் வேளையிலே ஏங்கியே பேய்க்குதிரை
தள்ளாடிக் கால்சுழன்று தத்தளித்துப் பேய்க்குதிரை
வாயாலே வெண்ணுரையால் வந்துமே கக்கிக்கொண்டு
குதிரைதான் வரவே - சின்னத்தம்பி - குதிரைவிட்டுக் கீழிறங்கி
மாணிக்க வாசகரை வந்துகண்டான் சின்னத்தம்பி
ஆபரணம் வெகுமதிகள் அவர்கொடுக்க வாங்கிக்கொண்டு
வடக்குவாசல் தலைவனாக வந்திருந்தான் சின்னத்தம்பி

**திருமண ஏற்பாடு**

வேப்பிலாங் குளமதிலே ராமப்பகடையும் பூலாளும்
சின்னத்தம்பி மேலேயங்கே தேட்டமது[26] உண்டாகி
வால வயதாச்சே பிள்ளைக்கி வயதுபதி னாறாச்சே
மாமன்மகள் சோணச்சியை மணஞ்செய்யவே நினைத்து

24. பந்தரடி மேடை - மேலே பந்தல் அமைப்புக் கொண்ட மேடை.
25. குறடா - குதிரைச்சவுக்கு.
26. தேட்டம் - விருப்புற்றுத் தேடுதல்.

Māṇikkavācakar came with his ministers
And sat on a platform decorated.
Ciṉṉattampi whip in hand untied the horse
In tact studied he gave it a buffet.
The horse neighing its hair in his grip,
Ciṉṉattampi released the chain;
Mounting on its back, he gave it a thrash.
The horse felt the rider deep
Like the woman her man knowing,
And set out in gallop full.
Run it did in paces lightning they looked like
The dust rising reddish and black
Blinded the onlookers, unseeing they remained,
Unseeing, they raised alarm in pity felt:
"Cursed be the king erring,
Cursed too be Ciṉṉattampi fair
Who in greediness this risk dared
His mother seeing would fall in anguish deep".
Going were such words in ignorance blessed.
Came there the horse
Steps faltering and floundering, froth at the mouth.
Climbing down the horse tamed
Ciṉṉattampi came to the ruler straight,
Gifts receiving came back Ciṉṉattampi
To serve the north gate in command decreed.
Separation long of Ciṉṉattampi
Weighed down the parents at Vēppilāṅkuḷam.
To see him married to his cousin Cōṇacci
They desired, grown to adulthood as he was,
Fix they did the wedding day

வைகாசி மாஸ்தையிலே இருபத்தைந்தாந் தேதியிலே
வெள்ளிக் கிழமையிலே விடிந்து ஐந்து நாழிகையில்
பக்கமுள்ள ஊர்களுக்குப் பாக்குமே கொடுத்தனுப்பி
திருக்குறுங் குடியாளும் தேசராசர் மாணிக்கவாசர்
இனாமாகப் பதினாயிரம்பொன் ஈந்தார் மாணிக்கவாசர்
ஒருவாரம் ரசாபெற்று ஊருவந்து சேர்ந்திருந்தான்
பந்தல் அலங்காரத்தைப் பார்க்க முடியாது
பெண்ணழைத்துக் கொண்டுவந்து பிறர்வீட்டில் வைத்திருந்தான்

### புதையல் கிடைத்தல்

முகூர்த்தம் நடப்பதற்கு மூணுநாளிருக்கும் போது
வருகுதையோ இவர்களுக்கு-முடிவுகாலம்-வயிரப்பனை சாய்ந்தது போல்
கேடுகாலம் வருகுதையோ - இவர்களுக்குக் - கேடுவந்து சமைந்ததையோ
மாணிக்க வாசகருக்கு மைத்துனர்தான் தர்மராசர்
பாப்பாக்குடி திருப்புடைமருதூர் பட்டணத்து ராசனாக
அன்பத்தாறு தேசத்துக்கும் அதிபதி ராசனாக
தேசாதி ராஜனாக ஆண்டிருக்கும் நாளையிலே
பாப்பாக்குடி நகர்தனிலே பறைமாடன் பார்த்துவரும்
காணி வயலென்றும் கரையாளன் வயலென்றும்
அந்தவயல் தன்னை ஆதிமுதல் தலைமுறையாய்
பொற்கலப்பை பொற்கொழுவுப் பூட்டியே ராசன்சென்று
நாளேரு தானடித்து நாள்பார்த்து விதைவிதைத்து
அரிவாள்கொண்டு கதிரறுத்து நாள்கருது கோவில்வைத்து
புதியது தானுங்கூட்டிப் புழக்கமாய் வருவதுண்டு
சித்திரை மாத்தையிலே சிறப்பாக மழைகள் பெய்து
வயல்களிலே நெல்விதைத்து வைகாசி மாத்தையிலே
கரையாளன் வயல்தனிலே காச்சல்தண்ணீர் பாச்சும்போது
மண்வெட்டி கொண்டுஅங்கே மாடன்சாம்பான் போடடைக்க
கையோங்கி வெட்டயிலே காறைக்கட்டுக் கல்லுங்கண்டான்
கல்லையசைத் தான்புரட்டிக்-கீழே-உற்றுநோக்கிப் பார்க்கையிலே
ஏழுநல்லோ கிடாரமது[27] இருக்குதையா அணியணியாய்
ஓட்டமும் நடையுமாக ஓடிவந்து மாடன்சாம்பான்

27. கிடாரம் - கடாரம் எனப்படும் கொப்பரை, தவலை.

Friday twenty-fifth, *Vaikāci*[23] month
Five hours off the night's close;
Kith and kin around were given betel nut,
Coins ten thousand came for the wedding
From Māṇikkavācakar, Tirukkuṟuṅkuṭi's ruler benevolent.
On a week's leave
Ciṉṉattampi came to Vēppilāṅkuḷam.
Weak are the words for *pantal*[24] decorations,
Bride was brought and kept in another's house,
Three days to go for marriage
Came a news fatal to the family,
Tragedy unrelieved they would meet.
As Tarmarācar, Māṇikkavācakar's brother-in-law, king of kings
Was reigning supreme from Pāppākkuṭi Tirupputaimarutūr,
There was in Pāppākkuṭi town Paṟaimāṭaṉ
Whose charge it was a land from days long past
*Kāṇi*[25] land and *karaiyāḷaṉ*[26] land as it was called.
Paṟaimāṭaṉ would plough the land on a day auspicious
With plough new and sow the seeds,
Harvesting the ripened corn with a sickle
He would offer them to the deity and bring it home.
Showers good in a *Cittirai*[27] there were,
Paṟaimāṭaṉ sowed the paddy seeds
And in *Vaikāci* he watered the *karaiyāḷaṉ* fields;
Digging the earth as he was with his spade
To plug the bed watered,
A stone entrenched came to his sight.
Māṭaṉcāmpaṉ stirred the stone
To find underneath seven vessels large in a row
The farm labourer excited came running along

23. The second month of the Tamil Calendar (May into June).
24. Shed specially erected and decorated for marriage.
25, 26. Names denoting a specific ownership.
27. The first month of the Tamil Calendar (April into May).

நயினாரே நயினாரென்று நடுச்சாமங் கூப்பிடவே
பண்ணைக்காரச் சோமப்பிள்ளை பதறியங்கே ஓடிவந்து
பாம்பு கடித்ததுண்டா பதறியேண்டா புலம்புகிறாய்
அர்த்தராத்திரி வேளையிலே அவசரமாய் வந்ததென்ன
என்னாயன் வந்தாக்கால் இயம்புவேன் ஓர்வசனம்
இந்தசப்தம் காதில்கேட்டு எழுந்திருந்து தர்மராசா
ஓடிவந்து கேட்டிடவே-அவன்-உண்மைகளைச் சொல்லிநின்றான்
முன்னிருந்த ராசாக்கள் மூடிவைத்த திரவியந்தான்
ஆண்டாபிள்ளை அழகப்பபிள்ளை அவர்மந்திரிக் குரைத்திடவே
புதைத்துவைத்த திரவியத்தில் பூதங்கள் காவலுண்டு
குமாருப்பிள்ளை மந்திரவாதியைக் கூட்டிக்கொண்டு அக்ஷணமே
தீவட்டி விளக்குகொண்டு திரும்பினார் வயலைநோக்கி
கரையாளன் வயலில்வந்து காட்டிநின்றான் மாடன்சாம்பான்
மந்திரவாதி குமாருப்பிள்ளை மையெடுத்துப் போட்டுப்பார்த்தார்
பூதப் பிசாசுக்கூட்டம் பொறுக்கவுமே கூடுதில்லை
தலைமைப் பூதமதைத் தான்வருத்திக் கேட்டபோது
வீராதி வீரனாக வெகுபலம் உள்ளவனாய்
பாலப் பிராயமுள்ள பாலகனைப் பெலிகொடுத்தால்
இக்கிடாரந் தருவேனென்று எடுத்துரைத்தது பெரும்பூதம்

### தருமராசர் சதியோலை

அறிந்துமே தர்மராசர் ஆலோசிக்கும் வேளையிலே
திருக்குறுங் குடியதிலே வடக்குவாசல் தலைவனவன்
சூராதி சூரனென்றும் சுத்தவீர மன்னனென்றும்
சாதியிலே கீழ்ச்சாதி சக்கிலியப் பகடைச்சாதி
அவனை-வைத்திருக்கக் கூடாதென்று மந்திரிமார் சொன்னதுண்டு
இச்சமையம் வரவழைத்துப் பெலியிட வேணுமென்று
மகராசன் மைத்துனர் மாணிக்க வாசகர்க்கு
அன்பத்தாறு தேசத்திற்கு அதிபதி ராசனான
பாப்பாக்குடி திருப்புடைமருதூர்ப் பட்டணத்தில் வீற்றிருக்கும்
தமது மைத்துனர் தர்மராசர் தானெழுதித் தெரிவிப்பது
ஒருத்தலை மண்டையிடி ஒருமாஸ்தைக் காலமாக
புகச்சல் இருமல்கொண்டு புலம்பி மயங்கினதில்

To inform of his find to the moneyed Cōmappiḷḷai.
He cried aloud calling his master.
Came out the landlord anxious to know:
"Bitten are you by a snake?
Why do you cry agitated?
What is it that brought you hurrying at midnight?"
"A matter I've to tell my master".
Came out the king noise awakening,
Māṭaṉcāmpaṉ revealed the thing he saw.
"It's your treasure hidden by ancestors royal,
Guarded it is by the spirits",
Averred the minister Āṇṭāppiḷḷai Aḻakappapiḷḷai.
They proceeded to the field straight with a torch
Magician Kumāruppiḷḷai accompanying.
The *karaiyāḷaṉ* field Māṭaṉ locating
Kumāruppiḷḷai worked the magical paint
And the band of spirits cleared not their guard.
The spirit head pressed would reveal the point:
"Sacrifice you must a young man of valour and strength exceeding
To take this treasure free".
Tarmarācar's mind moved along in conspiracy black,
Recall he did of Māṇikkavācakar's minister's words
Who'd talked resentful of Ciṉṉattampi's birth
Lowliest of the low, a cobbler,
He be the chief of the north gate and hero of heroes though.
A message to Māṇikkavācakar Tarmarācar prepared:
"Writing to my brother-in-law Māṇikkavācakar
Is Tarmarācar of Pāppākkuṭi Tirupputaimarutūr,
King of kings, emperor sovereign:
Suffering I am from migraine
Goes it thus a month long
Cough and fuming, wailing and swooning.

வருத்த மடைகிறதை வைத்தியர்கள் தாங்கேட்டு
ஆதளங்காய் தூதளங்காய் அரளவத்தக் கொடியுடனே
திரிகடுகு மாவிலங்கு செண்பகப்பூ கோரோசனை
ஒழுக்கறை இருப்புப்பொடி ஊமத்தன்பூச் சாறுவிட்டு
தாம்பூரம் ராகமுடன் தைரியவா னால்இடித்து
மைப்போலரைக்கவேணும் மனிதனில்லை இவ்விடத்தில்
வடக்குவாசல் தலைவனான வல்லவன் சின்னத்தம்பியை
பணகுடி மலையில்சென்று- பச்சை-சாதனங்கள் பறித்துக்கொண்டு
ஓலையைப் படித்துக்காட்டி உடனேயனுப்ப வேணும்
இந்தஓலைக் குள்ளாக இன்னொரு சுருள்ஓலை
பாப்பாக்குடிப் பக்கத்திலே கரையாளன் வயலதிலே
முன்னிருந்த ராசாக்கள் மூடிவைத்த திரவியங்கள்
காச்சல்தண்ணீர் பாச்சும்போது கண்ணினால் கண்டதினால்
வீராதி வீரனாக வீரசூரன் துறந்தவனாய்
வாலவயதாக வயதுபதி னாறாக வுந்தான்
ஆளில் அழகனாக அவனையிங்கே கொண்டுவந்து
பெலிகொடுத்தால் கொடுப்பேனென்று பெரும்பூதம் சொல்லுவதால்
அப்பெரிய சுத்தவீரன் ஆருமில்லை இவ்விடத்தில்
தங்களுட வடக்குவாசல் தலைவன்சின்னத் தம்பியை
இவ்விடத்திற்கு அனுப்பிவைத்தால் எடுக்கிற திரவியத்தில்
பேருபாதி பங்குவைத்துப் பிசகாம லீந்திடுவேன்
என்று ஓலை எழுதி ஏற்றதொரு தருமராசன்
ஓட்டக்காரன் தன்னிடத்தில் ஒப்பிவித்தார் ஓலைதன்னை
ஓலைதன்னைக் கையில்வாங்கி ஓட்டக்காரன் ஓடிவந்து
திருக்குறுங் குடியதிலே மாணிக்க வாசரிடம்
ஓலைதன்னைத் தான்கொடுத்து ஓட்டக்காரன் வந்துவிட்டான்
வாங்கியந்த ஓலைதன்னை மாணிக்க வாசகரும்
உடைத்து அங்கே பார்க்கையிலே உடம்பு நடுக்கங்கொண்டு
வாசித்துப் பார்க்கையிலே வாணாள் உருகுகிறது
முத்துப்போல் கண்ணீரும் முகத்தோடே ஓடுகிறது
மாணிக்க வாசருட மனைவியவள் ஓடிவந்து
அடித்து விழுந்தழுது அலறியே ஓலமிட்டாள்
என்னுடைய தமயனுக்கு என்னமோ தெரியலையே
மாண்டுநான் மடிந்திடுவேன் வைகுண்டம் சேர்ந்திடுவேன்

*Ātaḷaṅkāi*[28], *tūtaḷaṅkāi*[29], *araḷavattai*[30] creeper
*Tirikaṭuku*[31], *māvilaṅku*[32], *ceṇpakam*[33] flower
*Kōrocaṉai*[34] and iron powder dusted
The juice of *ūmattam*[35] flower and *tāmpuram*[36] and *rākam*[37]
Pounded long by a hand valorous
And mashed into a paste.
Such is the cure our physician has prescribed,
No one here could do it right.
Ciṉṉattampi the brave of north gate there you have,
Do let him come here conveying this note
With the herbs and shrubs collected at Paṇakuṭi hill."
Inside this letter was another one sealed
That read: "There's by our town a *karaiyāḷaṉ* field
Wherein is a treasure hidden by rulers past
That came to be known while watering the field.
The spirit guarding wants in sacrifice
A young man of sixteen and handsome,
Of courage surpassing.
Such kind none here we have.
Send Ciṉṉattampi your north gate chief
Half the treasure I'll share with you sure."
Letter entrusted, the messenger hurried.
Handing it to Māṇikkavācakar, he returned homeward.
Seal opened and contents read,
Shocking it was trembling it caused
Tears rolling down, Māṇikkavācakar felt undone.
The queen came rushing
Beating herself mad-like, wailing aloud
And piteously she cried:
"Whatever has happened to my brother?
Kill myself I will, I will die!"

---

28, 29, 30, 31, 32, 33, 34. Medicinal plants and substances.

35. A deleterious shrub the different parts of which cause stupor, intoxication etc.

36, 37. Medicinal substances.

அலறியழும் பெண்மயிலை யந்தப்புரம் கூட்டிவந்து
உள்ளோலை வாசகத்தை உரைத்தாரே பெண்கொடிக்கு
ஊழிஊழி தலைமுறைக்கும் உண்டுகளித் திருக்கலாமே
இக்ஷணமே யனுப்புமென்று இயம்பியே புலம்பலுற்றாள்

**மாணிக்கவாசகர் ஆணை**

வெளிஓலை தனைக்கொடுத்து வேறேஓர் ஓலையெழுதி
ஓலைகண்ட தக்ஷணமே ஓட்டங்கொண்டு மலையில் சென்று
மருந்துவகை யுள்ளதெல்லாம் மறந்திடாமல் கொண்டுசென்று
அரைத்துக் கொடுத்துவிட்டு அதிசீக்கிரமாய் வரவேணும்
என்றெழுதி ஓலைதன்னை ஓட்டக்காரன் கைக்கொடுத்தார்
ஓட்டக்காரன் ஓடியங்கே சின்னத்தம்பி கைக்கொடுத்தான்

**தாயர் தடுப்பும், தீச்சகுனங்களும்**

ஓலைதன்னைத் தான்பார்த்து உடனேபோனான் தாயாரிடம்
சங்கதியைச் சொல்லியங்கே சாதங்கட்டச் சொல்லிடவே
நாளிட்ட மைந்தனையா - நீ - நகரைவிட்டுப் போகலாமோ
பெண்ணழைத்து இங்கேதான் பிறர்வீட்டில் வைத்திருக்கு
வருவாரும் போவாரும் வந்துகொண் டிருக்கிறார்கள்
இப்போது போப்படாது என்மகனே சின்னத்தம்பி
என்னுடைய எஜமான் எழுத்தின் படியாக
போய்வருவேன் என்தாயே போராட்டஞ் செய்யாதே
அப்போது பூலுடையாள் அரிசி உரல்போட்டு
உலக்கை எடுத்து அவள் ஊணுகுற வேளையிலே
ஒற்றைக் குரலோசை ஓகோவென்று கேட்டிடவே
சாதம் வடிக்கையிலே தலையில்பல்லி விழுந்திடவே
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினாளே பூலுடையாள்
கட்டமுது பலகாரம் கட்டிமகன் கைகொடுத்தாள்
பேய்க்குதிரை தனிலேறிப் பிறப்பட்டான் சின்னத்தம்பி
பூச்சிநாயை யவிழ்த்துவிட்டுப் புறப்படும் வேளையிலே
நடைதலையில் தட்டிடவே நகண்டு வெளியில்வந்து
ஏறினான் குதிரைமேலே எடுத்தடி வைக்கயிலே
காகங்கள் கத்துறதும் கருங்கூவை கூவுறதும்
சன்யாசி ஒருபாப்பான் தலைமொட்டை வாணியனும்
இவ்விதமாய்ச் சகுனம்வர எடுத்தெறிந்து சின்னத்தம்பி

The king took his wife to her chamber
And let her know the letter inlaid.
She in excitement great urged the king:
"Add it would to the joy of generations many,
Send him this moment, delay not a second".
"The moment the note is received
Set out post-haste to the hills
Collect the medicines noted unfailing
Take them mashed to the royal patient
And come back soon."
Went thus the king's order to Ciṉṉattampi.
The message to him handed
Ciṉṉattampi went to his mother with the note royal
Asking her to prepare food for the journey.
Came his mother's words protesting:
"Wedding fixed, could you leave the town?
The people invited have started coming and going,
We've brought the bride,
Kept she is in another's house,
Leave you shouldn't my dear son".
"Stop me not my mother
The call is from the king my master".
There did occur omens disturbing:
Heard there was a lonely voice awesome
As Pūlāḷ put rice in the mortar
And started pounding it with a pestle,
There fell a lizard on her head
Cooking the rice as she was,
Thoughts unsettling did cross Pūlāḷ's mind,
Choice food and sweets she prepared yet.
Leaving as he was with the hound
The upper door frame struck at his head,
Mounting the horse savage as he was
There were cries of crows and owls,
And on his way there came
An ascetic, a brahmin, and an oil-monger bald-headed.
Resolute he was and look back he didn't.

## வழியில் கண்ட துன்னிமித்தங்கள்

பணகுடி மலைதேடிப் பறித்தானே மருந்துவகை
ஓலையிலே கண்டபடி உள்ளமருந் தத்தனையும்
மூட்டைகட்டித் தோளிலிட்டு முடிக்குதிரை யோட்டிக்கொண்டு
சேரன்மா தேவிவழி வீரவநல்லூர்ப் பாதைகூடி
அத்தாளநல்லூர் தாம்பிரவர்ணி ஆத்தாங்கரையோரம்
கருவைமரத்தில் குதிரைகட்டிக் கட்டிச்சோறு எடுத்துக்கொண்டு
ஸ்நானபானஞ் செய்துமே-சின்னத்தம்பி- தங்கி யிருக்கையிலே
மங்கைரெண்டு வாணியப்பெண் மஞ்சளரைத்துக் கொண்டு
தலையிலே எண்ணைவைத்து ஸ்நானஞ் செய்யவாரபோது
பல்லி மரத்திருந்து பலபலென் றடித்திடவே
மரமதிலாந் தையிருந்து அதரிடுமா மப்போது
பல்லிசொல்லும் சாஸ்திரத்தைப் பார்த்தார்கள் பெண்களுந்தான்
மாயன் மகனதுபோல் மன்மதன் போலிருக்கே
வால வயதுப்பிள்ளை மைந்தன்நல்ல பிராயமது
எந்தவூர் ராசாவோ எவர்கள்பெற்ற பாலகனோ
அழகை எழுதினவர் ஆயிசை எழுதலையோ
ஆருபெற்ற பாலகனோ அநியாயமாய் மாள்வானென்றார்
வங்குலையாய் மாள்வானென்று வல்லாந்தை கூப்பிடுதே
வெட்டுப்பட்டு மாள்வானென்று விரைவாய்ப்பல்லி கூப்பிடுதே
ஆளில் அழகனல்லோ அதிவீர சூரனல்லோ
பெற்றதாய் கண்டாக்கால் விட்டிடுவாள் உயிரதனை
வளர்த்ததாய் கண்டாக்கால் வாணாள்வைக்க மாட்டாளே
ஒருத்திக் கொருத்திபேசி உழன்றுமனம் வேறாகி
முத்துப்போல் கண்ணீரை முகத்தோடே வடித்திடுவாள்
பார்த்துமே சின்னத்தம்பி பைங்கிளியே அழுகையென்ன
என்றுகேட்ட வேளையிலே ஏதுசொல்வார் பெண்கொடிமார்
உம்மைப்போலே என்புருஷர் ஊர்வழிபோய் வெகுநாளாய்
திரும்பிவரக் காணாமல் தேக்கிலையில் தண்ணீர் போல்
மயங்கியெங்கும் பார்க்கையிலே மன்னவர்போல் உம்மைக்கண்டேன்
வேறேஒரு விசேஷமும் விக்கினமு மில்லையென்று
சொல்லிவிட்டுப் பெண்கள்போகச் சோறவிழ்த்தான் சின்னத்தம்பி
கொத்தோடே தலைமயிரும் கோர்வையாகக் கண்டெடுத்தான்
தலைமயிரைத் தள்ளிவிட்டுச் சாதமெடுத்துத் திங்கையிலே

Medicines noted collecting at Paṇakuṭi hill
Ciṉṉattampi set out with the bundle on his shoulder.
Journeyed along Vīranallūr road off Cēraṉmātēvi
And arrived at Āttāḷanallūr to rest on the Tāmaraparaṇi banks.
Fastening the horse to a cinnamon tree
Ciṉṉattampi bathed in the river and opened the food packet.
There came then two women of oil-monger caste
To triturate turmeric and take oil bath
A lizard clicking from the tree they heard
And an owl hooting too.
Reading the lizard's cry
They spoke to each other in terms pitying:
"A son of god, Kāmaṉ [38] he looks like
A young man blooming of tender age!
A prince of whatever land, a son of whoever he could be!
Destined not to live long, beauty endowed though!
The owl's hooting bodes a death cruel,
The lizard tells of his felling sure by sword.
Alas, handsome and of courage exceeding isn't he!
His mother seeing would go down dying
And live not long the foster mother too!"
They went on thus in anguish deep
Tears pearl-like rolling down on their face.
Ciṉṉattampi inquiring, what could they say :
"Resembling you is the husband of mine,
Gone he's a long time back,
And suffer I do in loneliness cruel
The drops of water on a teak-leaf like.
Seeing you reminded I am of my man
Nothing more could you read of our wail".
Opening the packet Ciṉṉattampi found
A bunch of hair mixed with the rice,
Throwing it away he started to eat.

---

38. The Indian Cupid.

காக்கைநல்லோ ஓடிவந்து கட்டிச்சாதத்தைக் கொத்திடுமாம்
சாதத்தைத் தரையிலிட்டு அப்புறத்தே திங்கையிலே
ஓங்கரித்து வாந்திபண்ணி உடலுக்குள்ளே போகாமல்
பூச்சிநாய் முன்பாகப் பொட்டணத்தோடே வைத்திடவே
பூச்சிநாயும் முகர்ந்துபார்த்துப் போனதுவே யப்புறத்தே
கெட்டுச்சாதம் பலகாரங் கெங்கையிலே தள்ளிவிட்டு
ஜலமதைக் தானருந்தித் தாகசாந்தி செய்துகொண்டு
குதிரையேறும் தருணமதில் கோவென்று பூச்சிநாயும்
மானம்பார்த்து ஊளையிட்டு மண்ணைப்பறித்திடுமாம்
காலைநல்ல கட்டிக்கொண்டு கதறிட்டதே பூச்சிநாயும்
சாதத்தாலே பூச்சிநாயும் தயங்குதென்று சின்னத்தம்பி
பரியேறிப் பாதைகூடி பாப்பாக்குடி ஊரில்வந்தான்

**மயக்க மருந்து கலந்த உணவு படைத்தல்**

தர்மராசா அரண்மனையில் தானேவந்து நின்றுகொண்டு
கொண்டுவந்த மருந்துகளைக் கொடுத்தங்கே யனுப்பிவைத்தான்
சின்னத்தம்பி வந்தானென்ற செய்திகேட்டுத் தர்மராசா
தலையிலே முக்காடிட்டுச் சாய்ந்தங்கே படுத்துக்கொண்டான்
மாடன்சாம்பானை அழைத்து மாப்பிள்ளைச்சோறு செய்யச்சொன்னான்
ஆட்டுக்கறி மாட்டுக்கறி அபின்சரக்கு சாராயம்
கோழிமுதல் நெய்யுடனே கொண்டனுப்பி மாடன்சாம்பான்
மருந்தரைப்பு ராத்திரிக்கு வைத்தியனார் சொற்படிக்கு
வழித்துகண் ணிடுகிறாப்போல் மருந்தரைக்க வேண்டியதால்
வெந்நீர்வைத்து எண்ணைதேய்த்து விரைவாக ஸ்நானஞ்செய்து
சாதங்கறிசமைத்துச்-சின்னத்தம்பிக்குச்-சாப்பாடுசெய்துவைத்து
ஊமத்தஞ்சாறு மதனகாமப் பூவும் ஒன்றாகத் தானரைத்து
அபினுடன் கஞ்சாவும்அதில் கொஞ்சம் தான்சேர்த்து
சாப்பிடச் சொல்லிக் கொடுத்தானே மாடன்சாம்பான்
சாப்பிட்ட வுடனேதான் - சின்னத்தம்பிக்குத்-தன்னறிவு யில்லாமல்
கூப்பிட்டாலுங் கேளாமல் குப்பிறப் படுத்துக் கொண்டான்

**புதையல் எடுக்க ஆவன செய்தல்**

மந்திரவாதி குமாருப்பிள்ளை மந்திரிஆண்டார்அழகப்பப்பிள்ளை
பணக்காரச் சோமப்பிள்ளை பின்னும்பல பேர்களுடன்
தர்மராசர் பிள்ளையுடனே தானே வந்து வயலதிலே

Came there a crow then that pecked the rice.
Which Ciṉṉattampi threw on the ground
And turned to eat the rice untouched.
Vomitting it caused repulsive was it to the stomach.
The food he placed before his hound,
Smelling it close, away went the hound too.
Ciṉṉattampi threw it into the water flowing
And had some water to quench his thirst.
Mounting the horse as he was
The hound howled at the sky burrowing the earth,
Crying it did bracing its legs.
"Hunger is its cause" read Ciṉṉattampi.
And he was on his journey to Pāppākkuṭi,
Tarmarācar's fort Ciṉṉattampi entered
And sent in the medicines brought.
Ciṉṉattampi's arrival known
Tarmarācar laid himself on bed veiling his head
He summoned Māṭaṉcāmpaṉ and ordered
Food grand prepared with care:
Meat in variety of cow and goat
Arrack, opium and the like
Chicken, ghee and so forth;
The mashing to wait till night
To be done as it is paste like by physician's words.
Thus went the conspiracy.
Ciṉṉattampi was given oil bath quick in hot water
And Māṭaṉ prepared dishes delicious
Mixing with it a paste toxic
Of *ūmattai* juice ground with *mataṉakāma* flower,
Added to them were opium and hashish.
Given the food, Ciṉṉattampi went to swooning deep.
To the treasure-holding field Tarmarācar went
With magician Kumāruppiḷḷai, minister Aḷakappapiḷḷai
The moneyed Cōmappiḷḷai and many others.

நாலுபக்கந் திரைவளைந்து நடுவாகத் தீபம்வைத்து
சாந்தால் தரைமெழுகிச் சந்தனத்தால் கோலமிட்டு
ஓமகுண்டந் தானும்வெட்டி அதற்குள்ள வரிசைசெய்து
ஆலஞ்சிப்பி அரசன்சிப்பி அத்திச்சிப்பி புரசன்சிப்பி
சிப்பிகளைத் தான்பரப்பித் தீயதனை மேலேவைத்து
ஆறுமுகர்க்கு மூத்தோனை அதின்முன்பு தானிருத்தி
தீபதூபந் தான்கொடுத்துத் திருவிளக்குப் பூசைசெய்து
அத்திப் பலகைபோட்டு அதின்மேலே உட்கார்ந்து
அஞ்செழுத்து மந்திரத்தை ஆராய்ந்து உள்ளிருத்தி
நாங்குஎண்ணை கோங்குஎண்ணை நறுநெய்யும் தான்வார்த்து
மந்திர விதிப்படிக்கு மாவிலைக் கரண்டியதால்
கோரியங்கே[28] தானும்விட்டு குமாரசுவாமிப் பிள்ளையுமே
தேங்கா யுடைக்கையிலே சிதறியே போச்சுதையோ
தீபதூபங் கொடுக்கையிலே திருவிளக்கு அணைந்ததங்கே
மந்திரவாதி குமாருப்பிள்ளை மகாமோசம் வந்ததென்று
மறுபடியும் விளக்கேத்தி மாடன்சாம்பானுக்கு ஆளுவிட்டு

**நரபலி கொடுத்தல்**

அந்தவேளை மாடன்சாம்பான் அணைத்துக்கொண்டு சின்னத்தம்பி
கைத்தாங்கல் கூட்டிக்கொண்டு கரையாளன் வயல்தனிலே
கன்னிமூலைத் தென்மேற்கில் கிடாரமிருக்கும் இடத்தினிலே
கையைவிட்டுக் கீழ்கிடத்திக் கண்ணீர்விட்டு மாடன்சாம்பான்
மந்திரவாதி குமாருப்பிள்ளை மன்னனிடம் வந்துசேர்ந்தான்
நஞ்சுபோட்டால் நஞ்சறுக்கும் நடுச்சாம வேளையிலே
மையெடுத்துத் திலதமிட்டு மந்திரவாதி குமாருப்பிள்ளை
திருநீறும் தீர்த்தங்களும் -சின்னத்தம்பி- சிரசதிலே தான்போட்டு
மந்திரவாள் கையிலெடுத்து மந்திரவாதி குமாருப்பிள்ளை
செவிட்டுநொண்டிப் பூதங்களைத் திறமாகத் தான்வருத்தி
வாளெடுத்துக் கையில்வைத்து மாடன்சாம்பா னிடம்கொடுத்து
வெட்டினான் பிடதியிலே வேறுபட்டுத் துண்டுரெண்டாய்
பட்டு விழுந்தானே-சின்னத்துரை-பாரமுடி சாய்ந்தானே

28. கோரி-அள்ளி.

A tent was made all sides closing,
In the centre was a lamp lit,
The floor smeared neat
And lines ornamental drawn of sandal paste;
A hole dug and rites to order performed.
Spread wherein were
Sticks of banyan, peepul, fig and *puracu*[39]
And they were set on fire
Invoking the elder[40] of Lord Āṟumukam[41]
Offerings they made of light and fire.
Seated they were on a fig plank
Chanting deep the *mantra* five-lettered;[42]
The principles of his magic guiding
Kumāruppiḷḷai added by mango-leaf spoon
Oils of *nāṅku*[43] and *kōṅku*[44] along with ghee
To see the flames grow,
And the coconut cut for offering went in pieces scattered,
The lamp lit for worship went off too.
The magician read omens ill
Relit the lamp and sent for Māṭaṉ.
Māṭaṉ came there to the tent
Built south-west on the *karaiyāḷaṉ* field
Holding in support Ciṉṉattampi unconscious.
It was midnight deep and dark
Kumāruppiḷḷai smeared the magical paint on Ciṉṉattampi's forehead
Sprinkled on his head holy waters
Invoked the spirits deaf and lame
And handed the magical sword to Māṭaṉ,
Who struck Ciṉṉattampi on his neck.
Alas! there fell Ciṉṉattampi in pieces two,

39. The *palācu* tree (Butea frondosa)
40. Lord Ganesa
41. Murukaṉ.
42. *namacivāya* (Chanting of Śiva's name).
43. A kind of tree.
44. A kind of cotton tree (Bombax gossypinum).

### சின்னத்தம்பி சாபம்

உடல்வேறு தலைவேறாய் உயிர்கிடந்து தான்துடித்து
இட்டுதே பெருஞ்சாபம் ஈஸ்பரரே தஞ்சமென்று
பாப்பாக்குடிப் பள்ளிகொண்டான் பார்த்திருந்த தோஷத்தாலே
பாழடைய வேணுமென்று பருஞ்சாபங்[29] கொடுத்தானே
தர்மராசா கோட்டையெல்லாம் தானிடிய வேணுமென்றான்
ஆண்டாப்பிள்ளை அழகப்பப்பிள்ளை பணக்காரச் சோமப்பிள்ளை
மந்திரவாதி குமாருப்பிள்ளை மாடன்சாம்பான் வம்மிசமும்
திருக்குறுங் குடியில்வாழும் மாணிக்க வாசகம்பிள்ளை
வம்மிசமும் நாசமாகி மண்ணடைந்து போணுமென்றான்

### காட்டாளம்மனிடம் கேட்ட வரம்

காட்டானைப் பெலிவாங்கும் காட்டாளம்மா என்தாயே
என்னைவெட்டிப் பெலிகொடுத்து எடுத்துப்போகுங் கிடாரமதை
மூணுமுக்குக்[30] கிணறுதன்னில் முங்கச்செய்ய வேணுமம்மா
என்னைஉன் வாசலுக்கு ஏற்றபிள்ளை யாகவைத்து
முன்பூசை என்தனக்கும் பின்பூசை உன்தனக்கும்
வலதுகண்ணும் இடதுகண்ணும் வைத்துஎன்னைக் காக்கவேணும்
அபயம் அபயமென்று அலறியே ஓலமிட்டு
மாண்டானே சின்னத்தம்பி வைகுண்டஞ் சேர்ந்தானே

### பூச்சிநாயின் செயல்

எஜமானைக் காணோமென்று ஏங்கிப்பரி பூச்சிநாயும்
சங்கிலியைத் தானறுத்துத் தடதடவென்று தானோட
வழிதனை மோந்துபார்த்து வருகுதையா பூச்சிநாயும்
சுண்டுவிரல் மோதிரத்தைச் சுருக்காகத்[31] தான்கழத்தி
ரெத்தத்தின் மேல்விழுந்து திரேகமெல்லாம் புரட்டிக்கொண்டு
ஓட்டமும் நடையுமாக ஓடி வருகுதையா

29. பருஞ்சாபம்-நீண்டசாபம், பெரிய சாபம்.
30. மூணுமுக்கு-மூன்று தெருக்கள் சேருமிடம்.
31. சுருக்காக-விரைவாக.

Head and body separated.
The soul in flutter deep
Taking refuge under the Lord's feet
Uttered a curse fatal, a curse of undoing
In the Lord's name seated at Pāppākkuṭi.
A curse to the destruction of Pāppākkuṭi with the palace,
A curse to the ruin complete
Of Āṇṭāppiḷḷai Aḷakappapiḷḷai, the moneyed Cōmappiḷḷai
The magician Kumāruppiḷḷai, and Māṭaṉcāmpaṉ,
A curse too to the ruin of Māṇikkavācakampiḷḷai and his tribe.
Then went his soul in prayer:
"O my mother Kāṭṭāḷammaṉ[45]
Who takes wild elephant for offering,
The treasure that comes of my killing
Cause you should
To be sunk in the well at the trijunction,
Protect me you should O my mother!
As you would your eyes both,
Keeping me as your protecting deity
And letting me have your devotees' offerings first"
Wailing loud and piteous, wailing for His refuge
Dead was Ciṉṉattampi, gone to the Lord's feet.
Seeing not its master, the hound grieving
Broke the chain and ran despondent,
Arrived at the spot smelling the way through
Taking quick the ring his little finger's
And rolling over his blood

45. A minor deity.

### சின்னத்தம்பி செய்கையும், பூதங்களின் செயல்களும்

வெட்டின ரெத்தமது வெள்ளப் பெருக்குப்போலே
செவிட்டுநொண்டிப் பெரும்பூதம் சேர்ந்ததொரு பேய்க்கணங்கள்
உணவுகொள்ள வந்தயிடத்தில் உத்தபிள்ளை சின்னத்தம்பி
பேய்களையும் பூதத்தையும் பிரட்டியே வாங்குகிறான்
இப்படி இருக்கையிலே ஏற்றதொரு தருமராசன்
ஏழு கிடாரமதை வண்டியிலே தானேற்றி
மூணுமுக்குக் கிணத்தருகில் முன்வண்டி வந்திடவே
செவிட்டு நொண்டிப் பெரும்பூதம் சேர்ந்தபூத மத்தனையும்
ஓடிவந்து வண்டிகளைக் கிணத்துக்குள்ளே தள்ளினதே
வண்டிக்காரன் மாடுமுதல் - கிணத்தில் - மாண்டு மடிந்தார்களே

### பூலாள் புலம்பலும் முடிவும்

ஓடிப்போன பூச்சிநாயும் வேப்பிலாங் குளத்தில்வந்து
பூலாளிடம் போய்ச்சேர்ந்து புரண்டுருண்டு ஊளையிட்டு
கணையாழியைக் கக்கியப்போ காட்டினதே பூச்சிநாயும்
கணையாழி கண்டவுடன் - பூலாள் - கதறியேஓலமிட்டு
தலைமேலே கையைவைத்துப் - பூலாள் - தான்நொந்து வாராளே
பூச்சிநாயும் முன்நடக்க ராமப்பகடை பின்னடக்க
சோணச்சிப் பெண்மயிலும் துயரடைந்து வாராளே
இதற்கோ தவமிருந்தேன் - பாவி - இத்தனைக்கோ பேறுபெற்றேன்
பெற்ற அருமையென்ன - உனக்குப்-பேரிட்ட நேர்த்தியென்ன
வளர்த்த அருமையென்ன-கண்ணே உன்னை -வைத்திருந்த நேர்த்தியென்ன
தரையிலுன்னை விட்டாக்கால் தண்டைக்கால் நோகுமென்று
பூமியிலே விட்டாக்கால் -உனக்கு-புத்திகெட்டுப் போகுமென்று
வட்டிலிலே சோறுபோட்டால் வளரநாள் செல்லுமென்று
மடியிலே சோறுகட்டி-உன்னை-ஊட்டி வளர்த்தேனடா
புலம்பிவரும் வேளையிலே போர்க்களத்தைக் கண்டுவிட்டாள்
படுகளத்தில் தானும்வந்து பார்த்தாளே தன்மகனை
வயிரப் பனைபோலே-சின்னத்தம்பி-மாண்டு கிடக்கிறதை
கண்டாளே கண்டாளே கட்டழகி பூலாளும்
தலைவேறு உடல்வேறு தானே கிடக்கிறதை
தலையெடுத்து உடல்சேர்த்துத் தன்னழகைச் சொல்லலுற்றாள்
அழகை யெழுதினவன்-சின்னத்தம்பீ-ஆயிசையெழுதலையோ
பட்டமர மிங்கிருக்க -என்கண்ணே- பச்சமரம் சாயலாமோ

The dog came running in paces swift.
Came the spirits deaf and lame with their host
To feast on the pool of blood,
Ciṉṉattampi gave them a sound thrashing.
Tarumarācaṉ exulting came by the well
With the treasure in seven barrels loaded in carts.
Rushing there were the spirits deaf and lame with their tribe
That saw the carts pulled into the well
And saw the bulls and cartmen perished too.
The hound running came to Pūlāḷ,
Down it rolled howling, vomitting the ring.
Seeing the ring Pūlāḷ sank in dolour deep.
The hound leading
Walked on Rāmapakaṭai with his wife and Cōṇacci.
"Should thus end all my fasting and austerities long?
Cursed I am !
Born how dear! christened how nice!
Brought up how much careful ! looked after how much loving!
Left you not on the ground fearing strain on your foot,
Allowed you not on the ground fearing your going witless
Let you not to eat from a plate fearing slackening in your growth
And saw you had the food fastened up in your waist"
Crying thus Pūlāḷ went along.
She sighted her son dead;
He seemed a steeled palm tree felled,
Withering lifeless like a parrot confined.
Pūlāḷ brought head and body separated
To his form handsome.
And cries desperate came of her aching heart :
"Shouldn't He bless a long life to this graceful body ?
Should a beam steeled go in ruins with a barren tree staying on?

உத்தமர மிங்கிருக்க என்கண்ணே உத்தரத்தூண் சாயலாமோ
உன்னை - வரவழைத்துச் சேவுகத்தில் வைத்துமே வங்குலையாய்[32]
மாளச்செய்தோன் வங்கிசமும்[33] மண்ணாகப் போயிடாதோ
விறகுக்கட்டை கொண்டுவந்து விரைவுடனே தானடுக்கி
சின்னத்தம்பி உடல்தலையும் சீக்கிரமாய்த் தூக்கிவைத்தாள்
முத்துப்போல் கண்ணீரை முகத்தோடே தான்வடித்தாள்
வெட்டுப்பட உன்தலையில் விதித்தானோ பிரமதேவன்
என்மகனே சின்னத்தம்பி இனிநா னிருக்கலாமோ
வாய்க்கரிசி இட்டுமே வழியனுப்பப் பிள்ளையில்லை
கொள்ளிவைக்கப் பிள்ளையில்லை குடமுடைக்கப் பாலனில்லை
இருப்பதினால் என்னபலன் இறப்பதுவே நலமென்று
சேலைபோட்டு நாவிழுத்துச் செத்திறந்து மாண்டாளே

**சோணச்சியின் மரணம்**

மாண்டவுடன் மருமகள்தான் மணஞ்செய்யாச் சோணச்சியும்
மணவறைப் பந்தலிட்டு-அதில்- மங்கிலியம் பூட்டலையே
நான்கூட இருந்துகொண்டு-என்சாமி-நான் கூட்டுப்பால்உங்கலையே
உங்கலையே திங்கலையே உடன்படுத் துறங்கலையே
மாமன்மகன் சின்னத்தம்பி-என்-மணவாள னென்றுசொல்லி
அசலூரி லுள்ளவர்க்கு ஆளனுப்பி ஓலைவிட்டு
பக்கத்தி லுள்ளவர்க்குப் பாக்கு கொடுத்தனுப்பி
உயிர்வைத்து நானிருந்து இன்னோருடன் வாழ்ந்தாக்கால்
தேசத்தி லுள்ளவர்கள் செப்புவார் இப்பெருமை
ஈஸ்பரரே தஞ்சமென்று இறந்தாளே சோணச்சியும்

**இராமப்பகடை, பூச்சிநாய் இறப்பு**

கூடவந்து ராமப்பகடை குப்புறவே தான்விழுந்து
ஏக்கமுற்று மூச்சடைத்து ஈசன்பாதஞ் சேர்ந்தானே
பார்த்திருந்த பூச்சிநாயும் பார்த்துமே ஊளையிட்டு
செத்து மடிந்ததையோ சிவன்பாதஞ் சேர்ந்ததையோ

32. வங்குலை-வன்கொலை, கொடிய கொலை.

33. வங்கிசம்-வமிசம்.

Should a tree alive go with a withered one staying on?
Wouldn't his kindred go to dust
That called you to serve
And yet put you to this death gruesome?
Pūlāḷ brought in the logs heaped them swift
And over it laid the head and the body.
Pūlāḷ went on crying tears pearl-like rolling down :
"Fated should you be thus O my son?
Should I remain alive yet?
Have not I a son to put rice in my mouth when dead!
Have not I one to light my funeral pile!
Nor have I one to break the pot !
Should I go living yet?
Pūlāḷ ended her days her saree a rope acting.
Cōṇacci the daughter-in-law yet to be
Had her share in grief too:
"I've seen not the marriage shed decorated!
I've seen not the badge adorn my neck!
United not I'm with my lord
I've drunk not the milk in his cup
Shared not his drink and food, shared not his bed
Proclaimed was my marriage to my cousin,
Messages were sent to people far
And betelnut to relations neighbouring.
Could I live to marry another man?
Would't the world talk ill of me?"
To the Lord's refuge she did choose to go.
And Rāmapakaṭai falling headlong breathed his last.
The hound too fell down dead howling.

### காட்டாளம்மன் செயல்

கண்டாளே காட்டாளம்மன்-இது-காரணமோ என்றுசொல்லி
தீர்த்தம் திருநீறும் திருப்பிரம்பும் கொண்டுவந்து
சின்னத்தம்பி சோணச்சி பூலாளும் ராமப்பகடை
ஏறும்பரி பூச்சிநாயும் ஏமபுரம்[34] சேர்ந்தவரை
தீர்த்தம் நீர்தெளித்துத் திருப்பிரம்பால் தட்டிடவே
உறங்கி யெழுந்தவர்போல் ஒன்றுபோலே தானெழுந்தார்
மானிடர்கள் கண்ணுக்கு மறைவாக இருக்கும்படி
காளிகூளி பேய்களுடன் கட்டழகன் சின்னத்தம்பியை
முன்னோடுஞ் சேவுகனாய் முதற்பிள்ளை சின்னத்தம்பி
இருக்கிற நாளையிலே ஏதுசெய்தான் சின்னத்தம்பி

### சின்னத்தம்பி பழிவாங்கல்

காட்டா ளம்மனிடம் கைகெட்டி வாய்பொத்தி
என்னைஇவ்விதஞ் செய்தவரை ஈரலெடுத்து மாலைபோட்டு
வம்மிசத்தை நாசமாக்கி வரவேணும் என்தாயே
போகவிடை தான்கொடுத்தாள் பூதப் படையுடனே
பாப்பாக்குடி ஊரையெல்லாம் பதறடித்துச் சின்னத்தம்பி
தர்மராசா சோமப்பிள்ளை ஆண்டாபிள்ளை அழகப்பபிள்ளை
மந்திரவாதி குமாருப்பிள்ளை மாடன்சாம்பான் வம்மிசமும்
குத்திரெத்தம் தான்குடித்துக் குடல்பிடுங்கி மாலைபோட்டு

### வழிபட்டு மீளல்

அழகியநம்பி குறுங்குடிநம்பி அவர்களையுஞ் சேர்வைசெய்து[35]
மலையின்நம்பி ராசனையும் மண்டிலிய சாஸ்தாவையும்
கன்னிமார் பெண்களையும் கருமாண்டி யம்மனையும்
அடிதொழுது சின்னத்தம்பி அநேகம்பேய்ப் படையுடனே
மலையாள தேசத்தையும் வந்துசுத்திப் பார்த்துக்கொண்டு
நாகப்பொதிகைப்[36] பாதைகூடி வருகிறானே சின்னத்தம்பி
அஞ்சுதலைப் பொதிகையிலே அகஸ்தியரைச் சேர்வைசெய்து

---

34. ஏமபுரம்-எமலோகம்
35. சேர்வை செய்து-சேவைசெய்து அதாவது வணங்கி.
36. நாகப்பொதிகை-பொதிகை நாகம் என்க. நாகம் – மலை. பொதிகைமலை.

Kāṭṭāḷammaṉ saw the tragedy revealing and to the spot came.
She sprinkled the waters holy and ashes
On Ciṉṉattampi and Cōṇacci
Rāmapakaṭai and Pūlāḷ, the horse and the hound
And touched them with a wand in her hand.
All came to life awakened as if from sleep.
The deity saw Ciṉṉattampi live unseen by human eyes.
And he lived with the host of spirits
Living with them first in command.
And Ciṉṉattampi prayed in obeisance great.
"O Mother bless me
To see my killers brought to ruin with their tribe
And to come back garlanded with their livers.
Ciṉṉattampi blessed went with the army of spirits,
Havoc he wrought on Pāppākkuṭi,
Ruin complete he saw
Of Tarmarācar, Cōmappiḷḷai, Āṇṭāppiḷḷai Aḷakappapiḷḷai,
Kumāruppiḷḷai and Māṭaṉcāmpāṉ along with their clan,
And had a garland of their bowels pulled out.
Ciṉṉattampi offered prayers worshipful
To Aḷakiyanampi[46] and Kuṟuṅkuṭinampi[47]
To Nampirācā[48] of the hills and Maṇṭiliya Cāstā[49]
To the Virgins divine[50] and Karumāṇṭiyammaṉ[51]
The army of spirits following
Ciṉṉattampi proceeded to Nākappotikai
After a visit to the Malayalam land.
A prayer to Akastiyar at the Potikai range five-peaked

46. God Viṣṇu.
47, 48, 49, Minor deities.
50. Deified females who were pious virgins on earth, afterward born in deified forms.
51. A minor detiy.

ஆனைமொட்டைத் தேரியிலே அய்யன்காக்ஷிப் பெரும்படைகள்
சங்கிலிப் பூதத்தாரிடம் தகைதீர்த்து எழுந்திருந்து
குளத்துப்புழை அய்யர்பாதம் கும்பிட் டடிவணங்கி
ஏகப்பொதிகை வழியாக இறங்கிய பூதப்பேய்கள்
வாணதீர்த்தம் தானாடி வருகிறானே சின்னத்தம்பி
சொரிமுத்து ஐயரையும் அடிவணங்கித் தெண்டனிட்டு
கலியாணித் தீர்த்தமாடிப் பாவனாசம் வாரானே
பாபவிநாச நாதரையும் பகவதியுடனே தொழுதுகொண்டு
குற்றால நாதரையும் குழல்வாய்மொழி அம்மனையும்
அச்சம்பொழிக் காவதிலே திருவாழி அய்யரையும்
கண்டுதெரிசித்துக் கொண்டு காவுவிட்டுக் கீழிறங்கி
கடையம் கிஷ்ணா புரம்கூடிக் காக்கைநல்லூர்ப் பாதைகூடி
காட்டாளம்மன் கோவிலிலே வந்துசேர்ந்தான் சின்னத்தம்பி

**பாப்பாக்குடி அந்தணர் பூசை**

எண்ணிறந்த பேயுடனே இறங்கியே சின்னத்தம்பி
வட்டமிட்டு வருந்திக்கொண்டு வருவார் போவாரை
வேறுவினை யணுகாமல் காத்திடுவான் சின்னத்தம்பி
பாப்பாக்குடிப் பிராமணர்கள் பகடை சின்னத்தம்பிக்கு
பூடம்போட்டுத்[37] தானுமங்கே பொங்கலிட்டுப் பெலிகொடுத்து
பெற்றெடுத்த பிள்ளைகளைச் சின்னத்தம்பியென்று பெயருமிட்டு
ஈத்துக்கூலிப்[38] பணம்வாங்கி இருந்துவாரான் சின்னத்தம்பி

**வாழி**

சின்னத்தம்பி தன்கதையைச் சீராய்ப் படித்தவர்கள்
படித்தவர்கள் கேட்டவர்கள் பாரிலுள்ள மானிடர்கள்
ஆலுபோல் தான்தளிர்த்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் அன்னசுத்தம் முசியாமல் வாழியவே.

சின்னத்தம்பி கதை முற்றுப்பெற்றது.

---

37. பூடம்-பீடம், ஆசனம்.
38. ஈத்துக்கூலி - சுகப்பிரசவத்துக்காகத் தரும் காணிக்கை.

Then he reposed at Āṉaimoṭṭai Tēri
The domain of Ayyaṉ[52], his legions and Caṅkili[53].
Kneeled down at Kuḷattuppuḷai Ayyar's[54] feet
Had a bath at Vāṇatīrttam and moved along Potikai.
Worship to Coṟimuttu Ayyar[55] and a bath at Kalyāṇi[56]
Prayer devout to Pāpavinācanātar, [57] His consort
To Kuṟṟālanātar[58] and Kuḷalvāimoḻiammaṉ[59]
Tiruvāḷi Ayyar[60] of the sylvan plains of Accampoḷi.
Journeyed later through Kaṭaiyam and Kiṣṇāpuram
And arrived at Kāṭṭālammaṉ shrine via Kākkainallūr road.
Remaining there in form ghostly
Ciṉṉattampi would protect wayfarers safe.
The guardian spirit that he was.
Brahmins of Pāppākkuṭi come they would in worship
To Ciṉṉattampi the lowly
With camphor, rice and sacrificial offerings
After Ciṉṉattampi they would name their children.
Offering him oblations for safe child-birth.
Those that read Ciṉṉattampi's life
Readers and auditors, the people at large
Would grow banyan-like
Rooted they would be like *aruku*[61] grass
And prosper long bamboo-like with their kin.

THE END

---

52, 53, 54, 55. Minor deities.
56. Kalyāṇi falls.
57. Śiva at Pāpanācam.
58. Śiva at Kuṟṟālam.
59. Śiva's consort at Kuṟṟālam.
60. A minor deity.
61. A kind of grass whose roots remain widely spread under the earth.

உச்சினி மாகாளியம்மன் கதை

# THE STORY OF UCCIṈI MĀKĀLIYAMMAṈ

# உச்சினி மாகாளியம்மன் கதை

சிவமயம்

ஸ்ரீராமஜெயம்

1106ஆம் ஆண்டு கார்த்திகை மாசம் 5ஆம் தேதி துடங்கி எழுதிச் சேர்த்த உச்சினி மாகாளி கதை. ஏடு நன்றாக வாழ்க. வேலுண்டு வினையில்லை.

கு. ஆறுமுகப் பெருமாள் நாடார் சேர்த்தது.

சுபம்.

சிவாயநம, ஸ்ரீராமஜெயம்.

**காப்பு**

அண்டரொடு[1] கிம்புருட[2] ரறவர் நாகர்
அசுரர்நரர் கையாலும் பாணத்தாலும்
தண்டதிலு[3] மல்[4]லெல்லி[5] லுள்புறம்பில்
தலம்[6]விசும்பில் சாகாத இரணியற்கு
கொண்டல்வர்ணன் சுதனாகத்[7] தோன்றித்தூணில்
கூறரியுண் டெனமொழிய மடங்கலாகி[8]
அண்டயோ னி[9]புகுதும் வேளைதன்னில்
அரிகுறங்கி[10] லெடுத்துகிரால்[11] பீறிற்றம்மா[12]

---

1. அண்டர்-தேவர்.
2. கிம்புருடர்-பதினெண்கணத்துள் ஒருவராய் மானுடமுகமும், குதிரையுடனும் படைத்ததேவசாதியார்.
3. தண்டு-கதாயுதம்.
4. அல்-இரவு.
5. எல்-பகல்.
6. தலம்-பூமி.
7. சுதன்-மகன்.
8. மடங்கல்-நரசிங்கம்.
9. அண்டயோனி-சூரியன்.
10. குறங்கு-தொடை.
11. உகிர்-நகம்.
12. பீறுதல்-கிழித்தல்.

# THE STORY OF UCCIṈI MĀKĀḶIYAMMAṈ

*The Omnipresent Śiva*

*Victory to Lord Rāma!*

The story of Ucciṉi Mākāḷi written and compiled over a period from *Kārttikai*[1], 1931. Long live the manuscript. Nothing to fear with the lance of Murukaṉ protecting. Compiled by Ku. Ārumukap Perumāḷnāṭār.

Bliss

Victory to Śiva!
Victory to Sri Rāma!

**Invocation**

Iraṇyaṉ the invincible, undying,
Die he wouldn't by hands or weapons
Of the *Devas* or *Kimpurutas*[2]
*Nākās*[3], *Acurās*[4] or humans,
The club of Death would touch him not,
Night or day, home or out, earth or sky
Death would never finish him off.
Born to him was the cloud-hued Ari[5]
Who showed the indescribable One[6] in the pillar.
Came out Narasiṁha,[7]
Who placed Iraṇyaṉ on his thigh
At the time the sun went down the ocean
And tore him off with his nails.

---

1. The eighth month of the Tamil Calendar, being part of November and December.
2. One of the 18 kinds of celestials with human face and the body of a horse.
3. A race of demi-gods.
4. A class of evil demi-gods, inimical to *Devas*.
5. Tirumāl.
6. Viṣṇu.
7. The man-lion *avatāra* of Visnu, the upper part of the body being a lion, the lower a man.

பீறிடவே இரணியன்றன் குருதிதன்னில்
பெண்கொடியா ளுச்சினிமா காளியோடே
கூறரிய பூதகண மலகை[13] சூழக்
கொற்றவைசன் மினி[14]வலவை[15] வாள்கைக்கொண்டாள்
ஆறணியும் ஈஸ்பரனின் அருள்தன்னாலே
அவனிதனில் வந்துதித்து வரங்கள்பெற்று
வீறுடைய மாந்தர்களை அடக்கவந்த
வேதாளி கதைபாட விசாகன்[16] காப்பாம்.

மாதரி[17] தோழியோடே மண்ணின்மேல் ரதத்தில் செல்ல
போதனி[18] னமைப்பினாலே பொருந்த வானோர்கள் கூடி
வாதனை நீங்கிற்றென்று வனசமா மலையின் பக்கல்
சீதரன் தங்கையற்குச்[19] சினகரம் நியமித்தாரே.

நியமித்த இடத்தெண்டோளி[20] பாங்கியோ டிருக்கும்நாளில்
வியனுறு விக்கிரமார்க்கன் பட்டியுந் தொழுது போற்ற
உயர்நிலைப் பதவியீந்த உச்சினி மாகாளி காதை
இயலுறு புவியோர் பாட ஈசனின் மைந்தன் காப்பாம்.
சரஸ்வதி முன்னிற்க.
அந்தி மதிசூடு மரனார்பங்கி லமர்ந்த மாகாளி கதைபாட
தந்தி முகத்தோனு மரியயனும் தாயார் வாணியுந் துணை என்கோ
உந்தனுட கதை பாடுதற்கு உச்சினி மாகாளி துணைவருவாய்.

**இரணியன் வரமும், தேவர் துயரும்**
**நூல்**

தக்கன்மகள் திதி பக்குவத்தில் தானே காசிபர்க் குரியவளாய்

---

13. அலகை-பேய்.
14. சன்மினி-துர்காதேவிக்குத்தொண்டுபுரியும பெண்பேய்.
15. வலவை-இடாகினிப்பேய்.
16. விசாகன்-முருகக்கடவுள்.
17. மாதரி-காளி.
18. போதன்-பிரமன்.
19. சீதரன்தங்கை-ஸ்ரீதரனாகிய திருமாலின் தங்கை.
20. எண்டோளி-எட்டுப்புயங்களை உடைய பத்திரகாளி. புயம்-தோள்.

Iśvara the bearer of the Ganges gracing,
Of Iraṇyan's blood gushing
Born was Uccini Mākāḷi awe incarnate
With her host of spirits Canmini and Valavai included;
Born she was on the earth armed with boons divine
To contain mortals arrogant.
May Murukan bless us to sing Her praise!
Riding her chariot on the earth
As Kāḷi was with her] maids,
(Iraṇyan the troublesome having ended),
Assembled the celestials Brahma presiding;
For Tirumāl's sister[8] they erected
A shrine by Vanaca hill.
Seated in the shrine as the Eight-Shouldered with her maids was,
The worshipful adoration of Vikkiramātittan and Paṭṭi
Brought them to position exalted.
The son of Śiva[9] may bless us to sing Her name.
Come to my aid to sing your life
O Uccini Mākāḷi, the twilight moon decked and half in Śiva,
Along with the Elephant-headed,[10]
Ari[11], Ayan[12], the Mother[13] and Vāṇi.[14]

## Text

Takkan's daughter Titi grew to maidhood
And married she was to Kācipar.

---

8. Kāḷi, the consort (*sakti*) of Śiva.
9. Lord Gaṇēśa, son of Śiva and Pārvathi. He is the god of wisdom and remover of obstacles; hence he is invariably propitiated at the beginning of any important undertaking, and is invoked at the commencement of books.
10. Ganēśa.
11. Tirumāl.
12. Brahman.
13. Lakshmi, the goddess of fortune, wife of Viṣṇu and mother of Kāma.
14. Saraswati, the tutelary deity of writers and poets and the wife of Brahma.

மலரு மணமும்போலே-கூடி- மகிழ்ந்து இருக்கிற வேளையிலே
இரும்புடையதோ ரிரணியனும் இரணியாக்கதனும் பிறந்தனர்
பிறந்து வளர்கிற நாளையிலே பிள்ளைகளிரு பேருமாக
அரியுடனே அயன்-காணாத-ஆதியை நெஞ்சில் தானிருத்தி
வருந்தித் தவஞ்செய்து வரங்கள்பெற்று வாழ்ந்திருக்கிற நாளையிலே
இழிவுசெய்த இரணியாக்கதனை இரண்யகற்பனின் தாதை[21] கொன்றார்
கொன்ற விபரத்தை யறிந்தவுடன் கொடிய இரணிய னேதுசெய்தான்
நம்முடைய வரங்காணாதோ நலமுடையதம்பி பகைமுடிக்க
என்று இரணியன் நினைத்திருக்க இரணியன் வரங் கேளுமையா
மூவரொடு தேவர் முனிவராலும் மூவுலகோராலு மழிவேயில்லை
பஞ்சபூத வகைதனில் மடியான்[22] பலமிருகத்தாலுஞ் சாவேயில்லை
அண்டர் முனிவர்க ளிடுசாபமும் அவனுக்கொருக்காலும் பற்றாது
படைத்தலொடு காத்த லழித்தலெல்லாம் பாவிதானாகச் செய்யுகிறான்
அகத்திலும் புறத்திலும் இறக்கமாட்டான் அல்லிலு மெல்லிலுஞ் சாவேயில்லை
மறலி வந்தாலும் பிடிக்கமாட்டான் மந்திரத்தாலும் அழிவேயில்லை
அப்பேர்ப்பட்டதோ ரிரணியனும் அரிபேர்சொல்லாது தன்பேர் சொல்லி
ஆண்டிருக்கிற நாளையிலே அரக்கனிரணிய னும்பர்களைக்[23]
கட்டியடித்துமே ஏவலாளாய்க் கள்ளுக் குடங்களைச் சுமக்கச்சொன்னான்
வாரிதியிற்[24] சென்று மீன்பிடித்து வந்துதினந்தோறும் போடச்சொன்னான்

21. இரண்யகற்பனின்தாதை-பிரமனின் தந்தையாகிய திருமால்.
22. மடியான்-சாகமாட்டான்.
23. உம்பர்கள்-தேவர்கள்.
24. வாரிதி-கடல்.

In joyous togetherness they lived
Like a flower and its fragrance.
Born to them were Iraṇyaṉ and Iraṇiyākkataṉ
Hardy and firm they were.
In deep devotion to Āti[15] they grew,
Ari and Ayaṉ outdone that they were[16];
Penance and austerities long and severe
Brought them boons rare and divine;
Living in content as they were
Iraṇyakaṟpaṉ's father[17] did Iraṇiyākkataṉ to death
Avenging of an insult that it was.
Iraṇyaṉ vengeful did penances severer
And came armed with boons unsurpassed:
Die he would not of the Trinity divine[18]
Nor of *Devas* and ascetics,
Nor of those from the three worlds;
Safe absolute from the elements five[19] and beasts wild,
Never would he be affected by curses from *Devas* or ascetics
Creation, preservation and destruction he arrogated to himself;
Die he wouldn't
Home or out, day or night,
Taking him death would refrain from;
Witchcraft and magic ineffective they would be too.
Such a boon endowed with
Iraṇyaṉ tyranny incarnate grew
Chanting his own name and thinking not of Tirumāl.
Inflict insults, injuries deep on *Devas* he did:
Tied them round and beat them,
Made them carry pitchers of toddy,
Forced them bring fishes everyday from sea,

15. Śiva.
16. Brahma and Viṣṇu taking the forms of swan and hog respectively, try to scale Lord Śiva. The former tries to reach Śiva's head while the latter His feet. Both of them finding their attempts futile accept the superiority of Śiva.
17. Tirumāl.
18. Śiva, Brahma and Tirumāl.
19. The earth, water, fire, air and space.

மாருதியை[25] வந்து தினந்தோறும் மண்ணில் தூசியை விளக்கச் சொன்னான்
மன்னன் வருணனைக் கட்டிவந்து மண்ணின் புகையதை அமர்த்தச் சொன்னான்
எல்லை மார்த்தாண்டன் தனைப்பிடித்து இல்லங்கு மிங்குமாய்ப் போகச் சொன்னான்
இப்படி யேதினம் வேலைகொண்டு இரணியராஜனும் ஆண்டிருக்க

**சிவபிரான் கூற்றும், பிரகலாதன் பிறப்பும்**

வேலை உபத்திரவம் பொறுக்காமல் விண்ணவர் எல்லோருந் தாங்கூடி
சிவனா ரிடத்திலே போகவென்று தெய்வா ரொருப்போலே வழி நடந்து
கைலை மலையிட மானதிலே கறைக்கண்டர் சந்நிதி முன்பில்வந்து
அபையஞ் சிவனேநீர் காற்கவேணும்[26] அன்னை தந்தை யில்லாப் பிள்ளைகளை
என்று விண்ணோர்களு முறையுமிட ஏகன்மனமது இரங்கிச் சொல்வார்
நன்று நன்றுகாண் தேவர்களே நாரணரை யிப்போ அழைக்கவேணும்
என்று சிவனாரும் மனதிலெண்ணி ஏத்த கலுழனைத்[27] தான் வருத்தி
கெருடன் தனையரன் தான்வருத்திக் கீர்த்தியுடன் சொல்வா ரோர்வசனம்
பாற்கடலிலே பள்ளிகொண்ட பத்மநாபனைக் கூட்டிவர
நானுமுன்னை யிங்கே வரவழைத்தேன் நாரணரை இப்போ அழைக்கவேணும்
என்று சிவனாரு முரைத்தபோது ஏத்தஉவணனுங்[28] கடிதாக
பறந்து சென்றுமே கெருடாழ்வான் பச்சைமாலையுங் கூட்டிவந்தான்
வந்த வுடனங்கே மாயவரும் வார்த்தை ஏதுரை சொல்லுவாராம்
வரவழைத்ததோர் காரணத்தை வரன்முறை யாகச் சொல்லுமையா
என்று தாமோதரன் கேட்டபோது இயம்பு வாராம் இறையோனும்
இஷ்ட முள்ளதோர் மைத்துனரே இயம்பக்கேளும்நீ ரோர்வார்த்தை
வல்ல தவஞ்செய்து வரங்கள் பெற்று வாழ்ந்திருக்கப்போன இரணியனும்
இலேகர்[29] சங்கத்திற்குத் தினந்தோறுங் இடுக்கண் பலதுமே செய்தனனாம்
அந்த விபரத்தை நம்மோடே அமரர்க ளெல்லோருஞ் சொல்லிக்கொண்டார்
அநதப் படியினா லவன்வரத்தை அழிப்பதற்காக உமையழைத்தேன்
என்று பரனாரும் உரைத்தபோது ஏதுரைப்பாராம் நாரணரும்
என்னஎன்ன கோலங்கொண்டு சென்று இவன்வரத்தையும் அழித்திடுவேன்
பாயும்புலி யாளியாகச் சென்றால் பாவிநம்மையும் கொன்றிடுவான்
மாற்றலராகவே சென்றாலும் மாபாவி நம்மை வதைத்திடுவான்
ஆனாலும் வரம் அழிப்பதற்கு அரனேநீ ரொன்று சொல்லுமையா
என்று பரந்தாமன் சொன்னபோது ஈஸ்பரனாரு மேதுசொல்வார்

25. மாருதி-காற்று. (வாயு)
26. காற்கவேணும்-காப்பாற்றவேண்டும்.
27. கலுழன்-கருடன்.
28. உவணன்-கருடன்.
29. இலேகர்-தேவர்.

Ordered Māruti[20] to sweep the floor,
Brought in Varuṇa[21] to settle the earth's dust,
Sent dictates to Mārttāṇṭaṉ[22] on errands futile.
Decrees of Iraṇyaṉ thus went unending.
The tyranny unbearable united the *Devas*
Who went to *Kailai* hills to appeal to the Blue-throated[23] :
"Orphaned are we, protect us O Śiva!"
Responded the Lord moved as he was:
"I would come to your help O *Devas*!"
He summoned *Karuṭa*[24]
And spoke words sublime:
"Summoned you're here
To fetch Patmanāpaṉ[25] from the Milky Ocean,
Bring him forthwith O *Karuṭa*".
Swift flew Uvaṇa[26]
And brought in the Lord of complexion green.
Arriving, Tirumāl uttered a word:
"Tell me in detail O Lord the reason for your call."
Came Śiva's reply to Tāmōtara[27]:
"O my nephew dear, listen to my word!
Iraṇyaṉ grew big, severe his penances were
And reported to us is the distress of *Devas*,'
Called in you're to undo his boons!"
Nārāyaṇaṉ[28] thence spoke to the Lord:
"What form could I take to see his boons unmade!
Go in form tiger or lion killed I be sure
A tyrant hardened he is!
Go as a foe proclaimed tortured I would be!
Tell me a way O Śiva to undo his boons!"
Īśvaraṉ spoke in reply to Parantāmaṉ[29]:

---

20. Vāyu, the god of the wind.
21. God of the waters.
22. The frontier deity.
23. Śiva.
24. The vehicle of Visṇu.
25. Visṇu (of the lotus navel).
26. Karuṭa.
27. Visṇu (bound with a rope round the belly)
28. Visṇu (who moves in the waters).
29. Visṇu (wearing the universe round his neck in the form of a garland).

இரணியன்தேவி லீலாவதிக்கு ஏத்தபிள்ளையாய்ப் பிறக்கவேணும்
பிள்ளை யாகவே தான்பிறந்து பெலத்த இரணியன் தன்னோடு
வாது புரிந்துமே யவன்தனையும் வதைக்க வகைஒன்று சொல்லுகிறேன்
வயிர மணித்தூணி லரியுண்டென்று வண்மையுடன் நீரும் சொல்லவேணும்
சொன்ன வுடனந்த இரணியனும் சுருக்குட னேயவன் வாளுருவி
வயிர மணித்தூணை வெட்டிடவே வருணன் திசையினிற்[30] பரிதிபுகத்
தூணில் நரசிங்க ரூபமாகத் தோன்றி இரணியன் தனைவதைப்பீர்
என்று சிவனாரும் உரைத்தபோது எம்பெருமாளுஞ் சந்தோஷமாய்ப்
பிள்ளை யில்லாத லீலாவதிக்குப் பெருமாள் குழவியாய்ப் பிறக்கவென்ன
கங்காளரவர் நினைந்தபோது காரிகைக்குக் கெர்ப்பந் தரித்திடுமாம்
ஒன்றிரண்டு மூன்று நாலாகி ஒண்டொடிக்கு மாதம் ஐந்தாகி
ஐந்தாகியதோர் மாதமதில் அயலிடத்துப் பெண்கள் தானறிந்தார்
அறிந்தாறு ஏழுயெட்டாகி அன்புட னொன்பது பத்தாகி
பத்து மாதமது திகைந்தபோது பாவை நல்லாட்கு வயிறுநோக
சோர பனிக்குடந் தானுடைய தோகைமார் பக்கத்தில் பிடித்திருக்க
அடிபிடியாக வயிறுநோக ஆண்மகவு ஒன்று பிறந்ததய்யா
பிறந்த மகவுக்கு இரணியனும் பேரிட வேயவன் மனதிலுன்னி
பிரகலாத னென்றுசொல்லிப் பேரிட்டிரணியன் தான்வளர்த்தான்.

**பிரகலாதன் கற்றகல்வியும், இரணியனின் கொடுஞ் செயலும்**

**வேறு**

பாலன் பிறந்து வளர்ந்து வருகிற நாளில்
பாவி இரணிய ராஜனு மேதுரை சொல்வான்
பொன்செய்யுங் கொல்லரைப் போயழைத்துக் கொண்டுவாரும்
புகழ்பண் புரைப்பவரே என்னத் தூதுவர் சென்று
அக்க சாலையரைக்[31] கூட்டிக்கொண்டு வேகமாக
அரசன் சமூகமதிலே விட்டுவிட்டுச் சென்றார்
சென்றிட ராஜனும் பொன்செய்யுங் கொல்லரை நோக்கிச்
செல்ல மகனுக்கு வல்ல பணிகள் செய்வீரே
என்று இரணிய ராஜ னுரைத்த பொழுது

30. வருணன் திசை - மேற்கு.
31. அக்கசாலையர் - தட்டார்.

Born you must be a worthy son to Līlāvati Iraṇyaṉ's wife.
To humble Iraṇyaṉ of strength supreme
Give you a way I will.
Argue with Iraṇyaṉ your father,
Tell him of Ari's[30] presence in the pillar,
Iraṇyaṉ in anger would draw his sword
And cut the pillar down;
At which time the sun would set in Varuna direction[31],
Emerge then from the pillar cut
In form Narasiṁhaṉ and send him to death"
The bearer of the Ganges[32] willing,
Līlāvati conceived;
Days passed and month fifth it was
When women neighbouring came to know of it.
Moved on the time swift
Years six, seven, eight, nine and ten
And the lady virtuous was in labour pain,
Pain intense she felt and
The women beside held her on.
Amnion breaking born was a male child.
Christened Pirakalātaṉ the child was
And it grew on Iraṇyaṉ's care.
Summoning his messengers king Iraṇyaṉ said:
"O my men the carriers of my glory!
Bring me the goldsmiths."
Went forth the messengers
And brought the goldsmiths to the royal presence;
"Make for the prince my darling choice ornaments."

---

30. Hari (Viṣṇu).
31. West (Varuna being the regent of the west quarter).
32. Śiva.

ஏகியே பத்தரைமாத் துள்ளதங்க மதாலே
பாவினை யாகவே பிள்ளைப் பணிகளுஞ் செய்து
பாராளும் வேந்தனின் முன்பாக வைத்துத் தொழுதார்
தொழுதிடும் பொன்செய்யுங் கொல்லனுக்கு ராஜன் பரிவாய்
தூய மனத்துடன் வல்ல வெகுமதி செய்து
பிள்ளைப்பிரக லாதனுக்குப் பொன்பணி பூட்டிப்
பெருமா னிரணியன் வளர்த்து வருகிற நாளில்
உண்மை யுடையதோர் பாலனுக்கு வயதொன்றாய்
உத்தரண்டு மூன்று நாலு ஐந்துவய தாகி
ஐந்துவய தானபோதி லிரணிய ராஜன்
அன்புடன் சுக்கிராச்சாரி தனைப்பார்த்துச் சொல்வான்
குலகுரு வாகிய சுக்கிராச் சாரியே கேளும்
குணமுள்ள பாலனுக்கு எழுத்தோதண மென்றார்
என்று இரணியராஜ னுரைத்த பொழுது
எழுந்து ஆச்சாரியும் ஏடும் எழுத்தாணி கொண்டு
கணபதிக்கு நிறைநாழியுடன் தீபதூ பம்
கருத்துடன் செய்து அகரம் வரைய லுற்றாரே
வரைந்து இரணியாய நமவென்று சொல்லி
வரிசையுட னெழுத்தோதத் தனயனுஞ் சொல்வான்
எங்க ளரிஓம் நமவென்று சொல்லாதே ஆசான்
எந்தன் தகப்ப னிரணியன் பேரைச் சொல்வேனோ
என்று சிறுவ னுரைத்திடச் சுக்கிராச்சாரி
இரணியன் தன்னை வருத்தி எழுத்தோதி வைத்தான்
அப்போதும்-பாலக னரிஓம் நமவென்று சொல்ல
அசுர னிரணியராஜன் கோபத்தோ டெழுந்து
எந்தன் மகனே நீ என்பேரைச் சொல்ல வொண்ணாதோ
என்று இரணியன் கேட்கப் புதல்வனும் சொல்வான்
எங்களாதி அரிநாமத்தைச் சொல்வேனே யல்லால்
இரணியா உன்பேர் இரவில் கனவிலுஞ் சொல்லேன்
என்று சிறுவன் பிரகலாத னுரைசொல்ல
எரியெனக் கோபித்து இரணியனு மேதுசெய்தான்
ஐராவதத்தைப் பிடித்து மகன்தலை தன்னை
அரைநொடி தன்னி லிடறிடச் சொன்னானே மன்னன்

Left the goldsmiths with the royal order in hand,
And came the ornaments of gold of superior kind
And of workmanship consummate.
The ruler merciful and generous
Awarded the obeisant goldsmiths
Gifts large and precious.
Adorned with these ornaments worthy,
Pirakalātan̲ in splendour grew.
Years five as the boy virtuous saw
Iraṇyan̲ spoke to Cukkirāccāri:
"O the teacher of our tribe!
To my virtuous son teach the letters."
The learned teacher chose the time auspicious,
Invoked Kaṇapati with incense and light
And wrote the letter first of the alphabet with his stylus.
Went on the *guru* with Iraṇyan̲'s name on his lips,
And came the response prompt of Iraṇyan̲'s son:
"O my teacher! would I utter my father's name
While I should *ari ōm name*?[33]
Speaking thus as the boy was,
Cukkirāccāri summoned Iraṇyan̲
And in whose presence instruction started.
Persist the boy did in uttering Lord's name.
Rising in anger from his seat Iraṇyan̲ spoke:
"O my son! do you find my name unutterable?"
"Utter I would the name of Ari our Lord Supreme
And never your name in dream nocturnal even O Iraṇya!"
Pat came the reply.
Ordered Iraṇyan̲ in rage burning:
"Send the boy my son to death in a snap halved
At the feet of Irāvatam[34].

---

33. Literally, 'I worship you O Hari'.

34. The elephant of Indra.

அப்போது பாலனைக் கொல்லவந்த மதயானை
அழகிய கோடு முறிந்து பதறியே ஓட
மெத்தக் கோபங் கொண்டு அக்கினி தன்னிலே தள்ள
மேன்மைபெறப் பாலன் முங்கிக் குளித்துமே வந்தான்
கண்ட இரணிய ராஜனுக்குக் கோபமுண்டாய்
கல்லைக் கட்டிக் கடல்தன்னிலே தள்ளச் சொன்னானே
தள்ளியும் பாலகன் சாகாமல் துள்ளிவரவே
தான்மழு வாள்சூலம் வேல்கொண்டு குத்தவே சொன்னான்
குத்தியும் பாலகன் சாகாதிருந்தமை கண்டு
கொடிய விஷத்தைப் பழவர்க்கத்தோடு கொடுத்தான்
கனியைக் கொடுத்தும் இறவாதிருக்கவே கண்டு
கட்டியிரும்புப் பணையோடு வைத்து அடித்தான்
அரசனின் பாலக னடித்துஞ் சாகாம லிருக்க
அஷ்ட நாகங்களைக் கொண்டு கடிப்பிக்கச் செய்தான்
எப்படிச் செய்தாலும் இந்தப் பாலக னழியான்
என்று இரணிய ராஜனு மெண்ணியே சொல்வான்

## இரணிய வதமும், உச்சினி மாகாளி பிறப்பும்

எந்தன் மகனே செந்தேனே கரும்பே நீகேளு
இப்போசெவிக் கின்பமாக என்பேரையே சொல்லு
என்ன இரணிய ராஜ னுரைத்த பொழுது
எரியெனக் கோபித்து ஏத்தசிறு பாலன் சொல்வான்
நிச்சயமாக உன்பேரை வாயால்சொல்ல மாட்டேன்
நீதிபரன் அரிநாமத்தை என்றும் மறவேன்
என்றுசிறுவ னுரைத்த மொழி தனைக்கேட்டு
இரணியராஜன் சினங்கொண்டு ஏதுரை சொல்வான்
பெற்ற தகப்பனின் பேரைச் சொல்லாது மகனே
பித்த னெவனோ அரியென்று சொல்லுகிறாயே
அரியென்று சொல்பவ னெந்தனுக்குப் பகையல்லோ
ஆகையி னாலவனெங்கே இருக்கிறான் சொல்லு
என்று இரணியன் கேட்ட பொழு தந்தப்பாலன்
எங்களரி உலகெங்கும் இருக்கிறா ரப்பா
சொல்லினும் சொல்லின் முடிவிலும் உந்தன்மனையின்
தூய வயிரமணித் தூணிலு மிருப்பாரே
தூணிலும் இருப்பாரென்று சொன்ன மொழியைத்
துஷ்ட னிரணிய ராஜனுங் கேட்டுச் சினமாய்
இந்த வயிரமணித் தூணிலு மிருப்பானோ

Came the elephant rutting
To run off flurried with its lovely trunk broken;
In anger intense Iraṇyaṉ threw him into fire
To see him emerge as from a bath;
Incensed deep
Iraṇyaṉ saw him bound to a stone and thrown into the ocean
Seen was the boy coming out joyous;
"Kill him by dart and axe, sword and spear."
The king ordered to find him unscathed;
Iraṇyaṉ gave him deadly poison mixed with fruits
To see him again unaffected;
Unstained was he when tied to an iron bar and whipped;
The bite of cobras eight[35] sent him not to death too.
Gone desperate Iraṇyaṉ spoke:
"Listen to me son honey and sugar-cane like!
Do utter my name to the pleasure of my ear".
"Articulate your name I wouldn't sure
Forgetting the name of the Lord just".
Came thus the words of flame like fury.
Enraged Iraṇyaṉ burst forth:
"You speak of a lunatic named Ari
Refusing to utter the name of Iraṇyaṉ your father,
Isn't he my enemy proclaimed?
Could you tell me where he is?"
"Omnipresent is our Lord O father!
He is the word its beginning and end,
Present He is in the pillar steeled of your fort too".
Angered at the felt assertion Iraṇyaṉ said:
"Would he be there in this pillar too?"

35. The eight famed serpents of the nether world employed at the eight principal points to support the earth.

என்று இரணியன் வாள்கொண்டு வெட்டவே தூணில்
நின்றுமாலைப் பொழுதான வேளை நரசிங்கம்
நிறையுடன்வந்து இரணியன் தன்னையுந் தூக்கி
வாயில்நடை தனிலேறித் துடைமீது வைத்து
வானவர் தன்பகை தீர்த்திடத்தன் நகத்தாலே
பீற இரணியன் தன்னுயர் மாள உதிரம்
பெருகிடப் பெண்கொடி உச்சினி மாகாளி வந்தாள்.

**சிவன் தந்த வரமும், சீதரன்தங்கை கோயிலும்**

**வேறு**

பிறந்தன ளுச்சினி மாகாளி தெய்வப் பெண்கள் புடைசூழ
பெலமுடை மேதிச்சென்னி[32] மிதித்த மெல்லியள் வஞ்சப்பெண்ணும்[33]
கூடியே யாவரும் குன்றவில்லியுட[34] கோட்டத்தில் செல்லவென்ன
குணமுடன் தோழிமார் தன்னுடன் கூடியே குறிஞ்சி மருதம்விட்டு
கோதைத்திலகம் உச்சினி மாகாளி குழல்சீவிப் பந்தமிட்டு
கூண்ட கைலாச ஆண்டவ னாருட கொலுசமூகத்தில் வந்தாள்
வந்துசிவனைத் தொழுதுபணிந்து வனிதைநல் மாகாளி
வாமதேவனே எனக்கு வரந்தர வேணும் பராபரனே
என்று உரைசெய்த உச்சினி மாகாளி இந்துபோன்ற முகத்தை
ஏறிட்டுப் பார்த்துமே ஏதுரை சொல்வாராம் இறையோன் மனமகிழ்ந்து
நன்று நன்றுநீயுஞ் சொன்னமொழிப்படி நானுனக்கு வரங்கள்
நாட்டிலுள்ள பேர்க ளூட்டுணவுதந்து நாளுந் தொழவுந் தந்தேன்
தந்தே னுலகத்தில் துஷ்டரைச் சிக்ஷித்து சிஷ்டரை ரெக்ஷிக்கவும்
தர்ம நினைவறியாத முகடனைத்[35] தான்வதை செய்திடவும்
மண்டலந் தன்னிலே மந்திரவாதி மதியை மயக்கிடவும்
மதிப்புட னுள்ள வரங்களைத் தந்தேன் மனமொத்து நீபோவாய்
என்றுரை செய்திடும் ஈசனைப்பார்த்து ஏந்திழை மாகாளி
ஏறிப் போகஒரு தேர்தரவும் வேணும் என்றுரை செய்தனளே

32. மேதிச் சென்னி - எருமைத்தலை. மகிடாசுரனைக் குறிக்கும்.
33. வஞ்சப்பெண் - சின்மினி. காளியின் சேடிப் பெண்களில் ஒருத்தி.
34. குன்றவில்லி - மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபிரான்.
35. முகடன் - மூடன்.

Into the pillar went forth his sword.
And came out the Lord in form Narasiṁhaṉ.
Twilight it was and on the portal He stood
Placing Iraṇyaṉ on his thigh.
The Lord tore him with his nail,
Avenged thus was the insult of *Devas*.
Iraṇyaṉ's blood came forth streaming,
And born of it was Ucciṉi Mākāḷi.

Ucciṉi Mākāḷi virtue incarnate
With tresses combed and knotted
Walked in procession with her host angelic
The woman delicate that trampled the buffaloś head[36] beside;
Walk she did across regions *kuṟiñci*[37] and *marutam*[38]
On to the shrine of One holding the hill bent as a bow[39]
And entered the court divine of the Lord of *Kailācam*.[40]
In worship goddess Mākāli spoke:
"Pray I do for a boon, O Vāmatēva[41] Lord of Lords!"
Eyes fixed on the goddess of moon-like forehead
The Lord uttered words pleasing:
"Granted fully is your prayer;
Boon granted to you
To see the world fed and to you in worship come,
To see the wicked undone and the devout flourish,
To destroy the unkind and the unjust,
To unmake the minds in black art set.
And go contented you may".
The Mākāḷi of ornaments bright
Asked of Īcaṉ a chariot for journey downward.

---

36. Caṉmiṉi, a female attendant of Kāḷi.
37. Mountainous tract.
38. Agricultural region.
39. Śiva.
40. Śiva
41. A name of Śiva as opposed to human institutions.

என்றவுரை கேட்டு ஈஸ்பர னாரும்ஓர் இந்திரமாஞால
ரதமொன்று கற்பித்துக் கொடுத்திட உச்சினி மாகாளி சந்தோஷமாய்க்
கூடிடுந் தோழிமார் தங்களுடன்கூடி கூண்டரனார் வாழும்
குணமுள்ள கைலைமலை விட்டிளகியே கோதைநல் மாகாளி
கூளி கணங்கள் புடையாய்த் தொழவே குரங்குடன் மந்திவாழும்
கூண்ட மலைகளும் விட்டு வனசமாக் குன்றினின் பக்கல்வந்தாள்
வந்தவுடன் தெய்வார் கூடியே சீதரன் தங்கையர்க்கு வசிக்கச்
சிறப்புடனே விதியிட்ட படியே சினகரந்[36] தான்முடித்தார்
முடித்த இடத்திலே தாயை இருத்தியே மூன்று காலம் பூசை
முறைதவறாது நடத்திவரவே முன்செய்த புண்ணியத்தால்
எங்கெங்கும் கீர்த்தியுடனே இருந்தரசாண்ட விக்கிரம பூபன்
எண்டோளி தன்னையுங் கண்டுதொழுததோ ரிசைசொல்லக் கேளுமய்யா.

**சந்திரவாணன் சரித்திரம்**

**விருத்தம்**

கட்டுடனே உச்சினி மாகாளி நாட்டைக் கருத்துடனே அரசாண்ட விக்கிரமபூபன்
பட்டியுடன் சனியனால் பட்டகஷ்டம் பகரவென்றால் பாரினிலே மெத்தஉண்டு
திட்ட முடனேபட்ட கஷ்டந் தன்னில் சிறிதுயான் புன்சொல்லால் புலவோர் வில்வில்
தட்டியே பாடும்வர கவியைக் காக்க தந்திமுகன் கந்தனுமே அருள்செய் வாரே.

**வேறு**

நாடானதொரு நாடதிலே நந்தியாபுர நகரத்திலே
பிரமகுலந் தனிலுதித்த பிள்ளைசந்திர வாணனென்போன்
கல்விகற்கவே மனதிலுன்னிக் காட்டின்வழியாக நடக்கலுற்றான்
நடந்த தகையாலே சந்திரவாணன் நாடித் தடாகத்தில் நீர்குடித்து
அடுக்கே நின்றதோ ரரசிமூட்டில்[37] ஆதரவாகத் தூங்கலுற்றான்
அந்தஅரசிலே தவசிருந்த அழகுபிரம ராக்ஷசனும்[38]
இந்தமூட்டிலே படுத்திருக்கும் இவனைஆரெனப் பார்த்திடுவோம்
என்று இராக்ஷசன் மனதிலெண்ணி இன்பமுடனவன் சுவலைவிட்டு[39]
வந்துபிரம ராக்ஷசனும் வார்த்தை ஏதுரை சொல்லுவானாம்
எந்தவூரையா எந்தத்தேசம் எங்கிருந்துநீ ரென்னபிள்ளை
என்று கேட்டான் ராக்ஷசனும் ஏதுரைப்பானாம் சந்திரவாணன்
நானிருப்பது நந்தியாபுரம் நலமுடனேகுலம் பிரமகுலம்

36. சினகரம் - சிறு கோயில்.
37. அரசிமூடு - அரச மரத்தடி மேடு.
38. பிரம ராக்ஷசன் - அவ மரணமடைந்த பிராமணனுடைய பேய் வடிவம்.
39. சுவலைவிட்டு - அரசமரத்தைவிட்டு.

Created for her was a divine car splendid.
Rejoiced Ucciṉi Mākāḷi descended the *Kailai* hill sublime,
Moved on her maids and ghostly herd following
Thro' Kūṇṭa hills where lived monkeys with their mates,
Arriving at the country by Vaṉaca hill towering.
The gods saw a shrine built for Cītaraṉ's sister.[42]
In the shrine was the Mother seated
And *puja* for her went on thrice a day.
Blessed of virtues of a previous birth
There ruled Vikkiramātittaṉ famed.
Relate we do of his worship devout
Of the Eight-shouldered, O hear!

### Invocation

Untold were the miseries Saturn inflicted[43]
That Vikkiramātittaṉ along with Paṭṭi suffered.
May Kantaṉ and the Elephant-headed Bless me
To sing of that suffering with fortitude endured
In words unmeet on the bardic lute.

In Nantiyāpuram a land prosperous
There lived Cantiravāṇaṉ of brahmin caste
That through the woods walked
Seeking knowledge.
Journey long tired did he become,
To a pond he walked to quench his thirst
And fell asleep under a peepul tree close by;
In penance on the tree was Piramarāṣacaṉ[44] goodly
Who sighted the alien lying under.
Down came the rāṣacaṉ and spoke:
"Tell me who you are and your native soil."
"Nantiyāpuram is my native and a brahmin I am,

---

42. Sister of Viṣṇu, Kāḷi.
43. a planet, the most malignant in astrological influence of all the planets.
44. A goblin or savage animated by the soul of a brahmin, who had in a former birth died with unexpiated sin.

கல்விகற்கவே வந்தேனய்யா கண்முழித்தஉடன் உம்மைக்கண்டேன்
எந்தனக்குக்குரு நீர்தானய்யா இணக்கமாய்க்கல்வி ஓதுமென்றான்
என்றுசந்திர வாணன்கேட்க இயம்புவானாம் பிரமராக்ஷசனும்
நன்றுநன்றுநீர் சொன்னமொழி நானுரைத்தசொல் மாறாமல்
மாறாமலாறு மாதமாக மதிப்புடன் விரதந் தானிருந்தால்
இந்தவித்தையது தான்பலிக்கும் என்றுரைத்தானந்த ராக்ஷசனும்
அந்தவார்த்தையைச் சந்திரவாணன் ஆதரவாகச் சம்மதித்தான்
அப்போதுஅந்த ராக்ஷசனும் அன்புடனேது செய்தானய்யா
நித்திரைதாகம் வாராமல் நியமித்தானொரு மந்திரத்தை
மந்திரத்தையு முச்சரித்து மறையை இலையினி லெழுதுவானாம்
எழுத்தைப் படித்துமே மறையவனும் ஏத்தமாத மாறுக்குள்ளாக
காயசித்தியொடு மாயசித்தி கடினமுள்ள வித்தைகளும்
அஷ்டமகா சித்திகளும் ஆதரவாகப் படித்துவர
இப்படியாக இவன்படிக்க இயல்பிரம ராக்ஷசனும்
புட்பகவிமானந் தானேறிப் போறான்ராக்ஷசன் தேவலோகம்
போகிறதைக் கண்டு வேதியனும் போற்று வான்குரு ராக்ஷசனை
எனக்குப்புகலிடம் ஏதுவய்யா என்றுகேட்டானே சந்திரவாணன்
அப்போதுஅந்தப் பிரமரிஷி ஆதரவுட னேதுசொல்வார்
இவ்வளவுநாளைக் குள்ளாக ஏத்தவிரதத்தால் படித்துவிட்டாய்
இனிமேலுன்னுட ஊருக்குப்போய் இஷ்டம்போலவே மணமுடித்து
நடந்துகொள்ளென்று முனிவர்சொல்லி நளினமுடன் சென்றார் தேவலோகம்
அப்போதுஅந்தச் சந்திரவாணன் ஆதரவுடன் வழிநடந்து
நடந்து நடந்துமே தான்நடந்து கன்னியாபுரி தனிலேவந்தான்
வந்துஅலங்கார வல்லிஎன்னும் வாணுதலுட மனைமுன் சென்றான்

In search of knowledge have I come
Find you first I did after awakening,
So as my teacher I take you
And before you I stand a learner devout."
Spoken thus the rāṣaca responded:
"Well-said well-said are your words.
Unto you would go the things I impart
Take them unfaltering if you do;
And severe austerities you must observe for months six."
Cantiravāṇaṉ began the lessons in right earnest
A spell from the ascetic took his sleep and hunger off;
Vedas the guru wrote on the leaves
Went into the brahmin's mind;
And months six found him a scholar pregnant
Knowledge of a body fecund,[45] magic and the like
And the great *siddis* eight[46].
Piramarāṣacaṉ setting out on his journey Heavenward,
The brahmin propitious asked of his course.
Came the words from the *guru* in loving kindness:
"Accomplished you are in arts dear
And you can go to your country,
Get married and live your way."
The ascetic saying thus set out Heavenward.
Cantiravāṇaṉ contented took his way long,
Arriving at Kaṉṉiyāpuri,
He fell down on a platform erect
In front of the house of Alaṅkāravalli the bright faced.

---

45. The power of securing the body by magical medicaments against age and its effects - as loss of teeth, grey hairs, decay of mental or corporal powers.

46. The eight superhuman powers ascribed to Śiva, and which, it is supposed, may be acquired by extraordinary austerities attended with magical rites. They are 1. *animā* - the power of reducing one's self or any thing else to the size of an atom. 2. *makimā* - the power of increasing one's bulk without limit. 3. *ilakimā* - the power of rendering one's self or other things light, overcoming gravitation. 4. *karimā* - the faculty of increasing weight, solidity, &c., 5. *pirātti* - the power of attaining everything desired as to touch the moon with the finger &c., 6. pirākāmiyam - the power to overcome natural obstacles and go any where. 7. icattivam - Supreme dominion over animate or inanimate nature. 8. vacittuvam - the power of assuming any form.

சென்றுசந்திர வாணனுமே சிறந்தமண்கோலம் மேலாக
விழுந்து படுத்தானே சநதிரவாணன் வீறாய் விரதத்தின் முடிவாலே
பசியுந் தாகமுந் தானெழும்பிப் படுத்து மூர்ச்சையாய்த் தூங்குகிறான்
சந்திரவாணன் தூங்கையிலே தானே வருகிறாள் தாசியவள்
ஓடிவந்துமே தாசியவள் உற்றுப்பார்த்தாளே பிராமணனை
செத்த சவம்போலே தூங்குகிற சீமானாரெனப் பார்க்கும்போது
மூச்சுவாரது அல்லாமலே முடிவாய் வேறொன்றுந் தோணவில்லை
தீப மேற்றியே பார்க்கும்போது திருவைப் போலவே தூங்குகிறான்
அலங்கார வல்லித் தாசியவள் ஆதரவாக எழுப்பலுற்றாள்
எழுப்பி எழுப்பியே பார்த்தபோது ஏத்தபிரக்ஞையில் லாததினால்
வைத்தியர்களைத் தானழைத்து வந்துஔஷதங்[40] கொடுக்கச் சொல்வாள்
நாடிசாஸ்திரந் தான்பார்த்து நலமுடன் சொல்வார் வைத்தியர்கள்
ஆறுமாசமாய் அன்னாகாரம் ஆதரவுடன் இல்லாமையால்
இன்னுங்கொஞ்ச நாளையிலே இறந்துபோவா னென்றுசொன்னார்
அப்போதுஅந்த விலைமகளும் அன்புடன் சொல்வாள் வைத்தியர்க்கு
சாகாமலிவ ரிருப்பதற்குச் சாற்றுமய்யாநீ ரோர் மருந்து
அப்போது அந்த வைத்தியர்கள் ஆதரவாக ஏதுசொல்வார்
சரிக்குச் சரியாக அரிசிநெய்யும் சட்டெனப் பொங்கிக் குழம்பாகிக்
பாதமுடன்கேச பரியந்தமும் பரிவினுடன் நீரும் பூசவேண்டும்
எண்ணிஎட்டுநாள் செய்ததுண்டால் இன்பமுடனிவன் பிழைத்திடுவான்
என்றுவைத்திய ருரைத்தபோது ஏந்திழைத்தாசி ஏதுசெய்தாள்
இயல்வாய்ச் சாதத்தைப் பாகஞ்செய்து எட்டுநாள்மூன்று வேளைபூசி
ஆதரவுடன் பூசிவர அன்பாய்ப் பிராமணன் விழித்தானய்யா
விழித்துப் பிராமண னறிவுவந்து வேசைவீட்டிலா வந்தோமென்று
தாசி வீடுவிட்டுப் பிராமணனும் சடுதியாகவே ஓடலுற்றான்.

**விருத்தம்:**

ஓடியே யிவனும் போக உத்தமி தாசி கண்டு
தேடியே பின்னேசென்று தீரனே நில்லு நில்லு
வாடியே மலங்கி விட்டேன் வந்துநீ மோகந் தீரு
ஓடிப்போ காதே என்று உத்தமி செறுத்தாளன்றே[41]

**வேறு**

ஓடாதே பிராமணனே உன்னைநம்பி வேலைசெய்து
உன்னை விட்டுநானு மிருப்பேனோ
என்று அலங்காரவல்லி இன்பமுட னுரைத்திடவே
ஏதுரைப்பான் சந்திர வாணனும்

40. ஔஷதம் - மருந்து
41. செறுத்தாள் - தடுத்தாள்

Six months of austerities severe ending,
To hunger and thirst was Cantiravāṇan awakened
And he fell down to slumber deep.
There came running Alaṅkāravalli a courtesan,
And stared at the stately man in death-like slumber
And fix his ailment she couldn't.
A light brought revealed his angelic form,
To awaken him she tried in kindness.
Vain were her efforts in swooning deep as he was.
Physicians she fetched to find him a cure,
Examining his pulse spoke the physicians:
"Die he would before long
Having gone six months long with no food and drink"
To the physicians the courtesan anxious spoke:
"Tell me the medicine that would keep him alive."
"Boil rice with ghee of equal measure before late,
The mixture thus made
You must rub on the man from head to foot
For eight days do this you must
And come alive happy this man would."
In no time was the mixture prepared
And Alaṅkāravalli applied it for eight days three times a day,
Applied it with care and tenderness.
The brahmin opened his eyes and consciousness regained.
He delayed not a moment in the courtesan's house
And started running out in haste.
Following him swift the woman pleaded:
"Stop O the brave, stop running!
Starving I am, withering are my spirits!
Come you do and see my burning passion gratified!
All this I did to have you for me
Without you can I live O brahmin?"
Thus spoke Alaṅkāravalli in passion intense.

எந்தனை மறிக்கிறது என்ன காரணத்துக்காக
எனக்குரை நீ சொல்லுடி தாசியே
என்றுரைக்கத் தாசியவள் ஏதுரைப்பாள் பிராமணர்க்கு
இன்பமுட னும்மை மணஞ்செய்ய
செய்யவேணு மென்றுசொல்லித் திறமுட னுரைத்திடவே
திடுக்கிட்டுப் பிராமணனுஞ் சொல்வான்
நன்றுநன்று சொன்னவார்த்தை நான்னுன்னை மணப்பதில்லை
ஞாய விரோதமடி பெண்ணே
என்றுசந்திர வாணன்சொல்ல ஏந்திழையாள் தாசியவள்
ஏந்தலிடம் ஞாயமது சொல்லச்
சுருக்குடனே தானடந்து சுத்தவர்ம ராஜனிடம்
தூண்டி வழக்குடனே சென்றார்.
சென்றுஞாயஞ் சபையில்சொல்லத் தீரவிசா ரிப்போமென்னத்
திடமுட னரசனுமே சொல்ல
சொல்லிடவே புரோகிதனுஞ் சொல்லுவானாம் வாய்திறந்து
சொற்பெரிய ராஜபர மேஸ்வரா
பிரமகுலத்தில் பிறந்தோர் பின்னையொருவன் குலத்தில்
பெண்கொள்ளத் தகாதெனவே சொல்ல
இப்படியே வேண்டுமானால் இன்பமுள்ள நாற்குலத்தில்
ஏத்தபெண்கள் நாலைமணஞ் செய்யலாம்
என்றுசொல்லப் புரோகிதனும் ஏதுசொல்வான் ராஜமன்னன்
என்மகளை நானும்மணந் தாரேன்
உன்மகளுஞ் செட்டியாரின் தன்மகளுந் தாசியென்ற
உண்மையுள்ள அலங்கார வல்லியும்
நால்வரையு மோர்முகூர்த்த மாகச்சந்திர வாணனுக்கு
நல்லமணஞ் செய்விக்க வென்ன
நல்லதென்று நால்வருமாய் நன்றாய் மனமகிழ்ந்து
நளினமுடனே முகூர்த்தம் வைத்தார்
வைத்துச்சந்திர வாணனுக்கு மங்கையர்கள் நால்வரையும்
வரிசையுடன் மணஞ்செய்து வைத்தார்
இருக்குஞ் சமையத்திலே ஏத்தகல்யா ணிவயித்தில்
ஏத்தகெர்ப்ப முண்டாகி ஈன்றாள்
பெற்றபிள்ளை யானதுக்குப் பேர்வல்லவ ரிஷி எனவே
பிரியமுடன் சந்திரவாணன் சொன்னான்

"Detain me you do O prostitute!
Tell me the reason therefor".
Replied Alaṅkāravalli in words studied:
"I stopped you
To see you mine in marriage loving."
Shocked the brahmin spoke:
"Marry you I will not
Unrightful as it is".
The courtesan pricked went to the royal court
To seek justice from Cuntaravarman the ruler,
And her case she presented.
Details full the ruler demanding, the brahmin spoke:
"O king Paramēsvara great for words!
Improper it is for one of brahman lineage
To take the bride from an alien caste.
And to see it overcome one could take brides meet
From all the four castes.[47]
Said the ruler agreeing:
"Give him my daughter I would
A maid of his own caste and one a merchant's
Along with Alaṅkāravalli faithful
Marry to him we will on a day auspicious!"
In consent joyous and with gifts meet
Were given the maids to him in marriage.
Living as they were in conjugal bliss,
Kalyāṇi conceived
Cantiravāṇan christened her son Vallavariṣi;

47. Brahmin, Kshattriya, Vaisya and Sudra.

இராஜன்மகள் சித்திரரேகை என்பவளின் தன்வயிற்றில்
இன்பமுடனே கெர்ப்ப முண்டாகி
பெற்றபிள்ளை யானதுக்குப் பேர்விக்கிர மாதித்தனெனப்
பிரியமுடன் சந்திர வாணன் சொன்னான்
வைசியப்பெண் கோமளாங்கி வயிற்றில்கெர்ப்பந் தரித்து
வடிவுடனே பட்டியையும் பெற்றாள்
அன்றுகாத்த தாசியான அலங்கார வல்லியவள்
அன்புடனே கெர்ப்ப வதியாகி
பத்திரகிரி என்பவரைப் பாங்குடனே பெற்றெடுத்து
பரவினையாக இருக்கும் நேரம்
மூத்தவன் வல்லவரிஷி முற்றுங்கல்வி கற்றபின்பு
மோக்ஷவழி தேடியே நடந்தான்
இளையமகன் பத்திரகிரி இயல்பாய் மனைதுறந்து
இன்பமுடனே துறவி யானான்.

**விக்கிரமாதித்தன் கூற்றும், பட்டியின் செயலும்**

இப்படி யிருவர்போக ஏத்தவிக்கிர மாதித்தனும்
இஷ்டமுள்ள பட்டியுடன் சொல்வான்
தாய்தகப்ப ராண்டபூமி தாரணியில் கொஞ்சமடா
தானேயொரு பட்டணத்தைச் செய்வோம்
செய்யும்பொழில் பக்கத்திலே சிலோச்சய[42] மிருக்கவேண்டும்
தேசங் குவையா[43] யிருக்கவேண்டும்
சுற்றுக்குச் சுற்றொருகாத தூரமுள்ள நீவரமும்[44]
சூரசந்தி தானங்களும் வேண்டும்
தண்ணடையின்[45] பக்கத்திலே தானேசிந்து[46] ஒழுகவேணும்
தயவுடனே பார்த்து வாராய் பட்டி.
என்றுராஜன் சொல்லிடவே ஏத்தபட்டி யானவனும்
இராஜனிடம் விடைவாங்கிக் கொண்டு
ஐந்துஆறு மாதமாக ஆரணியம் எங்குஞ்சுற்றி
அரசன் பறைந்த[47] கூகாணாமல்[48]
வாடி மலங்கிவர வனசகிரிச் சார்வதிலே
வாகான குணபதி ஓணத்தின்[49]
தெக்ஷணத்தில் பட்டிவர தேவிபத்திர காளிதனைச்
சேர்ந்தகூளி காவல்செய்யும் கோலமும்

---

42. சிலோச்சயம் - மலை
43. குவை - தொகுதி
44. நீவரம் - தண்ணீர்
45. தண்ணடை - நாடு
46. சிந்து - ஆறு.
47. பறைந்த - சொல்லிய
48. கூ - பூமி
49. ஓணம் - ஆறு

The king's daughter Cittirarēkai conceiving
Born was a boy,
Cantiravāṉaṉ named him Vikkiramātittaṉ in content;
Paṭṭi was born to Kōmaḷāṅki of the merchant caste;
Alaṅkāravalli his life-giver bore him Pattirakiri.
Living as they were in joy consummate
The eldest Vallavariṣi went out seeking *moksa*
Armed with a mind pregnant.
The youngest Pattirakiri in joy native
Took to the ascetic's way.
The two thus leaving,
Vikkiramātittaṉ spoke to Paṭṭi loyal:
"Limited is the land our parents ruled,
A new country for us we will found:
A country large in divisions proper,
A tract montane adjoining it there must be,
Surrounded by water it be on all sides a *kātam* [47] long
Temples of Cūr there must be around
With springs eternal blessed it must be".
Paṭṭi wandered around the world for months;
Finding not the land of his king's desire,
Returning he was in spirits lowered.
Walking along the valley south of Kuṇapati river by Vanacakiri hill,
Paṭṭi sighted goddess Pattirakāḷi there
With the host of spirits protecting

47. A distance of about ten miles.

சுற்றுக்குச்சுற் றொருகாத தூரமுள்ள பூரியமும்[50]
தோகை மகமாயி கோயில்பக்கம்
வானுயர வளர்ந்திருக்கும் வடவிருக்ஷத்[51] தடியில்
வாகுடைய பொய்கையையுங் கண்டு
பொய்கையிலே தான்குளித்துப் பூரித்து மகிழ்ந்துபட்டி
புகழுடைய எண்டோளி கோயில்
முன்பதிலே பட்டிவந்து மூன்றுதரஞ் சுற்றிவர
முகனையுள்ள குத்துக்கல்லைக் கண்டான்
கண்டபட்டி பார்க்கும்போது கல்லதி லெழுதிவைத்த
காரணப் பழமொழியைக் கேளும்
நாட்டினிலே நாலுவகை சாதியிலெவ ரானாலும்
நாடிவந்து பொய்கையில் குளித்து
ஆலதிலே பிணித்திருக்கும் அழகுஉறி ஏழதையும்
ஆயுதத்தி னாலோர்வெட்டாய் வெட்டி
இருந்தாப் போலேயிருந்து ஏழுறியும் விழுமுன்னே
எழும்பிய பொய்கை நடுவிருக்கும்
சத்திவேலின் முனைமேலே தலைகீழாக விழுந்தால்
தானே பிரசன்ன மாகிஅம்மன்
அவளிடம் இருக்கும்தங்கம் அத்தனையுந் தான்கொடுத்து
அவனிதனி லம்பத்தாறு தேசமும்
அடக்கியர சாளும்படி ஐயையும் வரங்கொடுத்து
ஆதரித்துக் காப்ப னென்றிருக்க
காளிதனை ஸ்தோத்தரித்துக் கடுநடை யாய்நடந்து
கன்னியா புரியில் வந்தான் பட்டி

**பட்டிசொன்ன செய்தியும், விக்கிரமாதித்தன் மன்னனாதலும்**

பட்டியவன் வந்தவுடன் பாரையர சாளுமன்னன்
பார்த்துமொழி ஏதுசொல்லு வானாம்
மந்திரியே நீயுஞ்சென்று மாதமது ஆறாச்சே
மனதின்படி மண்டலங் கண்டாயோ
என்றுராஜன் கேட்டபோது ஏத்தபட்டி யானவனும்
ஏந்தலுக்கு ஏதுசொல்லு வானாம்

50. பூரியம் - மருத நிலத்தூர்.
51. வடவிருக்ஷம் - ஆலமரம்.

And a land fertile a *kātam* long on all sides.
By the shrine of the deity graceful
Was there a pond with a lance in the middle
Under a banyan touching the sky.
In joy abounding Paṭṭi had a bath in the pond,
Going round the temple thrice as he was
Paṭṭi found a jagged stone planted,
Engraved on which were these words:
"He whatever be his caste amongst the four
That comes on quest studied,
Takes bath in the pond
Cuts with one stroke the exquisite pots seven
Hanging from the banyan tree,
And dive before they fall
On the divine lance in the pond,
Blessed would he be thus:
Ammaṉ would appear presently
And keep him in Her grace protective
Gifting him all the gold she owns
With a boon beside
That would bring countries six and fifty of this land[48]
Under his sovereign rule".
Worshipping Kāḷi, Paṭṭi walked swift to Kaṉṉiyāpuri.
Paṭṭi arriving, the ruler sovereign spoke to him:
"Six months it is since you left
The land of my vision have you seen?"

---

48. The fifty - six countries enumerated in Hindu Geography.

கொற்றவனே நீநினைத்த கோட்டங்கிடை யாதபடி
குணபதி யாற்றோரம் வரும்நேரம்
வனசகிரிச் சார்வதிலே வந்துகண்ட அதிசயத்தை
வகுத்துரைக்கக் கேளும்ராஜ மன்னா
சுற்றுக்குச் சுற்றொருகாத தூரமுள்ள பைதிரமும்[52]
சூழ்ந்துபத்திர மாகாளி சந்நிதியும்
அடுக்கஒரு ஆல்மரமும் அதனடியில் தெப்பக்குளம்
அருகதிலே குத்துங்கல்லுங் கண்டேன்
கண்டகல்லி லெழுதியுள்ள காரணங்க ளானதெல்லாம்
காவலர்க்குச் சொல்லிப் புறப்பட்டு
கன்னியா புரியதனைக் கணக்கர்க் களித்துவிட்டு
கட்டுடைய காளிகோயில் வந்தார்
வந்துபொய்கை யிற்குளித்து வடலில்[53] பிணித்திருக்கும்
வன்மையுள்ள ஏழுறியும் வெட்டி
வேல்முனையில் தலைகீழாய் வேந்தனவன் சாடும்போது
வேதாளி தானெடுத்துக் கொண்டு
கோயிலிலே செல்லும்போது கூடவே துடர்ந்துபட்டி
கூறுவானாம் காளியோடோர் வார்த்தை
அந்தரி மகமாயி ஆனந்தியே ராஜனிந்த
அவனிதனி லம்பத்தாறு தேசமும்
உன்னுடைய தலமதிலே உத்தகோட்டை தானுமிட்டு
உன்னிதமாய்[54] ராஜனிருந் தாளவும்
வேண்டிய வரங்கொடுத்து வீரிஉந்தன் பக்கலுள்ள
வீறுடைய காஞ்சனங்[55] காண்பித்து
உச்சினி மாகாளிபுரி உரிமையுட னரசாள
உயர்வரம் நீகொடுப்பாய் தாயே
என்றுபட்டி யானவனும் இன்பமுடன் சொல்லிடவே
ஏத்தசிவை[56] மனமகிழ்ந்து சொல்வாள்
பட்டியவன் சொன்னபடி பாரதனை யாளவரம்
பரவினையாய்[57] வேந்தனுக்கு ஈந்தேன்
என்றுகாளி யம்மைசொல்ல இருபேரும் எழுந்திருந்து
இன்பமுட னேதொழுது விட்டு

---

52. பைதிரம் - நாடு.
53. வடல் - ஆலமரம்.
54. உன்னிதமாய் - உன்னதமாய்.
55. காஞ்சனம் - பொன்.
56. சிவை - பார்வதி.
57. பரவினை - மேலான கருமம்.

"O my king!
Quest failing I was coming by the Kuṇapati river
Along the valley by the Vaṉacakiri hill,
I sighted a land wonderous it was!
About a *kātam* long on all sides
With Kāḷi's temple in;
Adjoining the shrine is a banyan tree
Found under the tree is a holy pond
I saw a stone planted nearby".
Informed of the words inscribed on the stone,
Vikkiramātittaṉ gifted his land to the wise
And came there to Kāḷi's shrine.
After a bath in the pond
The king cut the strings mighty of the pots;
Diving on the lance as he was
Vētāḷi held him unhurt and took him to her shrine.
Paṭṭi following spoke a word to her:
"O Mother the Heavenly Spirit and bliss incarnate!
Grant us a boon
To find this king rule this land of countries six and fifty
With your holy land as his fort.
Show him the treasure of gold pure O the Form Terrific!
And let him the ruler sovereign of Ucciṉi Mākāḷipuri".
Śiva's consort pleasing,
Granted was a boon large
In accord with Paṭṭi's words propitious.
The Mother gracious adoring

கட்டுடைய பட்டணத்தைக் காதவழிச் சதுரமுடன்
கனமுடனே செய்துமுடித் தாரே
முடித்துஎண் டோளிகோயில் முகப்பதிலும் பக்கத்திலும்
முகனையுள்ள தங்கக்கோட்டை வைத்தார்
தங்கத்தினால் கோட்டையிட்டுத் தானேவிக்கிர மாதித்தனும்
தாரணியை ஆண்டான் பட்டியாலே
மன்னவனும் பட்டியுடன் மண்டலத்தை யாண்டுவர
மாதங்கியைத்[58] தேயத்துள்ளே வைத்து

**விக்கிரமாதித்தன் சிங்காதனம் பெற்ற வரலாறு**

பட்டணத்துக் குள்ளேவைத்துப் பத்திரகாளி அம்மனையும்
பண்புடன் பூசித்திவர் வரவே
தேவலோகந் தன்னிற்சென்று தீரன்விக்கிர மாதித்தனும்
தேவமாதர் நடனங் கண்டு
தோற்புக் கெலிப்புச்சொல்லித் தோன்றல் தேவேந்திரனும்
சுவாமி பரமேஸ்வரர் கொடுத்த
ரத்னமயச் சிங்காசனம் ராஜனுக்குத் தான்கொடுத்து
ராஜாங்கம் ஆயிரம் வருஷம்
ஏறிஇறங் காதபடி இருந்தர சாளுமென்று
ஏத்ததாக இந்திரன் கொடுத்தான்.

**விக்கிரமாதித்தன், பட்டிக்குக் காளிகொடுத்த வரம்**

கொடுத்தவரம் வாங்கிக்கொண்டு கொற்றவனும் நாடுவந்து
கூறினான் விபரமதைப் பட்டிக்கு
இதையறிந்து தம்பியான ஏத்தபட்டி யானவனும்
இன்பமுடன் காளியைப் பூசித்து
விக்கிரமா தித்தன்தலை வீறுடனே தானறுத்து
வீரிகோயில் நடையில் வைத்தெழுப்பி
இரண்டாயிரம் வருடம் இருந்தர சாளும்படி
ஏத்தபட்டி வரம்வாங்கி வந்தான்
வந்திடவே இருபேரும் வாய்மையுடன் சம்மதித்து
வரந்தனிலே ஆள்பாதி யாக
நாடாறு மாதமிருந்து நல்லரசு செய்துவிட்டு
நன்மையுடன் காடாறு மாதம்

58. மாதங்கி-பார்வதி.

They went about resolute
And a city eminent founded,
Measuring a *kātam* in length and breadth.
They built too forts of golden peaks
At the front and sides
Of the shrine of the Eight-shouldered.
And Vikkiramātittaṉ by Paṭṭi's counsel reigned the empire
With the blessing of Pattirakāḷi.
Vikkiramātittaṉ the valorous journeyed to Heaven
And acted a discerning judge of celestial women dancing.
Gifted he was a throne of gems by Intiraṉ
(The throne that Lord Paramēsvarar[49] had given)
With a boon to make him supreme ruler
For years a thousand uninterrupting.
Boon receiving the king to his country returned.
Paṭṭi the wise informed of this boon divine,
Cut the king's head propitiating Kāḷi
And invoked Her with the head at Her feet.
Kāḷi blessed them with crowned life for years two thousand.
The boon Paṭṭi shared with the king by agreement mutual:
Six months in the country extending benevolent rule,
Go they would to the forest the six months following

49. Śiva.

பிரமகுலத்தி லுதித்த பேர்பெரிய வேதாளத்தைப்
பிரியமுடனே வாகன மாக்கி
ஆறுமாதங் காடாண்டு அழகுவிக்கிர மாதித்தனும்
அன்புடனே பட்டியுமாய் வந்து
சொந்தமாகச் சிங்காசன மேறிராஜ ரீகஞ் செய்து
தூதர்களை விட்டுக்கிஸ்தி வாங்கிட
அங்கம்வங்கம் கலிங்கம் ஆனதேச வரசர்
அல்லோருங் கப்பங் கொடுத்திட
மைசபுரி விஸ்வநாதன் மந்திரிதன் யோசனையால்
மறுத்துக்கப்பம் தரமாட்டே னென்றான்
என்றுதூதர் சொல்லிடவே ஏத்தவிக்கிர மாதித்தனும்
ஏதுசொல்லு வானாம் மந்திரிபட்டிக்கு
மந்திரியே இப்போசென்று மைசபுரி ராஜனையும்
மந்திரியாஞ் சாலி வாகனையும்
கொன்றுஅத மாக்கியிந்தக் கோட்டைக்கு வருவோமென்ன
குறைவில்லாச் சேனையுடன் சென்றான்
சென்றுதோற்று ஆதித்தனும் தீர்க்கமுள்ள மந்திரியும்
திரும்பி விட்டார் தன்தேசத்துக்கு
திரும்பினதில் பட்டியவன் தேவலோகம் போய்ச்சேர்ந்தான்
தீர்க்கமுள்ள விக்கிரமா தித்தன்
வேதாளத்தைச் சாபந்தீர்த்து விட்டுவிட்டான் பழையபடி
வேறுஎன்ன நினைக்கிறான் மன்னன்
சிம்மாதனத் தருகேவந்து தீரன்விக்கிர மாதித்தனும்
சிறப்புடனே ஓர்வசனஞ் சொல்வான்
ஐந்நூறு வருடத்தின்மே லன்புடனே போஜராஜன்
அவனிதனை யாண்டிடவும் வாரான்
அப்போதெந்தன் வரலாற்றை யன்புட னவர்க்குச் சொல்லி
அந்தர லோகத்தில் வந்துசேர்வாய்
என்றுசொல்லி ஆசனத்தை ஏத்தமண்ணில் புதைத்துவிட்டு
எண்டோளியை ஸ்தோத்தரிக்கும் வேளை
சாலிவாகன[59] னனுப்புஞ் சக்கரந்தான் சுற்றிவந்து
சட்டெனத் தலையறுத்துச் சென்றதாம்
சென்றவுடன் ராஜனுயிர் தேவலோகம் போய்ச்சேர
சிறப்புடனே முண்டமதைத் தகனித்தாரே.

59. சாலிவாகனன் - விக்கிரமாதித்தனுக்குப் பகைவனும், சகாப்தத்துக்கு உரியவனுமான பேரரசன்.

To live there with Vētāḷam of Brahma descent as their vehicle.
Ruling thus as they were with power sovereign
With tributes royal coming
From Aṅkam, Vaṅkam, Kaliṅkam and so forth.
Word defiant from Visvanātaṉ of Makiṣapuri came
Who by his minister's counsel tribute refused.
Vowing to see the defiant ruler with his minister Cālivākaṉaṉ
Routed in war and destroyed complete,
Vikkiramātittaṉ wrathful went to Makiṣapuri
With Paṭṭi and a large army.
Vanquished, he returned home with his prophetic minister.
And Paṭṭi to Heavenly abode went.
The king set Vētāḷam free its curse removing
And uttered a word standing by his throne :
"Years five hundred after
There would come Pōjarājaṉ to rule this world,
My story relating to him
Come you should to Heaven."
Burying the throne under the earth,
And propitiating the Eight-shouldered as he was,
There came the divine missile Cālivākaṉaṉ sent
And it went off swift cutting the king's head.
The soul departing Heavenward
Cremated was the body honours attending.

**பச்சிக்க வழியில்லாப் பார்ப்பானும், உச்சினி மாகாளிபூசையும்**

**விருத்தம்:**

கச்சியிலே திருநடன மாடு மீசன்
 கருணையினால் வந்துதித்த காளி தன்னை
உச்சிதமாய் விக்கிரமா தித்தன் கண்டு
 ஊக்கமுடன் பூசைசெய்து உலகை யாண்டு
முச்சிவழி தேடியே போன போது
 முன்சொன்ன மாலினிக்குப் பூசை செய்யப்
பச்சிக்க வழியில்லா வறுமை சேர்ந்த
 பாப்பானும் வந்தவகை தனைச்சொல் வேனே.

**வேறு**

இந்துவைச்[60] சேகரத்தினில்[61] சூடிய
இறையோன்பாகத் தமர்ந்தமா காளியும்
தேவர்கட்கு இடுக்கண் பலசெய்த
தீரன் இரணியராஜன் குருதியில்
வந்து தித்திடும் உச்சினி மாகாளி
வன சகிரி பக்கலிலே வர
வெற்றிபெற்றிடும் தேவர்கள் கூடியே
வீரிக்குக் கோயில்கட்ட வேணுமென்ன
வாணிகேள்வன்[62] வகுத்த படியாக
வனசகிரிச் சார்வுக்குந் தெக்ஷணம்
கல்லடித்துச் சுவர்கட்டித் தேவிக்குக்
காட்டிலுள்ள மரங்களைத் தேடியே
சந்தனந்தேக்கு வெட்டி முறித்துமே
தானேதேவிக் கிருபத்தொரு வாயில்
இட்டுக்கோயில் திருப்பணி செய்தபின்
இரண்ய கற்பனை ஈன்றவனின் தங்கை
மாலினியு மினிதா யிருந்திட
மண்டலத்தி லுச்சினி மாகாளியை
விக்கிரமாதித்த மன்னவன் கண்டு
வேண்டிய வரம்பெற்றுமே தேவியின்

60. இந்து-சந்திரன்.
61. சேகரம்-முடி.
62. வாணிகேள்வன்-பிரமன்.

Vikkiramātittan who'd ruled the world just
With the propitious will of Kāḷi
(Who came unto this world
By the grace of the Lord dancing at Kacci)[50]
Going Heavenward,
There came a brahmin penury incarnate
Offering *pūja* to Kāḷi impelling.
Whose story narrate here we do.

Kāḷi the supreme deity
Half of Śiva, wearing the crescent moon on head,
Born of the blood of Iraṇyan tyrannical to the celestials
Coming as she was by Vanacakiri hill,
The gods victorious assembled
To find a temple to the valiant She.
Vāṇi's husband[51] conceiving the plan
Erected was a shrine by the south of Vanacakiri range:
The walls of stones
And doors twenty-one of choicest trees sandal and teak.
Dedicated it was to the sister of Iraṇyakaṟpan's father[52].
Vikkiramātittan blessed with boons bounteous

50. Śiva.
51. Brahma.
52. Kāḷi.

கோட்டைதன்னைப் புதுப்பித்து மன்னவன்
கோணாமல் பூசைசெய்யுமந் நாளிலே
உச்சினி மாகாளி புரியானதை
உண்மையாக அரசு புரிந்திட்டு
தேடின நவகோடி திரவியம்
தேவிகோயி லகத்திலே வைத்திட்டு
மன்னவன்முத்தி சேர்ந்த பொழுதிலே
மாதங்கிக்குப் பூசைசெய்யப் பாரிலே
உச்சினி மாகாளிப் பட்டணத்திலே
உண்மையாய்ப் பூசைசெய்ய மன்னோரில்லை
என்றிருக்க வடநாடு தன்னிலே
இருந்தொரு பாப்பான் இல்லோனாய் வந்தனன்
வந்து உச்சினி மாகாளிக்குப் பூசை
வணங்கிச் செய்திடக் கையிற் காசில்லாமல்
மூன்றுகாலமும் முக்கண்ணிக்குப்[63] பூசை
முறை தவறாமல் நடத்தவும் வேணுமே
என்னிடத்தி லொருகாசு மில்லையே
என்று வேதிய னெண்ணி மலங்கிட
மலங்கி வேதியன் நின்றிடக் கண்டுதான்
மங்கை உச்சினி மாகாளி சொல்லுவாள்
வாடா நீயும் மலங்காதே வேதியா
வந்து எந்தனுட கோயில் பூசைக்குக்
காலை உச்சிமா லைமூன்று வேளையும்
கட்டுடன் பூசை செய்யப் பணந்தாரேன்
என்றுகாளி உரைத்த பொழுதிலே
ஏத்த வேதியன் சித்தம் மகிழ்ந்துதான்
வல்லணங்கு கொடுத்த பணத்தினால்
வாங்குவான் கடை தன்னிலே சாமான்கள்
பச்சரிசி பலாப்பழம் சர்க்கரை
பாங்க தான கதலிப் பழமுடன்
மெல்லிலை அடக்காயுந் தீபதூ பம்
மேன்மை யாகக் களபமும்[64] வாங்கியே
வாங்கி நாளொன்று மூன்றுகாலம் பூசை
வண்மை யாகவே விப்பிரர்[65] செய்திட

63. முக்கண்ணி-மூன்று கண்களை உடைய காளி (த்ரியம்பகி).
64. களபம்-கலவைச்சாந்து (Perfumery).
65. விப்பிரர்-அந்தணர்.

Had the shrine renovated,
Offered *pūja* in devotion unfailing,
Provided the people with a just rule,
Left to the deity his treasure unmeasured
And left the world seeking life eternal.
And none there was in the city of Uccini Mākāḷi
To offer *pūja* faithful to the deity.
Came down to Uccini a poor brahmin from the North
To the shrine of Kāḷi he came,
Bereft of means to pay for offerings
The brahmin went down in anguish deep.
"*Pūja* regular thrice a day
Perform I must to the Three-eyed
But penniless I am!"
The brahmin standing in deep sorrow
Kāḷi's words propitious he heard:
"Go not discomposed O brahmin!
Provide you the means I will
To perform *pūja* at my shrine
Thrice a day morning, noon and evening."
Raw rice, jackfruit and sugar
*Katali*[53] fruit, betel and betel nut
Lamps incense and perfumes meet
The brahmin bought with what Kāḷi gave.
Delighted as he was,
Offered them to her thrice a day in devotion fitting

53. A species of plantain.

பூசை செய்திடும் பூசுர[66] ரல்லாது
பூங்கொடி சிவை கோயில் கண்டோரில்லை
கோயில் தன்னில் குரோதன்[67] வேதாளமும்
கோடிக் கூளியுங் காவலது செய்ய
தாருதன் கோட்டை தன்னிலே செல்லவே
தாலுவால் பாலம் போட்டமா பூதத்தின்
கூடிக் காவல்செய்யும் பூதகூட்டமும்
கூண்டகேத்திர பாலனின் காவலும்
மூன்றுபத்து முக்கோடி தேவர்களும்
முறையாக முன்சென்று தொழுதிட
தாரகற் செற்ற தையலிருந்திட
தானே பூசை செய்யும் வேதியருக்கு

**மாகாளியும், மறையோன் கோரிக்கையும்**

மடந்தை மக்க ளிருந்து சடைத்திட[68]
மறையவனும் மனதில் கிலேசமாய்[69]
சென்று கோயிலில் பூசையது செய்து
சிறந்த நம்பியானு மேது சொல்லுவான்
கேளாய் மாதாவே உச்சினி மாகாளி
கீர்த்தி யாகநான்சொல்லும் வாசகத்தை
இடும்பு செய்த இராக்ஷசர் கூட்டத்தை
இடிஇடித்ததோர் வாறு[70]போல் பாழாக்கி
வியனுலகு விபுதர்க் கிடர் தீர்த்த
வீரி உன்னைநான் நம்பி யிருந்தேனே
எந்தன் மக்கட் கியல்மண மில்லாமல்
இருந்து வாடிச் சடைக்கிறா ரம்மையே
மக்கள் தன்னை மணஞ்செய்து வைத்திட
மாலினி உன்மனச் சந்தோஷ மாக
கொஞ்சங் காஞ்சனங் கொடுத்தனுப்பு தாயே
குழந்தை தன்னைத் திருமணஞ் செய்திட
என்று வேதிய னுரைத்த பொழுதிலே
ஏத்த சாமுண்டி ஏதுரை சொல்லுவாள்

66. பூசுரர்-அந்தணர்.
67. குரோதன் வீரபத்திரன்.
68. சடைத்திட-வருத்தப்பட.
69. கிலேசம்-துக்கம்.
70. வாறு-தன்மை.

And unknown to others remained the shrine of Civai[54].
Guarded it was
By Kurōtaṉ[55] and Vētāḷam
Spirits in millions besides
With the guardian spirits
Kēttirapālaṉ[56] and the one
Whose tongue was the bridge
For Tārukaṉ[57] to enter the fort.
The celestials three and thirty crores
Offering worship rightful at her shrine,
The goddess that vanquished Tārukaṉ
Remained there as the deity presiding.
The brahmin had a wife and children suffering
That brought gloom to his mind devout.
An appeal propitious the brahmin made:
"Lend your ears to my word O Mother!
Living I am on your grace,
You brought succour to the celestials
Who suffered indignities in *acuras'* hands
Sending those rakṣacās to ruin complete.
In sorrow deep my daughters unmarried live.
Give me some gold from your treasure
To get my daughters married".
Cāmuṇṭi[58] uttered words gracious:

---

54. Kāḷi.
55. Virapattiraṉ (a guardian deity).
56. Bhairava in the form of dog, protector of sacred places.
57. Daruka, an *asura* slain by Kāḷi.
58. Kāḷi.

### காளி கொடுத்த காஞ்சனம்

வாடா நீயும் அறுதொழி லாளனே
வாக்கினா லாசை கேட்டாயே இப்போது
நான்தார தற்கோர் சந்தேக மில்லை
நாட்டி லுள்ளோ ரறிந்தால்விட மாட்டார்
கட்டப்பன் கும்பினியுங் கனபடை (யார்களும்)
காளி என்னா லழித்துப் பாழாக்கியே
எட்டுத் திக்குப் பதினாறுகோண் சுற்றி
எண்டோளி வரும்வேளை யிதாமெனச்
சொல்லி வீரியும் வேத பாரகனுக்குச்
சுவணங் கொஞ்சங் கொடுத்தனுப்பி னாளே.

### மறையோனின் செயலும், கும்பினியார் சேவகனின் கூற்றும்

ஈழங் கையிற் கிடைத்திட வேதியன்
என்று மில்லாத சந்தோஷங் கொண்டுமே
கையிலே நிதி கொண்டு பிராமணன்
கடுநடையாய் அகரமதில் வந்தான்
வந்து வேதியன் சந்தோஷ மாகவே
வல்லவை குடங்கையிற்[71] பொருள் வைத்தான்.

### வேறு

வேதியன் மனைவிகையில் வேண்டியே கொடுத்தபொன்னை
விற்றுப் பணமாக்கவே நினைத்து
அடுத்தநாள் வேதியனும் அம்மன்கொடுத்த நிதியை
ஆதரவாய் மனைவியிடத்தில் வாங்கி
அகரம்[72]விட்டு வெளியேறி அந்தணனும் பொன்னைக்கொண்டு
ஆனகாவல ரிடத்தில் வந்தான்
வந்துநின்று மறையவனும் வணிகர் தமைப்பார்த்து
வண்மையுட[73] னேதுமொழி சொல்வான்
செட்டியாரே நீருமிந்தச் செந்தாதுப் பொடிவிலையைச்
சீக்கிரமாய்ச் சொல்லெனக் கொடுக்கப்

71. குடங்கை-உள்ளங்கை.
72. அகரம்-அக்கிரகாரம்.
73. வண்மையுடன்-குணத்துடன்.

"O brahmin of vocations six![59]
Gold you do ask of me
And grant it I will sure.
Others knowing
They wouldn't leave you happy.
Kaṭṭappaṉ and the large army of the Company[60]
Destroy them complete I would;
The Eight-shouldered that I am.
Time it is
For me to go round the world."
And she sent the man proficient in the *Vēdas*
Giving him gold from her treasure.
The brahmin went swift to the Agraharam,
In joy unbounded
And handed the gold to Vallavai his wife.
Intent on selling the gold
He took it from his wife the next day
And went to a gold merchant.
Words artless the brahmin spoke:
"Tell me quick the value of this piece O merchant!"

59. The six occupations are (1) study and recitation of the *Vēdas* (2) teaching the *Vēda* (3) performing special rites such as tending the sacred fire and so on (4) managing the performance of rites for others etc (5) distributing alms, supporting religious mendicants (6) receiving alms and donations from worthy persons.

60. The East India Company.

பக்குவமாய் விலைபார்க்கப் பரதரெடுக்கும் போது
பாங்கரிலே நிற்குமாந்தர் சொல்வார்
ஒருநாளுங் கண்டறியா உரை[74]யதனைக் கொண்டு வந்தான்
உண்மையுடன் கொள்ளவோ நினைத்தீர்
என்றுபக்கத் துள்ளோர்சொல்ல எரியெனவே கண்சிவந்து
எட்டியரோ[75] டேதுமொழி சொல்வான்
சந்தேகம் உண்டுமானால் சாம்பூனலைக்[76] கைக்கொடடா
தாமதங்கள் செய்யாதே என்று
குறைசொல்லி நிற்கஅந்தக் கோட்டம்அர சாளுமன்னன்
கும்பினியார் சேவகனுங் கண்டான்
கண்டவுட னோடிவந்து கையதிலே பார்க்கும்போது
காஞ்சனத்தைக் கண்டுமொழி சொல்வான்
அந்தணனே செம்பொன்னிதை ஆரிடம்போய்க் கன்னமிட்டாய்
அடைவுடனே எந்தனிடஞ் சொல்லு
செம்பொன்பொடி வந்தவகை சீக்கிரம்நீ சொல்லாவிட்டால்
தேசமதை யாளுந்துரை முன்னே
கொண்டுபோவே னென்றுசொல்லிக் கும்பினியார் சேவகனும்
கூட்டிக் கொடுபோனான் வேதியரை

**பறங்கித்துரைகளும், பார்ப்பானும்**

கும்பினி சமூகத்திற்குக் கூட்டிக்கொடு போறபோது
குணமுடனே வெள்ளைக்காரன் சொல்வான்
அருத்தமதைக்[77] கொள்ளைகொண்ட அறிவில்லாக் கரவடரை[78]
அத்தாணி முன்னே வருத்துமென்றான்
வருத்துமென்று வெள்ளைக்காரன் வழியுரைப்போ ரிடத்தில்சொல்ல
வந்தானொரு பாராக் காவல்காரன்
பாராக்காவல் காரனோடி பாப்பானிடத்தில் வந்து
பகருவானா மோர்வசன மப்போ
கருத்திலுற்று எங்கள்துரை கசேஷரி[79] சமூகத்திலே
கட்டிஉன்னைக் கொண்டுவரச்சொன்னார்

74. உரை-உயர்ந்த மாற்றுப்பொன்.
75. எட்டியர்-வைசியர்.
76. சாம்பூனல்-சாம்பூநதமெனும் பொன்.
77. அருத்தம்-பொன்.
78. கரவடர்-திருடர்.
79. கசேஷரி-கச்சேரி, உத்தியோகசாலை. (An Office of Administration)

Its worth as the merchant was assessing
Those standing by said:
"Too big for this brahmin is this gold
Be wary."
The brahmin to the merchant spoke
His eyes reddened fire like:
"Suspecting,
Hand me the gold
And delay not a second".
Came there at the moment
A soldier serving the alien Company
Who asked seeing the gold in brahmin's hand:
"Where was this gold stolen?
Tell me truly O brahmin!
Lest take you I will
To the White ruler of this land".
The brahmin unanswering, the soldier took him to his lord.
"Summon that dishonest man that stole the gold"
Came the order to the gatekeeper.
"Reported of your act
Our lord has orders issued
To bring you handcuffed to the court.

வாருமடா பாப்பானே வழியேநட வென்றுசொல்லி
வந்தபாராக் காரன்அடித் தானே
அடித்த அடி பட்டுக்கொண்டு அன்புடனே வேதியனும்
அஞ்செழுத்தைச் சிந்தைதனி லோதி
தாரணியி லெவ்வுயிர்க்கும் தானேதெய்வார் யாபேர்க்கும்
தாயாரே உச்சினி மாகாளி
காரணி ரணபத்திர மாகாளி உன்கிருபை
கனவிலும் மறவேனே அடியேன்
அடியேன் மறப்பதில்லை அந்தணர் தனக்குவந்த
ஆபத்துக் குதவவேணுந் தாயே
மூவுலகும் படியளக்கும் முக்கண்ணி உன்கிருபை
மூர்க்கர்கையில் ஒப்புவித்தி டாதே
என்றுசொல்லி அந்தணனும் எண்டோளியை ஸ்தோத்தரித்து
எழுந்துசபை முன்பதிலே வந்தான்
பப்புத்துரைப் பாளையமும் படையும் தொழுதுநிற்கும்
பண்புடை வளாகமதில் வந்தான்
வேந்தவையில் வந்துநின்ற வேதியனைக் கண்டவுடன்
வேறேயொரு வெள்ளைக்காரன் சொல்வான்
அந்தணனே செம்பொன்பொடி வந்தவகை ஏதெனவே
ஆதரவாய்ச் சொல்லுபார்ப்போ மென்றான்
அந்தவுரை தனைக்கேட்டு அந்தணனும் மெய்நடுங்கி
அடுக்கநின்று ஏதுமொழி சொல்வான்
உள்ளசெய்தி சொல்லவேணும் ஊழிவந்து சூழ்ந்தாலும்
உரைக்கிறேன் துரையேஆசீர் வாதம்
கள்ளனில்லை ஊரதிலே கனகப்பொடி ஒருவரிடம்
கன்னமிட வில்லைஐயோ மெய்யா
புதைய லெடுத்ததல்ல பெருவழியில் பறித்ததல்ல
பூலோக நாயகியாள் தந்தாள்
என்றுசொல்லி மறையவனும் இருந்த துரைகளிடம்
இன்பமாக ஓர்வசனஞ் சொல்வான்
மதயானை யாளிசிங்கம் வாழும்பெருங் காடதிலே
மாகாளி கோயில்பூசை செய்தேன்
மோசமணு காமல்பூசை வேளைபிச காகுமுன்னே
முதல்தந் தனுப்பவேணு மென்றான்

Walk along O brahmin"
Thus spoke the guard
Giving him a beating.
Walked on the brahmin the five-letter *mantra*[61] in mind.
"O Ucciṉi Mākāḷi!
Mother you are of beings on the earth and those in Heaven,
The cause you are of all things created
Forget your name never will I,
To the succour of a brahmin come you must,
Into this brute's hand let me not fall
O the Three-eyed and the saviour of the three worlds!"
Praying thus came the brahmin to the court.
Came a question from a White:
"Tell us truly O brahmin
The way you got this piece of gold."
Replied the brahmin trembling:
"Speak the truth one must though the heavens should fall,
Truth I'm speaking in humility O lord!
A thief I am not,
Nor have I stolen others' gold,
It is not a treasure unearthed,
Nor has it come by highway robbery.
Given me it was by the Mother of this world."
Went on the brahmin to say:
"*Pūja* at Kāḷi's shrine I'd been doing
Situated it was in a forest large
Where lived rutting elephants, lion and the like.
Go back to the shrine I must
To see *pūja* go on in time, uninterrupted,
Give me my gold".

61. *Chāyanama.*

என்றசொல்லைக் கேட்டவுடன் எரிபோல் விழிசிவந்து
ஏதுசொல்லு வாராம்துரை மார்கள்
கள்ளவாளிக் குள்ளமுறை கட்டியடி பட்டல்லாமல்
காரியமாய் உள்ளமொழி சொல்லான்
என்றுசொல்லி அந்தணனைக் கும்பினியார் சேவகர்கள்
இயல்வுடனே கட்டியடித் தாரே
அடியாத்த மாட்டாமல் அந்தணனும் மனங்கசிந்து
ஆதரவாய் ஏதுமொழி சொல்வான்
தடியா லடித்துத்தள்ளித் தானேகள்ள னென்றுசொல்ல
தலையில் விதியிதுவோ சிவனே
அபயம் அபயமெங்க ளாதிநா ராயணர்க்கும்
ஐயன்சந்திர சூரியர்க்கும் அபயம்
சபைகூடு முப்பத்துமுக் கோடித்தேவ ரிருஷிகட்கும்
சங்கரர் சரவணர்க்கும் அபயம்
தாரணி தனைப்படைக்கும் சதானந்தர் ஏரம்பர்க்கும்
தாயாருச்சினி மாகாளிக்கும் அபயம்
அபயம் அபயமென்று ஆரணிக்குப் பூசைசெய்த
அந்தணனுந் தானபய மென்றான்
அபயமென்ற அந்தணனை அன்புடனே தானழைத்து
அடுக்கநின்ற துரைமார்கள் சொல்வார்
சேரமுறை யிட்டழுத வேதியனே உன்னுடைய
சீவன் விறுதாவிலே[80] போகாமல்
காரியமா யுன்னிடத்தில் கனகப்பொடி வந்தவகை
கட்டுரைத்தால் விட்டிடலா மென்றார்
என்றுவெள்ளைக் காரன்சொல்ல இன்பமுடன் மனமகிழ்ந்து
ஏதுசொல்லு வானாம்மறை யோனும்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் உச்சினிமா காளிகோயில்
சதுர்மறையோன் பூசைசெய்து வந்தேன்
வெல்லும்புகழ்க் கீர்த்திபெற்ற வேதாந்த நாயகியாள்
வீற்றிருக்கும் கோயிலதைச் சுற்றி
அல்லும் எல்லும் தவறாமல் அலகைசேவித்து நிற்கும்
ஆருமங்கே சென்றால்மீள மாட்டார்

---

80. விறுதாவிலே-வீணாக.

These words uttered,
The Whites their eyes flamed spoke:
"Truth this man wouldn't speak
Unless given beatings as to a thief".
The man of the Company in attendance
Tied the brahmin and gave him whips.
Unbearable as the pain grew
The brahmin spoke writhing inward:
"O Śiva! should I be fated thus
To be tortured into a confession?
Give me shelter, give me refuge!
Submit I do myself the priest of Kāḷi
To Ādi Narāyaṉa
To the sun and the moon,
To the divine sages numbering crores thirty three,
To Caṅkara and Caravaṇa,
To Catāṉantar Ērampar the source of this universe
And to Mother Ucciṉi Mākāḷi".
Intervening the lords spoke in seeming kindness:
"O brahmin crying for refuge!
Release you unharmed we could
If you tell us how you got this gold."
Replied the brahmin unruffled:
"Speak the truth alone I do,
A *Vēdic* brahmin that I am
I'd been offering *pūja* to Ucciṉi Mākāḷi
The goddess supreme of the *Vēdas,*
Of glory surpassing that she was,
Guarding round the temple day and night
Were the spirits devout.
No one daring access there would return safe.

ஆதிவருணத்தோன் நானும் ஆரணியைத் தாயாக
ஆராதனை செய்துவரும் வேளை
எண்டிசையுங் கீர்த்திபெற்ற எண்டோளி மனமகிழ்ந்து
ஏழையெனத் தந்தபொலன் துரையே
என்றுமறை யோனுரைத்த வார்த்தை கேட்டு வெள்ளைக்காரன்
எங்கேயடா பாப்பானந்தக் கோயில்
கண்டுவர வேணும்பாதை காட்டுமென்றா னப்போதந்தக்
கரவடனாம் விப்பிரனுஞ் சொல்வான்
கூளிகணங் காவலுள்ள கூண்டபெருங் காவதிலே
கோயில்கண்டு மீளமாட்டீர் நீங்கள்
மருட்சியுட னேநீரும் மற்றுமுள்ள சேனைகளும்
மாளவென்றா லங்கேவாரு மென்றான்
என்றஉரை தான்கேட்டு ஏத்ததுரை முறுவலாக
இருபிறப் பாளரோடு சொல்வான்
நம்பியானே இந்தவார்த்தை நம்மிடத்தில் சொல்லாதே
நாயகியின் கோயிலதைக் காட்டாய்
எனவே துடர்ந்துமூன்று துரையும் இவுளிஏறி[81]
ஏத்தபடை யோடேநடந் தாரே

## வெள்ளைத்துரைமார் வினாவும் செயலும்

நடந்து வரும்அதரில்[82] நம்பியானே உன்னுடைய
நலமான புக்கிலெங்கே[83] என்றான்
புக்கிலெங்கே என்றபோது புத்தியில்[84] விசாரமதாய்ப்[85]
புகலுவான் மறையோன் விதிஎன்ன
ஆடுமணி நாவசையா நீதிமுறை விக்கிரமன்
ஆண்டிருந்த தேசமதி லேதான்
சேய்மையில்லை மகமாயி கோவிலுக்கு ஓர்மருங்கில்
சேரநடந் தாலகரந் தோணும்
என்றுகூட்டி இடவையுடன்[86] இயல்மறையோன் தானடக்க
இடைவழியி லோர்மாடங் கண்டார்

81. இவுளிஏறி-குதிரை ஏறி.
82. அதர்-வழி.
83. புக்கிலெங்கே-வீடெங்கே.
84. புந்தி-புத்தி.
85. விசாரம்-கவலை.
86. இடவை-வழி

One from the *vēdic* class ancient
I'd been serving mother Kāḷi,
The Eight-shouldered pleased
Graced this gold O lord!"
"O brahmin where is that temple?
Go there we must. and show us the way."
The Whites ordered
To find the brahmin a thief labelled reply:
"Return you cannot from there,
Thick and dark is the wood
And protecting the temple is an army of spirits;
Come there you can
Unmindful of death certain".
Undeterred the White said smiling
To the one of two births:
"Try not to scare us O brahmin!
Take us to your deity's place".
The three alien rulers their horses mounted
And proceeded along with their men prepared.
One among the lords asked on the way:
"O brahmin tell us where your dwelling lies."
The brahmin to his fate resigned spoke:
'It is there in the land of Vikkiramātittaṉ
A ruler righteous and of justice unstained,
Not far off from here
Situated it is by Kāḷi's shrine
This way takes you right to the place".
Going on as they were
They sighted a house on their way.

கண்டபோதே கும்பினியார் சேவகனும் மனமகிழ்ந்து
கனமுடைய வேள்வியாளர் வீட்டைச்
சுற்றிலும் வளைந்துகொண்டு தொழுகுலத்தோர்[87] தேடிவைத்த
சுவணமதைத் தான்திருட வென்ன
சந்தோஷமாய்க் கொண்டியிட்டும்[88] சந்திரங்[89] கிடையாமல்
சாற்றுவாராம் ஆலோசனைக் காரர்

**கும்பினிப் படையும், கோயில் முற்றுகையும்**

உன்னைபோகச் சொல்லிடலாம் உச்சினிமா காளிகோயில்
உள்புடை யதிலிருக்கும் பொன்னைச்
சென்றெடுத்து வாரதற்குச் செலவுகாண்பி என்றுரைக்கத்
திடுக்கிட்டுப் பிராமணனுஞ் சொல்வான்
மகிழ்ச்சியுட னுச்சினிமா காளிகோயில்வர மாட்டேன்
மாதங்கரே நீங்கள்போங்க ளென்றான்

**வேறு**

என்றுமறையோனு முரைத்தபோது இருந்தயோசனைக் காரர்சொல்வார்
சாமுண்டிகோட்டங் காட்டடாநீ சாம்பூநதமங்கே சாலஉண்டு
உனக்குத்தந்தது பொடிந்தபொடி உலகம் ஆண்டதோர் நிருபன்[90]பொருள்
எடுத்துச் சுமையாகக் கொண்டுவந்தால் என்னசெய்வாளுச்சினி மாகாளி
அடித்துத் தள்ளவே ஓடிடுவாள் ஆதிபரனுட செயலாலே
எடுக்கும் பொருளிலே மூன்றிலொன்று ஈசனுக்கென நேர்ச்சைசெய்து
கோயிலதை வெட்டி இடித்தெடுக்கக் கூடப்போங்கடாஆயிரம்பேர்
குஞ்சரத்தில்[91] அஞ்சிபத்தும் குரகதத்திலே[92] ஆயிரமும்
கோலவண்டிகள் ஐம்பதுடன் கூடப்போங்கடா கற்பித்தானும்
வாரித்தபனிய[93]மெடுப்பதற்கு வகுந்து காண்பிக்க மறையோனையும்
அழைத்துப் போங்கடா எனவேசொல்லி ஆலோசனைக்காரர் பல்லக்கேறி
ஆரணியவள் செய்யும்வீரம் ஆலோசனைக்காரர் அறியாமல்
இத்தனைபேரும் ஒன்றுசேர்ந்தால் இருக்கும்இரணியம்[94] எடுத்திடலாம்

87 தொழுகுலத்தோர்-குலமாகத்தொழத்தக்கவர்(அல்லது பூசைத்தொழில் நடத்தும் அந்தணர்)
88. கொண்டியிட்டும்-கொள்ளையிட்டும்.
89. சந்திரம்-பொன்.
90. நிருபன்-அரசன்.
91. குஞ்சரம்-யானை.
92. குரகதம்-குதிரை.
93. தபனியம்-பொன்.
94. இரணியம்-பொன்.

Greedy of gold
They raided the brahmin's house,
The house of one at the deity's service
Hoping to find a treasure hoarded.
Finding none they said to the brahmin:
"Show the way to the inner chambers of the temple
Where lies the gold concealed
And left free you would be"
"Enter the temple I won't
And you may go O lords,"
Said the brahmin shocked.
Reacted the White in words scornful:
"Gold plenty there is
Take us to the seat of Cāmuṇṭi O brahmin!
Given to you is a part meagre
Lying there must be a treasure large
Brought in by the ruler (Vikkiramātittan) great.
And the treasure bundled brought out
What could your Uccini Mākāḷi do?
Given a beating run She would;
The Lord of the Beginning[62] blessing,
A third of the treasure found
Spend we'll on offerings to Him;
Go on a thousand of you O soldiers!
To see the temple struck down;
And take with you
Fifty elephants horses a thousand and carriages fifty
Along with the brahmin to guide you in".
At the entrance came the aliens in palanquin
With the army and the brahmin hand-cuffed following.
"With this army in action
All the treasure we could bring out".

62. Śiva.

என்றுபதாகினி[95] யுடன்நடந்து இருபிறப்பாளர்க்கு நிகளமிட்டுக்[96]
கூட்டிக் கொண்டுமே வீரியுட கோயில்முகப்பிலே வந்துசேர்ந்தார்.

**அம்மனின் ஆலோசனை**

இப்படியாக இவரிருக்க ஏத்தசாமுண்டி ஏதுசொல்வாள்
உலகத்தில்மதம்[97] மீறிப்போச்சு உலாவித்துஷ்டரை நாசஞ்செய்து
பாவபுண்ணியம் பார்த்துவர பாரிலேநாமள் செல்லாமல்
தீரன்விக்கிர மாதித்தனும் தேடிவைத்ததோர் திரவியத்தைக்
காவல்செய்துமே நாமிருந்தோம் காஞ்சனத்துக்கு வேட்கைகொண்டு
ஆலோசனைக்காரத் துரைமார்கள் ஆடகந்[98]திருட வந்துசேர்ந்தார்
இனிமேல் நம்முட பாங்கிருக்கும் ஏழுகன்னிமார் கைத்திறமும்
ஆலோசனைக்காரர் தன்திறமும் அழற்க ணுவந்தோனின்[99] தோற்திறமும்
இன்றுகாணலா மெனமகிழ்ந்து எண்டோளியம்மை இனிதிருக்க
ஆலோசனைக்காரர் படையுடனே அம்மைபைரவி கோட்டம்வர
சேதிமமதைக்[100] காத்துநின்ற தெய்வப்படைவந்து சூழ்ந்ததுவே.

**அந்தணன் பட்ட அவத்தை**

**வேறு**

படையுடன் வந்த ஆலோசனைக்காரர்
பத்திரகாளி சேனையைக் கண்டதும்
பராபரமென நெஞ்சகத்தி லெண்ணிப்
பார்வையானது வடவாமுகம்[101] போல
சீறி வந்ததோர் கும்பினிச்சேவகர்
சிறந்த எண்டோளி கோயிலில் சென்றிட
என்னஎன்ன யோசனை தோணுது
ஏத்தநல்ல துரைமார் மனத்திலே
கோட்டந்தன்னில் கதவேழுங் கண்டோமே
குறைவில்லையே திரவிய மானது
மோசமாச்சு மறையவன் தன்னையும்
முன்னே கொண்டுவா வாயிலதுகாட்ட
என்று ஆலோசனைக் காரர்சொல்லிட

95. பதாகினி-சேனை.
96. நிகளமிட்டு-விலங்கிட்டு.
97. மதம்-செருக்கு(arrogance)
98. ஆடகம்-பொன்.
99 அழற்கணுவந்தோன்-சிவன்.
100. சேதிமம்-தேவாலயம்.
101. வடவாமுகம்-வடவாமுகாக்கினிஎனும் ஊழித்தீ.

Thus went their mind
Knowing not the power of the deity presiding.
"Contented I've remained
Guarding the gold
Vikkiramātittaṉ the venturesome earned.
Going unchecked are the evils on the earth;
Pride and arrogance have come the ruling forces
Without our corrective presence.
And now the Whites have come here
To plunder my treasure.
And test now we can
The defiance of the White
Pitted against
The power of the divine virgins seven
And the prowess of Śiva".
Reflected thus the Eight-shouldered joyous
Expecting the challenge.
The Whites entered the shrine
To see surrounded by forces divine
That remained guarding the gold.
Countered as they were by Kāḷi's army,
The human forces chanted the Lord's name
Their faces reddening deluge like,
And into the shrine they forced their way.
Things in disappointing, they reflected:
"Seen there are seven doors bolted
The treasure there lies is large though,
Gone wrong our plans are,
Bring the brahmin to show us the door proper."

ஏத்தசேவகர் கடுநடையாய்ச் சென்று
சென்று முப்புரி நூல்மார்பர் பாணியில்[102]
சிறுங்கலையதை[103] வெட்டி முறித்திட்டு
அழைத்து ஆலோசனைக் காரரிடம்விட
அந்தண னிடத்தோர் வார்த்தைசொல்லுவார்
கனகப்பொடி எங்கே யிருக்குது
கல்லறைமுத லெங்கே யிருக்குது
சுவணமான திருக்கு மிடமதைச்
சொல்லடா கதவு தோணவில்லையே
கள்ளமாகவே சொன்ன மொழியிது
காட்டடா முத லுள்ளஇடமதை
மாயஞ்சொன்னான் மறையவ னென்றுமே
மாய்க்கவென்றந்தச் சேவகர் மொத்தினர்
அதுக்கல் [104] செய்திட்டும் அந்தணன் யாக்கையில்
அற்புதமாய்க் குருதி தோணவில்லை
உதிரமானது தோணாமல் போகவே
உத்த ஆலோசனைக் காரர்சொல்லுவார்.

### கோயிலிடிப்பு

உச்சினி மாகாளி கோயிலுக்குள்ளே
உள்புடையதிலே இருக்கும் பொன்னைக்
கொண்டியிட்டு முதலைக் கொடுபோகக்
கூட்டிக் கொண்டுவா குஞ்சரங்களுக்கு
தலைமையான மதத்த[105] யூதநாதன்
தன்னைக் கொண்டுவா கோட்டையதுதள்ள
என்றுஆலோ சனைக்காரர் சொல்லிட
எழுந்து சேவகர் வேழத்தலைவனாம்
யூதநாதனைக் கூட்டிக்கொண்டு வந்து
உத்தகையில் உலக்கை கொடுத்துடன்
எறும்பிதன்னை[106] உலக்கையுடன் கூட்டி
ஏழுவாசல் கட்டுமதில் தள்ளினார்

102. பாணி-கை.
103. சிறுங்கலை-கைவிலங்கு.
104. அதுக்கல் அடித்தல்.
105. மதத்த மதர்த்த,மதம்கொண்ட.
106. எறும்பி யானை.

Orders receiving
The soldiers went quick,
Cut the fetters of the one wearing the three-corded string
And brought him to the ruler.
The White ruler uttered words curt:
"Where are the pieces of gold?
Where is that treasure hoarded?
Find the door right we couldn't
Tell us which it is;
Played on us were words deceitful,
Show us the chamber treasure holding".
And reading deceit in the brahmin's words
The soldiers gave him severe blows.
Thrashes sound though he received
They didn't see him bleeding
Wonderous that it was!
Finding which the lord spoke:
"The gold in the temple
Plunder we will
And take them home;
Bring hither Ūtanātaṉ rutting
The chief of our elephants
To see the temple pulled down".
Ūtanātaṉ brought
And a log given in its trunk
To find the temple
With seven doors fortified
Pulled down to the ground.

கோட்டைதன்னை இடித்த பொழுதிலே
கோலஉச்சினி மாகாளி என்செய்தாள்

**பத்திரகாளிப் படையும், பறங்கிப்படையும்**

கரும்பிடாரம்போல் வாயிலது தன்னில்
காளிஏவினாள் தூதன் வேதாளத்தை
வேதாளங் கரந்தன்னில் தடிகொண்டு
வெகுண்டு வந்ததோர் கும்பினிச்சேனையை
நீறதாகவே போம்படியே கொண்டு
நிமிடந்தன்னில் ஜயமாலை சூடினார்
கொஞ்சப்பேர் பயந்து காடுசென்றிடக்
கோயிலில் சென்றோர் வெளிவரக் காணிலோம்
அந்தணன் தனக்கும் அடிபோச்சுது
ஆலோசனைத் துரைமார் மீதமாச்சு
குதிரை காலாள் யூதநாதன் போச்சுது
கோயில் வாயிலில் சாம்பிண[107]மாச்சுதே.

**காளி தவசும், கங்காளர் வரமும்**

அப்போதுளங்க ளுச்சினி மாகாளி
அரனைநோக்கித் தவஞ்செய்ய லாச்சுது
ஆதிசித்தந் தபசுக் கிரங்கியே
அம்மை உச்சினி மாகாளி முன்வர
கடுக்கையங் கண்ணி சூடியைக்[108] கண்டதும்
கங்காளியவ ளேதுரை சொல்லுவாள்
வாரும்வாரும் அரவணிந்த மூர்த்தி
வார்த்தைசொல்ல வரந்தருவீர் நீரே
எத்தனை காலமாக இக்கோயிலில்
ராஜன்விக்கிரமன் பூசை பண்ணினான்
பூசைசெய்து பொருளை வைத்துவிட்டுப்
பூபன் விக்கிரமன் முத்தி சேர்ந்திட
ராஜன்வைத்த நவகோடி ஈழத்தை
நானும் உள்வைத்துக் காவலது செய்ய
திரவியத்துக்கு வேட்கைகொண்டு மன்னன்

107. சாம்பிணம்-சாகும்பிணம்.
108. கடுக்கையங் கண்ணிசூடி-கொன்றை மாலையணிந்த சிவன்.

Kāḷi ordering
Vētāḷam resembling a deity of dark complexion
Went with fury provoked
A shaft in hand.
Brought the Company's soldiers daring
To complete ruin
And returned triumphant in a moment.
Horror-struck
Some of them to the forest fled
And others seemed trapped inside.
Rescued was the brahmin from the beatings,
Horses, soldiers and Ūtanātan̲ were sent to death.
There remained the rulers desperate
Finding at the entrance corpses plenty.
Went in Mākāḷi to do penance at Śiva.
Prayer reaching,
The Wise of the Beginning
And the One that arched the Mēru hill into a bow[63]
Revealed His presence gracious
To the One wearing a garland of *kon̲ṟai* flowers.
Spoke Kāḷi to Śiva:
"Welcome to you, O Lord with the serpent garland![64]
And let me speak a word:
King Vikkiramātittan̲ for years long
brought me offerings propitious;
Heavenward he went
Leaving his treasure at my feet.
In my protection his gold lying,

63. Śiva.
64. Śiva.

சிறந்தகும்பினி யாருடன் கூடியே
சினகரக் கதவேழை உடைத்திட்டுச்
செம்பொன்னைப் படிறு[109] செய்து போயினான்
கோயிலில் கதவேழும் உடைபட்டும்
கூண்டிருப்பேனோ[110] போதமில் லாமலே
அறைக்கு ளித்தனை நாளிருந்த என்னை
அம்பலத்தில் துரத்தி விரட்டினான்
காசினியில் கலியன்[111] பெருத்ததால்
கண்டு துஷ்டர்தனை வதைசெய்துமே
குறைக்க வென்றந்த உச்சினி மாகாளி
குன்றவில்லியிடந் தன்னில் கேட்கவே
அந்திவண்ணன் மனது சந்தோஷமாய்
அம்மைஉச்சினி மாகாளிக்குச் சொல்வார்
ஓங்கரிப்புடனே சத்திப் பானதும்
உத்தநல்ல சுரங்குளிர் சன்னியால்
சீக்கிரந் தனிலே உயிர்வாங்கவும்
தேசஞ்சுற்றி அம்மன் விளையாடவும்
நீநினைத்தபடி வரந்தந் தேன்யான்
நீயே சென்றுபார் உச்சினிமாகாளி
என்று சந்தோஷமாகச் சிவன்சொல்ல

**அரவணைச் செல்வனைக் காண அம்மன் வரல்**

ஏத்தஉச்சினி மாகாளி யம்மனும்
அம்ம னோடுதான் கூடவருகிற
அழகு பெற்றிடும் உத்திரமா காளியும்
மங்கைநல்ல வடபத்திர காளியும்
மாது துர்க்கைநல் மாகாளியம்மனும்
இலங்கமா காளியம்மன் கூடவந்த
எங்கள் கண்ணனூர் மாரியம்மனோடு
பூமிஎங்கும் புகழ்பெற்ற மாரியும்
புகழுடைச் சந்தன மாரியம்மனும்
கூடியே படைதான் செருமிவர

---

109. படிறு-திருட்டு.
110. கூண்டிருப்பேனோ-கூடியிருப்பேனோ.
111. கலியன்-கலிபுருடன்.

The lords of the Company avaricious
Came to my temple with their army
Broke open the seven doors
And saw it plundered.
Unconcerned could I remain
With the doors of my shrine broken?
So long I'd lived here,
And been driven out now to the open;
Evil and misery are on the increase on this earth
Come you must to punish them right
And see their number decrease".
Delighted the Lord of dark complexion spoke:
"Grant you a boon I do,
Go you can of your own
And see the evil punished
With vomitting
Cold, fever and apoplexy
Taking them to death instant;
And small-pox over the world too".
With an army raging
Of Uttiramākāḷi the wonderous,
Vaṭapattirakāḷi the virtuous,
Turkai, Ilaṅkamākāḷi and Kaṇṇaṉūr Māriyammaṉ,
Māri the gloried and Cantaṉamāri
Came Ucciṉi Mākāḷi

கூண்ட கேத்திரபாலன்[112] முன்னேவர
பருமலை போலே வேதாளம் பின்வர
பக்கந்தன்னி லிணைவீர பத்திரன்
பூவுலகை ஒருகுடைக்குள் ஆளும்
புகழும் உச்சினி மாகாளியம்மனும்
கையில் கப்பரை யோடெரிசூலமும்
காதில் தோடுடன் கண்ணில்மை தீட்டியே
தீட்டி மூக்குத்தி நெற்றிப் பிறையுடன்
சேருந்தாளில் சிலம்பு தண்டையிட்டு
இடையிற்பட்டு அரைஞாணது பூட்டியே
ஏத்த மூன்றுகண் மூன்று முகமுமாய்
சடையாம லவர்கள் நடக்கவே
தையல்மார்கள் குரவையது[113] பாட
ஏழு கும்பக் குடமாடி யேவர
ஏத்த வேதாளமானது பின்செல்ல
அம்மை உச்சினி மாகாளியம்மனும்
அரவணைச் செல்வன்[114] தன்னிடம் போகவே
உச்சினி மாகாளி படை தன்னோடு
உலகளந்திடும் ராமர்முன் வந்தனர்.

**வைகுண்ட ராமரிடம் விடை பெறல்**

**வேறு**

வைகுண்ட மானதிலே வந்துராமர் தமைவணங்கி
செய்குந்த மாக[115]என்னைச் சிறந்துதொழு திருந்தமன்னன்
அரசாண்டு மன்னவனும் அமைச்சனந்தப் பட்டியுமாய்
என்னிடத்தில் பொன்னையள்ளி இட்டுவைத்துத் தான்போனார்
போனவர்கள் திரவியத்தைப் புகழ்ந்துவைத்துக் காத்திருந்தேன்
காலமது வரும்வரைக்கும் காத்திருந்தேன் திரவியத்தை
பாவிஎன்னை வெளியாக்கிப் பழிவார தறியாமல்
கும்பினியார் சேவகனும் கொடுங்கோபங் கொண்டெழுந்து
அடியடி யெனவளைந்து அந்தணனையும் அடித்தான்

112. கேத்திரபாலன்-வைரவன்.
113. குரவை-மகளிர் விசேடகாலங்களில் நாவால் குழறியிடும் மகிழ்ச்சியொலி.
114. அரவணைச்செலவன்-பாம்பணையில் துயிலும் திருமால்.
115. குந்தம்-குபேரனது நவநிதிகளில் ஒன்று.

Leading the way was Kēttirapālan
With Vētāḷam a mountain like following;
And coming by her side was Vīrapattiran.
Mākāḷi the ruler supreme of the earth
Marched on
With a bowl divine
And a burning trident in hand;
Beauteous She was
With painted eyes,
Forehead with spots,
Ears and nose adorned with rings,
Anklets there were round her shapely legs
A cord round the loin
And silk attire at the waist;
Three-eyed three-faced She was
With unearthly soldiers walking along,
Melodies sweet from women,
Sacred pots seven in procession,
And Vētāḷam faithful following
Kāḷi came to Vaikuṇṭam.
To the presence of the One
That measured the world[66]
And that sleeps[66] on the serpent bed.
Bowing to the Lord, Kāḷi spoke:
"Vikkiramātittan with Paṭṭi his minister
While this world leaving
Left his treasure to my care
A devotee of mine that he was.
Guarding the treasure I'd been
With care and delight,
Guarding it long to time opportune.
Came then to my home a hand tyrannical
And saw me out,
Knowing not the curse impending;
Came the men of the Company
And beat the brahmin in rage insane.

65, 66. Viṣṇu.

அடித்துக்கோயி லிடித்துவிட்டு அகமதிலே நுழைந்தனனே
திரவியத்துக் காசைகொண்டு செத்தவர்கள் ரொம்பஉண்டு
ஆனாலும் திரவியத்தை அசடர்கொள்ளக் கொடுப்பேனோ
கலியுகந்தான் மிகுத்துதண்ணே கர்மபூமி உலகமெல்லாம்
பெரியோர்கள் சிறியோரென்ற பேதகமொன் றில்லையண்ணே
தாய்தந்தையைச் சினந்து சற்குருவை நிந்தைசெய்து
பெண்டாட்டி வைதாலும் பேசா திருக்குகிற
வண்டர் புரட்டர்களை வழிபார்த்துக் கொன்றிடவே
தென்திசையில் போவதற்குச் செலவுகொடும் அண்ணாவே
என்றுகாளி உரைத்திடவே எம்பெருமா னேதுசொல்வார்
என்னோடே நீயுரைத்தாய் யானுமினி என்னசொல்வேன்
குற்றந்தீர்க்க வாரதற்குக் கொஞ்சநா ளிருக்குதங்காய்
முன்னமேநீ தெக்ஷணம்[116] போய் மூதாக்கள் முறைமையைப்பார்
என்னையுமே நினைப்பாரில்லை இவ்வுலகு மானிடவர்
ராமனுட குணமறியார் ராச்சியத்து மாந்தர்களும்
பொய்மிகுதி புலையாட்டம் பூவுலகில் மிகுந்தாச்சு
மெய்மிகுந்து வருவதற்கு மிகவருஷ மிருக்குதங்காய்
அந்நேரம் நான்வருவேன் அவனிஎல்லாம் அதுவரைக்கும்
கண்பார்த்துக் காக்ஷிசெய்வாய் காரிகையே தங்கையரே
முன்போகச் சொன்னேனென்று முடியாதே உலகமதை
குறும்புசெய்யும் பேர்களைத்தான் குமண்டைசெய்ய[117] நீபோறாய்
எத்தனைதான் செய்தாலும் ராமர்நான் வரும்வரைக்கும்
உச்சினி மாகாளியங்கே ஊரழியக் கொல்லாதே

116. தெக்ஷணம்-தென்பகுதி.
117. குமண்டைசெய்ய-செருக்கு மேலிட்டுச் செயல் செய்ய.

They entered my shrine breaking it open.
Greedy of gold perished are many.
But could I see my treasure plundered?
The world goes astray O my brother!
Evil and misery abounding,
Gone is the distinction between the worthy and the mean;
Men there we find
That frown at their mother and father
That run down their teacher
That are submissive to wife abusing
Vulgar and artful that they are;
To see them all undone
Going Southward I intend,
Grant me leave O my brother!"
"Deny you consent
I cannot O my sister!
Come not yet is the Day of Judgement
You can go Southward now
And observe the ways of the humans;
None there is to think of me
None there is that knows of me right
Flourishing on the earth are deceit and falsehood;
Years many are to go
To find them move to truth unstained,
Appear on the earth I will then.
Go there now O my sister
And rule it prudent
But to its end
Bring not the world in haste,
Going there you are
To keep the evil contained,
And not to see it in ruin complete.
The Day of Judgement
Should await my arrival there.

சொல்லிநிறுத்தி உரைப்பாய் தோகைஉச்சினி மாகாளி
இங்கிருந்தாப் போலேதான் எங்கெங்கும் நானிருப்பேன்
என்றுராமர் சொல்லிடவே ஏந்திழையாள் மாகாளி
வைகுண்ட ராமாநீர் வழியனுப்பும் என்னைஎன்றாள்
என்றுஉச்சினி மாகாளி இராமருடனே கேட்க
தெக்ஷணத்தில் போவதற்குத் தேவியர்க்கு விடைகொடுத்தார்
அப்போது வேதாளம் அச்சுதரை அடிபணிய
வேதாளம் அடிதொழவே விட்ணுமனம் மகிழ்ந்துரைப்பார்
ஒன்றுக்கும் அஞ்சாதே உன்னாணை வேதாளம்
தந்தேனா னுனக்குவரம் தாயாரைக் காத்திரென்றார்
அந்நேரம் ராமரிடம் அம்மனுமே ஏதுரைப்பாள்
என்கோயில் வெளியாக்கி இடித்துமதில் பொடியாக்கித்
தன்காரியங் காணவந்த சண்டாளப் பாவிகளை
நினைத்தபடி பொடியாக நீறாக எரிப்பேனண்ணே
எனக்கோபங் கொண்டுஅம்மன் ஏந்திழையும் படைகூட்டி
அண்ணரிடம் விடைவாங்கி அம்மைஉச்சினி மாகாளி
மங்கையர்கள் குரவையிட வைகுண்டம்விட் டிறங்கினாளம்மை.

**அம்மன் வெள்ளைக்காரப் படைக்கு அளித்த வேதனை**

**வேறு**

வைகுண்டம் விட்டு அம்மை திரிசூலி
வாய்த்த தெக்ஷணா பூமியிற் செல்லவே
தேரிலேறியே உச்சினி மாகாளி
சேயிழைமார் புடைசூழ்ந்து போற்றவே
கடலுடைத்திடும் வாறது போலவே
காட்டுப் பேய்களும் கூளி கணத்துடன்
நருள்[118] மிகுத்திடும் உலக மானதில்
நாமள் போயினிக் காணலாமென்ன
மடமடென்னவே அம்மன் படையுடன்
மகிழ்ந்துதெக்ஷணம் நோக்கிப் புறப்பட்டாள்
புறப்பட்டு அம்மன் தெய்வப் படையுடன்

118. நருள்-நரல் அதாவது சனக்கூட்டம் எனப்பொருள்படும்.

Bring them righteous by ways gentle,
And one can feel my presence everywhere."
Thus spoke the Lord.
The Lord of Vaikuṇṭa that He was
Granted permission to Kāḷi the beauteous
For journey Southward.
Finding Vētāḷam in prayer submissive
Viṣṇu spoke pleased:
"I'll be with you
Granting you the boon you sought;
Go with the Mother
And be Her guard unfailing."
Ammaṉ swore then to Rāma:
"I am going O my brother
To find the wicked in ruin
That pulled my temple down to pieces
And got me out
To provide for their avarice mean.
Perish them I will
And send them to dust."
Her brother divine blessing
Kāḷi left Vaikuṇṭam with Her army
In vengeance burning.
Her maids accompanying with songs rapturous,
The Mother trident holding
Journeyed Southward by Her chariot
With Her women bright jewelled adoring;

புகழுடை வெள்ளைக்காரன் படையிலே
கனத்த கூட்டத்துடன் சென்றிறங்கியே
காளி ஏவினாள் வேதாள மதை
அச்ச வெடிகளாய்ப் பாளையத்திலே
அர்த்தராத்திரி வெடிக ளதிர்ந்திட
மாற்றானாகிய மிராட்டியன் படை
வந்து தென்னவே சென்றெழும்பினார்
கச்சை கெட்டியே சட்டை போட்டவர்
கையில் தோக்குகள்[119] தானெடுத்திட
இச்சை யாகவே லெக்கு[120] மாறியே
எதிரே ஒருவருக் கொருவர் வெட்டிட
வெட்டுப் பட்டதோ ராலோசனைக்காரர்
விடியுமட்டு மிருந்து சடைத்திட
பட்ட பேர்கள்போய் மற்றக் கூட்டத்தில்
பாங்க தானநோய் பலதுந் துடங்கிட[121]
ஓங்கரிப்புட னேவிக்கல் கக்கலும்
உடனெழும்பிச் சடுதியில் மாண்டனர்
சமர்த்த ரென்றுமே வந்திட்ட பேர்களும்
தாறுமாறாய் விழுந்தார் பிணமதாய்.

**வெள்ளைக்காரர் வேண்டுதலும், அம்மன் மனமிரங்கலும்**

அப்போ பாதிரிமார் கூட்டந் தன்னிலே
அம்ம னென்றுமே தானாடுவார் சிலர்
கன்னி யழியாத பெண்களென்றுமே
கண்ணைக் கெட்டியே ஆடுவார் சிலர்
வேப்பன் குழைக்காரி உச்சினி மாகாளி
வீர மாகாளி உத்திர மாகாளி[122]
என்று சொல்லியே மிஞ்சின பேர்கள்தான்
ஏத்த பாலைக் கிழத்தியோடே சொல்வார்
உத்திர மாகாளி யாமளைத் தாயாரே
உனக்கு ஏதுதான் வேணுமெனச் சொல்லு

119. தோக்குகள்-கைத்துப்பாக்கிகள்.
120. லெக்கு-குறி, அடையாளம்.
121. துடங்கிட-தொடங்கிட.
122. உத்திர மாகாளி-வடபத்ரகாளி.

The ocean wrathful resembling
Amman on the human habitat descended swift,
With the army of spirits wild and eager
Coming down on the alien army valiant.
She sent Vētāḷam to action swift,
And heard around the colony at midnight
Were explosives awesome
As if attacked by the Maratta army;
The Whites woke up horror-struck,
Girded tight
They came out with guns in hand.
In the confusion darkness caused
The Whites killed one another.
Went on thus the killings till morn
To see them all in exhaustion complete.
Left dead were a number large,
Those that remained alive
Prey to pestilences fell;
Cough and vomitting wild
Sent them to death instant.
Those that valiant posed
Fell trembling on way to death.
Among the Whites of priestly class there were some
Who Amman possessed went about dancing.
And the maids standing
Started praying with their eyes covered.
The rest among them
Chanted the name of the goddess of arid tract:
"Uccini Mākāḷi wearing the rings of neem,
Kāḷi the awesome, Uttiramākāḷi!."
The Whites uttered words propitiating:
"Uttira Mākāḷi, O Mother Ciyamaḷa!
Tell us of your demand whatsoever".

என்று பக்கத்து வெள்ளைக்காரர் சொல்ல
எங்கள் கூலியைக் கொண்டாடுவார் சொல்வார்
எங்கள் கோயிலில் நீங்கள் சென்றுதான்
எடுத்த முதல்களைக் கொண்டு போடடா
என்று ஆடுந் துரைமார்கள் சொல்லிட
ஏத்தபாரிசத்[123] துரைமார்கள் சொல்வார்
உந்தன் கோயில் முதல்காண வில்லையே
ஒண்டொடி தளி[124]தொட்டு உயிர்போச்சுதே
சுவரிடித் தெங்கள் சீவனும் போச்சுது
செய்ததோர் பிழைநீ பொறுத்திடு
உனதுகாலடித் தூசி தன்னிலே
உலக நாயகி செய்தபிழை பொறு
கோயில் சீக்கிரம் வைத்துத் தருகிறோம்
கூண்ட அம்பலம் விட்டுத் தருகிறோம்
ஆயிரம் கடாகொண்டு வெட்டியே
ஆறதாகவே உதிரம் ஓடிட
வாழையின் குலைமாலை சந்தனம்
வைத்த பண்டங்கள் எண்ணப் போகுமோ
என்று துரைமார்கள் சொன்னபொழுதிலே
எண்டோளியம்மை மனது மகிழ்ந்துமே
இருந்த துரைமார்கள் கொடுத்த உணவுண்டு
ஏந்திழையம்மை ஏது நினைக்கிறாள்
இந்தத் துரைமார்கள் ஏழையாச்சுது
என்று குற்றத்தைப் பொறுத்து அம்மனும்
செத்தபேர் போக மீதிப்பேர்களின்
சீவன் தன்னையுங் காத்து ரக்ஷித்துத்
தேரிலேறியே படைகள் பின்வர
தேவி தெக்ஷணந் தன்னில் வந்தனள்.

123. பாரிசம்-பக்கம்
124. தளி-கோயில்.

Spoke those Cūli[67] possessed:
"Bring to my shrine O the Whites
The treasure you plundered".
Replied the aliens closeby:
"We haven't touched
The treasure in your shrine,
Venturing into your temple
We'd our lives lost;
Walls of your temple breaking
We'd met our end;
Pardon our sins O Mother!
Pardon our excesses at your feet
O the Mother of this earth!
A temple for you we would build soon
And other temples we would dedicate for you too.
O Mother!
Look at the offerings large
Goats a thousand
With their blood flowing like a stream.
The cluster of plantains,
Wreaths and sandal paste
Along with offerings of grain
That we have placed at your feet".
The Eight-shouldered had their offerings,
And their acts expiatory
Turned Her propitious.
She bore their sins
And brought them deliverance.
Having given them protection gracious,
Kāḷi journeyed to the South
With her army following.

---

67. Kāḷi.

**வாழி**

**விருத்தம்**

தெக்கணந் தன்னில்வந்து சேரவே தோழிமார்கள்
பக்கத்தில் சூழ்ந்துபோற்றப் பாவைஉச்சினி மாகாளி
சொக்கமந்திர முண்டாக்கிச் சொகுசுட னிருந்துவாழ்ந்த
இக்கதை தனைப்படிப்போர் யாவரும் வாழி வாழி.

சுபம்.

உச்சினி மாகாளியம்மன் கதை முற்றிற்று.

Having arrived
Kāḷi had for herself a shrine of gold erected
And lived there in ecstasy divine
With Her angelic confidantes adoring.
Those that read this life
May prosper long!

Bliss

The end of the Story of Uccini Mākāḷi

# குறுக்குளாஞ்சி கதை

# THE STORY OF KURUKKULAÑCI

# குறுக்குளாஞ்சி கதை

ஹரி : ஓம்.

நன்றாக குருவே துணை.

**நாட்டுவளம்**

நாட்டிலையும் நல்லநாடு நாவலர்கள் புகழும் நாடு
சென்னெல்[1] கன்னல்[2] விளையும்நாடு சிறுகதலி[3] பழுக்கும்நாடு
கன்னல்சென்னெல் விளையும்நாடு கதலிக்குலை பழுக்கும்நாடு
தேன்கமுகு சோலைசூழுந் தென்னாட்டுச் சீமையிலே
மாங்கமுகு சோலைசூழும் வடநாட்டுச் சீமையிலே
மாதமூன்று மழையுமூன்று வருசமூன்று விளைவுமூன்றாம்
கதிரொழக்கு[4] நெல்விளையுங் காஞ்சிபுர நாடதிலே

**இராமசாஸ்திரியின் வரலாறு**

காஞ்சிபுர நாடதிலே ஆண்டிருந்தாரே சாஸ்திரியும்
ராமநல்ல சாஸ்திரியும் ஆண்டிருக்கும் நாளையிலே
சாதிநல்ல பிராமணனே ராமநல்ல சாஸ்திரியும்
முன்குடுமிப் பூணூலும் முகத்தில்நல்ல திருவழகும்
காதிலிட்ட கடுக்கனுமாய்க்[5] கையிலிட்ட மோதிரமும்
பொன்னாலே பூணூலும் பொன்பதித்த தாவடமும்[6]
சோமன்[7]நல்ல உடையழகும் துப்பட்டி[8] வல்லவட்டும்[9]
சோமன்[10]நல்ல பிறையழகும் செந்தூரப் பொட்டழகும்
முன்னழகும் பின்னழகும் முகத்துநல்ல குறிப்பழகும்
ஆணுக்கிசைந்த ஆணழகன் அழகுராம சாஸ்திரியும்

---

1. சென்னெல்-செந்நெல், செஞ்சாலி நெல் எனப்படும் உயர்வகை நெல்.
2. கன்னல்-கரும்பு.
3. சிறுகதலி-தென்னாட்டில் மட்டும் கிட்டும் மிகு இனிப்பும், சுவையும், மணமும் கொண்ட மட்டிப்பழம் எனப்படும் வாழைப்பழவகை.
4. கதிரொழக்கு-ஒரு நெற்கதிரில் கால்படி நெல் இருத்தல்.
5. கடுக்கன்-ஆடவர் காதணி.
6. தாவட·-தாழ்வடம் எனப்படும் கழுத்திலணியும் மாலை,
7. சோமன்-வேட்டிக்குமேலும், துப்பட்டிக்குக் கீழுமாக உடுத்தும் ஆடை.
8. துப்பட்டி-துப்பட்டா என்னும் மேலாடை.
9. வல்லவட்டு-வல்லவாட்டு, கழுத்தைச் சுற்றித் தொங்கவிடும் ஆடை.
10. சோமன்-சந்திரன்.

# THE STORY OF KUṞUKKULĀÑCI

Kāñcipuram fecund and prosperous,
Live it did on the tongues of bards
A town illustrious it was,
Grown around in plenty were
Sugarcane and paddy and plantain of superior kind
Besides groves of areca trees;
Rains thrice a month
Brought harvest copious thrice a year.
There lived in this town
Rāmacāstiri a brahmin by caste
Wearing the sacred cord of gold;
A tuft of hair near the forehead,
Face bright and handsome,
Rings in ears and fingers,
A large chain adorning the neck,
Waist-cloth, shawl and collar-cloth besides,
A red spot on the forehead crescent moon like.
The charm of his face,
The shapely make at the front and the back,
His grace and loveliness,
All found him an elegant male.

பணத்திலையும் பெரியவன்தான் குணத்திலையும் பெரியவன்தான்
சனத்திலையும் பெரியவன்தான் தனத்திலையும் பெரியவன்தான்
விவசாயத்தில் பெரியவன்தான் வேந்தனுமே சாஸ்திரியும்
படிப்பிலையும் பெரியவன்தான் பஞ்சாங்கத்தில் பெரியவன்தான்
ராமநல்ல சாஸ்திரியும் அவருடைய மனையாட்டியும்
பாலோடே[11] பவுசோடே[12] பாக்கியமாய் இருக்கையிலே

**பூரணவல்லி பிறப்பும், வளர்ப்பும்**

ராமநல்ல சாஸ்திரிக்கி ஆண்பிள்ளை ஏழுபேராம்
ஆண்பிள்ளை ஏழுபேர்கள் அடுக்கடுக்காய் இருக்கையிலே
பெண்பிள்ளை இல்லையென்று பெருக்கதவங்கள் செய்தார்கள்
சாஸ்திரங்கள் செய்தார்கள் தருமங்கள் செய்தார்கள்
அப்படியிருக்கிற நாளையிலே அவருடைய மனையாட்டியும்
எட்டாவது கெர்ப்பமாக இருந்தாளே பெண்கொடியாள்
பத்துமாதஞ் சிமந்திருந்து பெத்தாளே பெண்கொடியும்
ஆசைக்கிப் பெற்றபிள்ளை அருமைப்பேரிட வேணுமென்று
பூரணவல்லி என்றுசொல்லிப் பேரிட்டு வளர்த்தார்கள்
இந்தநல்ல குழந்தையைத்தான் ஏழறையிற் குள்ளேவைத்து
ஏழறைக்குள்ளே வைத்தல்லவோ இன்பமுடன் வளர்த்தார்கள்
ஓராண்டு ஈராண்டு ஒருவயது மூன்றுவயதாகி
நாலுநல்ல வயதாகி நடந்தோடும் பருவத்திலே
தரையிலே விட்டாக்கால் தாளிரண்டும் நோகுமென்று
வெயிலிலே விட்டாக்கால் மேனி கருத்திடுமாம்
வட்டிலிலே சோறுபோட்டால் வளர நாள் செல்லுமென்று
மடியிலே சோறுகட்டி வளர்த்தார்கள் தங்கையரை
அப்படியிருக்கும் நாளையிலே அழகுபூரண வல்லிக்கித்தான்
அஞ்சுநல்ல வயதாச்சே அறியாப் பருவத்திலே
தலையும் வளத்தவளுக்குச் சடையும்பின்னித் தான்போட்டு
நெத்திக்கிச் சுட்டிகட்டி நிலவும் பிறையுமணிந்து

11. பாலோடே-பால்தரும் ஆட்டு, மாட்டுச் செல்வங்களுடன்.
12. பவுசு-செல்வமும் செல்வாக்கும்

Eminent was Rāmacāstiri
For his virtues and wealth,
For his kindred and learning
And for his cattle;
Excel he did in farming and astrology too.
Rāmacāstiri and his wife
In content full and comfort they lived.
Children seven the couple had in succession
And boys all the seven were.
Austerities severe and penances the couple observed
Along with *Vedic* rites meet
And acts of charity too.
Living thus as they were,
Rāmacāstiri's wife conceived an eighth time,
And in month ten
Born to her was a female child
The fruit of their love and yearning that it was.
Christened Pūraṇavalli
The child was kept in chambers innermost
And had parenting with care exceeding.
In succession quick the days passed,
Years four as Pūraṇavalli saw
She started walking and running too.
Fearing strain on her feet
The parents left her not on the ground;
Fearing her complexion darkening
They kept her off the scorching sun;
Fearing slackening in her growth
They allowed her not to eat from a plate
And had the food fastened up in her waist.
Attended with concern studied
The girl her fifth year entered.
The mother plaited her hair and saw it comely
The brothers seven that they were
Brought in for her things dear:
Ornaments for her forehead,
Head ornament of crescent moon's shape,

காதுங்குத்தித் தோடுமிட்டுக் கழுத்திலே சரப்பளியும்[13]
கையில் கடையமிட்டுக்[14] கறுத்தநல்ல வளையலிட்டுப்
பாவாடை கொய்துடுத்திப்[15] பாடகமுந்[16] தண்டையிட்டு[17]
தங்கம்போலே வளர்க்கலுற்றார் தமையமார்கள் ஏழுபேரும்

**தூண்டிமுத்து முதலியார் வரலாறு**

அப்படியே வளர்க்கையிலே அந்தக்காஞ்சிபுர நாடதிலே
காஞ்சிபுர நாடதிலே கன்னிமூலைத்[18] தெருவதிலே
ஆண்டிருந்தார் முதலிமார்கள் அதிலேயொரு முதலியாரும்
அண்ணன் தம்பி ஏழுபேர்க்கும் அழகுப்பிள்ளை இளையவன்தான்
தாயுமில்லை தகப்பனில்லை தாமதிப்பா ராருமில்லை
அக்கமில்லை பக்கமில்லை ஆதரிப்பா ராருமில்லை
துணையொருவ ரில்லாமல் தூண்டிமுத்து முதலியாரும்
ஏழு வயசதிலே எடுபட்டு[19] வாராரங்கே
வளப்பார்க்குப் பிள்ளையாக வாராரே முதலியாரும்
காஞ்சிபுர நாட்டையெல்லாம் கடுகச்சுத்தி அலைந்துபோட்டு
அக்கோபுர வீதியிலே வந்தாரே முதலியாரும்
ராமசாஸ்திரியார் வாசல்முன்னே வந்துநின்றாரே முதலியாரும்

**இராமசாஸ்திரி-தூண்டிமுத்து உரையாடல்**

அப்போது சாஸ்திரியும் அவரைமெல்லக் கண்டாரைய்யா
இவருடைய அழகைக்கண்டு ஏற்றதொரு சாஸ்திரியும்
ஏழுபிள்ளை நமக்கிருக்க இவனைப்போலப் பிள்ளையில்லை
என்னபிள்ளையோ தெரியவில்லை என்றுசொல்லிச் சாஸ்திரியும்
வாரும்பிள்ளாய் தம்பியரே வந்தவகை சொல்லும்பிள்ளாய்
எந்தஊர் எந்தத்தேசம் எங்கிருந்து வந்தாய்பிள்ளாய்
என்னசாதி என்னபிள்ளை ஒன்ஊரென்ன பேரும்என்ன
அப்போது சொல்லுவாராம் அழகுள்ள முதலியாரும்
வாருமைய்யா சாஸ்திரியே-நான்-வந்தவகை சொல்லக்கேளும்

13. சரப்பளி-சரப்பணி, வயிரமழுத்தின பொன்னாலான கழுத்தணி வகை.
14. கடயம்-கடகம், கங்கணம்.
15. கொய்துடுத்தி-கொசுவிஉடுத்தி (மடிப்புக்களாகச் செய்து உடுத்தல்).
16. பாடகம்-மகளிர் காலணி.
17. தண்டை-காலணிவகை.
18. கன்னிமூலை-தென்மேற்கு மூலை.
19. எடுபட்டு-தள்ளப்பட்டு, ஒதுக்கப்பட்டு.

Ear-rings for her after the ear-boring rite,
Gold chain diamond studded for her neck,
Bangles black and arm-rings meet
Skirts with folds and footwear seemly,
And Pūraṇavalli grew in gem-like splendour.
Of those of mutali caste
That lived in the south-west of the town
There was one Tūṇṭimuttu Mutaliyār by name,
The youngest among seven in the family;
With both father and mother lost
The boy lived unloved;
Relations he had none
And no one there was to lean on.
Uncared and unregarded Mutali went about.
Tūṇṭimuttu the unwanted grew to seven
Thro' the mercy of men unloving.
None to look for and nothing to gain,
He roamed along the streets of the town,
Coming at length to the *gopuram* street
Mutaliyār exhausted stood at Rāmacāstiri's gate
Cāstiri saw the young man standing,
Saw his form graceful and reflected:
"Children seven I have
But none this boy's grace equalling,
Whatever caste has he hailed from!"
Curiosity impelling he spoke to the boy:
"Come O young man!
Tell me what has brought you here,
Tell me your name, your caste and country."
The young man fair said to Cāstiri:
"I'd tell you my story O Cāstiri!

இந்தக் காஞ்சீபுர நாடெனக்குக் கன்னிமூலைத் தெருக்காணும்
ஆண்டிருந்தோம் முதலிமார்கள் அதிலேயொரு முதலிநானும்
வளப்பார்க்குப் பிள்ளையாக வந்துவிட்ட னென்றுசொன்னார்
என்பேரு தூண்டிமுத்து இன்பமுள்ள முதலியாரும்
அப்போது சாஸ்திரியும் அவரைமெல்லக் கூட்டிவந்து
தன்னுடைய மனையாட்டியைத் தானுமங்கே வரவழைத்து
வாடிபெண்ணே மனையாட்டி-ஒரு-வார்த்தைசொல்லக் கேளடியோ
ஏழுபிள்ளை நமக்கிருக்க எட்டாவது பிள்ளையிவன்
பூரண வல்லியோட ஒன்பது மக்களுண்டும்
அப்போது மனையாட்டியும் அவரைமெல்லக் கூட்டிவந்து
தலையிலே எண்ணைதேய்த்துச் சாப்பாடும் பண்ணிவித்துத்
தன்பிள்ளை போலேயல்லோ தானுமங்கே வளர்த்துக்கொண்டார்.

**கல்விப் பயிற்சியும், கணக்கர் வேலையும்**

அப்படியே இருந்துகொண்டு ஆதரவா யேதுசெய்தார்
பார்த்தாரே சாஸ்திரியும் தூண்டிமுத்து முதலியாரைக்
கருத்துள்ள பிள்ளையிவன் படிக்கப்போட வேணுமென்று
காதிலே கடுக்கனிட்டுக் கழுத்திலே சரமணிந்து[20]
பள்ளிக் குடமதிலே படிக்கவைத்தார் சாஸ்திரியும்
அப்படியே முதலியாரும் அன்றுமுதல் படித்துவந்தார்
ஏழுநல்ல வயதுமுதல் பன்னிரண்டு வயதுமட்டும்
கணக்கெல்லாம் வந்துபோச்சு பார்த்தாரே முதலியாரும்
சாஸ்திரியார் கிட்டவந்து சகலகணக்கும் வந்துதென்றார்
அப்போது சாஸ்திரியும் ஆதரவாய் வரவழைத்து
வாரும்பிள்ளாய் முதலியாரே வார்த்தையொன்று சொல்லக்கேளும்
பண்ணக்கணக்கரைத்[21] தள்ளிவிட்டோம் பதிலிருந்து பார்க்கவேணும்
சகலகார்வாரும்[22] பார்க்கச்சொல்லித் தானுமங்கே வைத்துக்கொண்டார்
கார்வாரும் கணக்குகளும் பாத்திருக்கும் நாளையிலே
இப்படியே இருக்கும்போது ஏற்றதொரு முதலியாரும்
மாயசித்து காயசித்து[23] மந்திரமும் படிக்கவேணும்
மந்திரங்கள் தந்திரங்கள் மாரணவித்தைகள்[24] படிக்கவேணும்

20. சரம்-மணிவடம்.
21. பண்ணக்கணக்கர்-பண்ணைக்கணக்கர், நில, புல, வரவு, செலவுக் கணக்கெழுதுபவர்.
22. கார்வார்-மேற்பார்வை.
23 காயசித்து-சரீரத்தை நரை, திரை, மூப்பின்றி நெடுநாளிருக்கச் செய்யும் சித்தி.
24. மாரணவித்தை-ஒருவனை மந்திரத்தால் இறக்கச் செய்யும் வித்தை.

This is my native, in mutaliyār caste was I born,
The south-west of this town is where I live;
Orphaned I remain with none to care
And Tūṇṭimuttu Mutaliyār is my name".
Cāstiri moved took him in
And calling his wife he said:
"O come here my wife and listen to my word:
We have boys seven
This boy added they are eight,
And Pūraṇavalli included,
We are parents to children nine".
Cāstiri's wife took the boy in
And fed him well after oil bath.
She tended him as her own son.
Adorned with ear-rings and a chain of pearls round the neck
He was sent to school.
From age seven to twelve he'd his schooling
And proficient in arithmetic he came.
Cāstiri said his excellence knowing:
"We've sent out the accountant at our farm.
In his place one we need
Take charge of the farm O my boy!"
Duties assigned as he'd been performing,
Impelled he was by a thirst for knowledge,
And by sixteen he came proficient in arts and magic
*Māyacitti*[1] and *kāyacitti*[2], magic and witchcraft,
The one that other's death would secure,

1. The power that contains five kinds of evil or delusion namely, 1. *tamam* (darkness or obscurity of mind), 2. *māyai* (inherent evil), 3. *mōkam* (depravity), 4. *avittai* (ignorance, folly) and 5. *anirtam* (that which is without, or opposed to god).

2. The power of securing the body by magical medicaments against age and its effects.

வாடை[25]நல்ல பொடியுமுண்டும் மயக்குவித்தைப் பாடமுண்டும்
அம்மியை வரவழைப்பார் அஞ்ஞூற்றுக் காதவழி
ஒரலைப் பறக்கவைப்பார் ஒன்பது காதவழி
சுளகைப்[26] பறக்கவைப்பார் தொண்ணூற்றுக் காதவழி
மூலையிலே இருந்தபெண்ணை முத்தத்திலே[27] வரவழைப்பார்
அறையிலே இருந்தபெண்ணை அம்பலத்தில் வரவழைப்பார்
வாழுகிற பெண்களையும் வாழவொட் டாமல்செய்வார்
வாழாத பெண்களையும் வாழவைப்பார் ஒருநொடியில்
முன்பாத்துச்[28] சுங்குலுக்கு[29] மோகினியாள் சக்கரமாம்
பின்பாத்துச் சுங்குலுக்குப் பிரமதேவர் சக்கரமாம்
வலதுபாச் சுங்குலுக்கு[30] மகாதேவர் சக்கிரமாம்
இடதுபாச் சுங்குலுக்கு ஏமனுட சக்கிரமாம்
மந்திரத்திலே பெரியவராம் வாய்த்தபிள்ளை முதலியாரும்
வாலநல்ல பிராயத்திலே[31] வயதுபதினாறு வயசதிலே
மன்மதனைப் போலேயல்லோ இருக்குறாரே முதலியாரும்

## பூரணவல்லி பருவமடைதலும், தூண்டிமுத்துவின் ஆசையும்

அப்படியிருக்கிற நாளையிலே அந்தப்பூரணவல்லி யாச்சியுந்தான்
பருவநல்ல பருவமாகிப் பன்னிரண்டு வயதாச்சே
பன்னிரண்டு வயசதிலே பக்குபதி யானாளைய்யா
பூரணவல்லி யாச்சிப்பெண்ணும் புத்தியு மறிந்தாளே
அப்போது சாஸ்திரியும் மனமகிழ்ந்து ஏதுசெய்தார்
தன்மகளை வரவழைத்துத் தானேயவர் ஏதுசொல்வார்
சம்பங்கி எண்ணைகொண்டு தலைமுழுகித் தானம்[32]பண்ணிக்
கொழலிலே[33] அடைத்துவைத்த கோலவர்ணப் பட்டுடித்தி
நெற்றிக்கிச் சுட்டிகட்டி நிலவும் பிறையுமணிந்து
காதிலிட்ட தங்கத்தோடுங் கழுத்திலே சரப்பணியும்

25. வாடை-மணம்.
26. சுளகு-முறம்
27. முத்தம்-முற்றம்.
28. முன்பாத்து-முன்பாகத்து.
29. சுங்குல்-சுங்கல், ஆடையின் தொங்கவிட்டுக் கட்டும் மூலை.
30. வலதுபாச் சுங்குல்-வலது பாகச் சுங்கல்.
31. வாலநல்ல பிராயம்-தக்க வாலிபப்பருவம்.
32. தானம்-நீராடல், (ஸ்நானம் என்பது வழக்கில் ஸ்தானமாகிப் பின் தானமாகியது).
33. கொழல்-குழல், (மூங்கிலில் செய்தது)

Preparation of scented powders
And formulas that would send one swooning.
He could summon a grinder-stone five hundred *kātams* away,
He could send a mortar flying to nine *kātams*,
He could fling a winnowing fan to *kātams* ninety
He could bring to the courtyard the woman in a corner,
He could bring to the open the woman to a room confined,
He could in a second ruin a woman prospering
And get the one ruined to life prosperous.
*Mōhini* diagram[3] adorned the knot of his garment at the front,
*Brahma* diagram[4] adorned the knot at the back,
*Śiva* diagram adorned the knot in the right,
*Ema*[5] diagram adorned the knot in the left.
Mutaliyār came accomplished in arts of this kind
And he grew handsome too Maṉmataṉ[6] resembling.
Pūraṇavalli at twelve in blossom full
Grew to puberty and matured in mind too.
In joy profound the father was,
And saw his daughter given a *campaṅki* oil bath,
Had her dressed in silk delicate and choiceful,
Adorned her forehead with a crescent spot,
Got her ear-rings and necklace of gold,

---

3. A mystic diagram engraved on a copper or silver plate which is supposed to contain *mantras* by which to charm one of the opposite sex.
4. The diagram which would contain *mantras* by which to propitiate Brahma.
5. The diagram which would contain *mantras* by which to secure a person's death.
6. Kāma.

கையிலே கடையமிட்டுக் கருத்தநல்ல வளையலிட்டுப்
பாடகமுந் தண்டையிட்டுப் பாத சரமணிந்து[34]
பூரணவல்லி யாச்சியைத்தான் பூவாலே யலங்கரித்து
சாஸ்திரங்கள் செய்தார்கள் சடங்குகளுஞ் செய்தார்கள்
கனகத்தட்டி(ல்)[35] வைத்தார்களப் பூரணவல்லி யாச்சியைத்தான்
அப்படியே பூரணவல்லியரும் அவளிருக்கும் நாளையிலே
என்னஎன்ன வடிவுகொண்டு இருக்காளய்யா பூரணவல்லி
முன்னழகும் பின்னழகும் முகத்துநல்ல திருவழகும்
தேமல்நல்ல பிறையழகும் செந்தூரப் பொட்டழகும்
வாரிநல்ல தொளித்ததுபோல் மார்பெல்லாந் தேமலழகும்
அள்ளிநல்ல தொளித்ததுபோல் அஞ்சாறு தேமலழகும்
பல்லுநல்ல பணம்பெறுமே பல்காவி[36] சொல்பெறுமே
ஓலைப்பிள்ளை[37] யொப்பிதாம்போல் ஒருபாகத் தலைமுடியும்
வெள்ளதளிப்[38] பூப்போலே மேனியெல்லாம் பளபளப்பும்
செவ்வதளிப் பூபோலே தேகமெல்லாம் திருவழகும்
முன்னழகைப் பார்த்தவர்கள் மோகிப்பா ராயிரம்பேர்
பின்னழகைக் கண்டவர்கள் பேதலிப்பா ராயிரம்பேர்
தச்சன் கடைந்தாப்போல்-இவள்-தனத்தழகும் மார்பழகும்
மதுரைக்கல் தச்சனவன் வகுத்தானோ தனங்கள்தாமும்
மலையாளத்துத் தச்சனவன் வகுத்தானோ தனங்கள்தாமும்
செப்புக் கடைந்தாப்போல் சிமிழ்போலே தனங்கள்ரெண்டும்
தனத்தழகைக் கண்டவர்கள் தாமதிப்பார் கோடியுண்டு
மார்பழகைக் கண்டவர்கள் மயங்குவார் கோடியுண்டு
அப்படியே பூரணவல்லியரும் ஆண்டிருக்கிற நாளையிலே
தூண்டிமுத்து முதலியாருக்கும் பூரணவல்லி யாச்சிமேலே
ஆசையினா லாசையப்பா அவள்மேலே கண்ணோட்டம் போடலுற்றார்
ஆசைகொண்டு உறவாடி அவள்தனித்திருக்கும் நாளையிலே

**அண்ணன்மாரின் காசிப்பயணமும், தீச்சகுனமும்**

என்னயென்ன அளப்பெடுத்தார் ஏழுபேர்கள் அண்ணமாரும்

34. பாதசரம்-மகளிர் காலணிவகை.
35. கனகத்தட்டு-பொன்னாலாகிய தட்டு.
36. பல்காவி-தாம்பூலம் முதலியவற்றால் பல்லில் ஏறும் காவி நிறம்.
37. ஓலைப்பிள்ளை-ஓலையில் செய்த பிள்ளை, பொம்மை.
38. வெள்ளதளி-வெள்ளரளி.

Bracelets and ankle rings, arm-rings and footwear;
And in lovely flowers she was decked out.
Ceremonies and rituals marked the day
With Pūraṇavalli in a golden plate placed;
Loveliness incarnate did she grow:
Her elegance at the front and the back,
The comeliness of her face,
Her beauty spots crescent moon like,
The vermilion spot on her forehead,
The beauty spots scattered in plenty over her breast,
Her prized teeth with their brownish hue,
Her graceful hair plaited looking like an idol of palm leaves,
Her radiant face resembling the white *araḷi* flowers,
Her lustrous complexion resembling the red *araḷi* flowers.
Thousands there were
That were enchanted by her beauty at the front,
Thousands there were
That were undone by her posterior beauty
Her comely breasts
Looked like one of workmanship consummate;
Could they be the work of the stone-cutter from Maturai?
Could they be chiselled by one from Malayalam?
The shapely caskets of skilled hands they resembled
Men in millions there were
That stood still at the sight of her breasts,
Men in millions there were
That were at their sight undone as if by a spell.
Passion intense, uncontained
Grew in Tūṇṭimuttu for the lady
And he sought her hand to see it realized.
The brothers seven were in a deliberation seen:

அண்ணமாரே தம்பிமாரே ஆதரவாய்ச் சொல்லக்கேளீர்
நம்முடைய தங்கையரும் புத்தியறிந்து இருக்கலாச்சே
விருத்தாப்பியக்[39] காலமாச்சே கலியாணம் மூய்க்க[40]வேணும்
கலியாணஞ் செய்யணுமே - அவர்கள் - கைப்பிடித்துப் பார்க்கணுமே
மாலையிட்டுப் பார்க்கணுமே-அவளுக்கு-மங்கலியம் தரிக்கணுமே
நம்முடைய வங்குசத்தில்[41] மாப்பிள்ளையும் இங்கில்லையே
காசிதேசத்துக்குப் போகவேணும் மாப்பிள் ளைஅமத்தி வரவேணும்
என்றுசொல்லி ஏழுபேரும் அளப்புகளும்[42] பேசலுற்றார்
காசிக்கிப் போகவேணும் கடுந்தீர்த்த மாடவேணும்
மாப்பிள்ளையும் பேசிக்கொண்டு வரவேணும் இப்போதானும்
நான்வாரேன் நீவாரனென்று ஏழுபேரும் பிறப்பட்டார்கள்
அவலரிசி பொருவிளங்காய்[43] தண்ணீர்க்குடிப் பண்டங்களும்[44]
ரொக்கரோசினையு[45] மெடுத்துக்கொண்டு பிறப்பட்டார்கள் ஏழுபேரும்
தாய்தகப்பனையும் அனுப்பிக்கொண்டு தங்கையர்க்குப் புத்திசொல்லி
தூண்டிமுத்து முதலியாரைச் சீக்கிரமாய் வரவழைத்துத்
தங்கச்சியையும் தகப்பனையும் தானேபார்த்து இருக்கச்சொன்னார்
காசிக்கிப்போய் வாரோமென்று தானேவழி அனுப்பிக்கொண்டு
ஏழுபேரும் பிறப்பட்டார்கள் இணச்சுவடாய்[46] வாரபோதே
பிறப்படும்போ பிறப்படும்போ பூனைவந்து குறுக்கிடுமாம்
கரும்பூச்சை[47] குறுக்கிடுதே காகம்வந்து கட்டுதேடா
அந்தச்சகுனமும் பாராமல் ஏழுபேரும் போய்விட்டார்கள்.

**பூரணவல்லி கர்ப்பமும், கவலையும்**

பார்த்தாரே முதலியாரும் பரவினையாய்[48] வந்துதென்று
சுக்குப் பொடியைத்[49] தானெடுத்துத் தூத்துனாரே[50]அவள்மேலே

---

39. விருத்தாப்பியம்-முதுமை.
40. மூய்க்க-முடிக்க.
41. வங்குசம்-வம்சம்.
42. அளப்புகள்-பல செய்திகள் குறித்துப் பேசிக்கொண்டிருத்தல்.
43. பொருவிளங்காய்-பொரி விளங்காய், சிறு பயறு எனப்படும் பாசிப் பயிற்றை வறுத்துப் பொடி செய்து வெல்லப்பாகு கலந்து செய்யும் திண்பண்டம்,
44. தண்ணீர்க்குடிப்பண்டங்கள்-தாகந்தீர்க்கும் பண்டங்கள்.
45. ரொக்கரோசினை-பணம், பிற தேவையானவை.
46. இணச்சுவடாய்-இணைச்சுவடாய், வரிசையாய்.
47. கரும்பூச்சை-கருப்புப்பூனை.
48. பரவினையாய்-இயல்பாய். (பரன்வினையாய்-இறைவனின் செயலாய்?)
49. சுக்குப்பொடி-சொக்குப்பொடி. அதாவது மயக்கம் தரும் பொடி.
50. தூத்துனார்-தூவினார்.

"Our sister has come matured since
And aging are our parents too;
Get our sister married we must
And see her hand one with her husband's;
We must see her wear the wedding garland,
We must see her neck the wedding badge adorned.
But a groom fitting
None we have amongst our kin here
To Banares we must go and fix a groom.
Go to Banares we must at once
And fix a groom after a holy bath".
Ready were all the seven for the journey.
They took leave of their parents,
Tendered Pūraṇavalli a piece of advice,
Instructed Tūṇṭimuttu to attend on their parents and sister;
And they set out as if they were one
With *aval*[7], *poruviḷaṅkāi*[8] and things thirst allaying.
Leaving the house as they were
There came a black cat crossing their way,
And they found a crow flying across too.
They proceeded along ignoring these omens.
Tūṇṭimuttu found this an opportunity god-sent,
He saw her charmed into his possession dear

7. Unhusked rice steeped in water and then dried and bruised.
8. Delicious balls prepared by mixing the powdered green-gram with treacle.

மாயநல்ல பொடியால்தானும் மயக்குனாரே கன்னியரை
கைவசமாய்ப் போனாளிந்தக் கன்னியரும் பூரணவல்லியுந்தான்
மாப்பிள்ளையும் பெண்ணும்போலே வாழ்ந்திருந்து வாரார்கள்
அப்படியே இருக்கையிலே தரித்துதே கெர்ப்பமது
அதுதானே கெர்ப்பமாக அவள்வயத்தில் தரித்துதைய்யா
மாய[51]நல்ல கெர்ப்பமது மங்கையர்க்குத் தரித்துதேடா
அந்தநல்ல மாத்தையிலே[52] - அவளுக்கு - மாதவிலக்கம் வரவில்லையே
ஒருமாதம் இரண்டுமாதம் மூன்றுநாலே மாதம்சென்று
நாலதான மாத்தையிலே பூரணவல்லி ஆச்சிக்கித்தானே
விசாக்கோட்டி[53] வந்துபோச்சே - நமக்கு - வினைவந்து நேர்ந்துபோச்சே
இனியிருக்க லாகாதே - நமக்கு - இழுக்குவந்து நேர்ந்துபோச்சே
கழுத்தில்கயறைப் போடவேணுமென்று எண்ணிக்கொண்டு பூரணவல்லியாரும்
எண்ணாது எண்ணிக்கொண்டு ஏத்தபூரண வல்லியுந்தான்
ஒருநாளைத் தினமதிலே தூண்டிமுத்து முதலியாரும்
தனித்திருக்கும் வேளையிலே தானேயங்கே சொல்லலுற்றாள்
சண்டாள முதலியாரே - என்னைச் - சதிகேடு செய்தாயே
மாயநல்ல பொடியைத்தூவி மயக்குனாயே என்னையும்நீ
ஏழேழு தலைமுறைக்கும் இழுக்குவந்து நேர்ந்துபோச்சே
என்சோடிப் பெண்களெல்லாம் என்னையும்தான் நகைக்கலாச்சே
எண்ணாது எண்ணினார்கள் ஏழுபேர்கள் அண்ணமாரும்
-எனக்குக்- கலியாணஞ் செய்யவேணும் கைப்பிடித்துப் பார்க்கவேணும்
மாலையிட்டுப் பார்க்கவேணும் மங்கிலியம் தரிக்கவேணும்
எண்ணின எண்ணமெல்லாம் போச்சுதடா - நாங்கள் - இருந்ததுவும் போச்சுதடா
பிரமதேவன் என்தலையில் எழுதின கற்பினையோ[54]
தாயாருக்குந் தகப்பனார்க்குந் தனிவார்த்தை ஏதுசொல்வேன்
-இந்த- ஏழுபே ரண்ணமார்க்கும் -நான்-என்னமாய்ச் சொல்லப்போறேன்
என்னுடைய அண்ணமார்கள் ஏழுபேரும் வந்துவிட்டால்
எதிர்த்துநான் முழிக்கலாமோ இருக்கலாமோ பூமியிலே
பெற்ற அருமையென்ன பேரிட்ட நேர்த்தியென்ன
-என்னை-வளர்த்த அருமையென்ன வைத்திருந்த நேர்த்தியென்ன
குடியைக் கெடுத்தேனே கோத்திரத்தைச் சீரழித்தேன்

51. மாய-இறக்க.
52. மாத்தையிலே-மாசத்திலே.
53. விசாக்கோட்டி-கர்ப்பிணிக்கு வரும் மசக்கை.
54 கற்பினை-கற்பனை, கட்டளை.

Casting on her magical powders.
And they're living man and wife like,
Which in course found her conceived
A conception fatal as it would prove.
Her menstruation that month stopped.
Passed three months in succession quick
In month four she in distress reflected:
"Symptoms of pregnancy I do suffer,
A misfortune great has come into my life;
Can I remain alive after this disgrace?
Die I must with a rope round my neck!".
Finding Tūṇṭimuttu alone on a day,
Pūraṇavalli spoke in fury uncontained:
"O villainous Mutaliyār!
Disgrace unmitigated you've brought me,
You undid my senses with magical powders,
You've brought me ignominy thro' births unending,
I'm now a laughing stock amongst my equals;
Castles of love my brothers around me built:
To see me married and my hand one with my husband's.
To see me wear the wedding garland
And my neck the wedding badge adorned.
Their dreams have come to nought
And gone is our honour too!
Is it my fate Brahma ordained?
What could I say to my father and mother?
What could I say to my brothers seven?
Could I face my brothers when they return?
Could I remain alive on this earth?
How dear was I born!
Christened how nice!
Brought up with how much care!
Tended with how much concern!
Ruin to my family I've brought
And ruin to our lineage too!

பெண்பாவம் கொண்டாயே பொல்லாத முதலியாரே
என்னையுங் கொல்லுவார்கள் ஒன்னையுங் குத்துவார்கள்
-நான்-நாண்டுகொண்டு நின்றிடுவேன் நஞ்சைத்தின்னு செத்திடுவேன்
ஆத்துலே விழுந்திடுவேன்-நான்-அக்குளத்தில் விழுந்திடுவேன்
உன்னாலே நானுமிப்போ உயிரைவிடப் போறேன்காணும்
என்னுடைய பாவத்தைநீ ஏத்துக்கொள்ளு முதலியாரே
என்றுசொல்லிப் பூரணவல்லியும் ஏங்கி அழுகலுற்றாள்.

### தூண்டிமுத்து கூற்று

அப்போது முதலியாரும் அவளைப்பார்த்துச் சொல்லுவாராம்
வாடி பெண்ணே பூரணவல்லி மயங்காதே நீயுமிப்போ
-நான்-மந்திர வாதியடி-இப்போ-மாயச்சித்துக் காரனடி
இந்தநல்ல சொத்துகளும் இந்தநல்ல தாய்தகப்பன்
இந்தநல்ல அண்ணன்மார்கள் ஏழுபேரும் இப்போது
காசியிலே ஒன்னையுந்தான் கட்டியங்கே குடுத்துவிட்டால்
கூடலறுப்போமோ-பெண்ணே-கொண்டுமங்கே போவயோநீ
அதுபோலே எண்ணிக்கொண்டு அளப்புச்சொல்லக் கேளும்பெண்ணே
வாடிபெண்ணே நாமளுந்தாள் மலையாளத்துக்குப் போவோம்பெண்ணே
மலையாளத்து ராசாகிட்ட வரம்வேண்டிச் சேவுகமும்
மகராசனா இருக்கலாமே வாடிபெண்ணே நாமள்போவோம்
நீயுமே வாராவிட்டால் நானுமே போறேனடி
என்றுசொன்னாரே முதலியாரும் ஏத்தபூரண வல்லியுந்தான்

### பூரணவல்லி-தூண்டிமுத்து புறப்பாடு

நானுங்கூட வருவேனென்று -அவள்- நம்பிக்கை கேட்டுக்கொண்டாள்
என்னுயிரு உள்ளமட்டும்-உன்னை-இடையிலே விடுவதில்லை
என்றுசொல்லி ஆணையிட்டு ரெண்டுபேருஞ் சம்மதித்து
ஒருநாளைத் தினமதிலே கட்டிச்சாதம் கெட்டினாளே
ரொக்கரோசனை எடுத்துக்கொண்டாள் தங்கநகையளை
எடுத்துக்கொண்டாள்
பட்டுப்பட்டாவளி[55] எடுத்துக்கொண்டாள் சிமடுகளுங்[56] கட்டிக்கொண்டாள்
தாய்தகப்ப னறியாமல் தானுமங்கே பிறப்படுங்காண்
வெள்ளிக் கிழமையிலே மேலான நாளையிலே

55. பட்டுப்பட்டாவளி-பட்டுச்சேலை, பட்டினாலாகிய பிறதுணிவரிசை.
56. சிமடு-சுமடு, சுமை, சாமான்கள் கொண்ட முட்டை.

You've sinned against a woman O Mutaliyār the vile!
Killed I would be sure
And spared not you be too!
Die I would
Taking to hanging or poison applying,
Drowning in a river or in a pond
Lo! dying I'm for the sin you committed,
And carry you must the burden of this sin!"
Pūraṇavalli cried in pain and despair.
"Despair not Pūraṇavalli O my dear!
A magician I am and rooted in *siddis* too;
Married to one at Banares
At your parents' wish and brothers' will
Can you go there
Leaving me here and leaving this wealth too?
Think of that and listen to my words:
Come with me O my woman!
To Malayalam we'll go;
Seeking there a job in the royal court
We can live in peace and prosperity.
Refuse if you do,
I am going there alone!"
Pūraṇavalli her consent gave
Mutaliyār's trust soliciting.
He swore to have her life long unswerving.
Consent mutual thus secured,
Pūraṇavalli readied food for the journey;
Money and her gold ornaments,
Her silk attire and the like in baggage
She took in hand
And left her home on a Friday

சதிசாம வேளையிலே தானுமங்கே பிறப்படுங்காண்
தூண்டிமுத்து முதலியாரும் சுமடுகளு மெடுத்துக்கொண்டு
மந்திரயேட்டைப் பைய மடியிலே வைத்துக்கொண்டு
பூரணவல்லியை முன்னவிட்டுப் பிறப்பட்டாரே முதலியாரும்
காஞ்சிபுர நாட்டைவிட்டுக் கல்கரடும் பெருவழியும்
காண்டா வனங்கடந்து கடுசாக[57] வாரார்கள்
சென்னப்பட்டணப் பாதைகூடித் திருச்சினாப்பள்ளிப் பாதையாக
வைகையாத்துப் பாதைகூடி மதுரையிலே வந்திறங்கி
வைகையிலே தானம்பண்ணி மதுரைச்சொக்கரையுஞ் சேர்வைசெய்தார்[58]
சொக்கரையுஞ் சேர்வைசெய்தார் மீனாட்சியம்மனைச் சேர்வைசெய்தார்
அன்றிருந்து அவதரித்து அடுத்தநாள் காத்தாலே
காத்தாலே எழுந்திருந்து கடும்பயணம் வாரார்கள்
சீவலத்தூர்க்கு[59] வந்து திருப்பாற்கடல்[60] தானம்பண்ணி
மன்னாரைச் சேர்வைசெய்து நாச்சியாரம்மனையும் சேர்வைசெய்தார்
அன்றிருந்து அவதரித்து[61] அடுத்தநாள் காலத்தாலே
காத்தாலே எழுந்திருந்து கடும்பயணம் வாரார்கள்
சங்கரலிங்கத்தைத் சேர்வைசெய்து ஆவுடையம்மனைச் சேர்வைசெய்தார்
காத்தாலே எழுந்திருந்து கடும்பயண மானார்கள்
செங்கோட்டைப் புளியரையுஞ் சீக்கிரமாய்த் தான்கழித்து
ஆரியங்காப் பாதைகூடி அவர்களுமே வாரார்கள்
கல்கரடும் பெருவழியும் கடுத்தமுள்ள பாறைவழி
ஈரச்சோலை[62] வனமதுவுங் கூவச்சோலை[63] வனமதுவும்
நாங்குச்சோலை வனமதுவுங் கோங்குச்சோலை வனமதுவும்
மலைப்பளியர் குடியிருப்பும் மலைக்குறவர் குடியிருப்பும்
ஆரியங்கா அய்யருட அழகுசன்னதிப் பாதைவழி
மாம்பழத்தா ரைக்கழித்து மண்ணடிபகவதி வாசல்விட்டு
மொட்டைமேடு கொட்டாரம்-நல்ல-கொட்டாரக் கரையில்வந்து
கொட்டாரக்கரை ராசாவுட கோட்டையிலே வந்திறங்கி
செட்டியள் தெருவதிலே விடுதிகளுந் தானமத்தி

57. கடுசாக-விரைவாக.
58. சேர்வை செய்தார்-சேவித்தார், வணங்கினார்,
59. சீவலத்தூர்-சீவில்லிபுத்தூர், (ஸ்ரீவில்லிபுத்தூர்).
60. திருப்பாற்கடல்-ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோவில் குளத்தின் பெயர்.
61. அவதரித்து-தங்கி.
62. ஈரச்சோலை நிழல்தரும் குளிர்ச்சியான சோலை.
63. கூவச்சோலை-கூகைச்சோலை. (கூகைகள் குடியிருக்கும் அடர்த்தியான சோலை)

At midnight dark and ill-omened
Leaving her parents in the dark.
Baggage in hand and the book of magic in his waist
Tūṇṭimuttu walked behind.
Leaving Kāñcipuram
Swift they walked along a rugged path
Across a forest dark and deep;
Taking the Madras highway
They walked past Tiruccirāppaḷḷi.
Taking again the Vaikai road
They arrived at Maturai.
After a bath in the Vaikai river
They worshipped Cokkanātar and Mīṉāṭci.
Relaxing there at night,
They resumed their tiresome journey the next morning.
At Srīvilliputtūr a bath at Tiruppāṟkaṭal[9] they had
And worshipped Raṅkamaṉṉār and his consort.
Staying there at night,
They proceeded along the next morning
Offering worship to Caṅkaraliṅkam[10] and Āvuṭaiyammaṉ[11]
They walked past Ceṅkōṭṭai and Puḷiyarai
And they took the Āriyaṅkāvu road
A road long and rugged
That took them along
Groves and avenues pleasant of *nāṅku* and *kōṅku* trees,
The hamlets of tribes *paḷiyar* and *kuṟavar;*
Taking again the road to Āriyaṅkāvu Aiyar's temple,
They walked past Māmpaḷattūr and Maṇṇaṭi Pakavati temple
And arrived at the fort of Koṭṭārakkarai ruler
Situated on a mound greenery unseeing.
Fixing lodging in the street of the merchants,

9. A tank.
10. 11. A deity and his consort respectively.

விடுதிகளுந் தானமத்தி வீத்திருந்தார் ரெண்டுபேரும்
அப்படியே இருக்கையிலே அளப்பெடுத்தார் ரெண்டுபேரும்
பாப்பாத்தி வேசம்விட்டுச் செட்டிச்சி வடிவுகொண்டாள்
செட்டிச்சி உடைஉடுத்தி செட்டிச்சி தலைமுடித்து
செட்டிச்சி நகைபூட்டி செட்டிச்சி தாலிகட்டி
மாப்பிள்ளையும் பெண்ணும்போல வாழ்ந்திருக்கும் நாளையிலே

**அரண்மனை விஜயமும், சேவகப்பணியும்**

ஒருநாளைத் தினமதிலே தூண்டிமுத்து முதலியாரும்
ராசாவைக் காணவென்று இலுமிச்சம் பழமுங்கொண்டு
கொட்டாரக்கரை ராசாவுட கொலுமுகத்திலே வந்துநின்று
ராசாவுனட கையதிலே இலுமிச்சம்பழத்தைக் குடுத்தாரைய்யா
ராசாவும் வாங்கியங்கே இலுமிச்சம்பழத்தைக் கண்ணில்வைத்து
ஏறிட்டுப் பார்த்தாரே இவருனடய அழகுதன்னை
இப்படிக்கொத்த சேவுகனும் நம்முடைகிட்ட இல்லையென்று
வாரும்பிள்ளாய் தம்பியரே வந்தவகை சொல்லக்கேளும்
எந்தஊர் எந்ததேசம் எந்தச்சீமை எந்தநாடு
என்னசாதி என்னபிள்ளை நின்பேரென்ன என்றுகேட்டார்
வடக்கே வெகுதூரம் காஞ்சிபுர நாடெனக்கு
சாதியிலே முதலிநான் என்பேரு தூண்டிமுத்து
பஞ்சம்பிழைக்க வந்தேனானும் என்னைக் காப்பாத்த வேணுமென்றார்
ஒனக்கேத்த சேவுகமும் இப்போது ஆசரில்லை[64]
நம்முடைய கொலுமுகத்தில் காத்திரியும்[65] பிள்ளாநீர்
காத்திருந்தா யானாக்கால் -ஒனக்குக்- கனத்தசேவுகந்[66] தாரோமென்றார்
அப்படியே முதலியாருங் காத்திருக்கும் நாளையிலே

**அண்ணன்மார் மீளுகையும், அறிந்த செய்திகளும்**

காசிக்குப் போனவர்கள் கடுந்தீத்த மாடிக்கொண்டு
தங்கையர்க்கு மாப்பிள்ளையுந் தானமத்தி வந்தார்கள்
காஞ்சிபுர நாடதிலே தம்முடைய அக்கிராரத்திலே
தம்முனடய அக்கிராரத்திலே தாம்வந்து பார்த்தவுடன்
தாயாரும் தகப்பனாரும் தங்கையர்மேல் ஏக்கமாக

64. ஆசரில்லை-கைவசமில்லை.
65. காத்திரியும்-காத்திருப்பாயாக,
66. கனத்த சேவுகம்-பெரிய வேலை.

They discussed their course for the days ahead.
Pūraṇavalli gave up her brahmin garb
And put on the dress, combed her hair
Wore ornaments and tied the wedding badge
After the fashion of the merchant tribe,
And they lived like a couple newly wed.
On a day Tūṇṭimuttu went to the royal court
And a lemon handed to the ruler.
Holding the lemon at his eyes
The ruler had a look at the man's comely form
And found him a possession prized for the royal service.
He spoke to the stranger:
"Tell me O young man!
Your native place, province and country
Your caste and your name,
And tell me what for you've come".
"Kāñcipuram is my native, far off in the north
I'm Tūṇṭimuttu of mutaliyār caste
I've come here seeking livelihood,
And of your patronage I beg".
Tūṇṭimuttu replied to find the ruler respond:
"A position meet we don't have now,
Waiting, you will get a fitting job".
Tūṇṭimuttu had been living there
Royal favour awaiting.
The brothers at Banares had a holy bath
And a groom for their sister fixed.
Back in Kāñcipuram,
The brothers found their parents downcast
The thought of their daughter weighing them down,

சாப்பாடும் இல்லாமல் அவர்கள் சாகக் கிடக்காரே
ஏழுமக்களைக் கண்டவுடன் இவர்களுக்குத் தெளிச்சல்வந்து
மக்களைக் கட்டிக்கொண்டு -அவர்கள்- வாய்விட்டு அழுதார்கள்
சண்டாள முதலியவன் சதிகேடு செய்துபோட்டான்
சிறைகடத்திப் போய்விட்டானே -அவன்- சிந்தவத்தம்[67] பண்ணினானே
தங்கையரைச் சிறைகடத்தி -அவன்- தானுமங்கே போய்விட்டானே

## தாய், தந்தை வஞ்சினமுரைத்தல்-துஞ்சுதல்

சிறைகடத்திப் போனவனை -நீங்கள்- சீக்கிரமாய்ப் போய்ப்பிடித்து
எந்தச்சீமைக்கிப் போனாலும் -அவன்- எந்தத்தேசத்துக்குப் போனாலும்
ஏழுபேரும் ஒன்றுபோல -நீங்கள்- இணைசுவடா மாண்டாலும்
அந்தத்தூண்டிமுத்து முதலியைத்தான் அவனைக் கைப்பிடியாய்த் தான்பிடித்துத்
தூண்டியிலே போடுங்கடா -அவனை- என்றுசொல்லி ஆணையிட்டார்
சொல்லிவாய் மூடுமுன்னே -அவர்கள்- சொக்கலோகஞ்[68] சேர்ந்தார்கள்
தாயுந் தகப்பனுந்தான் -அவர்கள்- தானேமாண்டு போனவுடன்
ஏழுபேர் மக்களுந்தான் -அவர்களை- எடுத்தடக்கஞ் செய்துபோட்டுச்
சாத்திரஞ் சடங்குகளுந் தானுமங்கே முடித்துப்போட்டு
ஏழுபேர் சாஸ்திரியும் -அவர்கள்- என்னஅளப்புகள் பேசினார்கள்
தாயாருந் தகப்பனாரும் -அவர்கள்- தான்சொன்ன வாக்கதுபோல்
தூண்டிமுத்து முதலியைத்தான் பிடித்துத் தூண்டிலிலே போடணுமே
என்றுசொல்லி ஏழுபேரும் இணைச்சுவடாய்ப் பிறப்பட்டார்கள்
எந்தச்சீமைக்கிப் போவோம்நாமள் -இப்பம்- எந்தத்தேசம் போவோம்
எந்தநாட்டுக்குப் போவோம்-இப்பம்- எந்தமுகத்துக்குப் போவோநாமள்
என்றுசொல்லி ஏழுபேரும்-அவர்கள்-என்ன- சோதினை பாக்கார்கள்
பரலெண்ணிப்[69] பாத்தார்கள் மலர்கள் சோதினைகள் பாத்தார்கள்
சீட்டுப்போட்டுப் பார்த்தார்கள்-அங்கே- தெக்கைமுகம்[70] போகச்சொல்லித்
தெக்குமுகம் போகச்சொல்லி-அங்கே-சீட்டுவிழுந்ததைப் பார்த்தார்கள்
தெக்கே முகமாக ஏழுபேரும் பிறப்பட்டார்கள்
காஞ்சிபுர நாடும்விட்டு -அவர்கள்- கடுநடையாய் வாரார்கள்
கல்கரடும் பெருவழியும் -அங்கே- கடிய வனாந்திரமும்
சென்னப்பட்டணப் பாதைகூடி -அவர்கள்- திருச்சினாப்பள்ளி வழியாக

67. சிந்தவத்தம்-சிந்தை அவத்தம், மனத் துன்பம்.
68. சொக்கலோகம்-சொர்க்க லோகம்.
69. பரல்-நற்பலனைக் கணக்கிடும் கல், கடற்சோழி முதலியன.
70. தெக்கைமுகம்-தெற்குத்திசை.

Food to themselves denying
They looked as if on way to death.
The sons' arrival their gloom clearing
The parents started wailing holding them in embrace:
"The treacherous Mutali has brought us infamy,
He's abducted our daughter leaving us in anguish deep.
Abducted is your sister O our sons!
Go swift all the seven of you as one
Get that Mutali wherever he is
Get him unfailing even if it be at your lives' cost
And see him hanged!".
And on journey Heavenward close they left
Before they could. their lips
The sons cremated the parents
The rites and rituals duly performing.
The Cāstiris seven together sat
To have their plan of revenge shaped,
To get the Mutali sent to death
And to see their parents' wish fulfilled.
They counted the beads, shuffled the flowers and the cards
To fix the direction right for the search.
The card chosen directing them southward,
The brothers set out all as one.
Leaving Kāñcipuram
They journeyed along a jungle tract harsh and rugged.
Taking then the Madras highway
They walked past Tiruccirāppaḷḷi,

வைகையாத்துப் பாதைகூடி -அவர்கள்- மதுரையறு காதம்[71]விட்டு
சீவலத்தூரு வழியாக -அவர்கள்- சீக்கிரமாய் வாரார்கள்
சங்கரநயினார் கோவில்வழி தானுமங்கே வாரார்கள்
செங்கோட்டை புளியரையுஞ் சீக்கிரமாய்த் தான்கழித்து
ஆரியங்காப் பாதைவழி -இப்பம்- அவர்களுமே வாரார்கள்
மாம்பழத்தூரைக்கழித்து-அந்த- மண்ணடிபகவதி வாசல்வழி
மொட்டைமேடு கொட்டாரமந்தக் கொட்டாரக் கரையில்வந்து
வட்டப்பிலா[72] நிணலதுலே[73] -அங்கே- வந்திருந்தார் ஏழுபேரும்,

**தண்ணீர்த் தாகமும், தங்கையைக் காணலும்**

தண்ணீர் தவிக்குதடா தம்பியரே இளையவனே
தாகத்துக்குத் தண்ணீரு தானேகொண்டு வாரும்பிள்ளாய்
என்றுசொல்லி அனுப்பினார்கள் ஏத்ததொரு தம்பிதனை
அப்போது தம்பியரும் -அவன்- செம்பையு மெடுத்துக்கொண்டு
செம்பையுமெடுத்துக் கொண்டும் -அவன்- சிலங்கோர[74] வாரபோது
பூரணவல்லி யாச்சியுந்தான் பிறப்பட்டாள் தண்ணிக்கிதான்
செப்புக் குடமெடுத்துச் சிலங்கோர வாராளே
முக்காடுந் தலையுமாக-அவள்- முகத்தைக் கவிழ்த்துக்கொண்டு
செட்டிச்சி போலையல்லோ சிலங்கோர வாராளே
செம்மையாள் வாரதைக் கண்டானே சாஸ்திரியும்
இந்தநல்ல சேலையும்தான் இந்தத்தேசத்தில் கிடையாதே
நம்முடைய பெட்டியிலே வைத்திருந்த சேலையிது
நம்முடைய உடப்பிறந்தாளடா என்றுசொல்லிச் சாஸ்திரியும்
ஓட்டத்திலே ஓடியல்லோ உற்றமொழி சொல்லலுற்றான்
அண்ணமாரே அண்ணமாரே நான்தங்கையரைக் கண்டுவந்தேன்
எழுந்திருந்தார் ஏழுபேரும் ஏத்தபிள்ளை சாஸ்திரிகள்
பூரண வல்லியோடே பின்துடந்து வாரபோது

**தூண்டிமுத்து - பூரணவல்லி - பிடிபடல்**

கொண்டுமவள் சிலமதைத்தான் குடுசைக்குள்ளே வைத்தல்லவோ
வைத்தல்லவோ இருந்தபோது வளைந்தார்கள் குடுசையைத்தான்

71. அறுகாதம்-ஆறுகாதம், சுமார் அறுபது மைல்.
72. வட்டப்பிலா-வட்டப்பலா.
73. நிணல்-நிழல்
74. சிலங்கோர-தண்ணீர் எடுக்க.

Taking the Vaikai road
They arrived at Cīvillipputtūr six *kātams* off Maturai.
Proceeding along
Caṅkaranainār koil, Ceṅkōṭṭai and Puḷiyarai
They entered the Āriyaṅkāvu road.
Walking past Māmpaḷattūr
They took the Maṇṇaṭi Pakavati temple path
Arriving at Koṭṭārakkarai on a hillock lying
They sat down relaxing under a jackfruit tree.
The journey long finding their tongues parched
They sent the youngest to bring them water.
Going as he was with a vessel in hand
There came Pūraṇavalli then carrying a pot on head.
Looking like a woman of the merchant caste,
With her head veiled hanging down
She came there to take water.
Seeing the woman virtuous, the Cāstiri reflected:
"Alien to this place is a saree of this kind,
One it is that we had with us
Our sister she is sure".
He hurried back to his brothers and declared:
"Our sister I saw O my brothers!"
The brothers set out all as one,
Walked on following Pūraṇavalli
And saw her enter a hut;
As they stood surrounding,

அப்போது முதலியாரும் அவருமங்கே வருகையிலே
சாப்பிட்டு இளைப்பாறித் தானுமங்கே இருக்கையிலே
கண்தூங்கும் வேளையிலே -இந்தக்-கட்டழகர் ஏழுபேரும்
தூக்கத்தோடே தூக்கமாக -இந்தத்- தூண்டிமுத்து முதலியாரைக்
கைப்பிடியாய்ப் பிடித்தல்லவோ -இந்தத்- தூண்டிமுத்து முதலியாரைப்
பின்கட்டாக் கட்டியல்லோ பேறுபெற்ற முதலியாரை
வன்கட்டாய்க் கட்டியங்கே -அவரை- வாசலிலே கொண்டுவந்தார்
கைப்பிடியாத் தான்பிடித்துக் கட்டழகர் ஏழுபேரும்
தங்கையரை முன்னேவிட்டுத் தானுமங்கே கொண்டுவந்தார்
கொட்டாரக்கரை ராசாமுன்னே கட்டழகர் ஏழுபேரும்.

**அண்ணன்மார் அரசனிடம் முறையிடல்**

ஏறிட்டும் பார்த்தாரே இன்பமுள்ள கொலுமுகத்தில்
நம்முடைய வாசலிலே-இவன்- காத்திருந்த சேவுகனே
இந்தக்கோலம் ஆனதென்ன என்றுசொல்லி ராசாவுந்தான்
ஏதுகாரணம் என்றுகேட்டார் ஏழுபேருஞ் சொல்வார்கள்
வடக்கே வெகுதூரம் வாழுநாடு காஞ்சிபுரம்
ராமசாத்திரியார் மக்கள்நாங்கள் இவளெங்களுடன் பிறந்தவள்தான்
இவன்எங்களுட வீட்டிலே ஏழுவயதிலே வந்துசேர்ந்தான்
பெத்தபிள்ளைபோல் வைத்திருந்தோம் பேறுபெற்ற முதலியைத்தான்
பண்ணைக்கணக்கைப் பார்க்கவே வைத்திருந்தோ மய்யா
அப்படியிருக்கும் நாளையிலே ஆனதொரு முதலியும்தான்
கலியாணம் செய்யவென்று -நாங்கள்- காசிக்கிப் போயிருந்தோம்
மாப்பிள்ளையும் அமத்திக்கொண்டு -நாங்கள்- வாரதுக்கு முன்னாகச்
சிறைகடத்திக் கொண்டுவந்தான் சண்டாள முதலியும்தான்
எங்கள்- குலத்துக்கெல்லாம் இழுக்குவைத்துக் கொண்டானே சண்டாளன்
இந்தத் தூண்டிமுத்து முதலியைத்தான் இப்பம் தூண்டிலிலே போடணுமே
உத்திரவுதர வேணுமென்று கேட்டார்கள் சாஸ்திரிமார்கள்.

**வேந்தனின் வேண்டுதல்**

அப்போது சொல்லுவாரந்தக் கொட்டாரக்கரை ராசாவும்தான்
வாருங்கோ சாஸ்திரியாள் -நான்-சொன்னவார்த்தை கேளும்பிள்ளாய்
எனக்குஒரு மன்னிப்புதான் -நான்-இப்போது கேட்குறேன்
இவனையிப்பங் கொன்றுபோட்டால் -வந்த-இழுக்குகளும் போய்விடுமோ
இவன்கொண்டு வந்தபெண்ணை -நாமள்- இவனுக்கு விட்டிடுவோம்

Mutaliyār came into his hut
He had the food, relaxed and fell asleep.
The brothers caught him napping
And tied his hands to his back.
Bringing him out
And they took him to the Koṭṭārakkarai chief
With their sister following.
The ruler recognizing Tūṇṭimuttu
Wondered at his present state,
And of the case inquired
To find the brothers reply:
"Native of Kāñcipuram we're far off in the north,
Rāmacāstiri is our father
And this woman our sister;
This man at seven came to our house
And we tended him as of our own
Leaving the accounts of our farm to his charge.
And to Banares we'd gone to find a groom to our sister,
Before we could return fixing the groom,
This Mutali treacherous
Has come here abducting our sister;
A disgrace to our caste it is!
We stand before you O king
For your consent to get him hanged".
Came the ruler's remarks studied:
"Listen to my word O *Cāstiris*!
A favour from you I do seek,
Could the dishonour be undone
When you see this man killed?
We shall let this woman he's abducted go with him,

உங்களுக்குக் கலியாணம் உண்மையாய்ச் செய்துவைப்போம்
ஏழுபேர்க்கு ஏழூஊரு-நாம்- இப்போது விட்டுத்தாரோம்
வாசல் பிரதானியாக[75] இப்பம் ஏழுபேரும் இரிங்களிங்கே[76]
அவனையிப்பம் விட்டிடுங்கள்-என்று- ஆதரவாய்க் கேட்டாரே
அப்போது சொல்வார்கள்-அந்த- சாஸ்திரிமார் ஏழுபேரும்
இவனுக்கு மன்னிப்புதான் -நீரும்- இப்போது கேட்டாக்கால்
வாளையூன்றி நாங்களுந்தான் -இப்பம்- வாளுலே பாய்ந்திடுவோம்
என்றுசொல்லிச் சாஸ்திரிமார் -அங்கே- ஏழுபேரும் சொன்னவுடன்
பாத்தாரே ராசாவும் -இந்தப்- பழியேழும் ஏற்கலாமா
சூத்திரன்[77] ஒருத்தனுக்கா -நாமள்- சுமக்கலாமா ஏழுபழி
வாருங்கள் சாஸ்திரியாள் -ஒங்கள்- மனம்போலே இவனைத்தானும்
தூண்டிலே போடுங்கள் -இவனைத்- துணுக்காக வெட்டுங்கள்
என்றுசொல்லி உத்தரவு -ராசா- ஏழுபேர்க்குக் குடுத்துவிட்டார்.

**செய்த அலங்கோலங்களும், கண்டவர் அழுகையும்**

அப்போது சாஸ்திரிமார் அந்தத் தூண்டிமுத்து முதலியாரை
வெளியிலே கொண்டுவந்து -அவரை- வேசங்கள் போட்டார்கள்
பின்கட்டா மாறியாக-அவரை-வன்கட்டாய்க் கட்டினார்கள்
மொழியோடே[78] மொழியெடுத்து-அவரை-மூட்டிறுகக் கட்டினார்கள்
கரும்புள்ளியுஞ் செம்புள்ளியும்-அவருக்குக்-கன்னமெல்லாங் குத்துனார்கள்
எருக்கலை மாலையைத்தான் அவர்கழுத்தில் போட்டார்கள்
உச்சிக்கொண்டை தான்முடித்து -அய்யோ- ஊர்வளையம் வாரார்கள்
வெட்டவிடக் கொட்டுக்கொட்டி-அங்கே-வீதிவலம் வாரார்கள்
கடையில் எடுப்பெடுத்து -அவருக்குக்- கண்டபண்டந் தான்குடுத்தார்
காண வருவாரும்-அவரைக்-கண்டு அழுவாரும்
கூட்டமாய் வந்தவர்கள்-அங்கே-கூடி அழுவாரும்
பார்க்கவந்த பேர்களெல்லாம் -அய்யோ- பாதகமே என்பார்கள்
கூட்டத்தோடே கூட்டமாக -அவரைக்- கொண்டு வந்தார்கள்.

**தூண்டி முத்துவைத் தூண்டியிலிடல்**

மண்ணடிப் பகவதியம்மன் வாசலிலே கொண்டுவந்து
வட்டப்பிலா மரத்தில்-அவரை- வாய்த்ததொரு தூண்டிலிலே

75. வாசல் பிரதானி-வாயில் தலைவன்.
76. இரிங்கள்-இருங்கள் (மலையாள வழக்கு).
77. சூத்திரன்-நான்காம் வருணத்தோன், நால் வருணத்தாருள் தாழ்ந்தவன்.
78. மொழி-மூட்டு (Joint).

I'll see you all married to woman of your caste,
Villages seven one to each you will get
Along with the position of chief guard at our gate,
And you can let him go free".
To the ruler's reasoning the *Cāstiris* replied:
"We'd fix lances to the ground
And kill ourselves jumping on them
If you plead to see this man spared".
Firm as the *Cāstiris* were,
The king went deliberating:
"Should I bear the sin of causing these seven men die?
Should I bear it to see a *sudra* live?
You can see him hanged O *Cāstiris*!
You can cut him to pieces,
And get your disgrace avenged".
Royal decree in hand
The brothers brought Tūṇṭimuttu out
Saw him shame-faced thro' attire and paintings meet,
Got his hands tied close to the back
And the cord tightened firm over his joints:
Spots black and red marked all over his cheeks;
They saw him wear a garland of *erukkam* flowers,[12]
Got his hair knotted at the centre of his head
And took him in procession along the streets
Trumpeting their intention vengeful aloud;
Given he was eatables from the shops along.
Those seeing him wept at his fate,
Those in the crowd grieved too.
The onlookers along cried out their woe,
And taken he was in the procession of all.
Brought to the presence of Maṇṇaṭi Pakavati
Placed he was over a circular jacktree plank

12. The flowers of a coarse, milky shrub associated with dishonour.

தூண்டிலிலே போட்டார்கள் - அந்தத் - தூண்டிமுத்து முதலியாரை
மண்டையிலே பட்டதூண்டில்-அவர்க்கு-மறுபிறத்தில் பாயுதப்பா
தொண்டையிலே பட்டதூண்டில்-அவரைத்-துளைக்குதே மறுபிறத்தில்
இந்தப் பாதகத்தைப் பார்த்தார்கள்-அங்கே-பார்பதியுஞ் சிவனாரும்
தூண்டிமுத்து முதலியாருக்கு-அவர்கள்-சொன்ன வரங்குடுத்தார்
கொல்லவரம் வெல்லவரம் குடுக்கவரம் அழிக்கவரம்
கோடிவரத்தைத் தான்அவர்க்குக் கொடுத்தார் சிவனாரும்.

**பூரணவல்லி புலம்பல்**

தூண்டிமுத்து முதலியாரை-அவர்கள்-தூண்டிலிலே போட்டுவிட்டு
தன்னுடைய தங்கையரைத் தானுமே வெட்டுதற்கு
வடக்கே முகமாக-அவளை-வைத்தார்கள் அண்ணமார்கள்
அப்போது பூரணவல்லி - அவள் - அழுதாளே மனங்கலங்கி
பாவிப் பிரமாயென்னைப் படைத்தானே பூமியிலே
வெட்டுப்பட என்தலையில்-பிரமன்-விதித்தானோ முன்னாளில்
என்னைப்போல் நடந்தபெண்கள் இருக்கலையோ வையகத்தில்
வையகத்தில் இல்லாத -நானும்- வங்கொடுமை[79] செய்தேனோ
என்னைப்பெத்த சண்டாளி -இந்தப்-பிறகோலங் காணவென்று
இந்தவிதி வரவேணுமென்று எத்தினைநாள் தவமிருந்தேன்
என்றுசொல்லி அழுதாளே-அவள்-ஏத்ததொரு தங்கையரும்
மாரளவு கண்ணீரு வடியவிட்டுத் தானழுதாள்.

**அண்ணன்மார் அரற்றல்**

அப்போது அண்ணமார்கள் அவளைக்கட்டித் தானழுதார்
பெற்ற அருமையென்ன -உனக்குப்- பேரிட்ட நேத்தி[80]யென்ன
வளத்த அருமையென்ன -உன்னை- வைத்திருந்த நேத்தியென்ன
குடியைக் கெடுத்தாயே-இப்பம்-கோத்திரத்தைச் சீரழித்தாய்
எண்ணினோங் கோடிநாங்கள் இருந்தோம் சந்தோசமாக
எண்ணமெல்லாம் பொய்யாச்சு -நாங்கள்- இருந்ததெல்லாம் போயாச்சு
ஏழுபேர்க்கு இளையவன்தான் இன்பமுடன் வெட்டச்சொன்னான்
கையிலே வாளெடுத்தான் கலங்காமல் இளையவன்தான்

79 வங்கொடுமை-வன்கொடுமை, பெரும் பாதகம்.
80 நேத்தி-நேர்த்தி, சிறப்பு.

And sent to death horrid.
Alas! the hook struck at the head went piercing to the other side,
And the hook struck at the throat went to the other side.
Pārvati and Civaṉ witness to this crime
Granted Tūṇṭimuttu the boons he sought:
Boons to kill and to conquer,
Boons to bless and to curse
And boons of this kind infinite.
Tūṇṭimuttu Mutaliyār done to death,
They made Pūraṇavalli stand with her face to the right
Readying themselves to kill her too.
She cried out then in anguish deep:
"O cursed be the Brahman
That brought me on this earth!
Did He ordain in my births preceding
To see my head cut off this way?
Aren't there women on this earth
That have taken to a course of this kind?
Have I committed a crime unknown to this world?
Cursed be my mother
That brought me on this world to meet this fate!"
Wailed Pūraṇavalli tears rolling down to her breast,
Moaned the brothers too holding her in embrace:
"Born how dear!
Christened how nice!
Brought up with how much care!
Tended with how much concern!
Infamy to the family you've brought
And disgrace to our tribe too!
We dreamed of things infinite
And lived in joy unlimited;
Gone are they all
And gone too is the meaning of our living!"
The youngest urging them to put her to death,
Readied himself unruffled a sword in hand;

வெட்டுதற்கு மசங்குறானே[81] வரம்பெற்ற மகளைத்தானும்
ஓங்கினானே அருவாளைத்தான் உச்சியிலே தான்விழுந்திது

**குறுக்குளாஞ்சி தோற்றமும் செயலும்**

உச்சியிலே அருவாள்விழக் குறுக்குவழியாக வெடித்துதடே
என்னயென்ன வடிவுகொண்டு -அது-இப்போது குதித்துதைய்யா
பச்சுப்பச்சுத்[82] திருமுகமும் பகளம்போலே[83] பல்லொளிவும்
சூடுபோலே[84] தலையழகும் சுருணை[85]போலே முடியழகும்
தலையிலே குல்லாவுந் தாமரைக்காய் மணியழகும்
பொச்சரிகைத்[86] தலப்பாவும்-அங்கே-பொன்னாலே பூணூலும்
பொன்னாலே பூணூலும் பொன்பதித்த தாவடமும்
காங்குகச்சைச் சல்லடமும்[87] கையிலே வல்லயமும்[88]
வந்து குதித்துதப்பா-அங்கே-வாய்த்ததோளிலே வல்லயமும்
போர்மொட்டைக் குறுக்குளாஞ்சி பொல்லாத தேவதையும்
ஏழுபேர் சாஸ்திரியை எதிர்கொண்டு குத்திப்போட்டுப்
பார்க்கவந்த படைகளையெல்லாம்-அது- பாய்ந்துமங்கே கொல்லுதைய்யோ
போறபேரை வாரபேரைப் புடதி[89]யடியாய் அடிக்குதைய்யோ
வாரபேரைப் போறபேரை வலியப்பத்தி இழுக்குதைய்யோ
பாலிகளைச்[90] சூலிகளைப்[91] பச்சப்புள்ளைத் தாச்சிகளைக்[92]
கோபுரத்தை இடிக்குதப்பா கொற்றளத்தைத்[93] தகக்குதப்பா
கோட்டையை இடிக்குதப்பா கோபுரத்தைச் சாய்க்குதப்பா
கொட்டாரக்கரை ராசாவுட கோவிற்காலைப்[94] பிடுங்குதப்பா
ஆனைப்பந்தியைக்[95] கொல்லுதப்பா -அங்கே- குதிரைப்பந்தியைக் கொல்லுதப்பா

---

81. மசங்குறான்-மயங்குகிறான்.
82. பச்சுப் பச்சு-பசுமையான.
83. பகளம்போலே-பவளம் போன்று.
84. சூடு போலே-அரிக்கட்டு போல.
85. சுருணை-சுருள், சுருட்டி வைத்த பொருள்.
86. பொச்சரிகை-பொற்சரிகை.
87. சல்லடம்-இடுப்பினின்று அடித்தொடைவரை தரிக்கும் காற்சட்டை,
88. வல்லயம்-ஈட்டிவகை.
89. புடதி-பிடரி,
90. பாலிகள்-சிறுமிகள்.
91. சூலிகள்-சூல் கொண்ட மகளிர்.
92. பச்சப் புள்ளைத் தாச்சிகள்-இளங்குழவிகளை உடைய மகளிர்.
93. கொற்றளம்-கொத்தளம்
94. கோவிற்கால் - அரண்மனைத் தூண் (கோ - இல் - அரசன் வசிக்கும் இல்லம்).
95 ஆனைப் பந்தி - ஆனை வரிசை, ஆனைக் கூட்டம்.

He fumbled a little
Finding her the one dearly loved;
He then raised the weapon and struck it on her head,
And jumped out Kuṟukkulāñci her bowels breaking
Taking to forms various a stir this deity created;
The face soft and comely, of complexion green,
The teeth of coral like shine,
The hair lock coiled handsome resembling grain stalks bundled,
A cap on the head,
Adorning the neck was a chain of lotus pericarp,
The head-dress of golden border,
The holy golden thread,
The neck ornament gold-studded,
The lower garment tucked up
A lance in hand and one over the shoulders too.
Adorned thus there came Kuṟukkulāñci fierce and destructive.
Straight he went
Stabbed the seven Cāstiri brothers to death,
Went about destroying the soldiers around,
Killed the bystanders and onlookers;
Kuṟukkulāñci spared not those too that minded their way
Bringing them to death by means violent.
(Spared were) [13] female children, expectant mothers and women with infants,
Pulled down were temples and forts,
Ruin visited the palace of the ruler too,
The herds of elephants and horses met their doom,

---

13. Not found in the original text

ராணுவத்தைக் கொல்லுதப்பா-அந்தப்-போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ
கொட்டாரக்கரை ஊரையெல்லாம்-அங்கே-கொளுத்துதப்பா தீயைத்தானும்
மாட்டெலும்பு தேங்காமட்டை-திரட்டி-வாரி எறியுதப்பா
ஆனைபோலே வடிவெடுத்து அழிக்குதப்பா பயிரையெல்லாம்
பன்னிபோலே வடிவெடுத்து-அது-பயிரையெல்லாம் அழிக்குதப்பா
வண்ட[96] நல்ல துலுக்கனைப்போல் வந்துவட்டம் போடுதப்பா.

**அரசன், நாட்டார் ஆலோசனை**

பார்த்தாரே ராசாவும்-அந்த-நாட்டாரும் கூடியங்கே
என்னசெய்வோம் என்றுசொல்லி -அப்போ- இடஞ்சல் படும்போது
மந்திர வாதியைத்தான் வரவழைக்க வேணுமென்றார்
அப்போது ஊராரும் அவர்களுமே தாங்கூடி
காளிநல்ல பெரும்புலையன் கடுத்தமந்திர வாதியவன்
காளியுட பேருசொன்னால் காளி கதவடைப்பாள்
காளி கதவடைப்பாள் கண்டமுனி தெண்டனிடும்
அவனை அழையுமென்றார் -ஊராரும்- அன்னேர வேளையிலே
ஆளோடிப் போயுமங்கே அவனைக்கூட்டி வந்தார்கள்
வந்துகண்டான் பெரும்புலையன் வாய்த்ததொரு ராசாவை
அப்போது ராசாவும் அவனைப்பார்த்துச் சொல்லுவாராம்
வாரும்பிள்ளாய் பெரும்புலையா வாய்த்ததொரு மந்திரவாதி
இந்தநல் அதிசெயத்தை இப்போது பாரும்பிள்ளாய்
என்றுமங்கே சொன்னவுடன் ஏத்ததொரு பெரும்புலையன்
திருநீற்று மந்திரத்தைச் செபித்துப் பார்த்தான் அப்போது
அப்போது தோணுதப்பா போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ
போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ பொல்லாத தெய்வமது
சொன்னானே பெரும்புலையன் துஷ்டநல்ல தெய்வமென்று
இந்தநல்ல ஊரைத்தானும் இப்போது அழித்துவிடும்
புடித்தடைக்க வேணும் பூமிதானம்[97] பண்ணவேணும்
என்றுமங்கே சொன்னானே ஏத்ததொரு பெரும்புலையன்
அப்போது ராசாவும் அப்படியே செய்யச்சொன்னார்

96 வண்ட - தீய.
97. பூமி தானம் - பூமிக்குத்தானம் (அர்ப்பணம்) செய்தல், பூமியுள் புதைத்தல்.

The royal army was shown the way to extinction;
The deity wrathful set the town on fire,
Flung bones of cows and cocoanut husks
And destroyed the crops assuming the forms of elephant and hog.
Hunger unsatiated he went on thus
Like a Mohammedan of evil intent.
Distressed were the king and his subjects
Who on course to relief deliberated.
Came then from the people a suggestion:
"There is one by name Kāḷi of *pulaiya*[14] caste
A magician skilled he is.
His name uttered,
Deity Kāḷi would go in and bolt the door
And other deities livid would kneel down.
Summon him right now O king!"
Sent were the messengers in haste
And the magician came and met the ruler.
"Welcome to you O *pulaiya* the magician skilled!
Come and see this awesome spectacle!"
Into action swift the magician plunged:
Kāḷi the magical verses pronouncing,
There appeared Kuṟukkulāñci in his wrathful form.
Then spoke the magician to the king:
"Wickedness incarnate this deity is!
Malevolent and heinous;
He will bring this town to ruin,
Capture him and consign him to the earth we must".

14 A low caste.

**பெரும் புலையன் பேரரசனிடம் கேட்டவை**

என்னயென்ன வேணுமென்று கேட்டாரே ராசாவும்
அப்போது சொல்லுவானாம் அந்தக்காளிப் பெரும்புலையன்
ஆயிரம் பொன்னும்[98] வேணுமப்பா அஞ்னூறு ஆளும்வேணும்
காட்டானை காட்டுமாடு-நல்ல-கருங்கிடாய் கரும்பன்னியும்
கரும்சாவல் முதலாக-இப்பம்-வேணுமென்று சொன்னானே
அப்போது ராசாவும் ஆகட்டுமென்று சம்மதித்து
அஞ்னூறு வேலையாளும் ஆயிரம்பொன்னுந் தான்குடுத்து
காட்டானை முதலாகக் கருஞ்சாவலுந் தான்குடுத்தார்.

**காளிப் புலையன் செய்த கனமந்திர பூசை**

இவ்வளவும் வாங்கிக்கொண்டு ஏற்றதொருகாளிப் பெரும்புலையன்
வெள்ளிக்கிழமையிலே காப்புக்கட்டி விரதமாய்த் தானிருந்து
மறுவெள்ளிக் கிழமையிலே வாய்த்ததொரு பெரும்புலையன்
தாருகா வனமதிலே ஆறுகால் பூடம்[99] போட்டான்
ஆறுகால் பூடம்போட்டான் அறுபது கும்பம்வைத்தான்
தேங்காய் பழம்படைத்தான் சீக்கிரமாகப் பெரும்புலையன்
பொங்கிப்பொரித்துப் படைப்பேற்றிப் பூவுகளுஞ் சாத்தினானே
தீபதூப நைவேத்தியஞ் சீக்கிரமாய்க் குடுத்தானய்யா
ஓமநல்ல குழியைவெட்டி ஒன்பது சமுதை[100]இட்டான்
ஆமைநல்ல பலகையிலே[101] அவனுமங்கே இருந்துகொண்டான்
அக்கினியை வளர்த்தானே அழகுநல்ல பெரும்புலையன்
நாங்கெண்ணையும் கோங்கெண்ணையும் நறுநெய்யும் ஒழுகவிட்டான்
ஐந்தலை நாகத்தையுஞ்[102] செந்தலைக் கெருடனையும்[103]
சிதம்பர சக்கிரமுஞ்[104] சீராழி மந்திரமும்
மந்திரத்தை உச்சரித்தான் வாய்த்ததொரு பெரும்புலையன்

98. பொன் - ஒன்றேகால் ரூபாய் மதிப்புள்ள பொன் நாணயம்.
99. ஆறுகால் பூடம்-ஆறு கால்களைக் கொண்ட மேடை
100. *சமுதை-சமித், ஓமத்திலிடும் காய்ந்த அரசங் குச்சிகள்.*
101. ஆமைநல்ல பலகை-ஆமை முதுகுபோல் அமைந்த பலகை (கூர்மாசனம்).
102. ஐந்துதலை நாகம்-ஐந்து தலைகளையுடைய நாகம், ஐந்தெழுத்தைக் (பஞ்சாட்சரம்) குறிக்கும்.
103. செந்தலைக் கெருடன்-திருமாலுக்குரிய அஷ்டாச்சரமான ஓம் நமோநாராயணாய என்பதைக் குறிக்கும்.
104. சக்கிரம்-சக்கரம், வழிபடும் தெய்வத்திற்குரிய மத்திரங்களைச் செம்பு அல்லது வெள்ளித் தகட்டில் அவ்வவற்றிற்குரிய கோணங்களில் வரைந்து அதனைத் தரித்துக்கொண்டு உருவேற்றினால் அத்தெய்வங்கள் அம்மந்திரங்களை உருவேற்றும் அடியவர்களுக்குப் பணிந்து நடக்கும் என்பது நம்பிக்கை.

Of the requirements the king asking, Kāḷi spoke:
"We must in propitiation give
A thousand coins[15] along with five hundred men,
Elephants wild, cows undomesticated,
Ram and pig of complexion dark
And a blackish cock.
All this right now we must offer".
The king consenting saw them all handed.
Kāḷi went the things in hand
Rites proper he started on a Friday
And observed abstinences a week long.
Came the Friday following.
The *pulaiyaṉ* eminent went to Tārukā groves
Wherein he erected a stage six-footed,
On which were placed sixty sacrificial pots,
Offerings of cocoanut and plantain he made in haste,
Boiled rice and flowers, light and incense and the like.
A sacrificial pit was dug
And sticks of peepul tree were placed in;
Kāḷi sat on a plank rough like a tortoise's back,
He set fire to the sticks and kept it burning
Pouring ghee and oil of *nāṅku* and kō*ṅku* trees.
*Mantras* he then pronounced
Of the five-headed cobra[16]
Of the *karuṭa*[17] of reddish head,

---

15. One coin is equivalent to one and a quarter rupees.
16. Refers to the five-letter *mantra* (*Pañcāṭcaram*) sacred to Lord Śiva.
17. Refers to the eight-letter *mantra* (*aṣṭāccaram*) sacred to Lord Tirumāl.

செப்புநல்ல குடத்தை[105] வைத்துச் செவிக்குறானே[106] பெரும்புலையன்.

### குறுக்குளாஞ்சி தோன்றுதல்

அப்போது வாராராம் போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ
ஆனைபோல வருகுதப்பா ஆளப்போல உலாத்துதப்பா
ஏழுமணி வல்லையமும்-அங்கே-எடுத்துக்கையில் பிடித்துக்கொண்டு
வண்டநல்ல துலுக்கனைப்போல்-அங்கே-வந்துவட்டம் போடுதப்பா
மாட்டெலும்பு தேங்காமட்டை -திரட்டி- வாரி எறியுதங்கே
அக்கினிக் குழியதிலே அதுஇறங்கி நின்றுகொண்டு
ஆளப்போலப் பேசுதப்பா அந்தப்போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ
அண்ணேயண்ணே பெரும்புலையா-இப்பம்-ஏதுக்குநீ எனையழைத்தாய்
ஏதுக்கு அழைத்தாயண்ணே-நீயும்-என்னையுந்தான் இப்போது
ஒன்னை என்னசெய்தேன் நானும் ஒன்னிடத்தில் வந்தேனோ
என்றுமெல்லக் கேட்டுதப்பா ஏத்ததொரு குறுக்குளாஞ்சி
அப்போது பெரும்புலையன் அவனுமங்கே சொல்லுவானாம்
வாரும்பிள்ளாய் குறுக்குளாஞ்சீ -ஒன்னை- வரவழைத்த காரியமும்
ஊரையெல்லாம் அழித்ததனால் ஒன்னையிங்கே அழைத்தேனடா
இந்தநல்ல குடத்துக்குள்ளை-நீயும்-இப்போது போகவேணும்
உன்னைப் பிடித்தடைத்துப் பூமிதானம் பண்ணவேணும்
அதுக்காக உன்னையுந்தான் நாமழைத்தோம் பிள்ளாயென்றான்
அப்போது சொல்லுவாராம் -அந்தப்- போர்மொட்டைக் குறுக்குளாஞ்சி
அண்ணேயென்னை அழைக்கவென்றால் இப்பம் இத்தினையும் வேணுமோதான்
வரச்சொல்லிச் சொன்னாக்கால் -நான்-வருவேனே ஒன்னிடத்தில்
இந்தநல்ல குடமிதிலே நானும் எப்பிடித்தான் போவேனண்ணே
முன்னதீயாய் நீபோனால்-நானும்ஒன்-பின்னாக வாரேனண்ணே
குடத்துக்குள்ளை என்னைவிட்டு-நீயும்-குதித்து வெளியில்வந்து
என்னை அடைத்துநீயும் பூமிதானம் பண்ணுமண்ணே
என்றுசொல்லிச் சொன்னாரே-அங்கே-ஏத்ததொரு குறுக்குளாஞ்சீ
அப்போது சொல்லுவானாம்அந்தக்காளிநல்ல புலையனவன்
என்னுடைய மந்திரத்தால் -நானும்-இப்போது உன்னையுந்தான்
பாம்புநல்ல வடிவாக்கி -உன்னைப்- படமொடுக்கி அடைத்திடுவேன்
இல்லாதே போனாக்கால் உன்னைப் பொடிவைத்து மயக்கிடுவேன்
என்றுசொல்லிப் பெரும்புலையன் எழுந்திருந்து தானுமவன்

105. செப்புநல்ல குடம்-செம்பாலாகிய குடம்.
106 செவித்தல்-செபித்தல், உருவேற்றல்.

Appeared then Kuṟukkulāñci the ferocious,
In elephant's form and in human shape he strolled
With a lance adorned with seven gems in hand.
A Mohammedan malevolent like he moved.
Bones of cows and cocoanut husks he flung across
Standing in the sacrificial pit
And like a human he spoke to Kāḷi:
"O my brother, *pulaiya* the eminent!
Let me know why I'm summoned,
What harm have I done to you?
Have I demanded anything of you?
Tell me O my brother!"
Kāḷi the magician spoke in reply:
"Welcome to you O Kuṟukkulāñci!
The reason for my call I'll tell you now:
Ruin to this town you've wrought
I must see you enter this pot,
Confined wherein I must bury you into the earth,
This is the reason you're invoked".
"All this do you need to call me here?
A word sent I'd come ready,
And tell me how to enter this pot O my brother!
Go into it yourself first
And I will follow you sure,
You can jump out leaving me inside
And get me buried".
Kuṟukkulāñci crafty speaking thus,
The magician noted declared:
"My magic applying
I can change you into a serpent
And your hood taming I will pack you in;
Failing in which
I will magical powders apply and stupefy you".

### புலையன் தந்த பலியும், போர்மொட்டைக் குறுக்குளாஞ்சி செயலும்

சாமநல்ல சாமத்திலே -அவன்- சதிசாம வேளையிலே
காட்டானை பெலிகொடுத்தான்-அவன்-காட்டுமாடு பெலிகொடுத்தான்
கருங்கிடாய்ப் பெலிகொடுத்தான்-அவனந்தக்-கரும்பன்னி நெஞ்சுகீறிக்
கருஞ்சாவல் பெலிகொடுத்தான் காளிநல்ல பெரும்புலையன்
பெலிகொடுத்துப் போட்டவனும்-அந்தக்-காளிநல்ல பெரும்புலையன்
அக்கினியை வளர்த்தானே -அவன்- ஆகாச மூடூரும்
மந்திரத்தைச் செவிக்கிறானே-அங்கே-வாய்த்ததொரு பெரும்புலையன்
அப்போது சொல்லுவாராம் அந்தப் போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ
அண்ணேயண்ணே பெரும்புலையா நீ மந்திரத்தைச் செவிக்காயோ
ஒன்னுடைய மந்திரமும் என்னுடைய தந்திரமும்
இப்போது பார்ப்போமென்று -அங்கே-எதிர்த்து நின்றுசொல்லி
ஆதாளி[107] பண்ணுதடா அந்தப் போர்மொட்டைக் குறுக்குளாஞ்சி
ஆறுகால் பூடத்தையும் ஆகாசத்திலே விட்டெறிந்து
அஞ்ஞூறு வேலையாளை அரைநொடியில் கொன்றுபோட்டு
அறுபது கும்பத்தையும் அடித்து நொறுக்கிப்போட்டு
ஓமநல்ல குழியைத்தான் உடனேயங்கே அழிக்கலுற்றான்
காளிநல்ல புலையனைத்தான் காலைவாரி அடித்துக்கொன்று
குரவையிட்டுப் பாயுதப்பா போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ
அட்டாதுட்டி[108] பண்ணுதப்பா போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ.

### பார்வேந்தன் துயரமும், பகவதி பகர்ந்ததும்

அப்போது ராசாவும் காளிப்புலையன் பட்டபோதே
என்னசெய்வோம் என்றுசொல்லி -ராசா- இடஞ்சல்படும் வேளையிலே
தச்சுரூப மாகவே[109] தான் அங்கே வந்தாளே பகவதியாள்
வாரும்பிள்ளாய் ராசாவே அவன்பொல்லாத துஷ்டனவன்
என்னுடைய பக்கத்திலே நிலயங்களும்[110] போடவேணும்
செம்பாலே கோயில் செம்புவிக்கிரகம் வார்த்துவிட்டு
.........................................
அப்போது அந்தப் போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ
.........................................

107 ஆதாளி-பேரொலி, டம்பப் பேச்சு.
108. அட்டாதுட்டி-அடாதுடி, தீம்பு.
109. தச்சுரூபம்-தன் உருவம், சுய உருவம்.
110. நிலயம்-நிலையம்; தங்குமிடம்.

A moment right at midnight Kāḷi chose
And made offerings large
Of wild elephant, cow undomesticated,
Ram and cock of blackish complexion,
And wild hog with its heart cut open.
A fire he made
The flames of which enveloped the sky,
And magical spells he pronounced.
The deity wild to the magician spoke:
"O my brother, O *pulaiya* the great!
Chanting *mantras* you are!
We'll see the power of your spell set against my craft!".
Challenge throwing
The deity went on with braggings impudent:
He flung the platform six-footed into the sky,
Killed the five hundred men in a second halved,
Broke the sixty pots into pieces,
Destroyed the sacrificial pit not an instant late,
Thrashed the magician to death pulling him down.
And he went on with his bustle and cry,
With his destructive sport too.
Kāḷi dead, in trepidation was the king found
Pakavati revealed Herself in Her form gloried
And spoke to the king propitiating:
"A deity wicked is Kuṟukkulāñci O king!
You must erect by my shrine
Temples in copper with copper idols in
....................[18]
She then spoke to Kuṟukkulāñci:

18. Lines missing in the original text.

என்மகனே பொன்மகனே ஏத்தமுள்ள சேவுகனே
என்னுடைய வாசலிலே ஏழுகிடாரந்[111] திரவியமும்
ஏழுகிடாரந் திரவியமும் இப்போது கிடக்குதடா
அந்தத்திரவியத்தை ஆதரவாய்க் காற்றுக் கொண்டு[112]
என்னுடைய பக்கத்திலே இருக்கவேணும் என்றுசொல்லி
மெத்தமெத்த புத்திசொல்லிப் பக்கத்திலே வைத்துக்கொண்டாள்
காளியுட பக்கத்திலே இருந்தானே குறுக்குளாஞ்சீ.

## குறுக்குளாஞ்சி அகத்தியரைக் காணல்

அப்படியே தானுமங்கே அவரிருக்கும் நாளையிலே
அகத்தியரைக் காணவென்று பிறப்பட்டாரே குறுக்குளாஞ்சீ
அம்மனையும் அனுப்பிக்கொண்டு அவருமங்கே வாராரே
மலைப்பாதை யாகவங்கே வாராரே குறுக்குளாஞ்சீ
நாகமலை தோகைமலை நல்முனிவர் வாழுமலை
தங்கமலைப் பாதைவழி வாராரே குறுக்குளாஞ்சீ
மலைப்பளியர் குடியிருப்பும் மலைக்குறவர் குடியிருப்பும்
நாங்குச்சோலை[113] வனமதுவும் அங்கே கோங்குச்சோலை வனமதுவும்
பூஞ்சோலைப் பாதைகூடி வாராரே குறுக்குளாஞ்சீ
முப்பத்துமுக்கோடி தேவர்களும் அறுபத்துநாற்கோடி ரிசிகளுமாய்
அஞ்சுதலைப் பொதிகையிலே[114] -அங்கே- அகஸ்தீசரைக் காத்திருக்கும்
அஞ்சுதலைப் பொதிகையிலே -அங்கே- அகஸ்தீசரை வந்துகண்டு
அகஸ்தியரை வந்துகண்டு அடிபணிந்து தெண்டனிட்டார்
அடிபணிந்து தெண்டனிட்டு -அங்கே- ஆனந்தம் ஆடுறாரே
பார்த்தாரே அகஸ்தியரும் மெத்தசந்தோசம் உண்டாகி
வாரும்பிள்ளாய் குறுக்குளாஞ்சீ நீவண்டநல்ல தேவதைதான்
-ஒனக்குக்- கொல்லவரம் வெல்லவரம் கோடிவரம் தந்தோம்பிள்ளாய்
மந்திரத்தில் அடங்காமல் -நீயும்- வாழ்ந்திருப்பாய் என்றாராம்
கட்டுக்குள் அடங்காமல் இந்தக் காவுக்குள்ளே நீயிருப்பாய்
ஐயனார் வாசலிலே-நீயும்- ஆளடுமை[115] தேடிக்கொண்டு
தேடியிடும் பிள்ளையாக -நீயும்- செல்லப்பிள்ளை போலிருப்பாய்
என்றுசொல்லி அனுப்பினாரே -அங்கே- ஏத்ததொரு அகஸ்தியரும்

---

111. கிடாரம்-கடாரம், கொப்பரை.
112. காற்றுக்கொண்டு-காத்துக் கொண்டு.
113. நாங்குச் சோலை-நாங்கு மரங்களடர்ந்த சோலை.
114. அஞ்சுதலைப் பொதிகை-ஐந்து சிகரங்கள் கொண்ட பொதிகை.
115. ஆளடுமை-ஆளடிமை.

"O my son dear and my attendant unfailing!
There lies in my shrine
A treasure large in seven barrels
Guarding which you can live by me at my shrine".
Advice heeding, he lived by the goddess.
Kuṟukkulāñci took leave of the Mother on a day
Intending to offer worship to Akastiyar.
Along the mountainous tract he journeyed.
Crossing Nākamalai and Tōkaimalai,
And the hill wherein the ascetics lived,
He took the Taṅkamalai road;
Crossing the dwellings of the tribes *paḷiyar* and *kuṟavar*
And the woods of *nāṅku* and *kōṅku* groves,
He took the path flower-groves surrounding;
Kuṟukkulāñci at length arrived at the mountain five-peaked
Where lived Akastiyar.
Attending on him were
The celestials three and thirty crores
And *riṣis* sixty four crores.
Kuṟukkulāñci knelt down at his feet
And danced in ecstasy unbounded.
Akastiyar pleased uttered a word:
"A deity blameless you are O Kuṟukkulāñci!
And boons large I grant you
To conquer and to kill,
To live unaffected by magic
And to live here in these woods unfettered.
You can remain seated in the front of Aiyaṉār's shrine
Having devotees of your own
With men seeking you as a deity dear".

அகத்தியரை அனுப்பிக்கொண்டு வாராரே குறுக்குளாஞ்சீ
அஞ்சுதலைப் பொதிகைவிட்டு ஆனந்தமாய் வாராரே
வாணதீர்த்தக் கரைவழியே வாராரே குறுக்குளாஞ்சீ
மேலச்சொரிமுத்துப் பாறைவழி வந்தாரே குறுக்குளாஞ்சீ
ஐயன்சொரிமுத்து வாளைய்யரையும் கண்டுஅடிபணிந்து தெண்டனிட்டார்
அப்போது ஐயனாரும் அன்பாக வார்த்தைசொல்லி
அளவிறந்த வரங்கொடுத்து அவருடையவாசலிலே
மேலவாசல் காவலாக நீர்நவ்வல் மூடதிலே[116]
நீர்நவ்வல் மூடதிலேதங்க நிலமாக[117] வைத்துக்கொண்டார்
அப்படியே இருக்கையிலே அந்தப்போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ

### குறுக்குளாஞ்சி ஆளடிமை தேடலும், அடைதலும்

ஆளடுமை தேடிக்கொண்டு அவரிருக்கும் நாளையிலே
நாட்டிலையும் நல்லநாடு நாவலர்கள் புகழும்நாடு
கன்னல்சென்னல் விளையும்நாடு கதலிக்குலை பழுக்கும்நாடு
சென்னல்கன்னல் விளையும்நாடு சிறுகதலி பழுக்கும்நாடு
கோபாலசமுத்திர நாடதிலே ஆண்டிருந்தாரே பொய்யில்லாப்பிள்ளை
ஐயன்சொரிமுத்து வாளைய்யருக்கு அடுமைப்பட்டு[118] இருந்தவராம்
ஐயன்சொரிமுத்து வாளய்யருக்குக் குளுமை[119] நடத்த வேணுமென்று
குஞ்சிக்குழந்தையுஞ் சமுசாரமுங் கூட்டிக்கொண்டு வந்தாரே
அய்யனார்க்குக் குளுமைகளும் அபிசேகமுஞ் செய்துபோட்டு
ஊருக்கு வாராரே பொய்சொல்லா மெய்யப்பபிள்ளை
பார்த்தாரே குறுக்குளாஞ்சீ அடுமைகொள்ள வேணுமென்று
பொய்சொல்லா மெய்யப்பபிள்ளை பிறப்படும் வேளையில்கூடக்
கோபாலசமுத்திர நாடதிலே வந்தாரே குறுக்குளாஞ்சீ.

### கோபால சமுத்திரத்தில் கோயில்கொள்ளல்

கூடவே வந்திருந்து கோரணிகள்[120] கொள்ளுதப்பா
ஏதென்று பார்க்கையிலே ஆதாரணை[121] ஆச்சுதப்பா
பொய்சொல்லா மெய்யப்பபிள்ளை வட்டார வளவதிலே[122]

---

116. நீர் நவ்வல் மூடு-நீர் நாவல் மரமேடு.
117. தங்க நிலம்-தங்கும் நிலம்.
118. அடுமைப்பட்டு-அடிமைப்பட்டு.
119. குளுமை-குளிந்த சந்தனாபிசேகம் போன்றன செய்தல்.
120. கோரணி-செய்யக் கூடாத தீயன செய்தல்.
121. ஆராதணை-உறுதி, ஆதாரம் கிட்டல்.
122. வளவு-வளைவு.

Taking leave of Akastiyar
Kuṟukkulāṉci journeyed along
The banks of Vāṇatīrttam and Mēlaccorimuttuppāṟai,
Arriving at Corimuttu Aiyaṉ's temple
He in propitiation stood.
Aiyaṉ pleased spoke gracious words
Granted him boons infinite
And kept him the guardian deity at his west gate.
Kuṟukkulāñci remained there
On a mound under a *nāval* tree
Wishing to find himself a tutelary deity.
There was a place Kōpālacamuttiram by name,
Live it did on the tongues of bards,
Grown around in plenty were
Sugarcane, paddy and plantain of superior kind;
There lived then Poyyillāppiḷḷai an adherent to truth
Who worshipped Corimuttu Aiyaṉ as his family deity.
He went to Corimuttu Aiyaṉ's shrine
Along with his wife and children
To see the deity anointed and oblations made.
Returning home as he was,
Kuṟukkulāñci followed him along
Desiring to bring him a devotee loyal.
Kuṟukkulāñci arriving at Kōpālacamuttiram;
Found there were sports of mischief;
Source examining, revealed was Kuṟukkulāñci's craft
Who demanded of a shrine at Poyyillāppiḷḷai square.

நிலைக்குரிசிப் பூடம்[123] போட நிச்செயமாய்ச் சொல்லுதப்பா
அப்போது ஊராரும் அவருமங்கே கூட்டமிட்டு
பொல்லாத தெய்வமிது போர்மொட்டைக் குறுக்குளாஞ்சீ
பூடம்போட்டுக் கொடை[124] குடுத்தாக்கால் எங்களைத்தான் காப்பாத்த
வேணுமென்று
உத்தரவு[125] பெற்றுக்கொண்டு -இந்த- ஊராருங் கூட்டமிட்டு
நாள்பார்த்து முகிர்த்தமிட்டு[126] நல்லதொரு லக்கினத்தில்
